ஸ்ரீமதுத்தராதிமடாதீச


ஸ்ரீ ஸத்யத்யானதீர்த்த ஸ்ரீபாதங்களவர்களால்

இயற்றப்பட்ட

கீதா ஸாரஸங்க்ரஹ-பதார்த்த-தாத்பர்ய-விசாரங்களுடன் கூடிய

ஸ்ரீ பகவத்கீதா

928/2
957



திருச்சானூர்

ஸ்ரீமன் மத்வ ஸித்தாந்தாபிவ்ருத்திகாரிணீ ஸபையாரால்

ப்ரகாசிக்கப்பட்டது.

1937.

0020

ஸ்ரீ

ஸ்ரீமத் திக்விஜய ராமோ விஜயதே.

ஸ்ரீ பகவத்கீதா

கீதாலாலவங்கரஹ-

ப்ரதிபதார்த்த-தாத்பர்ய-விசாரங்களுடன்

கூடியது.

957/2

ஸ்ரீமத் வைதிக வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரதிஷ்டாபனாசார்ய

ஸ்ரீமத் பரமஹம்ஸைத்யாதி குணகணாலங்க்ருத

ஸ்ரீமதுத்தராதிமடாதீஸ

ஸ்ரீமத் ஸத்யத்யானதீர்த்த ஸ்ரீ பாதங்களவர்களால்

இயற்றப்பட்டு,

ஸத்யானந்தம் கிருஷ்ணசார்யரால்


மொழிபெயர்த்து பதிப்பிக்கப்பெற்றது.

பத்மஸரோவரம் (திருச்சானூர்)

ஸ்ரீமன் மத்வ ஸித்தாந்தாபிவ்ருத்திகாரிணீ ஸபையாரால்

ப்ரசுரிக்கப்பட்டது.

1937



PRINTED AT

ANANDA PRESS, MADRAS.

श्री दिग्विजयरामोविजयते.

स्वामिन्नद्य कुतो नु ते पशुपते म्लानं मुखांभोरुहं
कान्ते संयमनीपुरे किल महन्न्यायालये मायिनः।
सत्यध्यानयमीन्द्रसत्कृतकृतौ चक्रे तमोगान्यमो
मच्छिष्यानिति वागभूद्धि शिवयोस्तं ध्यानतीर्थं नुमः ॥




பார்வதி:–"பசுபதிகளான ஸ்வாமி! ஏன் இன்று தங்களிட முககமலம் வாடி இருக்கின்றது?"

பரமேஸ்வரர்:–"கண்மணியே! ஸம்யமனீபுரம் ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமத் ஸத்யக்யான தீர்த்தரவர்களால் தாக்கல் செய்யப்பட்ட ஸிவில் ஸூட்டில் என் சீடர்களை எல்லார் கமஸ்ஸுக்குச் சென்னியாப்படிக்கு யமதர்ம ராஜர் நிர்ணயம் செய்திருக்கிறபடியால் விசாரப்படு கிறேன்" என்கிற பார்வதி பரமேஸ்வரர்களிட ஸர்வாதந்திற்கு விஷயரான ஸ்ரீஸ்ரீ ஸத்ய த்யான தீர்த்தரவர்களை வணங்குகிறேம்.

श्रीमुष्णं समवाप्य भूरिविभवैर्गत्वा च देवालयं
नत्वा यज्ञवराहमूर्तिममलां श्रीमूलमूर्तिं पुनः ।

Friday
17th July 1931.



श्रीमुष्णं समवाप्य भूरिविभवैर्गत्वा च देवालयं
नत्वा यज्ञवराहमूर्तिममलां श्रीमूलमूर्तिं पुनः ।

श्रीः

श्रीमद्दिग्विजयरामो विजयते ।

முன்னுரை.

இந்திரா வதனும்போ(ஹோ)ஜ ராஜஹம்ஸாய விஷ்ணவே,
அமந்தானந்த(த) ஸந்தோ(தோ)ஹ ஸுந்தராக்ருதயே நம: ||

அதுக்க மிதரத் ஸர்வம் ஜீவா ஏவ து துக்கின:।
தேஷாம் துக்கப்ரஹாணாய ஸ்ருதிரேஷா ப்ரவர்ததே ||

என்றவாறு உலகிலுள்ள ஜீவர்கள், ஜடம், ப்ரஹ்மமென்னும் மூவ்வகை வஸ்துக்களில் ஜடமும், ப்ரஹ்மமும் துக்கமற்றவைகளாயும், இவைகளை விட அத்யந்த பின்னர்களான ஜீவர்கள் மாத்திரம் அனாதியான அவித்யா காம கர்மாதிகளால் சூழப்பட்டு அதின் பொருட்டான துக்கமுடையவர்களாயுமிருக்கின்றனர். அத்தகைய ஜீவர்கள் மேற்படி துக்கத்தைப் போக்கிக்கொண்டு மேலான ஆனந்தானுபவரூபமான மோக்ஷத்தை யடைவதற்குக் காரணமான ஞான ஸாதனங்களை அவர்களுக்கு அறிவிப்பதற்காகவே ஸ்ரீ விஷ்ணுவின் த்ரயக்ரீவாதி ரூபங்களினால் ஸ்ரீ சதுர்முக ப்ரஹ்மாவை முன்னிட்டு ஸகல வேதங்களும் வெளியாயிருக்கின்றன.

காலதோஷத்தினாலும், கௌதமாதி ஸாபாதிகளினாலும் சேர்ந்த அஜ்ஞானத்தினால் அவ்வேதங்களுக்கு ஸரியான அர்த்தமாகாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் ஸஜ்ஜனர்களில் கிருபையுள்ள * ப்ரஹ்மாதிகளில் ப்ரார்த்திக்கப்பட்ட ஸ்ரீநாராயணன் பராஸராதால் ஸத்யவதியிடத்தில் வேதவ்யாஸராக அவதரித்து, அதிகாரிகளுக்குச் சரியான ஞான ஸாதனங்களை அறிவிப்பதற்காக வேதத்தை ருகாதிசாகோப சாகைகளாகப்

---

* லோகேஸ்மி ந் ப்ரஹ்மருத்ராதயா: ஸம்ஸாரே க்லேஸ்மி நூனம் ஜனை:।
வேதார்த்தாஜ்ஞுமதீகார வர்ஜிதம் ஸ ஸ்த்ரியாதிகம்। அவேக்ஷ்ய ப்ரார்த்த

பிறித்து, அவ்வேதார்த்தங்களை நிர்ணயிப்பதற்காக ஸ்ரீமத் ப்ரஹ்மஸூத்ரங்களையும் இயற்றினர். மற்றும் * அவ்வேதாதிகளுக்குச் சரியான அர்த்தங்களை அறிவிக்கத்தக்கதும், வேதத்தில் அதிகாரமற்ற † ஸ்த்ரீ ஸூத்ராதிகளுக்கும் ஞானத்தை விளைவிக்கத்தக்கதும், வேதத்திற் கூறியதும் வேதத்திற் கூறுமல் ஸ்ரீ வேதவியாஸரிட புத்தியில் மாத்ரம் தோன்றியதுமான அர்த்தங்களுடன் கூடியதும், ‡ பத்து அர்த்தங்களுக்குக் குறையாத அர்த்தங்களையுடையதும், வேதத்தைவிட மேலானதுமான ஸ்ரீமன் மஹா பாரதத்தையும் (அநேக புராணங்களையும்) இயற்றியிருக்கின்றனர்.

யாமாஸு: தேவேஶம் புருஷோத்தமம் | தத: ப்ரஸன்னே பகவான் வ்யாஸோ பூ(ஊ)த்வா ச தேன ச | அன்யாவதார ரூபைஶ்ச வேதானுக்தார்த்த பூ(ஊ)ஷிதம் | கேவலேனைவ மோ(வோ)தே(யே)ன த்(தீ)ருஷ்டம் வேதார்த்தஸம்யுதம் | வேதாதபி பரம் சக்ரே பஞ்சமம் வேதமுத்தமம் | பாரதம் பஞ்சராத்ரம் ச மூலராமாயணம் ததா(யா) | புராணம் பாகவதம் சேதி ஸம்பின்ன: ஸாஸ்த்ர புங்கவ || இதி நாராயணஷ்டாக்ஷரகல்பே || (கீதா பாஷ்யம்).

* இதிஹாஸபுராணப்(ஹீ)யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத் | (கீ. பாஷ்யம்).

சங்காசார்யரும் தம்மிட கீதா பாஷ்யம் 15-வது அத்தியாயம் 20-வது ஸ்ரீலோகவ்யாக்யானத்தில் 'இப்பதினைந்தாவது அத்தியாயத்தில் ஸகல கீதார்த்தமும் சுருக்கமாய் சொல்லப்பட்டிருப்பது மாத்திரமேயல்லாமல் ஸகல வேதார்த்தங்களும் இந்த அத்தியாயத்தில் முடிவு பெறுகிறது' என்று எழுதியிருக்கிறார். இதின் மூலத்தை இப்புஸ்தகத்தின் 400-வது பக்கத்தின் குறிப்பில் காணவும்.

† ஸ்த்ரீ ஸூத்ர த்விஜ பந்தூனாம் த்ரயீ ந ஶ்ருதிகோசரா | இதி பாரதமாக்யானம் க்ருபயா முனினா க்ருதம் || (ஸ்ரீ பாகவதம்)

‡ தஸ்மாத்ஸார்த்தம் ஸர்வத்ர கேவலம் விஷ்ணுமேவ(ய)கம் | பரோ கூர்த்தம் து ஸர்வத்ர வேதாதப்யுத்தமம் து யத் இதிஸ்காந்தே (கீ. பாஷ்யம்)

யஸ்மின் தஸ்மாத்தா: ஸர்வத்ர ந ஜ்ஞேயா: ஸர்வஜ்ஞாதய: | இதி நாரதீயே (கீ. பாஷ்யம்)

அத்தகைய ஸ்ரீ மஹா பாரதமென்னும் பாரிஜாதத்தில் மகரந்தத்தைப்போன்ற ஸ்ரீ மஹா பாரதத்திலும் * மேலான ஸ்ரீ கிருஷ்ணர்ஜுன ஸம்வாத ரூபமான ஸ்ரீ பகவத் கீதையையும் சேர்த்திருக்கின்றனர்.

இந்த ஸ்ரீமத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணன் இந்த்ராவதாரனை அர்ஜுனனைக் காரணமாக வைத்துக்கொண்டு உலகிலுள்ள துக்கத்துடன் கூடியுள்ள ஸாத்விக ஜீவர்கள் தமக்கருகியாயுள்ள துக்கத்தைப் போக்கடித்துக்கொண்டு தம்மிட மேலான ஆனந்தத்தை அடைவதற்குத் தகுந்த உபாயங்களான நிஜமான † வர்ணாச்ரம தர்மங்களையும் "நித்யோ நித்யானாம் சேதனஸ் சேதனானாம் ஏகோ பஹூனாம் யோ விததா(யா)தி காமான் | தமாத்மஸ்தம் யேனுபஸ்யந்தி தீராஸ் தேஷாம் ஸுகம் ஸாஸ்வதம் நேதரேஷாம்" என்கிற (ஸ்வேதாஸ்வதரம் 6-13; கடோபனிஷத் 2-13)ஸ்ருதியின் வ்யாக்யான ரூபமான ஸ்ரீ ஸ்ரீவ்யாஸ ராஜஸ்வாமிகளவர்களால் இயற்றப்பட்ட "ஸ்ரீமன் மத்வமதே ஹரி: பரதர: ஸத்யம் ஜகத் தத்வதோ பே(தே)தா(தோ) ஜீவத(ஸ்)ஸ ஹரோனுசரா நீசோச்ச பா(ஹா)வங்கதா: | முக்திர் நைஜ ஸ்வரூபலாபமமலா பக்திஸ்ச தத்ஸாதனம் த்ரயகூடாதி த்ரிதயம் ப்ரமாணமகிலாம்நயைக வேத்யோ ஹரி:" என்கிற ஸ்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கும் ‡ விஷ்ணு ஸர்வோத்தமன், $ ஜகத் ஸத்யம், ¶ நிஜமாக ஜீவப்ரஹ்மாக்களுக்கு பேத

---

* பாரதம் ஸர்வ ஸாஸ்த்ரேஷு பாரதே கீதிகா வர:॥ | மஹா கௌர்மே (கீ. பாஷ்யம்)

ஸாஸ்த்ரேஷு பாரதம் ஸாரம் தத்ர நாம ஸஹஸ்ரகம் | வைஷ்ணவம் க்ருஷ்ண கீதா ச தத் ஜ்ஞாலன் முச்சதேஞ்ஜஸா ॥ இதி ப்ரஹ்மாண்டே (கீ. தாத்பர்யம்)

† ப்ராஹ்மணை: க்ஷத்ரிய விஸாம் ஸூத்ராணும் ச பரந்தப | கர்மாணி ப்ரவிபக்தானி ஸ்வபா(ஹா)வ ப்ரப(ஹ)வைர்குணை: ॥ (18-41) ஸ்வ கர்மண தமப்(ஹீ)யர்ச்ய ஸித்திம் விந்ததி மானவ: | (18-46).

‡ ந த்வத் ஸமோஸ்த்யப்(ஹீ)தி(யி)க: குதோன்ய: (11-43).

$ ந த்வே வாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே ஜனதிபா: | ந சைவ ந பவிஷ்யாம: ஸர்வே வயமத: பரம் | (2-12), அவிநாஸி து தத் வித்தி யேன ஸர்வமிதம் ததம் (2-17), அஸத்ய மப்ரதிஷ்டம்தே (16-8).

¶ உத்தம: புருஷஸ்த்வன்ய:; யோலோகத்ரயமாவிஸ்ய (15-17).

முண்டு, * ஜீவர்கள் பரமாத்மாவின் சேவகர்கள், † ஜீவர்கள் தாரதம்யமுடையவர்கள், ‡ ஸ்வரூபாநந்தத்தை யடைதலே மோக்ஷம், $ மோக்ஷத்திற்கு பக்தியே ஸாதனம், ¶ ப்ரத்யக்ஷம் அநுமானம், ஆகமம் இவைகளே ப்ரமாணங்கள், || ஸ்ரீவிஷ்ணு ஸர்வ வேதங்களிலுமேயே அறியப்படுபவன் என்கிற ப்ரமேயங்களையும் மற்றும், ** ஸ்ரீ கிருஷ்ணனே பரப்ரஹ்மம், †† அந்த ப்ரஹ்மம் ப்ராக்ருதமான ஸத்வராஜஸ்தமோ குணங்களை யற்றது, ஸ்ருஷ்டி கர்த்ருத்வாதி அனந்த கல்யாண குணங்களுடன் கூடியது, ‡‡ ஜீவர்கள் மூவ்வகையாயுளர் என்கிற ப்ரமேயங்களையும் உறுதியாய்ச் சொல்லியிருப்பதேயன்றி, அவைகளுக்கு விருத்தமான ப்ரமேயங்களை யறிவிக்கும் துர்மதங்களைக் கண்டித்து மிருக்கின்றனன். மற்றும் இந்த பகவத்கீதை உலகமெங்கும் பரவி ஸகல ஜனங்களாலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இத்தகைய வெகு சிறப்பான ஸ்ரீ பகவத்கீதைக்கு 'க்ருபண: பலஹேதவ:' (2-49) 'யஶ்ஶாஸ்த்ர விதிமுத்ஸ்ருஜ்ய' (16-23) 'அஸத்யமப்ரதிஷ்டம் தே' (16-8) 'ஈஶ்வரோஹமஹம் போகி'

---

* ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸன்னிவிஷ்ட: (15-15).

† யேऽப்யந்ய தேவதா பக்தா யஜந்தே ச்ரத்தயான்விதா: | தேऽபி மாமேவ கௌந்தேய யஜந்த்யவிதி பூர்வகம் (9-23).

‡ அந்தவத்து பலம் தேஷாம் தத்பவத்யல்பமேதஸாம் | தேவான் தேவயஜோ யாந்தி மத்பக்தா யாந்தி மாமபி (7-23).

$ பக்திர் மய்யவ்யபிசாரிணீ (13-10).

¶ தஸ்மாச் ஶாஸ்த்ரம் ப்ரமாணம் தே (16-24).

|| வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய: (15-15).

** பரம் ப்ரஹ்ம பரம் தாமபவித்ரம் பரமம் பவான் (10-12).

†† நிர்குணம் குணபோக்த்ருச (13-15), குண: ஸத்வராஜஸ்தமாம்ஸி தை: வர்ஜிதம் நிர்குணம் (ஶங்கர பாஷ்யம்), மாமேப்(ஹீ)ய: | பரமவ்யயம் (7-13), அஹம் ஸர்வஸ்ய ப்ரப(ஹ)வ: (10-8), மத்த: ஸ்ம்ருதிர் ஜ்ஞானமபோஹனம் ச (15-15).

‡‡ த்ரிவிதா(ஶ்ரயா) ப(ஹ)வதிஶ்ரத்தா தே(தே)ஹினம் ஸா ஸ்வபா(ஹா)வஜா | ஸாத்விகீ ராஜஸீ சைவ தாமஸீ சேதி தாம் ஶ்ருணு (17-2).

(16-14) இது முதலிய வாக்யங்களிலுல் நிந்திக்கப்பட்டுள்ள காம்யகர்மங்களைச் செய்பவர்களும், ஶாஸ்த்ர முறைகளை விட்டவர்களும், ஜகத்து மித்யை (முக்காலத்திலுமில்லாதது) என்றும், நானே ஈஶ்வரனென்றும் சொல்லி கடும் தண்டனைக்கு ஆளாகவுமிருக்கும் சிலர் பலவிதமாக தம் மனதிற்குத் தோன்றிய, ஶ்ரீ கிருஷ்ணனிட அபிப்ராயத்திற்கு விருத்தமான தம் தம் மதத்தை கீதார்த்தமென்று உலகமெங்கும் பரவச் செய்தனர்.

பிறகு ஶ்ரீமதானந்ததீர்த்தர், ஶ்ரீ ஜயதீர்த்தர், ஶ்ரீராகவேந்த்ர தீர்த்தர் முதலிய மஹான்கள் ஶ்ரீ கீதா பாஷ்யம், கீதா தாத்பர்யம், ப்ரமேய தீபிகா, கீதா விவ்ருதி முதலிய அநேக நூல்களை ஸம்ஸ்க்ருதத்தில் இயற்றி மேற்படி துர்மதங்களனைத்தையும் கண்டித் திருக்கின்றனர். ஆயினும் காலத்தின் கொடுமையிலுல் ஸம்ஸ்க்ருதத்தில் அதிக பயிற்சியற்று, அந்நூல்களிலுல் மேற்படி கீதையின் ஸரியான அர்த்தத்தை அறிந்துகொள்ளும் திறமையற்ற ஸஜ்ஜனங்களுக்கு கீதையின் ஸரியான அர்த்தத்தை அறிவித்து நற்கதியை யடைவிப்பதற்காக திருச்சானூர் ஶ்ரீமன் மத்வ ஸித்தாந்தாபிவ்ருத்திகாரிணீ ஸபையோர்—"அனன்ய ப்ரோக்தே கதிரத்ர நாஸ்தி ப்ரோக்தான் யேனவ ஸுஜ்ஞாயை ப்ரேஷ்ட" (காடகம்) 'அனன்யேன = அபேதஜ்ஞானினு' (ஶாங்கர பாஷ்யம்) அபேத ஞானிகளின் உபதேஶாதிகளிலுல் மோக்ஷஸாதனமான ஞான முண்டாகாது, பேதஞானிகளின் உபதேசாதிகளிலுலேயே அத்தகைய ஞானமடையக்கூடுமென்னும் காடகோபநிஷத்தின் உத்திரவை யனுஸரித்து தற்காலம் ஸம்யமனீபுரம் ஹைகோர்ட் வேதாந்த விசாரணை ஸிவில் ஸூட் (தமிழ், தெலுங்கு, கன்னட பாஷைகளில்), கீதாவிசாரம் (கன்னட பாஷையில்), அத்வைதகபோலசோபிகா, அத்வைதிப்ராந்தி ப்ரகாஶம்(ஸம்ஸ்க்ருதத்தில்) முதலிய பல நூல்களை இயற்றி, தாம் வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரதிஷ்டாபனாதிகாரத்தைப் பெற்ற விரோதிக்ருத் வருஷம் புஷ்ய பஹுள தசமி (13-1-1912) முதல் ஆஸேது ஹிமகிரி இரண்டு தடவை பூப்ரதக்ஷிணம்செய்து ஆங்காங்கு ஸபைகூட்டி துர்வாதங்களைக்கண்டித்து 'ஶ்ரீ நாராயணன் நிற்குணனல்ல—ஸர்வோத்த மத்வ ஸர்வஜ்ஞத்வாதி அனந்தகல்யாணகுண பூர்ணன்; ஜீவபர

மாத்மாக்களுக்கு ஐக்கியமில்லை—பேதமே, ப்ரபஞ்சம் மித்யை யல்ல—ஸத்யமே என்று அநேக ச்ருதி ஸ்ம்ருதி ப்ரமாணங்களினுல் கர்ஜித்துக்கொண்டே தம் சிடர்களை ஸன்மார்க்கத்தில் நிலை நிறுத்திக்கொண்டிருக்கும் பேதஜ்ஞானிகளில் சிறந்தவரான ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்யத்வாத்யனந்த குணகணாலங்கிருதரான ஸ்ரீ ஸ்ரீமத் ஸத்ய த்யான தீர்த்தரென்னும் * நாமதேயத்தை வேண்டிக்கொண்டனர்.

அதற்கு அம்மஹனீயர் ஸ்ரீ கீதாஸாரஸங்க்ரஹ—ப்ரதிபதார்த்த—தாத்பர்ய—விசாரங்களுடன் கூடிய ஸ்ரீ பகவத் கீதா நூலை இயற்றி வை ஸபையோருக்கு அளித்தனர். வை ஸபையோர் அதை பலபாஷைகளிலும் மொழிபெயர்ப்பித்து வெளியிட்டு ஸஜ்ஜனர்களுக்கு விசேஷமாய் நன்மை செய்திருக்கின்றனர். மற்றும் தமிழ் நாட்டிலுள்ள இதர பாஷைகளில் பயற்சியற்ற ஜனங்களிட உபயோகத்திற்காக தமிழ் பாஷையில் மொழிபெயர்ப்பதற்கு எனக்கு அனுக்ரஹபூர்வகமாய் உத்திரவளித்ததின்பேரில் ஸ்ரீ ஸ்ரீகளின் அருளால் என்னறிவிற்கேற்ற வாறு † மொழிபெயர்த்து ஸ்ரீ ஸ்ரீகளிட சரண ஸரோஜ ஸன்னிதானங்களில் ஸமர்ப்பித்துக்கொண்டிருக்கிறேன்.

இப்புத்தகத்தில் ஸம்ஸ்க்ருத ச்லோகங்களை எழுதி அவைகளுக்கு பதங்களைப்பிரித்துக்காட்டி ப்ரதிபதத்திற்கும் அர்த்தமும் ஆவசியகமான இடத்தில் கருத்தும் எழுதி, பிறால் கீதாசார்யரின் அபிப்ராயத்திற்கு விருத்தமாய் அர்த்தம் செய்யப்பட்டிருக்கு

---

* இவரிட மகிமைகளின் சுருக்கத்தை 'த்வைத விஜய துந்துபி' என்னும் புத்தகத்தில் பார்க்கவும்.

† மொழி பெயர்ப்பு விஷயத்தில்—மதராஸ் ஹைகோர்ட் டிரான்ஸ்லேடர்ஸ் சூபரிண்டெண்டெண்ட் அவர்கள் அடியில் கண்டவாறு எழுதுகிறார்:—

"I have gone through the Tamil translation of the "Civil Suit" a treatise in Kanarese by His Holiness Sri Satyadhyana Thirtha Sripadangalavaru, Peetadhipati of Sri Uttaradi Mutt. I am glad to say that the Tamil translation rendered by Mr. Satyananda Krishnachar is done in good and intelligible language with due care and attention."

18-8-'36. (Sd.) *S. Krishnamacharya.*

மிடங்களில் விசாரம் செய்து அவாளிட ஸ்வவசன விரோதாதி தோஷங்களையும் எடுத்துக் காட்டி அவ்விருத்தார்த்தங்களைக் கண்டித்துமிருக்கின்றனர்.

இதில் பதங்களுக்கு அர்த்தம் எழுதுவதில் ஸம்ஸ்கிருதத் திலேயே தனியாய் படிப்பதற்கும், ஸம்ஸ்கிருதத்தை விட்டு தமிழில் மாத்திரம் தனியாய் படிப்பதற்கும் அனுகூலமாயிருப்ப தற்காக இரண்டையும் வெவ்வேறு வரிசைகளாக எழுதப்பட்டி ருக்கின்றன. பெண்களுக்கும் அதிக படிப்பற்றவர்களுக்கும் எளிதில் தெரிவதற்காக சாதாரணமாய் வழக்கத்திலுள்ள பதங்களையே உபயோகித்து எளிய நடையிலேயே எழுதப் பட்டிருக்கிறது.

தவிர இத்தமிழ் பாஷையில் க, ச, ட, த, ப, வர்க்கங்களில் ஒவ்வொரு உச்சரிப்பே இருப்பதினால் இதர பாஷையின் வார்த் தைகளின் நான்கு உச்சரிப்புகளைக்காட்ட முடியவில்லை. எப்படி எனின் :— அத: 1 = ஆகையால், அத 2 = பிறகு, அத: 3 = இது, அத: 4 = கீழ், இவ்வர்த்தங்களையுடைய நான்கு பதங்களி லுள்ள தவர்க்கத்தின் நான்கு உச்சரிப்புகளுக்கும் ஒரே எழுத் தையே உபயோகிக்க வேண்டியிருப்பதினால் ஸரியாக உச்சரிக்க முடியாமல் வேருவிதமாய் உச்சரிப்பதினால் வேறு அர்த்தமாய் விடுகிறது. அத்தகைய இடங்களில் அவ்வெழுத்துக்குப் பக்கத் தில் ஸரியான உச்சரிப்பை அறிவிக்கக்கூடிய கிரந்தாக்ஷரத்தை ( ) இவ்வடையாளத்தின் மத்தியில் எழுதப்பட்டிருக்கிறது. கிரந்தாக்ஷரப்பயிற்சி யற்றவர்கள் அதை அறிந்துகொள்வதற் காக வேண்டுமான அக்ஷரங்களை தமிழ் அக்ஷரங்களுடன் இப்புத்தகத்தின் ஆரம்பத்தில் காட்டப்பட்டுமிருக்கிறது. அதின் ஸகாயத்தினால் வாசகர்கள் ஸரியான உச்சரிப்புகளை அறிந்து கொள்ளக்கூடும்.

யாராகிலும் இந்த கீதையை நன்றாய் ஆராய்ந்து படிப்பாரே யாகில் அது ஸ்ரீமதானந்த தீர்த்தரால் (மத்வாசார்யரால்) ஸ்தா பிக்கப்பட்ட மதத்தையே (த்வைத மதத்தையே) தாங்கியிருக்கி றதென்றும், இதர அத்வைதாதி மதங்களுக்காதாரமாகிறதில்லை

என்றும் அவர்களுக்குத் தெரியாமற் போகாதென்றும் உறுதி யாய்ச் சொல்லக்கூடும். தற்காலத்திய மேனாட்டு வேதாந்த பரி சோதகர்களும் இந்த கீதை த்வைதத்தையே சொல்லுகிற தென்றும் அத்வைதாதி மதங்களுக்காதாரமாவதில்லை என்றும் அவளிட நூல்களில் கூறியுமிருக்கின்றனர். அவைகளில் சிலவற்றை வாசகர்களின் பார்வைக்காக இங்கு காட்டப்பட்டிருக் கின்றன.

ஆக்ஸ்பர்ட் விச்வவித்யாலயத்தில் ஸம்ஸ்க்ருத மஹா மஹோபாத்யாய பதவியை யடைந்திருக்கும் ம்யாக்டோநெல் என்பவர்— *"சங்காராசார்யர் அத்வைத தத்வத்தின் அல்லது ஐக்யவாதத்தின் ப்ரதிபாதகரில் ப்ரதானராவர். கீதாபாஷ்ய மென்னும் அவரிட கீதாவ்யாக்யானம் ஓர் சுதந்திரமான தர்மம் மற்றும் தத்வமீமாம்ஸா க்ரந்தமேயன்றி ஸரியான வ்யாக்யான மென்று கூறப்படுவதில்லை. அவர் கீதையிலுல் தம்மிட ஸ்வந்த மான தத்வங்களுக்கு அனுகூலமாகும்படிக்கு ஸம்மதியைக் காட்டுவதற்காக முயலுகிறார்" என்றும்—

(கீதாபன்யாஸம் பாகம்-1, பக்கம் 181)

† W. S. ஊர்க்ஹார்ட் என்பவர்— "கீதையைப்போன்ற கிரந்தம் ஸஹஜமாகவும் த்வைதரீதியில் தத்வங்களை ப்ரதிபாதிப்ப தற்கு உத்தேஜனத்தைக் கொடுக்கிறது" என்றும்—

(கீதாபன்யாஸம் பாகம்-1, பக்கம் 182)

---

* Sankara.....was the principal exponent of the Adwaita doctrine or strict Monism.....His Gita Bhashya or commentary on the Bhagavadgita is rather an independent religio-Philosophic treatise than a commentary in the strict sense. From the Gita, he tries to adduce proofs for his own doctrine.....*India's Past* by A. A. Macdonell, Emeritus Professor of Sanskrit in the University of Oxford.

† "Such a work as the Gita would naturally give encouragement to dualistic tendencies" P. 44. *The Vedanta and Modern Thought* by W. S. Urquhart, M. A., D. Litt.

"கீதையில் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு விஷ்ணுதாதாத்ம்யம் (விஷ்ணுவுடன் அபேதம்) நிரூபிக்கப்பட்டிருக்கிறது அவ்வளவே யல்ல. இந்த விஷ்ணுவுக்கு உபனிஷத் ப்ரதிபாத்யமான நிற்குண ப்ரஹ்மதாதாத்ம்யமும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமாக அடையப்பட்டவாறு வைசித்ரயங்களில் நாம் எதை விசாரித்த போதிலும் விஷ்ணு உபனிஷத் ப்ரதிபாத்யமான ப்ரஹ்ம தாதாத்ம் யத்தினின்றும் ப்ராப்தமான ஸர்வோத்தமத்வத்தையே அடை கிறான். அதுவே யல்லாமல் பரமாத்மா நிர்தர்மக சூன்யபாவம் மற்றும் அஜ்ஞேயதை என்கிற குழிக்கு (குழியில்) விழாமல் தப்பிக்கப்பட்டிருக்கிறான். இந்த ஸர்வேச்வரன் குணங்களுடன் கூடியவனாகிறபடியால் ஜனங்களிட ஆராதனைக்கு விஷயமாகிறான். மற்றும் இவனுல் ஜகத்ப்ரவாஹம்—ஸத்ய பூதமான நிற்கமம். (நிஜமான ஸ்ருஷ்டி) மித்யாபூதமான பொய் ஆட்டமல்ல-வெளியில் புறப்படுகிறது" என்றும்—

(கீதாபன்யாஸம் பாகம்-2, பக்கம் 231)

† சுரேந்த்ரநாத் தாஸ் குப்த என்பவர்—"ஸ்ரீ பகவத் கீதை ஏகாந்தி (விஷ்ணு மாத்திரம் ஸர்வோத்தமவாதிகளான) வைஷ்ணவர்களின் சாஸ்திர க்ரந்தமாயிருக்கின்றது" என்றும்—

(கீதாபன்யாஸம் பாகம்-2, பக்கம் 186)

---

* Krishna becomes identified with Vishnu or Vasudeva..... But Vishnu is also on the point of being identified with the impersonal non-qualitative Brahman the subject of the more severely monistic doctrine of the Upanishads. Thus, from whatever direction we view the process of modification, Vishnu obtains the elevation which results from identification with the Absolute, and at the same time the Absolute is prevented from receding into these depths of negation and unapproachability.....The All - God becomes associated with qualities which constitute him a definite object of worship and from him the world-process emerges—as a real emanation and not simply as an illusive shadow-play.

W. S. URQUHART, M. A., D. LITT.

† "The Sreemad Bhagavadgita is the canonical work of the ekanti (singularistic) Vaishnavaś."

SURENDRANATH DAS GUPTA, M. A., PH. D.,

Professor of Sanskrit.

டாக்டர் பால் யவ்டிக் என் ப வர்—"பகவத் கீதை கடோபனிஷத்தின் ஆதாரத்தின் மேல் ப்ராப்தமாயிருக்கும், வைஷ்ணவ தத்வஜ்ஞரால் இயற்றப்பட்ட மோக்ஷ ஸாஸ்திர மென்று அநேக வித்வான்கள் ஸம்மதிக்கிறார்கள்" என்றும்—

(கீதான்யாஸம் பாகம்-2, பக்கம் 187)

† L. D. பார்னெட் என்பவர் கீதையில் எல்லாவற்றிற்கும் மேலான ஸ்தானத்தில் பரமாத்மா, புருஷோத்தம, வாஸுதேவ, ஈச்வர, நாராயண, கோவிந்த, ஹரி, விஷ்ணு, இது முதலிய வெகு பெயர்களால் அழைக்கப்படும் ஓர் பரம (பரப்ரஹ்ம) சேதனம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் இது எல்லா அவஸ்தைகளையும் கடந்தது. அசிந்த்யமாயிருந்தபோதிலும், அது அத்வைத வேதாந்தத்தில் ப்ரதிபாதிக்கப்பட்ட நிர்தர்மகமான விசேஷ ரஹிதமான ஸூன்ய ஐக்யமல்ல. ஆனால் அவனிடத்தில் ஸகல கல்யாண குணங்களும் ஆனந்த்யத்தை யடைந்து நிலைபெற்றிருக்கின்றன. ஸகல ஸத்குணங்களும், ஞானமும், ஆனந்தமும் பரிபூர்ணமாய் அவனிடத்திலிருக்கின்றன. அவன் ஜகதந்தர்யாமி, ஸர்வஸாக்ஷி, அந்தர்கதனாய் ஜகன்னியாமகனாய் இருப்பான். ஸகல ஜகத்தும் ஸத்யமே. ஏனெனின் அது இந்த பூர்ணனந்த வஸ்துவினால் சேஷ்டிதமாயிருக்கிறது. ஜகத்து ஸத்யபூதமான இரண்டு தத்வங்களை உட்கொண்டிருக்கிறது, ஒன்று ஜடம் மற்றொன்று அனந்தானந்த ஜீவராசிகள்" என்றும்—

(கீதாபன்யாஸம் பாகம்-2, பக்கம் 231)

---

* "Many scholars agree that the Bhagavadgita is a moksha-sastra produced in a Vaishnava Church descended from the Katha Upanishad."

PAUL YEVTIC, B. LITT., PH. D.

† "At the summit of all existence is an absolute spirit variously called Paramatman, Purushottama, Vasudeva, Iswara, Narayana, Govinda, Hari, Vishnu. But though being above the moods and inconceivable, he is not the blank, attributeless unqualified one of the Adwaita Vedanta. On the other hand, in Him are united all conceivable good qualities raised to infinity. All goodness, knowledge, and blessedness that are and may be

ஹில் என்னும் மேநாட்டு பரிசோதகர் தம்மிட கீதையில்—"சங்காசார்யரின் புத்திக்கூர்மையும்—கீதா ஶாஸ்திரமும் அத்வைதமும் ஒரே கருத்துடையவைகளல்ல, (கீதை அத்வைத விரோதி) என்கிற நிஜமான விஷயத்தை மறைப்பதற்கு ஸாமர்த்யமுடையதாகவில்லை. (சங்காசார்யர் எவ்வளவு புத்திக்கூர்மை உபயோகித்தபோதிலும் தம் மதத்தை கீதாநூடமாகும்படி செய்யமுடிவதில்லை.) மற்றும் தம் கருத்துகளுக்கு விருத்தமாக ஸ்பஷ்டமான கீதாவாக்யங்களிருக்க (ஸர்வ)கர்மமற்ற (அத்வைத) ஞானமே முமுக்ஷுவுக்கு மோக்ஷத்தைத் தரக்கூடியதென்கிற தம் பக்ஷத்தை நிலைநிறுத்துவதற்கும் வல்லமையற்றவராயிருக்கிறார். மற்றும் கீதா வாக்யம் க்ரூரமான அனுகூல்யத்தைதாங்கியிருக்க கீதார்த்தத்திற்கு வைபரீத்யத்தையுண்டாக்கும் பதங்களை சேர்த்துக்கொள்வதற்கும் பின்வாங்குவதில்லை" என்றும்—எழுதியிருக்கிறார்கள்.

இவ்வாறு ஸகல ப்ரமாணங்களாலும் வெகு சிறப்புடன் கொண்டாடப்படும் ஶ்ரீ ஶ்ரீ ஸத்யத்யான தீர்த்த ஶ்ரீபாதங்களவர்களிட கருணைம்ருதரூபமாய் ப்ரவஹிக்கும் த்வைதார்த்தத்துடன் கூடிய இந்த கீதா புத்தகத்தை தமிழ்நாட்டு த்வைதமதாபிமானிகளனைவரும் பெற்று தினந்தோறும் ஶ்ரத்தாபக்தியுடன் ஷை நூலை பயிற்சி செய்துகொண்டே ஶ்ரீஶ்ரீகளிட பரமானுக்ரஹ பூர்வகமான பாரதீரமண முக்ய ப்ராணேந்தர்கதனை ஶ்ரீகீதாசார்யனின் அனுக்ரஹத்திற்கு பூர்ண பாத்திரர்களாக வேணுமாய்க் கோருகிறேன்.

மதராஸ்,
9-12-1937.

ஸத்தியானந்தம் கிருஷ்ணசார்ய:

---

abide in an immeasurable degree in Him. He is the soul, the witness, the inward ruler of the universe. All the universe is real for it is inspired throughout by this blessed soul. The universe comprises two real categories—one matter and infinitely many souls.

L. D. BARNETT, M. A., D. LITT.

* "Not even the subtlety of Sankara can conceal the fact that the Adwaita and Geeta systems are not at one; nor is he able in the face of plain texts to the contrary, to make good his claim that Geeta severs action from knowledge, the latter alone qualifying the aspirant for release.....and when the Geeta text is abdurate he does not scruple to understand additional words that reverse the sense."

தந்தாக்ஷரங்கள்.

உயிரெழுத்துக்கள்.

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	ஃ	ஃ3
ஸ	ஸ3	ஹ	ஹெ	ஒ	ஒள	கூ	கூஃ
ஸு	ஸூ	ஏ	ஐ	ஓ	ஔ	அம்	அ:

மெய்யெழுத்துக்கள்.

க	வ	ழ	஖	ஜ.,	ஶ	ஹ	ஜ	ஷ	ஞ.,
க1	க2	க3	க4	ங	ச1	ச2	ஜ1	ஜ2	ஞ
ட	ற	ஷ	ஸ	ண.,	த	ய	ஒ	ய	ந.,
ட1	ட2	ட3	ட4	ண	த1	த2	த3	த4	ந
ப	ஹ	ஷ	ஸ	ம.,	ய	ர	ல	வ	ழ.,
ப1	ப2	ப3	ப4	ம	ய	ர	ல	வ	ழ(ச)
ஷ	ஸ	ஹ	ஷ	க்ஷ.					
ஷ	ஸ	ஹ	ள	க்ஷ					

மெய்களோடு சேரும் உயிர்களின் அடையாளங்கள்.

ஸு — ா	ஊள — ி	ஔள — ெ-ள
ஜ — ீ	வன — ெ	◌ அணுஸ்வரம்
ழ◌ — ூ	ஹென — ே	ஃ விஸர்க்கம்.
உ — ◌	ஓ — ெ-ா	

உயிர்மெய்யெழுத்து.

கு	கா	கி	கீ	கா◌	கெள	கூ	ெக	ேக	ோகா
க	கா	கி	கீ	கு	கூ	க்ரு	ெக	ை க	ோகா

ெகள கும். கஃ:

ெகள கம் க:

ஸ்ரீ

ஸ்ரீமத் பகவத்கீதா

விஷய ஸூசிகை.

அத்தியாயம்.	விஷயம்.	பக்கம்.
	ஸ்ரீ கீதாஸார ஸங்க்ரஹம்.	... 1—44
1.	ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு ஸ்ரீ கீதோபதேசம் செய்வதற்குக் காரணம், கௌரவ பாண்டவர்களின் போர் முயற்சி, அர்ஜுனனின் மனத்தளர்ச்சி (சு. 47)	1
2.	ஜீவேஸ்வரர்களிட ஸ்வரூப நிரூபணம், அவர்களிட ஞாலை பாயம், அபரோக்ஷ ஞானியின் லக்ஷணம் (சு. 72) ...	23
3.	நிஷ்காம்ய கர்மரூப ஞாலைபாயமென்னும் யாகத்தை அவசியம் செய்யவேண்டியதென்பதின் அறிக்கை விவரணம், ஞானயோகத்தின மேன்மை (சு. 43) ...	81
4.	கர்மங்களின் பூர்வதனத்வம் (பழமை), நிஷ்காம்ய கர்மம், தாரதம்யத்தில் ப்ரதானரான விஷ்ணு, விஷ்ணு ஞானம் இவைகளின் விவரணம், கர்மபேதம் (சு. 42) ...	110
5.	காமாதிகளின் விடுதலென்னும் ஸன்யாஸம், பயனைசையற்று ஈஸ்வரார்ப்பண புத்தியினால் வர்ணாஸ்ரம விஹித கர்மானுஷ்டானமென்னும் கர்மயோகம் இவைகளின் விவரணம் (சு. 29)	140
6.	த்யான (ஸமாதி) யோகத்தின் விவரணம், ஆஸனாதிகள் (சு. 47)	160
7.	த்யானத்திற்கு ஆவஸ்யகமான பக்தியுண்டாவதற்காக எட்டு வகை ஜடம், மஹாலக்ஷ்மி இவைகளைக்காரணமாயுள்ள ஸ்ருஷ்ட்யாதிகர்த்ருத்வ ரூப ஸாமான்ய ஞானம், விஜ்ஞானமென்னும் விசேஷமாய் அறியவேண்டிய பகவானிட அலௌகிகமான மஹிமைகள் (சு. 30) ...	189
8.	ப்ரஹ்மம், அத்யாத்மம், அதி(யி)பூதம், கர்மம் முதலிய பதங்களின் அர்த்தம், மரணகாலத்திலுண்டாகும் பகவத் ஸ்மரணையின் பயன், அது உண்டாவதற்கு உபாயம், ப்ரஹ்மப்ராப்தி, அதற்கு வழி, (அர்சிராதி மார்க்கம்) (சு. 28)	215

அத்தியாயம். பக்கம்.

9. எல்லா இடங்களிலும் பாவியிருத்தல், உலகத்திற்கு ஆதார மாயிருத்தல் முதலிய அதிவிசித்ரமான பகவன் மகிமைகள் (சு. 34) 236

10. புத்யாதிகளையும், மஹர்ஷ்யாதிகளையும் படைத்த பகவன் மகிமைகள், த்யானத்தின்பொருட்டு பரமாத்மாவின் விபூதி ரூபங்கள் (சு. 42) 259

11. விபூதி ரூபங்களின் த்யான ஸௌகர்யத்திற்காக விஸ்வரூபத் தின் ஸ்திதி விவரணம் (சு. 55) 293

12. பரமாத்மா, மகாலக்ஷ்மி இவ்விருவரிட உபாஸனைகளில் பரமாத்மாவின் உபாஸனைக்கே மேன்மையும், சௌலப் யமும் கூறல் (சு. 20) 328

13. பின் அத்யாயங்களில் ஆங்காங்கு சொல்லப்பட்டுள்ள ஞான ஸாதனம், ஜீவஸ்வரூபம், பகவத் ஸ்வரூபம், க்ஷேத்ர மென்னும் பகவானிட ஆவாஸஸ்தானம், இவைகளின் சுருக்கம் (சு. 35) 342

14. ஸத்வராஜஸ்தமோ குணங்களின் மாருதலின் ஸ்திதி, அவை களைக்கடக்கும் உபாயம், ஜீவத்ரைவித்தியம் (சு. 27)... 368

15. ஸம்ஸார காரணமான ப்ரக்ருத்யாதி க்ஷேத்ரமெனப்படும் ஜகத்தின் ஸ்வரூபம், அதைக்கடக்கும் பகவத் ஞானரூப உபாயம் (சு. 20) 385

16. தேவாஸுரர்களின் லக்ஷண விவரணம் (சு. 24) ... 401

17. ஸத்வாதி குணங்களாலுண்டாகும் ஸ்ரத்தா, ஆஹாரம், தபஸ்ஸு, யஜ்ஞம், தானம் முதலியவைகளின் பேதத்தைச் சொல்லிக்கொண்டே அவைகளை விவரித் தல் (சு. 28) 420

18. மூன் அத்தியாயங்களில் ஆங்காங்கு சொல்லப்பட்டிருக்கும் புருஷார்த்தமான ஞான ஸாதனங்களை ஒன்றுகூட்டி சுருக்கமாய்க் கூறுதல் [கர்ம த்யாகத்தின் ஸ்வரூபம்] (சு. 78) ஆக ஸ்ரீலோகங்கள் 701 * ... 437

ஸ்ரீலோகங்களின் அகாதி 482

---

* சில பதிப்புகளில் முதலத்தியாயத்தின் 27-வது ஸ்ரீலோகத்தை மூன்று, பாதியாகவும், கடைசி ஸ்ரீலோகத்தை மூன்று பாதியாகவும் சேர்த்து ஓர் ஸ்ரீலோகத்தைக் குறைத்து 700 ஸ்ரீலோகங்களாகக் கணக்கிடப் பட்டிருக்கின்றன. மற்றும் சில பதிப்புகளில் 13-வது அத்தியாயத்தின் முதல் ஸ்ரீலோகத்தைக் கணக்கிடாமலும், மற்றும் சில பதிப்பில் முதல் சுலோகத்தை விட்டும் 700ஸ்ரீலோகங்களாகக் கணக்கிடப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீ

ஸ்ரீ பகவத்கீதா

விசாரங்களின் அறிக்கை.

விஷயம்.	பக்கம்.
'திதிக்ஷவ:' என்கிற ஸப்தார்த்த விசாரம்	34
அபோரக்ஷ ஞானத்திலல் புண்ய பாபங்கள் தூலையும் விதம் ...	64
'மன்மயா:' என்கிற ஸப்தார்த்த விசாரம்	116
'ப்ரஹ்மார்பணம்' 'ப்ரஹ்ம ஹவி:' இது முதலிய வாக்கியங்களின் அர்த்த விசாரம்	126
'ப்ரஹ்மபூத:' என்கிற ஸப்தார்த்த விசாரம்	156
'ஸோஹம்' இது முதலிய வாக்யார்த்த விசாரம்	197
'ஞானீத்வாத்மைவ' 'வாஸுதேவஸ் ஸர்வம்' இவ்வாக்யங்களின் அர்த்த விசாரம்	205
'மத்பாவ' ஸப்தார்த்த விசாரம்	221
'அக்ஷர்யத் ப்ரஹ்மண:' என்கிற வாக்யார்த்த விசாரம் ...	227
'அஹம் க்ரது:' இது முதலிய வாக்யார்த்த விசாரம்... ...	246
நிர்குண ப்ரஹ்மோபாஸனை விசாரம்	333
'க்ஷேத்ர, க்ஷேத்ரஜ்ஞ' ஸப்தார்த்த விசாரம்	344
'அம்ஸ' ஸப்தார்த்த விசாரம்	392
ஸகல கீதார்த்தமும் ஸகல வேதார்த்தங்களும் இக்கீதையின் 15-வது அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிறதென்று நிரூபித்தல் ...	400
'மித்யா' ஸப்தார்த்த விசாரம்	407
'ஈஸ்வரோஹம்' என்கிற வாக்யார்த்த விசாரம்	412
'ஈஸ்வர: ஸர்வபூதானும்' என்கிற ஸ்லோகார்த்த விசாரம் ...	471





श्री

श्रीमद्दिग्विजयरामोविजयते ।



मङ्गळं

इन्दिरावदनाम्भोज राजहंसाय विष्णवे ।
अमन्दानन्द सन्दोह सुन्दराकृतये नमः ॥
व्यासाय भवनाशाय श्रीशाय गुणराशये ।
हृद्याय शुद्धविद्याय मध्वाय च नमोनमः ॥
दुरन्त दर्मतध्वान्त विध्वंसन विचक्षणः ।
जयतीर्थाख्य तरणिर्भासतां नो हृदम्बरे ॥

ஸ்ரீ கீதா ஸாரஸங்க்ரஹம்

ஸ்ரீ குருப்யோ நமः

कृष्णः काव्यकृते स्वहस्तकमलछत्रं प्रदद्यात्प्रभुः ।
सच्छास्त्राभिधरम्यराजपदवीं सुज्ञानयानं मुदा ॥
स्वांघ्र्याराधन कंकणं करयुगे कैंकर्य हारं गले ।
स्वात्मानं हृदि नित्यचिंतनधनं सद्युक्तिरत्नान्यपि ॥

ஸ்ரீ கிருஷ்ணபகவான் தன்னிட பக்தனென அர்ஜுனனின் ஸாரத்ய வ்யாபாரத்தை வகித்து தர்மக்ஷேத்ரமான குருக்ஷேத்ரத்திற்கு வந்து யுத்தத்திற்கு நின்றனன். அப்பொழுது "ஓ கிருஷ்ணனே! இந்த யுத்தத்தில் நான் யாருடன் போர்புரிவது யுக்தமானது? துர்ப்புத்தியான துர்யோதனனுக்கு ப்ரியத்தை யுண்டாக்கவேண்டுமென்று போருக்காக யார்யார் வந்திருக்கிறார்களோ, அவர்களைக்காணுவேன். அதுவரைக்கும் நீ இரதத்தை இவ்விரண்டு படைகளின் மத்தியில் நிறுத்து" (1. 21-22-23) என்று அர்ஜுனன் ஸ்ரீ க்ருஷ்ணனை வேண்டிக்கொள்ளவே, பகவான் இரண்டு படைகளின் மத்தியில் இரதத்தை நிருத்தி "ஓ அர்ஜுன! இவ்விரு படைகளிலிருக்கும் போர் வீரர்களைப் பார்" என்று சொன்னர். (1-25). அர்ஜுனன் போர்க்களத்தில் வந்து நின்றிருக்கும், தந்தைகளையும், பாட்டனரான பீஷ்மாசார்யரையும், மாமன்மார்களையும், ஸஹோதரர்களையும், புத்திரர்களையும், போரன்மார்களையும், ஸ்னேஹிதர்களையும், மாமனர்களையும் பார்த்து (1. 26-27), அவர்களிடத்தில் தயையுடன் கூடிய மனதுள்ளவனைப் ஸ்ரீ க்ருஷ்ணனைக் குறித்துச் சொல்லுகிறான்:— "ஓ க்ருஷ்ணனே! போருக்குத் தயாராயிருக்கும் இந்த பந்துக்களைப் பார்க்கவே, காண்டீவ தனுஸ்ஸு என்னிட ஸதிசாருகிறது. என்னிட தேஹம் எரிகிறது. வாயாரு

அர்ஜுனனின் விஷாதம்.

கிறது. மயிர்க்கூச்சலுண்டாகிறது. தேகம் நடுங்குகிறது. நான் நிற்கமாட்டேன். என் மனது கலங்குகிறது. அபசகுனங்கள் காண்கின்றன. போரில் இப்பந்துக்களைக் கொன்று ச்ரேயஸ்ஸை யடையமாட்டேன். எனக்கு யுத்தத்தில் ஜயம் வேண்டாம், இராஜ் யம் வேண்டாம், ஸுகமும் வேண்டாம். எந்த ஆசார்யருக்கா கவும், தந்தைகளுக்காகவும், பாட்டனர்களுக்காகவும், மாமன் மார்களுக்காகவும், மாமனர்களுக்காகவும், பௌன்மார்களுக்கா கவும், பந்துக்களுக்காகவும் இராஜ்யம் ஸுகம் இவைகள் அபே க்ஷிக்கப்படுகின்றனவோ, அவர்களே ப்ராணங்களையும் தனத்தை யும் விட்டுப் போருக்கு வந்து நின்றிருக்கிறார்கள். அவர்களைக் கொன்ற பிறகு இந்த இராஜ்யத்தினாலுண்டாகும் ப்ரயோஜ னமென்ன? போகத்தினாலாகும் பயன் யாது? என்னிட பிழைப் பினாலாவது என்ன பயன்? இந்த பீஷ்மாதிகள் என்னைக் கொன் றாலும், மூவ்வுலகத்தின் இராஜ்யம் கிடைப்பதாயிருந்தபோதிலும் நான் அவர்களைக் கொல்லமாட்டேன். இப்படியிருக்க இந்த அல்ப மான பூமிக்காக நான் அவர்களைக் கொல்லமாட்டேன் என்று சொல்லுவதென்ன? * ஆததாயிகள் ஸம்ஹாரத்திற்கு யோக்யர் களென்று சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த துர்யோதனாதிகளும் அத்தகைய ஆததாயிகளே. ஆகையால் ஸம் ஹாரத்திற்கு யோக்யரே! ஆயினும், அவர்களைக் கொல்லுவதால் ஸந்தோஷமுண்டாகாது. அவ்வளவேயன்றி பாவமும் உண்டா கும். ஆகையால் இவர்களை நான் கொல்லமாட்டேன். இந்த பந்துக்களைக்கொன்று நான் எப்படி ஸுகமடைவேன்? (1. 28-37) குலம் நாசமடையுமாயின், குலதர்மங்கள் நாசமடை யும். தர்மங்கள் நஷ்டமாயின், அதர்மங்கள் குலத்தைக் கெடுக்கும். அதர்மத்தினால் குலஸ்த்ரீகள் கெடுவார்கள். குலஸ்த்ரீயர் கெடுவ

---

* நெருப்பினால் சுடுபவர்கள், விஷத்தைக்கொடுப்பவர்கள் ஆயுதங் களால் கொல்ல ப்ரயத்னப்படுபவர்கள், பிறரிடதனங்களை அபகரிக்கின்றவர் கள், பிராரிட பூமியை அபகரிக்கிறவர்கள், பிராரிட ஸ்த்ரீயரை அபகரிப்பவர் கள் இவ்வார்வரும் ஆததாயிகளென்று சொல்லிக்கொள்ளப்படுவார்கள். துர்யோதனாதிகள் இவ்வெல்லா பாவங்களையும் ஸாதுக்களான பாண்ட வர்களின் விஷயத்திலேயே செய்திருக்கிறார்கள். ஆகையால் வதத்திற்கு யோக்யர்களே.

ராயின் வர்ணஸாங்கர்ய முண்டாகிறது. வர்ணஸாங்கர்யம் குலத்தைக்கெடுத்தவர்களுக்கும், குலத்திற்கும்நரக முண்டாவதற்குக்காரணமாகும். * ஸங்கர ஜாதீயருக்கு பித்ருக்களுக்கு பிண்டோதகங்களைக் கொடுப்பதில் அதிகாரமில்லாததினால், அவாளிட பித்ருக்கள் பிண்டோதகக்ரியைகளில்லாதவராய் நரகத்தில் விழுவார்கள். வர்ணஸாங்கர்யத்தை யுண்டாக்கும் இந்த தோஷத்தினால் ஜாதி தர்மங்களும் குல தர்மங்களும் நஷ்டமாகும். ஜாதி தர்மங்களும் குலதர்மங்களுமில்லாத ஜனங்கள் நரகத்திலேயே நிச்சயமாய் வஸிப்பார்களென்று ஶாஸ்த்ரங்களில் கூறியிருப்பதைக் கேட்டிருக்கிறேன். (1. 38-44) துர்யோதனாதிகள் இராஜ்ய லோபத்தினால் புத்திகெட்டு குலக்ஷயத்தினாலுண்டாகும் தோஷங்களைக் கவனிக்காமல், போருக்கு ப்ரவ்ருத்தித்திருந்தபோதிலும் மேற்கூறிய தோஷங்களை அறிந்திருக்கும் என்னைப்போன்றவர்கள் இத்தகைய பாபகார்யங்களை எப்படி விடாமலிருப்பது? (1. 38-39) ஓ கிருஷ்ணனே! இராஜ்யத்திற்காகவும் ஸுகத்திற்காகவும் பந்துக்களைக் கொல்லுவது மகாபாவமல்லவோ? ஆகையால் ஶஸ்த்ராஸ்த்ரங்களை ப்ரயோகிக்காமல் (எவாமல்) சும்மாநிற்கும் என்னை ஒருக்கால் துர்யோதனாதிகள் கொன்றபோதிலும் அது எனக்கு க்ஷேமமேயாகும்." (1-45,46).

ஓ க்ருஷ்ணனே! போர் புரிவதினால் (1) பூஜ்யரான பீஷ்மத்ரோணர் முதலியவர்களிட ஸ்வரூபம் நாசமாகும். (2-4.) ஆகையால் போர் புரியமாட்டேன். (2) போரில் பீஷ்மத்ரோணாதிகளின் தேகங்கள் நாசமடையுமாகையால் போர் புரியமாட்டேன். (3) பீஷ்மத்ரோணர் முதலியோரிட தேகங்கள் சின்னபின்னமாவதைக்கண்டால் துக்கமுண்டாகு (2-5) மாகையால் போர்புரியேன். (4) பீஷ்மத்ரோணாதிகள் நாசமடைந்து குலதர்மங்கள் ஜாதிதர்மங்கள் நஷ்டமாய் குலத்திற்கு அதர்மம் சேர்ந்து, குல ஸ்த்ரீயர்கள் கெட்டு, அதினால் வர்ணஸாங்கர்யமுண்டாய் பித்ருக்களுக்கு பிண்டோதகங்களில்லாமற்போய் குலத்திற்கும், குலத்தைதக்கெடுத்தவர்களுக்கும் நரகாதி அனர்த்தங்களுண்டாகுமாகையால்

---

* ஸங்கரஜாதி என்றால் வேறுஜாதியான புருஷனால் வேறுஜாதி ஸ்த்ரீகளிடத்தில் பிறப்பவர்கள்.

போர் செய்யமாட்டேன், (5) போரில் ஜயம் நமக்குண்டாகுமோ, அவர்களுக்குண்டாகுமோ என்கிற ஸந்தேஹமிருப்பதினல் போர் செய்யமாட்டேன் என்று யுத்தத்தை விட்டு சும்மா உட்கார்ந்திருக்கும் அர்ஜுனனைக் குறித்து—ஓ அர்ஜுன! நீ இப்படிப் பேசுவது பண்டிதர்களின் பேச்சல்ல. வெறும் உன்னிட புத்திக்குத்தோன்றும் பேச்சுகளே யாகும். ஸாஸ்த்ர ஸம்மதமானவைகளல்ல. இவ்வேலை செய்யத்தகாது, இவ்வேலை செய்யத்தகுந்தது என்னும் விஷயத்தில் ஸாஸ்த்ரமே ப்ரமாணமாகும். ஸாஸ்த்ரத்தில் 'இது செய்யத்தகுந்தது' என்று எந்த கர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவோ அவைகள் செய்யப்படவேண்டியவைகளே. எதைச் செய்யக்கூடாதென்று ஸாஸ்த்ரம் சொல்லுகிறதோ அதைச் செய்யக்கூடாது (16-24.) ஸாஸ்த்ரத்தில் சொல்லியவாறு செய்வதே மேலான வழியாகும். ஸாஸ்த்ரம் என்ன சொல்லுகிறதெனின் :—

பரமாத்மாவின் ஸ்வரூபமும், குணங்களும்.

ஸ்ரீ க்ருஷ்ணபரமாத்மா ஸர்வோத்தமன், மற்றும் ஸகல ஜீவ ஜடப்ரபஞ்சத்தைக்காட்டிலும் வேறானவன். ஸகல ஜீவ ஜடப்ரபஞ்சத்திற்கு உற்பத்தி, ஸ்திதி, ஸம்ஹாரம், நியமனம், ஞானம், அஜ்ஞானம், பந்தம், மோக்ஷம், ஸுகம், துக்கம் இவைகளை அவாளவாளிட மேயாக்யதை, கர்மங்கள் இவைகளை அநுஸரித்துக் கொடுப்பவன் (7-6.) மற்றும் ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்திமத்வம் முதலிய அளவற்ற குணங்களால் பூர்ணன் (நிறைந்தவன்).

ஜீவர்களின் ஸ்வரூபமும், குணங்களும்.

ஜீவர்கள் நித்யர்கள், நாசமற்றவர்கள். அவாளிட தேகங்கள் அனித்யமானவைகள். (2. 12-13) அவர்கள் ப்ரஹ்மசர்ய, கார்ஹஸ்த்ய, வானப்ரஸ்த, ஸன்யாஸ மென்ற பேதங்களுள்ள ப்ராஹ்மணர்கள், க்ஷத்ரியர்கள், வைஶ்யர்கள், ஶூத்ரர்கள், வர்ணபாஹ்யர்கள் என்று ஐந்து வகுப்பாக வகுக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வைந்து வகுப்பாரும் ஸாத்விக, ராஜஸ, தாமஸரென்று மூவ்வகையானவர்கள் (15-3). மற்றும் தேவதைகளென்றும் அஸுரர்களென்றும் இரு வகுப்புடையவர்கள் (16-6). ஸாத்விக ராஜஸ தாமஸரின் ஞானகர்ம தைர்ய ஆகாரம் முதலியவைகள் வெவ்வேறு

யிருக்கும் (17-18). மற்றும் ஶமம் (பரமாத்ம விஷயகமான புத்தி) தமம் (இந்த்ரிய நிக்ரஹம்) வேதாத்யயன ப்ரவசன ரூபமான தபஸ்ஸு, வெளி ஶுத்தி, அந்தஶ்ஶுத்தி, க்ஷமை, (பொறுமை) ருஜு பாவம் (சரியான வழியிலிருப்பு,) ஸாதாரண ஞானம், விசேஷ ஞானம், ஸ்வர்க்காதி பரலோகங்களுண்டு, அவைகளுக்குச் சாதனங்களான கர்மங்கள் உண்டு, கர்மங்களை யனுஸரித்து பலன்களைக் கொடுக்கும் ஈஶ்வரனுண்டு என்கிற ஆஸ்திக்ய புத்தியும், ஶாஸ்த்ர விஹிதமான கர்மங்களும் ப்ராஹ்மணர்களுக்குஸ்வபாவ ஸித்தமானவைகள் (ஸ்வதர்மங்கள்) (18-42). ஶௌர்யம், தேஜஸ்ஸு, தைர்யம், தக்ஷதை (ஸாமர்த்யம்), யுத்தத்தில் பின்வாங்காமை, தர்மத்திற்கு விரோதிகளான, பகவத்விஷிகளான அஸுரர்களிட மற்றும் அவரைச் சேர்ந்தவர்களிட ஸம்ஹார ரூபமான யுத்தத்தைச் செய்து, அதினாலுண்டாகும் துக்கத்தை (அபிமானத்தை) விட்டு வராமற் செய்துகொண்டு (2-14) பரமாத்மாவிடம் ஸமர்ப்பிப்பது (18-43,45), தானம், அயோக்யர்களைத்தண்டிப்பது, இதுமுதலிய கர்மங்கள் க்ஷத்ரியருக்குஸ்வபாவ ஸித்தமானவைகள் என்றால் ஸ்வதர்மங்கள். க்ருஷி என்றால் பயிரிடுதல், கோரக்ஷணை, வ்யாபாரம் முதலியவைகள் வைஶ்யருக்கு ஸ்வபாவ ஸித்தமானவைகள். மேற் சொல்லப்பட்ட மூன்று வர்ணத்தாரிட சேவையே ஶூத்ரர்களுக்கு ஸ்வதர்மமாகும் (18-44).

ஸத்வ ரஜஸ் தமோ குணத்மகமான ப்ரக்ருதி தத்வம், மஹத் தத்வம், புத்தி தத்வம், மனஸ் தத்வம், அஹங்கார தத்வம், ஐந்து மஹாபூதங்கள், பூத விகாரங்களான ஓஷதிகள் இவ்விதமாகப் பரிணமித்து (மாறி) (7-4) ஜீவர்களைக் கட்டி (14-5) அஜ்ஞானம், நித்ரை, ஆலஸ்யம் முதலியவைகளை ஜீவர்களுக்குக் கொடுத்து நாநாவிதமான யோனிகளில் பிறப்பித்து துக்கத்தைத் கொடுப்பது.

ஜடத்தின் ஸ்வரூபமும், குணங்களும்.

இந்த ப்ரக்ருதி ஸம்பந்தத்தினாலுண்டாகும் துக்கங்களின் பரிஹாரத்திற்காகவும், அக்ஷயமான (நாசமற்ற) ஸ்வரூப

ஸாகத்தை அனுபவிப்பதற்காகவும் ப்ரக்ருதியிலுண்டாயிருக்கும் கட்டை விடுவித்துக்கொள்ளவேண்டியது ஆவஸ்யகமாகும் (14-20). இந்த ப்ரக்ருதி பந்தத்தின் பரிஹாரம் பரமாத்மாவின் ப்ரஸாதத்திலேயே ஆகவேண்டியது (18-56). அந்த ப்ரஸாதம் பரமாத்மாவிடத்தில் பக்தி செய்வதிலேயே உண்டாகக்கூடியது. அந்த பக்தியோ—பரமாத்மாவின் ரக்ஷகத்வம், புருஷோத்தமத்வம், ஜீவ ஜடாத்மக ப்ரபஞ்ச பின்னத்வம் முதலிய குணங்களின் அபரோக்ஷ ஞானத்திலேயே உண்டாகக்கூடியது. அபரோக்ஷமென்பரமாத்மாவை நேரில் காணுதல். அதுவும் அந்த பரமாத்மாவின் அனுக்ரஹத்திலேயே உண்டாகக்கூடியது. பரமாத்மா அவ்யக்தமான (கண்ணுக்குப் புலப்படாத) ஸ்வபாவமுள்ளவனுகையால், கருப்பு சிகப்பு முதலிய வர்ணங்களுள்ள கடபடாதிகளைப்போல் வெறும் நம்மிட ப்ரயத்னத்திலேயே கண்டுகொள்ளுவதற்கு அசக்யன். தன்னிட அனுக்ரஹத்திலேயே காணப்படுபவன். அவனிட அனுக்ரஹத்திற்காக ஜீவர்கள் எப்போதும் அந்த பரமாத்மாவின் குணங்களை த்யானிக்கவேண்டியது. பலவிதமான துர்மதங்களைக் கேழ்ப்பதிலுண்டாகும் ஸம்சய விபரீத ஞானங்களைப் போக்கடித்துக்கொண்டு தத்வ நிஶ்சயத்தை யடையாதவரைக்கும் த்யானரூபமான யோகம் ஸரியாய்ப் பொருந்தமாட்டாது (2-53). அந்த தத்வ நிச்சயமோ குருக்களை ஶரணமடைந்து, அவரை வணங்கி, பிரார்த்தித்து அவரால் பகவத் தத்வங்களின் உபதேஶத்தைப் பெற்றுலொழிய உண்டாகமாட்டாது (4-34). இத்தகைய குருபதேசமும் அதிலுல் தத்வ நிச்சயமும் ஆகவேண்டுமாயின் மனிதன் அந்த:கரண சுத்தியை யடையவேண்டும்(2-64,65). மற்றும் இஹபரலோகங்களிலுள்ள நஶ்வரமான பலாபேக்ஷையற்றவராயிருக்கவேண்டும். இவைகளில்லாவிடில் குருக்களின் உபதேசமும் தத்வ நிச்சயமும் உண்டாவதில்லை (2-44). அவாளவாளிட வர்ணஶ்ரமங்களுக்கு விஹிதமான யஜ்ஞாதி கர்மங்களைச் செய்துகொண்டே, இது உன்னிட பூஜை என்று பரமாத்மாவிடம் அக்கர்மங்களை ஒப்புவித்தாலொழிய அந்த:கரண சுத்தி யுண்டாகமாட்டாது

ஸாதனச் சுருக்கம்.

(18-46). ஆகையால்—ஸாத்விக ஜீவர்கள் தம்தம் வர்ணஸ்ரமங்களுக்கு விஹிதமான யஜ்ஞமும் தானம் யுத்தம் முதலிய கர்மங்களைச் செய்துகொண்டே, அவைகளை ஸ்ரீ பரமாத்மாவிடத்தில் பக்தியுடன் ஒப்புவிக்கவேண்டியது. அந்த பரமாத்மா பக்தியுடன் ஒப்புவிக்கும் யஜ்ஞாதிகளைப் பெற்றுக்கொண்டு (9.26-72) அந்த ஸாத்விக ஜீவர்களின் அந்த:காணத்தை ஸுத்தப்படுத்தி, அநேக துர்மதங்களைக் கெடுப்பதினாலுண்டாகும் ஸம்ஸய விபரீத ஜ்ஞானங்களைப் போக்கி, எப்போதும் விடாமற் தன்னிட த்யானமுண்டாகும்படிக்குச் செய்து, தன்னிட தர்ஸனத்தைக் கொடுத்து, பக்தனிடத்தில் அனுக்ரகித்து, ப்ரக்ருதி பந்தத்தினின்றும் விடுவித்து, அக்ஷயமான ஸ்வரூப ஸுகானுபவத்தைக் கொடுப்பார் (5-25).

அஸுரர்கள் தம்தம் வர்ணஸ்ரமங்களுக்கு விஹிதமான கர்மங்களைச்செய்து ஸ்ரீ பரமாத்மாவைப் பூஜிக்காமல் (17-5) இந்த ப்ராஹ்மணாதி வர்ணங்கள், ப்ரஹ்மசர்யாத்யாஸ்ரமங்கள், வேதம், தேவதைகள், பரலோகம் முதலிய எல்லா ஜகத்து மித்யை (பொய்) என்றறிந்து (16-8) * பெயருக்காகவே யஜ்ஞங்களைச் செய்துகொண்டு (16-17) தானே ஈஸ்வரனென்றறிந்து (16-14) நரகாத்யனர்த்தங்களை யடைந்து (16-16) அஸுரயோனிகளில் பிறந்து பரமாத்மாவிடத்தில் த்வேஷம் செய்துகொண்டே ஸ்ரீ கிருஷ்ணனின் பாதங்களை (முக்தியை) யடையாமலே அதோ கதியை (அந்தந்தமஸ்ஸை) அடைகிறார்கள் (16-20) என்று ஸாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால் "பீஷ்ம த்ரோணாதிகளின் ஸ்வரூபங்கள் (ஜீவர்கள்) நாசமாகாவிடினும் அவளிட தேகங்கள் நஷ்டமாகின்றன. ஆகையால் நான் போர் புரிவதில்லை" என்று சொல்லுவது ப்ராஜ்ஞர்களால் சொல்லப் படும் வார்த்தைகளல்ல (ஸாஸ்த்ரங்களை யநுசரித்த வார்த்தைகளல்ல).

ஓர் குதிரையில் தனதென்கிற அபிமானமிருக்கும்போது அக்குதிரைக்கு கொஞ்சம் ஸ்ரமமுண்டாகுமாகில் அதில் அபி

---

* உலகத்தில் யாகம் செய்தவர் என்று பெயருண்டாவதற்கு மாத்திரமே.

மானமுள்ள அதின் எஜமானனுக்கு வெகு துக்கமுண்டாகிறது. அதே குதிரையைப் பிறருக்கு விற்றுவிடுவானேயாகில், மருநொடியிலேயே அக்குதிரை இறந்துவிட்டபோதிலும் அந்த மனிதனுக்கு தனதென்கிற அபிமான மில்லாமலிருப்பதினால் துக்கமுண்டாகாமலிருப்பதேயன்றி, "நான் விற்காமலிருப்பேனேயாகில் என் பணம் நஷ்டமாயிருக்கும், விற்ற பிறகு இக்குதிரை இறந்ததினால் என்பணம் நஷ்டமாகவில்லை" என்று ஸந்தோஷமுமடைவான். ஆகையால் ஸுகதுக்காதிகளுக்கு அபிமானமே காரணம் (2-14). ஆகையால் பகவத்தேவஷிகளின் மற்றும் அவாளிட அனுபந்திகளின் ஸம்ஹாரங்களைப் பரமாத்மாவின் பூஜை என்று அவஶ்யகமாகச் செய்யவேண்டும். பகவத்பூஜாரூபமாய் அவஶ்ய கர்த்தவ்யமான கார்யங்களைச் செய்து அதினாலுண்டாகும் துக்கத்தை அபிமானத்தை விட்டுப் போக்கடித்துக் கொள்ளுபவனே மோக்ஷமடைவான் (2-15).

ஆகையால் "ப்ரக்ஷாளனத்தி பங்கஸ்ய தூராதஸ்பர்ஶனம் வரம்' சேற்றை மெறித்து காலை அலம்பிக்கொள்ளுவதைவிட சேற்றை மெறிக்காமலிருப்பதே மேலானது என்கிற நியாயத்தையொத்து, யுத்தத்தைச்செய்து பீஷ்மத்ரோணாதிகளைக் கொன்று அதினாலுண்டாகும் துக்கத்தை அபிமானத்தை விட்டுப் போக்கிக் கொள்ளுவதைவிட, அவாளைக் கொல்லாமலே துக்க ஸம்பந்தமே இல்லாமற் செய்துகொள்ளுவது மேலல்லவோ" என்று சொல்லுவது யுக்தமல்ல. ஏனெனின்-பகவத்தேவஷிகளின் மற்றும் அவாளிட பந்துக்களின் ஸம்ஹாரம் க்ஷத்ரியர்களுக்கு விஹித கர்மமாகும் (2-31). இத்தகைய ஸத்கர்மங்களால் துக்கமுண்டாவதில்லையென்று தத்வங்களை நேரில் கண்டிருப்பவர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள் (2-16). ஆகையால் க்ஷத்ரியர்களுக்கு யோக்யமான யுத்தமென்னும் கர்மத்தினால் எப்போதும் நரகாத்யனர்த்தங்கள் உண்டாகமாட்டாது. ஆகையால் பீஷ்மத்ரோணாதிகளின் ஸம்ஹாரத்தினால் குலதர்மங்கள் நஷ்டமாய் நரகாத்யனர்த்தங்களுண்டாகிறதென்று சொல்லுவது யுக்தமல்ல. ஆகையால் ஓ அர்ஜுனனே! பகவத் பூஜாரூபமான பகவத்தேவஷிகளான தாமஸஜனங்களிட மற்றும் அவர்களிட அனுபந்திகளிட ஸம்ஹாரரூபமான யுத்தமென்கிற

கர்மத்தைதச் செய்து, பரமாத்மாவிடத்தில் ஒப்பிவித்து (18-45) பரமாத்மாவே ஸர்வோத்தமனென்கிற ஞானத்தை ஸம்பாதித்து அபரோக்ஷ ஞானத்திற்கு ஸாதனத்தைச் செய்துகொள்ள வேண்டும்.

பிறகு எப்போதும் அந்த பரமாத்மாவிடத்திலேயே மனதை வைத்திருப்பாயேயாகில் (18-57) அந்த பரமாத்மாவின் ப்ரஸாதத்தினால் என்றும் இவனை முக்தனாக்கவேண்டும் என்கிற அவனிடத்தினால் எல்லா கஷ்டங்களையும் கடந்து முக்தனாவாய். இவ்விதமாக க்ஷத்ரிய வர்ணத்தாருக்கு யுக்தமான யுத்தமென்னும் கர்மத்தைசெய்என்று நான் சொல்லியபேச்சை நீ கேட்டு, அந்தப் படிக்குச் செய்யாவிடின் நாசமடைவாய் (18-58). ஸாங்கமாய் (நன்றாய்) செய்வதற்கு ஸாத்யமாயினும் தன்னிட வர்ணஸ்ரமத்திற்கு யோக்யமல்லாதமற்றும் இதர வர்ணஸ்ரமங்களுக்கு யோக்யமான கர்மங்களைச்செய்வதைவிட, ஸாங்கமாய் செய்வதற்கு ஸாத்யமாகாததாயினும் தன்னிட யோக்யதையை யனுஸரித்துச் செய்த தன்னிட வர்ணஸ்ரமங்களுக்கு உசிதமான தர்மங்களை ஸ்ரேயஸ்கரமானவைகள் (நன்மைதறக் கூடியவைகள். 3-35). தன்னிட வர்ணஸ்ரமங்களுக்கு விஹிதமான கர்மங்களைச் செய்வதினால் "பீஷ்ம த்ரோணாதிகளின் ஸம்ஹாரத்தினால் குலதர்மங்கள் நஷ்டமாய் குலஸ்த்ரீகள் கெட்டு வர்ணஸாங்கர்யமுண்டாய் பித்ருக்களுக்கு பிண்டோதக க்ரியைகள் இல்லாமற்போவதினால் குலத்தைக் கெடுத்தவருக்கும், குலத்திற்கும் பாவம் நேரிடும், அதினால் நரகம் முதலிய அனர்த்தங்களுண்டாகும்" என்று நீ ஸங்கிக்கும் (அச்சப்படும்) பாவம் உண்டாகமாட்டாது. ஸ்வதர்மங்களைச் செய்துகொண்டே மரணமடைந்தபோதிலும், அது ச்ரேயஸ்ஸேயாகும். பரதர்மங்கள் பயத்தைத் தரக்கூடியன (3-35). ஆகையால் எந்த பரமாத்மாவினால் எல்லா பிராணிகளிட வியாபாரங்களும் நடக்கின்றனவோ, எந்த பரமாத்மா இந்த ஜகத்தில் வியாபித்திருக்கிறாரே அத்தகைய பரமாத்மாவை தம் தம் வர்ணஸ்ரமங்களுக்கு விஹிதமான கர்மங்களால் பூஜித்து, அவனிட ப்ரஸாதத்தினாலேயே மனிதன் ஸித்தி பலன்களைப் பெறுவான் (18-46).

க்ஷத்ரியர்களுக்கு தர்மஸாதனமான யுத்தமென்கிற பரமாத்மாவின் பூஜாரூபமான கர்மத்தைவிட ச்ரேயஸ்கரமான வேறுஎந்த கர்மங்களுமில்லை. ஆகையால் க்ஷத்ரியனை உனக்கு யுத்தமே பரம தர்மமென்றறிந்து, நீ அதற்காக பயப்படவேண்டாம் (2-31). புண்யவான்களான க்ஷத்ரியர்கள் ஸ்வர்க்கஸாதனமான இந்த பகவத் பூஜாரூபமான யுத்தத்தை அடைவார்கள் (2-32). இப்படி அநாயாஸமாய்க் கிடைக்கும் தர்மஸாதனமான இந்த யுத்தமென்னும் கர்மத்தைவிடில் ஸ்வதர்மத்தை விட்டு பாவத்தை யடைவாய் (2-32). 'அர்ஜுனன் பயத்தினால் ஸ்வதர்மத்தை விட்டான்' என்று ஜனங்கள் ஸபைகளில் சொல்லிக்கொள்ளுவார்கள். ஸம்பாவிதர்களுக்கு அபகீர்த்தியானது மரணத்தைவிட அதிகமாகும் (2-34). மஹாரதிகர்களான பீஷ்மாதிகள் அர்ஜுனன் பயந்து போர்க்களத்தினின்றும் பின் வாங்கினனென்று அறிவார்கள். முன் பீஷ்மாசார்யர் முதலிய மஹாரதிகர்களால் மஹாவீரனென்று மதிக்கப்பட்ட நீ இப்போது இழிவடைவாய் (2-35). உன்னிட பகைவர்கள் (துர்யோதனாதிகள்) வாயாற்சொல்லுவதற்குக்கூட அஸஹ்யமான வார்த்தைகளை யாடுவார்கள். இப்படி அவர்கள் உன்னிட ஸாமர்த்தியத்தை நிந்திப்பதைவிட மேலான துக்கம் வேறு யாது? (இதுவே அதிகமான துக்கத்தை உண்டாக்கக்கூடியது) (2-36). நீ 'யுத்தத்தில் மரணமடைந்தால் எனக்கு ஸ்வர்க்கம் கிடைக்கும், ஜயமடைந்தால் ராஜ்யம் கிடைக்குமாகையால் யுத்தம் செய்யவேண்டு' மென்று நிச்சயித்து யுத்தத்திற்கு எழுந்திரு (2-37). அஞ்ஞானத்தினாலுண்டாயிருக்கும் 'யுத்தம் செய்யத்தகுந்ததோ அல்லவோ' என்கிற ஸந்தேஹத்தை பகவானிட பூஜைக்காக க்ஷத்ரியர்கள் யுத்தரூபமான கர்மத்தைச் செய்யவேண்டியதே என்கிற ஞானமென்னும் கத்தியினால் வெட்டி ஞானத்தைப் பிறப்பிக்கக்கூடிய யுத்தத்தைச் செய் (4-42). ஜயம் கிடைத்து ராஜ்யத்தைப் பெற்று ஸுகமடையவேண்டுமென்கிற ஆசையை விட்டு, மற்றும் பராஜயமுண்டாய் ராஜ்யம் கிடைக்காமல் துக்கமுண்டாகுமென்று நினைக்காமல், க்ஷத்ரியர்களுக்கு விஹிதமான யுத்தரூபமான கர்மத்தை பரமாத்மாவின் ப்ரீதிக்காகவே செய். இப்படி நீ செய்வாயாகில் இந்த யுத்தகர்மத்தினால் உனக்கு பாவம் வருவதில்லை (2-38).

ஓ அர்ஜுனனே! நாங்கள் ஜயமடைவோமோ அல்லது துர்யோதனாதிகள் ஜயமடைவார்களோ என்று ஸந்தேகப்படவேண்டாம். பூர்ணமான ஜகத் ஸம்ஹாரகமான காலமென்கிற பெயரையுடைய விஸ்வரூபத்தை உனக்குக் காட்டிய நான் (ஸ்ரீக்ருஷ்ணன்) இந்த யுத்தத்திற்கு வந்திருக்கும் தர்ம, பீம, அர்ஜுன, நகுல, ஸஹதேவன் முதலிய சிலரைத்தவிர மற்றெல்லோரையும் நாசப்படுத்துவதற்காக வந்திருக்கிறேன் (11-32). த்ரோண, பீஷ்ம, ஜயத்ரத, கர்ண முதலிய எல்லா வீரர்களும் என்னால் கொல்லப்பட்டவர்களைப்போலாயிருக்கின்றனர். நீ யுத்தத்தில் ஜயமடைவாய் (11-34). ஓ அர்ஜுன! எழுந்திரு. என்னாலேயே கொல்லப்பட்டிருக்கும் சத்ருக்களின் ஸம்ஹாரத்திற்கு நீ காரணமாத்திரனாய், அர்ஜுனனே கொன்றுவென்கிற கீர்த்தியை, நீ அடை. பகைவர்களை வென்று செல்வத்தால் நிறைந்த ராஜ்யத்தை அனுபவி (11-33).

க்ஷத்ரியர்களுக்கு விதிதமான யுத்தகர்மத்திலால் பகவத் விஷயகமான அபரோக்ஷ ஞானத்தையடைந்து அவனிட ப்ரஸாதத்திலால் ஶாஶ்வதமான வைகுண்டாதி ஸ்தானங்களையடைவாய் (17-62). வெகு இரகசியமான அவசியமாய் அறியவேண்டிய இவ் விஷயத்தை உனக்காகச் சொல்லியிருக்கிறேன். இவ்விஷயங்களை எல்லாம் விசாரம் செய்து உன்னிஷ்டப்படிக்குச் செய் (18-63). ஓ அர்ஜுனனே! நீ எனக்கு மிகவும் நண்பன் (ஆகையால்) உனக்கு ஹிதத்தைச் சொல்லுகிறேன், கேள் (18-64). ஸ்ரீகிருஷ்ணனை என்னிடத்திலேயே மனதை வைத்து (பக்தி செய்து கொண்டு) எனக்காகவே அவஶ்யகமாய் கர்மங்களைச் செய். எனக்கு நமஸ்காரம் செய் (வணங்கு). இப்படிச்செய்வதிலால் ஸ்ரீ பரமாத்மாவின் பாதங்களையே அடைவாய் (மோக்ஷமடைவாய்). நீ என்னிட விசேஷமான அன்புக்கு விஷயன் (உரியவன்). ஆகையால் இப்படி ப்ரதிஜ்ஞை செய்து சொல்லுகிறேன் (18-65). இதர தேவதைகளின் உத்தேசமாய் கர்மங்களைச் செய்யாமல் பரமாத்மாவையே ஶரணமடை. ஸ்ரீ பரமாத்மாவே உன்னை எல்லா பாவங்களிலிருந்தும் விடுவிப்பான். பீஷ்மாதிகளின் ஸம்ஹாரத்திலால் பாவமுண்டாய் நரகாத்யனர்த்தங்கள் உண்டாகுமென்று துக்கட

படவேண்டியதில்லை. இந்த இரகசியமான கீதா ஸாஸ்த்ரத்தை தவம் புரிந்திராத மனிதனுக்கு உபதேசிக்கக்கூடாது. ஸ்ரீ பரமாத்மாவிடத்தில் பக்தியில்லாதவனுக்கு எப்பொழுதும் சொல்லக் கூடாது. குருக்களின் சேவை செய்யாதவனுக்குச் சொல்லக் கூடாது. யார் ஸ்ரீ பரமாத்மாவான என்னிடத்தில் பொறுமையுள்ளவனாயிருக்கிறானே (ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா நிற்குணன், ஞானேந்திரியங்களில்லாதவன், நானே ஸ்ரீ கிருஷ்ணன் என்று அறிகிறானே) அவனுக்கு உபதேபிக்கக்கூடாது. ஸ்ரீ கிருஷ்ணனை என்னிட பக்தருக்கு உபதேசிக்க வேண்டும். அத்தகைய பக்தருக்கு உபதேசிப்பவனே என்னிடத்தில் மேலான பக்தியைச் செய்து என்னையடைவான். இதற்கு ஸந்தேகமில்லை (18-67,68). இந்த கீதா ஸாஸ்த்ரத்தை உபதேபிக்கும் மனிதன் ஸ்ரீபரமாத்மாவின் (என்னிட) விசேஷமான ப்ரீதிக்குக் காரணனவன். எனக்கு அவனைவிட அதிகமான ப்ரீதிக்குக் காரணனவன் மனிதருக்குள்ளே கிடையாது. பின்னும் இருக்கவில்லை, முன்னும் இருப்பதில்லை (18-69). இந்த பரமாத்ம விஷயகமான, தர்மத்திற்கு ஸாதகமான கீதா ஸாஸ்த்ரத்தை யார் அத்யயனம் செய்கிறானே அவன் ஞானயஜ்ஞத்தினல் பரமாத்மாவை பூஜித்தவனாகிறான் என்று என்னிட அபிப்ராயம் (18-70). இந்த கீதா ஸாஸ்த்ரத்தைக் கேட்பதினல் பலனிருக்கிறதென்கிற ஆஸ்திக்யபுத்தியுள்ளவனும் அஸூயாதி தோஷரஹிதனும் யார் கேட்கிறானே அவனும் முக்தனும் புண்ய கர்மங்களைச்செய்யும் மனிதர்களடையும் மங்களகரமான லோகங்களை அடைகிறான். இந்த ஸாஸ்த்ரத்தை படனம் செய்பவர் (படிப்போர்) மேற்கூறிய பலனைவிட அதிகமான பலனை அடைவார்கள். ப்ரவசனம் செய்பவர்கள் (பாடம் சொல்பவர்கள்) தம் தம்மிட யோக்யதானுஸாரமாய் அத்யயனம் செய்தவர்களைவிட அதிகமான பலனையடைவார்களென்று சொல்வானேன்? (18-71). ஓ அர்ஜுனனே! நான் சொல்லிய விஷயத்தை ஓர மனதினல் கேட்டாயோ? அஜ்ஞானத்தினுண்டாயிருக்கும் உன்னிட ப்ரமை தொலைந்ததோ இல்லையோ? என்று ஸ்ரீ கிருஷ்ணன் கேட்கவே, அதற்கு அர்ஜுனன்—ஓ! கிருஷ்ணனே! உன்னிட அனுக்கிரகத்

திலுல் உன்னுல் செய்யப்பட்ட உபதேசத்திலுல் என்னிட அஜ்ஞானம் துலைந்தது. ஸரியான ஸ்மிருதி (நினைவு) உண்டாயிற்று. ஸந்தேகமில்லாதவனானேன். நீ சொல்லியவாறு க்ஷத்ரிய வர்ணத்திற்கு யோக்யமான யுத்தமென்னும் கர்மத்தைச் செய்கிறேன் என்று ஒத்துக்கொண்டனன்.

இவ்விதமாக அர்ஜுனனை காரணமாக்கிக்கொண்டு, ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ஸாத்விகஜீவர்களுக்காக தத்வங்களை உபதேசித்திருக்கிறார். ஆகையால் அனுதியான ப்ரக்ருதியிலுல் கட்டுப்பட்டிருக்கும் ஸாத்விக ஜீவர்கள் ஸரீரஸம்பந்த வியோகரூபமான பிறப்பு இறப்புகளால் உண்டாகும் பலதுக்கங்களைப் போக்கிக்கொண்டு, ஸுகரூபமான மோக்ஷத்தை யடைவதற்காக இந்த ப்ரக்ருதிபந்தத்தினின்று விடுவித்துக்கொள்ள வேண்டிய தாவஸ்யகம்.

எப்படி விலங்கிலுல் கட்டப்பட்ட மனிதன் இராஜனிட அடிமையோ, மற்றும் இராஜனிட அருளிலுலேயே அக்கட்டினின்றும் விடுதலையடையவேண்டுமோ, அப்படியே இந்த ப்ரக்ருதிபந்தம் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் அதீனம். அவனிட அருளிலுலேயே அது துலையவேண்டும். அவனிட அருளுண்டாவதற்கு (நான் இந்த ஜீவனை ப்ரக்ருதிபந்தத்தினின்றும் விடுவிக்கவேண்டும் என்கிற விருப்பம் அவனுக்கு உண்டாவதற்கு) மனிதன் தன்னிடத்திலும் தன்னைச் சேர்ந்தவர்களிடத்திலும் செய்யும் ஸ்னேஹத்தை விட வெகுமடங்கு அதிகமான, எத்தகைய தடங்கல்கள் வந்தபோதிலும் அசையாமலிருக்கும், நிர்வ்யாஜமான (அல்ப பலாபேக்ஷை இல்லாத) சினேகரூபமான, பரமாத்மாவிடத்தில் செய்யும் பக்தியே காரணமாகும். எப்படி மகனிடத்தில் அதிகமான ப்ரீதி(ஸ்னேஹம்)உண்டாவதற்கு அவனிட ஸௌந்த்யாதிகுணங்கள், திரவ்ய சம்பாதகஸக்தி, ஞானம் இவைகள் காரணங்களாகுமோ, அப்படியே பரமாத்மாவிடத்திலிருக்கும், ஜகத்பித்ருத்வம், ரக்ஷகத்வம், ஸர்வஜ்ஞத்வம், ஸர்வ ஸக்திமத்வம் முதலிய அளவில்லா குணங்களின் அபரோக்ஷஞானம், அவனிடத்தில் செய்ய வேண்டிய பக்திக்குக் காரணமாகும்.

ஏதத் தீவயா ந விஜ்ஞேயம் ரூபவானிதி த்ருச்யதே ।
இச்சன் முஹுர்பிர்த்தான்னஸ்யேயமீஸோஹம் ஜகதாம் குரு: ॥
மாயா ஹ்யேஷா மயா ஸ்ருஷ்டா யன்மாம் பஸ்யஸி நாரத ॥

என்கிற பாரதவசனானுஸாரமாய் தேவதத்தனே முதலிய எல்லா ஜனங்களும், கருப்பு, வெளுப்பு முதலிய வர்ணங்களுள்ள தேகங் களுள்ளவர்களாகையால் எப்படி நாம் அவர்களைக் காணவேணு மென்கிற எண்ணம் நமக்கில்லாவிடினும், நம்மிட பிரயத்னத் தினாலேயே (கட்டாயமாய்) காணுவதற்கு ஸாத்யமானவர்களோ, அப்படியே பரமாத்மா அவனிட எண்ணம் (ப்ரஸாதம்) இல்லா விடின் நம்மிட முயற்சியினால் காணுவதற்கு ஸாத்யனல்ல. பரமாத் மாவுக்கு 'நான் இந்த ஜீவனுக்குக் காணப்படக்கூடாது' என்கிற எண்ணமுண்டாயின் அன்னெடியிலேயே காணப்படாதவனுவான். அல்லது இந்த ஜீவனுக்கு 'நான் காணப்படவேணும்' என்கிற எண்ணமுண்டாயின் காணப்படுவான். ஆகையால் பரமாத்மாவின் தர்சனமாவதற்கு அவனிட ப்ரஸாதம் (நான் இவனுக்குக் காணப் படவேண்டுமென்கிற எண்ணம்) காரணமாகும். பணத்தைக் கொடுக்கும் திரமையாகிலும், இதர திரமையாகிலுமில்லாத ஒரு மனிதன் ஓர் பிரபுவின் தரிசனத்திற்காக அந்த ப்ரபுவின் வீட்டு வாயிலில் எப்போதும் உட்கார்ந்து அவனையே த்யானித்துக் கொண்டு, அவனிட குணங்களைப் புகழ்ந்துகொண்டு சிலகாள் காத்திருந்தால், அந்த ப்ரபுவுக்கு இவனிடத்தில் தயவு உண்டாய் எப்படி தர்சனம் கொடுப்பானோ, அப்படியே பக்தனான ஸாத்விக புருஷன் எப்போதும் பரமாத்மாவின் த்யானத்தைச் செய்து கொண்டே, அவனிட குணங்களை புகழ்ந்துக்கொண்டிருந்தால், பரமாத்மா அவனிடத்தில் ப்ரஸன்னனாய் "யதா பஸ்ய: பஸ்யதே ருக்மவர்ணம் கர்தாரமீஸம் புருஷம் ப்ரஹ்மயோனிம்" இது முதலிய ஸ்ருதிகளில் சொல்லியவாரு ஜகஜ்ஜன்மாதிகர்த்ருத்வம் முதலிய குணங்களுடன் கூடியவனாய் தர்ஸனம் கொடுப்பான். (ஈஸ்வரனிட அபரோக்ஷஜ்ஞான முண்டாகும்)

"ஸ்ருதி விப்ரதிபன்ன தே யதா ஸ்தாஸ்யதி நிஸ்சலா ।
ஸமாதாவசலா புத்திஸ்ததா யோகமவாப்ஸ்யஸி ॥ (2-53)

என்று சொல்லியவாரு—பரமாத்மா இல்லையென்றும், அவன் ஸ-ன்ய னென்றும், ஜீவரூபமென்றும், அவனிடத்தில் எட்டே குணங்க ளிருக்கின்றனவென்றும் சொல்லும் பல தர்மதங்களிருக்க இவ் விதமாகவே அவனை தியானிக்கவேணுமென்று மனது ஸ்தைர்ய மடையாமல் (கட்டியாகாமல்) இருப்பதினால் ப்ரஹ்மமீமாம்ஸா ஸாஸ்த்ரத்தில் சொல்லிய யுக்திகளால் அந்தந்த தர்மதங்களை அப்ராமாணிகங்களென்று நிச்சயித்த அதிகாரி—பரமாத்மா ஸர் வோத்தமன், ஜீவாதிகளைவிட பின்னன் (வேறுபட்டவன்) ஸர்வஜ் ஞத்வமே முதலிய அளவில்லா குணங்களால் பூர்ணன் (நிறைந்த வன்). ஜகஜ்ஜன்மாதிகர்த்தா என்ற த்ருடமான நிச்சயத்தை யடைந்தபிறகு, பரமாத்மா குணபூர்ணன் என்கிற இது முதலான ரீதியாய் தியானிக்கும் வழியை யடைவான். ஆகையால் இத்தகைய த்யானத்திற்கு ஸாஸ்திர விசாரம் காரணமாகும். அதற்கு "உப தேக்ஷ்யந்தி தே ஞானம் ஞானினஸ்தத்வதர்சினः" என்று சொல் லியவாரு தத்வங்களை யறிந்த குருக்களின் உபதேசம் காரண மாகும். " அனன்யப்ரோக்தே கதிரத்ர நாஸ்தி.....ப்ரோக் தான்யேனைவ ஸுஜ்ஞாயை ப்ரேஷ்ட" என்ற காடக ஸ்ருதி சொல்லுவதைப்போல் அத்வைதிகளால் (ஜீவேஸ்வராபேதஞானி களால்) உபதேஸமடைவாகில் 'கதிः நாஸ்தி' மோக்ஷஜனக மான ஞானமுண்டாவதில்லை. ஜீவேஸ்வராபேதஞானியினால் உப தேஸமடைந்தால்தான் மோக்ஷத்தைத் தரக்கூடிய மேலான ஞான முண்டாகிறதென்று சொல்லியிருப்பதினால் த்வைதியான குருக் களின் உபதேஸத்தினாலுண்டான ஞானமே அபரோக்ஷஞானத் தின் வழியாய் மோக்ஷத்திற்குக் காரணமாகும். அந்த குருக்களின் சேவை செய்து, அவரை வணங்கி, பன்முடன் (பிரார்த்தித்தால்) அவர் உபதேஸிப்பார். அவரிட உபதேசத்தினால் ஞானமுண்டா வதற்கு அந்தःகரணம் சுத்தமாயிருக்கவேண்டும். அந்தःகரண ஸுத்திக்கு யஜ்ஞம், தானம், தபஸ்ஸு இவைகள் காரணங்களா கையால் இவைகளை அவஸ்யகமாய்ச் செய்யவேண்டும் (18-5). இப்படி ஸாஸ்த்ரத்தினால் ஸித்தமாயிருப்பதினால் ப்ராஹ்மணர், க்ஷத்ரியர், வைஸ்யர், சூத்ரர், வர்ணபாஹ்யர் (ஸங்கரஜாதியர்) என்று ஐந்து வகுப்பாராயிருக்கும் மனிதர்களில் ஸாத்விக ஜீவர்

கள் அவரவர்களுக்கு ஸாஸ்த்ரவிஹிதமான கர்மங்களைச் செய்து அவைகளை ஈஸ்வரனிடத்தில் ஸமர்ப்பித்துக்கொண்டே பின் சொல்லியவாறு அபரோக்ஷ ஞானத்தை யடைந்து, அதின் மூல மாய் மோக்ஷத்தை யடையக்கடவார்கள்.

ஈஸ்வர ப்ரகரணம்.

பரப்ரஹ்மமாவான ஸ்ரீ கிருஷ்ணன் புத்தீந்த்ரியாதிகளுக்கு அபிமானிகளான எல்லா தேவதைகளைவிட மேலானவன் (3-42,43). ஸர்வஜ்ஞன். ஜகத்துக்கு ஸ்வாமி (4-5). பிறப்பிறப் பில்லாதவன். எல்லாபூதங்களுக்கும் ஸ்வாமி. தன்னிச்சையிலே லேயே தர்மத்தை இரக்ஷிப்பதற்காகவும் ஸாதுக்களை இரக்ஷிப் பதற்காகவும், அயோக்கியர்களை தண்டிப்பதற்காகவும் அவதரிப் பவன் (4-7,8). லோகவிலக்ஷணமான ஜன்மகர்மங்களையுடையவன் (4-9). குணகர்மங்களுடன் கூடிய ப்ராஹ்மணாதி நான்கு வர்ணங் களையும் பிறப்பிப்பவன். தனக்கு பிறப்பிப்பவனில்லாதவன் (4-13). கர்மங்களின் ஸம்பந்தமற்றவன். கர்மபலத்திலாசை யில்லாதவன். ஸர்வாந்தர்யாமியாய் எங்கும் இருப்பவன் (4-14). (எல்லா பதார்த்தங்களிலுமிருப்பவன்)ஸர்வபூதங்களுக்கும் ஆதார மானவன். ஸமன் (6-29). எல்லா பதார்த்தங்களிலும் நிர்தோஷியா யிருப்பவன். அந்தந்த பதார்த்தங்களின் தோஷத்தின்பொருட் டண்டாகும் தோஷமில்லாதவன். ஒருவனுகவே எல்லா பூதங்களி லும் வஸிப்பவன். இடங்களின் பேதத்தினுலுண்டாகும் பேத மில்லாதவன். ஸ்வகதபேதம் (தன்னிட ரூபகுணக்ரியாதிகளின் பேதம்) இல்லாதவன் (6-31). எல்லா ஜகத்தையும் படைப்பவன். நாசம் செய்பவன் (7-6). எல்லா வஸ்துக்களைவிட மேலானவன். தன்னைவிட மேலான வஸ்துவில்லாதவன். இரத்தினங்களுக்கு ஸூத்ரத்தை (நூலை) ப்போல் எல்லா ஜகத்திற்கும் ஆஸ்ரயன் (7-7).

ஜலத்திலுள்ள ரஸத்திற்கு நியாமகனுய் ரஸஸப்தவாச்ய னுய் ரஸத்திலிருப்பவன். ஸூர்யசந்த்ரர்களிடமிருக்கும் ப்ர பைக்கு (காந்திக்கு) நியாமகனுய் ப்ரபாஸப்தவாச்யனுய் ப்ரபை

யிலிருப்பவன். ஸகல வேதங்களிலும் ஸ்ரேஷ்டமான ப்ரணவ (ஓங்கார)த்திற்கு நியாமகனும் ப்ரணவஸப்தவாச்யனும் ப்ரணவத்திலிருப்பவன். ஆகாஸத்திலிருக்கும் ஸப்தத்திற்கு நியாமகனும் ஸப்தமென்னும் ஸப்தத்திற்கு வாச்யனும் ஸப்தத்திலிருப்பவன். புருஷரிடத்திலிருக்கும் பௌருஷத்திற்கு நியாமகனும் பௌருஷஸப்தவாச்யனும் பௌருஷத்திலிருப்பவன் (7-8). ப்ருத்விபிலுள்ள கந்தத்திற்கு நியாமகனும் கந்தஸப்தவாச்யனும் கந்தத்திலிருப்பவன். ஸ்ரீர்யனிடமிருக்கும் தேஜஸ்ஸுக்கு நியாமகனும் தேஜஸ்ஸப்தவாச்யனும் தேஜஸ்ஸிலிருப்பவன். ஸர்வ பூதங்களிலுள்ள ஜீவர்களுக்கு நியாமகனும் ஜீவ ஸப்த வாச்யனும் ஜீவர்களிலிருப்பவன். தபஸ்விகளிடமிருக்கும் தபஸ்ஸுக்கு நியாமகனும் தபஸ்ஸப்தவாச்யனும் தபஸ்ஸிலிருப்பவன் (7-9.) ஸர்வ பூதங்களுக்குக் காரணன். அனாதி. புத்திமான்களின் புத்திக்கு நியாமகனும் புத்திஸப்தவாச்யனும் புத்தியிலிருப்பவன். தேஜஸ்விகளிலுள்ள தேஜஸ்ஸுக்கு நியாமகனும் தேஜஸ்ஸப்தவாச்யனும் தேஜஸ்ஸிலிருப்பவன் (7-10). பலவந்தரின் காமராகரஹித மான பலத்திற்கு நியாமகனும் பலஸப்தவாச்யனும் பலத்திலிருப்பவன். ப்ராணிகளிடமிருக்கும் தர்மத்திற்கு விருத்தமல்லாத காமத்திற்கு நியாமகனும் காமஸப்தவாச்யனும் காமத்திலிருப்பவன் (7-11).

எந்த ஸாத்விகராஜஸதாமஸ பதார்த்தங்களுண்டோ அவைகளைப் பிறப்பிப்பவன். அப்பதார்த்தங்களெல்லாவற்றிற்கும் ஸ்வாமி. அப்பதார்த்தங்களுக்கு அதீனனல்லாதவன் (7-12). குணத்ரயங்களால் மோஹிதரான ஜனங்களால் அறியப்படாதவன். த்ரிகுணாதீதன் (மூக்குணங்களுக் கெட்டாதவன்) (7-13). அஸுரர்களால் அடையப்படாதவன் (7-15). ஞானிகளுக்குப் பிரியன். ஞானிகளிடத்தில் ப்ரீதி செய்பவன். (7-17). வாஸுதேவன் (எல்லா இடத்திலும் வஸிப்பவன்). க்ரீடாதிகுண விபவிஷ்டன் (7-19). அன்ய தேவதைகளை உபாஸிப்பவர்களுக்கு அவாளவாளிட யோக்யதானுஸாரமாய் அந்தந்த தேவதைகளிடத்தில் ஸ்ரத்தையைப் பிறப்பிப்பவன் (7-21). அன்யதேவதைகளைப் பூஜிக்கும் அல்பஞானிகளுக்கு அவாளவாளிட யோக்யதானுஸாரமாய் நஸ்வரமான (ஸாஸ்வத

மல்லாத = அழிவுள்ள) பலன்களைக்கொடுப்பவன். தன்னிட பக்தர் களைச்ல் பிராப்யன் (பெறத்தக்கவன்) (7-22,23). நாசமில்லாத மேலான ஸ்வபாவமுள்ளவன் (7-24). அவ்யக்தன் (எல்லோருக் கும் காணப்படாதவன்) (7-25). பூதபவிஷ்யத்வர்த்தமான காலங் களிலுள்ள வஸ்துக்களின் ஞானமுள்ளவன் (7-26).

அதியஜ்ஞன், யஜ்ஞாதிஷ்டாதா (8-4). உத்தம புருஷன். திவ்யன். ஸ்ருஷ்ட்யாதிகுண விபரிஷ்டன் (8-8). ஞானி. அனுதி. நியாமகன். எல்லா வஸ்துக்களைவிட சிறியவன். எல்லாவற்றையும் தரிப்பவன். ஸாகல்யமாய் (ஸம்பூர்ணமாய்) தெறிந்துகொள்ளுவ தற்கு முடியாத ரூபமுடையவன். சூர்யனிட வர்ணத்தைப்போன்ற வர்ணமுள்ளவன். ப்ரக்ருதியைவிட மேலானவன். (ப்ரக்ருதி பந்த மில்லாதவன்) (8-9). திவ்யன். சூர்யமண்டலத்திலிருப்பவன் (8-10). வேதமறிந்த ஜனங்களால் அக்ஷரனென்று அழைக்கப் படுபவன். விரக்தர்களான யதிகளால் பிராப்யன், ப்ரஹ்மசர்ய வ்ரதத்திற்கு உத்தேஸ்யன் (8-11). வ்யக்தமான பூதஸமூகத்தை விட மேலானவன். அவ்யக்தன். உத்தமன். எல்லா ப்ராணிகள் நாசமடைந்தபோதிலும் தான் நாஸமடையாதவன் (8-20) அக்ஷராஸப்தவாச்யன், பரமப்ராப்யன். மனிதன் எந்த பரமாத் மாவை யடைந்து மறுபடியும் ஜன்மமடைய மாட்டானோ அந்த கைய ஸ்வரூபமுள்ளவன் (8-21). எல்லா ப்ராணிகளுக்கும் ஆஸ் ரயன். ஸர்வவ்யாப்தன். அனன்யமான (வேறொருவரில் செய்யப் படாத) பக்தியினல் அடைவதற்கு யோக்யன் (8-22).

அவ்யக்தமான (ஜனங்களுக்குக் காணப்படாத) ரூபத்தினல் ஜகத்தை வ்யாபித்திருப்பவன். ஸமஸ்த பூதங்களுக்கும் ஆஸ் ரயன், பூதங்களை ஆஸ்ரயித்திருப்பவன் (9-4). பூதங்கள் தன்னிட மிருந்தபோதிலும் பூதங்களின் குணஸம்பந்தமில்லாதவன். பூதங் களைத் தரித்திருப்பவன். ஸமஸ்த பூதங்களுக்கும் உத்பாதகன் (9-5). எப்படி ஆகாயம் வாயுவுக்கு ஆதாரமாயினும் வாயுவின் தர்மங்களின் ஸம்பந்தமில்லாததோ அப்படியே பூதங்களுக்குத் தான் ஆதாரமாயினும் பூதங்களின் தர்மஸங்கிரமம் (கலப்பு) இல்லாதவனுதலால் பூதங்களுக்கு அனுதாரனென்று சொல்லப் படுபவன். (9-6). பூதங்களின் லயத்திற்கு அதிகாரண (காரண)

மாயிருக்கும் ப்ரக்ருதிக்கு ஸ்வாமி (9-7). தன்னதீனமான ப்ரக்ருதியை உபாதான (மாருதலடையும்) காரணமாகச் செய்துகொண்டு பாரதீனமான இவ்வெல்லா பூதஸமூகத்தையும் ஸ்ருஷ்டி காலத்தில் அடிக்கடி ஸ்ருஜிப்பவன் (9-8). உதாஸீனவ்ப்போலிருப்பதினால் ஜகத் ஸ்ருஷ்ட்யாதி வியாபாரங்களைச் செய்யினும் அக்கர்மங்களின் பலனையடையாதவன் (9-9). ப்ரக்ருதிக்கு ஸ்வாமியாயிருந்து ப்ரக்ருதியினால் சராசராத்மகமான ஜகத்தை ஸ்ருஜிப்பவன் (9-10). மஹா ஐஸ்வர்யமுடையவன். உத்தம வஸ்து (9-11).

க்ரதுவுக்கு (யாகத்திற்கு) நியாமகனும் க்ரதுவிலிருப்பவன். யஜ்ஞோபாக்தா. ஸ்வதா (பித்ருக்களுக்கு ச்ராத்தாதிகளில் கொடுக்கப்படும் அன்னதிகளுக்கு) நியாமகனும் ஸ்வதையிலிருப்பவன். ஔஷதநியாமகனும் ஔஷதியிலிருப்பவன். மந்த்ர நியாமகனும் மந்த்ரத்திலிருப்பவன். மந்த்ரப்ரதிபாத்யன். ஆஜ்ய (நெய்க்கு) நியாமகனும் ஆஜ்யத்திலிருப்பவன். அக்னிக்கு நியாமகனும் அக்னியிலிருப்பவன். ஹுதமான (ஹோமம் செய்யப்பட்ட) பதார்த்தத்திற்கு நியாமகனும் ஹுதமான பதார்த்தத்திலிருப்பவன் (9-16). இந்த ஜகத்திற்கு தந்தை, தாய், தாரகன், பிதாமகன் (பாட்டன்). வேத்யன் (அறியப்படவேண்டியவன்). பவித்ரமான (ஸுத்தமான) வஸ்து. ஓங்கார ப்ரதிபாத்யன். ரிங்நியாமகனும் ரிக்ஸப்தவாச்யனும் ரிக்குகளிலிருப்பவன். ஸாமவேத நியாமகனும் ஸாமஸப்தவாச்யனும் ஸாமவேதத்திலிருப்பவன். ஸாமவேத ப்ரதிபாத்யன். யஜுர்வேத நியாமகனும் யஜுஸ்ஸப்தவாச்யனும் யஜுர்வேதத்திலிருப்பவன் (9-17). பிராப்யன். ரக்ஷகன். ஸ்வாமி. எல்லோரையும் ப்ரத்யக்ஷமாய் காணுகிறவன். எல்லோருக்கும் ஆஸ்ரயன். (போஷிப்பவன்) ஸரண்யன், ஸ்னேஹிதன். உத்பாதகன். நாசகன். தாங்குபவன், ப்ரளயகாலத்தில் இந்த எல்லா ஜகத்தையும் தன்னிடத்தில் வைத்துக்கொள்ளுபவன். பீஜபூதன் (விதைபோன்றவன்) (9-18). ஸூர்யாதிகளிடமிருந்து தாபத்தையுண்டாக்குபவன். மேக சக்ரத்திலிருந்து மழை பொழியச்செய்பவன். மோக்ஷத்தைக் கொடுப்பவன். நாஸத்தையுண்டாக்குபவன் (9-19). ஸர்வயஜ்ஞ போக்தா. ஸர்வயஜ்ஞ ஸ்வாமி (19-24). ஸர்வ

பூதங்களிலும் ஸமனாயிருப்பவன். நிஷ்காரணமாய் த்வேஷமில்லாதவன். நிஷ்காரணமாய் ப்ரியமில்லாதவன் (9-29).

தேவதைகளாலும், ரிஷிகளாலும் அறிந்துகொள்ளுவதற்கு முடியாத மஹாமஹிமையுடன் கூடினவன். எல்லா தேவதைகளுக்கும், எல்லா ரிஷிகளுக்கும், மனுஷ்யர்களுக்கும் காரணன் (10-2). பிறப்பில்லாதவன். காரணனில்லாதவன். எல்லா ஜகத்துக்கும் முக்ய ஸ்வாமி (10-3). பூதங்களுக்கு (ப்ராணிகளுக்கு) புத்தி, ஞானம், அகார்யத்தில் விருப்பமின்மை அல்லது மித்யா ஞானமின்மை, க்ஷமை (பொறுமை), ஸத்யம், இந்த்ரிய நிக்ரஹம், பகவன் நிஷ்டாபுத்தி, ஸுகம், துக்கம், பிறப்பு, இறப்பு, பயம், அபயம், அஹிம்ஸை, ஸுகதுக்கங்களைப்போன்ற த்வந்த்வங்களின் நிர் விகாரதை, (விகாரமின்மை) துஷ்டி, தபஸ்ஸு, தானம், கீர்த்தி, அபகீர்த்தி முதலியவைகளைக் கொடுப்பவன் (10-4,5). இந்த ப்ரஜைகளெல்லோரும் யாரிட வம்சத்தைச் சேர்ந்தவர்களோ அத்தகைய மனுக்களாலும், ஸப்த மஹரிஷிகளாலும், ஸனகாதிமானஸ புத்ரர்களாலும் தியானிக்கப்படுபவன் (10-6). எல்லா ஜகத்துக்கும் உத்பாதகன். ஸர்வப்ரவர்த்தகன். (10-8). ப்ரீதி பூர்வகமாய் தன்னை பஜிப்பவர்களுக்கு மோக்ஷத்துக்கு ஸாதனமான ஞானத்தைக் கொடுப்பவன். (10-10). அந்த ஞானத்தினால் அஜ்ஞானத்தினுண்டாயிருக்கும் பந்தத்தை நாசப்படுத்துபவன் (10-11). பரப்ரஹ்மம். உத்தமதேஜோரூபன். பவித்ரன். உத்தமன். புருஷன் (பூர்ணஷட்குணன்) எப்போதும் ஒரே விதமாயிருப்பவன். திவ்யன், (லோக விலக்ஷணன்). ஆதிதேவன். வ்யாப்தன் (10-12). தேவதானவர்களால் தெரிந்துகொள்ளுவதற்கு அஸக்யமான ஸ்வரூபமுடையவன் (10-14). தன்னால் தன்னையே தெரிந்துக்கொள்ளுவதற்கு யோக்யன். பூதாத்பாதகன். பூதநியாமகன். தேவதைகளுக்கு தேவத்தன்மையை யளிப்பவன். ஜகத்துக்கு ஸ்வாமி. (10-15). எல்லா ப்ராணிகளின் ஹ்ருதயங்களுக்கு நியாமகனுய் அவைகளில் வஸிப்பவன். ஸர்வப்ராணிகளைப் படைப்பவன். இருப்புக்குக்காரணன். நாசத்திற்குக்காரணன். (10-20). ஸூர்யர்களில் கார்த்திக மாதத்திற்கு நியாமகனான விஷ்ணு என்கிற ஸூர்யன்.

பிரகாஶிக்கும் பதார்த்தங்களில் ஶ்ரேஷ்டனை ஸ-ர்ய னுக்கு நியாமகனுய் இதர தேஜஸ்ஸுள்ள பதார்த்தங்களைவிட ஆதிக்யத்தைக் கொடுத்துக்கொண்டே, வேதஶப்தங்களால் அறிய வருபவனுதலால் ரவிஶப்தவாச்யனுய் ரவியிலிருப்பவன். நார்ப்பத் தொன்பது மருத்தேவதைகளில் ஶ்ரேஷ்டனை மாரிக்கு நியா மகனுய் ஸஜாதீயமான இதர வஸ்துக்களில் மாரிக்கு மேன் மையை கொடுத்துக்கொண்டே மகங்களை அசையச்செய்து கொண்டிருப்பதால் மாரி என்ற பெயருடன் மாரியிலிருப்ப வன். நக்ஷத்ரங்களில் ஶ்ரேஷ்டனை சந்திரனுக்கு நியாமகனுய் ஆஹ்லாதகரமான பதார்த்தங்களில் சந்திரனுக்கு ஆதிக்யத்தைக் கொடுத்துக்கொண்டே, அதிசயமான ஸுகமுடையவனுகையால் ஶஶீ என்கிற பெயருள்ளவனுய் சந்திரனிடமிருப்பவன் (10-21). வேதங்களில் ஶ்ரேஷ்டமான ஸாமவேதத்திற்கு நியாமகனுய் இதர வேதங்களைவிட ஸாமவேதத்திற்கு ஆதிக்யத்தைக் கொடுத் துக்கொண்டே, எல்லா இடங்களிலும் ஸமனுயிருப்பதினுலும், எல்லாவற்றையும் அறிந்தவனுகையினுலும் ஸாமவேதஶப்தவாச்ய னுய் ஸாமவேதத்திலிருப்பவன். தேவதைகளில் ஶ்ரேஷ்டனை இந்த்ரனுக்கு நியாமகனுய் இதர தேவதைகளைவிட இந்த்ரனுக்கு ஆதிக்யத்தைத் தந்துகொண்டே, ஸர்வ தேஶங்களிலுமிருப்ப தினுல் வாஸவ: என்கிற பெயருடையவனுய் இந்த்ரனிலிருப்ப வன். இந்திரியங்களில் ஶ்ரேஷ்டமான மனதுக்கு நியாமகனுய் இதர இந்திரியங்களைவிட மன இந்திரியத்திற்கு ஆதிக்யத்தைத் தந்துகொண்டே, ஞானரூபனுகையால் மனஶ்ஶப்தவாச்யனுய் மனதிலிருப்பவன். பிராணிகளிடமிருக்கும் சேதனத்திற்கு (அதிக ஸ்மரண ஶக்திக்கு) நியாமகனுய் ஞான நியாமகனுகையால் சேதனஶப்தவாச்யனுய் சேதனத்திலிருப்பவன் (10-22). ருத்ர் களில் ஶ்ரேஷ்டனை ஶங்கரனென்கிற ருத்ரனுக்கு நியாமகனுய் இதர ருத்ரர்களைவிட இவனுக்கு ஆதிக்யத்தைத்தந்து கொண்டே, ஸுகத்திற்குக் காரணனுகையால் ஶங்கரனென்கிற பெயருடன் ஶங்கரனிலிருப்பவன். யக்ஷராக்ஷஸர்களில் ஶ்ரேஷ்ட னை குபேரனுக்கு நியாமகனுய் ஸஜாதீயரில் இக்குபேரனுக்கு ஆதிக்யத்தைத் தந்துகொண்டே தனத்திற்கு ஸ்வாமியாகையால்

வித்தேஶ ஶப்தவாச்யனுய் குபேரனிட மிருப்பவன். அஷ்ட வஸுக்களில் ஶ்ரேஷ்டனான அக்னிக்கு நியாமகனுய் இதர வஸுக்களைவிட இவனுக்கு மேன்மையைத் தந்துகொண்டே, எல்லாவற்றையும் ஶுத்தப்படுத்துவதினால் பாவகநாமகனுய் அக்னியிலிருப்பவன். பர்வதங்களில் ஶ்ரேஷ்டமான மேரு பர்வதத்திற்கு நியாமகனுய் இதர பர்வதங்களைவிட இதற்கு மேன்மையைத் தந்துகொண்டே, தனக்கு ப்ரோகனில்லாதவனுகையால் மேரு ஶப்தவாச்யனுய் மேரு பர்வதத்திலிருப்பவன் (10-23). புரோஹிதர்களில் சிரேஷ்டனான ப்ருஹஸ்பதிக்கு நியாமகனுய் புரோஹிதர்களில் இவருக்கு மேன்மையைத் தந்துகொண்டே ப்ரஹ்மாதிகளுக்கு யஜமானனுகையால் ப்ரஹஸ்பதி என்கிற பெயருள்ளவனுய் ப்ரஹஸ்பதியிலிருப்பவன். ஸேனைபதிகளில் ஶ்ரேஷ்டனான ஸ்கந்தனுக்கு நியாமகனுய் இதர ஸேனைபதிகளைவிட இவனுக்கு ஆதிக்யத்தைத் தந்துகொண்டே தன்னுல் ஜகத்தை வெளிப்படுத்தப்படுவதினால் ஸ்கந்தனென்கிற பெயருடையவனுய் ஸ்கந்தனிடமிருப்பவன். ஸரோவரங்களில் ஶ்ரேஷ்டமான ஸமுத்ரத்திற்கு நியாமகனுய் இதர ஸரோவரங்களைவிட ஸமுத்ரத்திற்கு மேன்மையைத் தந்துகொண்டே ஸாரபோக்தாவாகையால் ஸாகர நாமகனுய் ஸமுத்ரத்திலிருப்பவன் (10-24). மகரிஷிகளில் ஶ்ரேஷ்டரான ப்ருகு மஹர்ஷிக்கு நியாமகனுய் இதர மகர்ஷிகளைவிட இவருக்கு ஆதிக்யத்தைத் தந்துகொண்டே, விரோதிகளைச் சுடுவதினால் ப்ருகுஶப்தவாச்யனுய் ப்ருகுமஹர்ஷியினுள்ளிருப்பவன். வாக்யங்களில் முக்யமான ஓங்காரத்திற்கு நியாமகனுய் இதர அக்ஷரங்களைவிட இதற்கு மேன்மையைத் தந்துகொண்டே, முக்யனுகையால் ஏகஶப்தவாச்யனுய் நாஶமில்லாதவனுகையால் அக்ஷரஶப்த வாச்யனுய் ஓங்காரத்திலிருப்பவன். யஜ்ஞங்களில் மேலான ஜபயஜ்ஞத்திற்கு நியாமகனுய் இதர யஜ்ஞங்களைவிட இதற்கு மேன்மையைத் தந்துகொண்டே, பிறந்தவர்களை ரக்ஷிப்பதினாலும், பூஜ்யனுனதினாலும் ஜபயஜ்ஞ நாமகனுய் ஜபயஜ்ஞத்திலிருப்பவன். அசையாப்பதார்த்தங்களில் மேலான ஹிமவத்பர்வதத்திற்கு நியாமகனுய் இதர பர்வதங்களைவிட இதற்கு மேன்மையைத் தந்துகொண்டே ஹ்ரீ: ஶ்ரீ: என்கிற

ரூபங்களுள்ள மஹாலக்ஷ்மிக்கு ஆஶ்ரயனைபடியால் ஹிமாலய ஶப்தவாச்யனுய் ஹிமவத்பர்வதத்திலிருப்பவன் (10-25). ஸர்வ விருக்ஷங்களில் ஶ்ரேஷ்டமான அஶ்வத்த விருக்ஷத்திற்கு நியா மகனுய் இதர விருக்ஷங்களைவிட இதற்கு மேன்மையைத் தந்து கொண்டே குதிரையைப்போலிருப்பவனுகையால் அஶ்வத்த நாமகனுய் அஶ்வத்த விருக்ஷத்திலிருப்பவன். தேவரிஷிகளில் சிரேஷ்டனை நாரதபஹுரிஷிக்கு நியாமகனுய் இதர தேவரிஷிகளை விட இவருக்கு மேன்மையைத் தந்துகொண்டே, ஞானத்தைத் தருபவனுகையால் நாரதரென்னும் பெயருடையவனுய் நாரதருக் குள்ளிருப்பவன். கந்தர்வருள் மேலான சித்ரரதனுக்கு நியா மகனுய் இதரகந்தர்வரைவிட இவனுக்கு மேன்மையைக் கொடுத் துக்கொண்டே, விசித்ரரான அதிதேவாதிகளை இரதமாயுள்ளவ னுகையால் சித்ரரதனென்கிற பெயருள்ளவனுய் சித்ரரதனுள்ளி ருப்பவன். ஸித்தரில் மேலானவனுயும், மௌனஶீலனுயும் ஸுக ரூபனுயும், ரக்ஷகனுயும், ஜகத்தை தன்னுள் வைத்துக்கொண்டி ருப்பவனுயு மிருப்பதினுல் கபிலனென்கிற பெயருடையவன். (இது ஸாக்ஷாத்ரூபம்) (10-26). குதிரைகளில் பாற்கடலிற் பிறந்த ஶ்ரேஷ்டமான உச்சைஶ்ரவஸ்ஸென்னும் குதிரைக்கு நியாமகனுய் இதர குதிரைகளைவிட இதற்கு மேன்மையைத் தந்துகொண்டே, அதிகமான கீர்த்தியை யுடையவனுகையால் உச்சைஶ்ரவஸ்ஸென் னும் பெயருடையவனுய் உச்சைஶ்ரவஸ்ஸென்னும் குதிரையி லிருப்பவன். யானைகளில் மேலான ஐராவதத்திற்கு நியாமகனுய் இதர யானைகளைவிட இதற்கு மேன்மையைத் தந்துகொண்டே, வைகுண்டத்திலிருக்கும் ஐரமென்னும் ஸரோவரத்தை இரக்ஷிப் பதினுல் ஐராவதஶப்தவாச்யனுய் இந்த்ரனின் வாஹனமான ஐரா வதமென்கிற யானையிலிருப்பவன். மனிதருள் ஶ்ரேஷ்டனை சக்ர வர்த்திக்கு நியாமகனுய் இதர மனிதர்களைவிட இவனுக்கு மேன்மை யைத் தந்துகொண்டே, மனிதர்களுக்கு ஈஶ்வரனுகையால் நராதிப னென்னும் பெயருடையவனுய், சக்ரவர்த்தியிலிருப்பவன்(10-27). ஆயுதங்களில் மேலான வஜ்ராயுதத்திற்கு நியாமகனுய் இதர ஆயுதங்களைவிட இதற்கு மேன்மையைக் கொடுத்துக்கொண்டே, ஸர்வதோமுக ரஹிதனுகையால் வஜ்ரநாமகனுய் வஜ்ராயுதத்தி

விருப்பவன். பசுக்களில் மேலான காமதேனுவுக்கு நியாமகனுய் இதர பசுக்களைவிட இதற்கு மேன்மையைத் தந்துகொண்டே வேண்டுபவர்கள் விரும்பும் பதார்த்தங்களைக் கொடுப்பவனுகையால் காமதேனு நாமகனுய் காமதேனுவிலிருப்பவன். ஸ்ருஷ்டி காரணனை மன்மதனுக்கு நியாமகனுய் அநேக விதங்களான ஸுகங்களை அனுபவிப்பவனுகையால் கந்தர்ப நாமகனுய் மன்மதனிலிருப்பவன். ஓரு தலையுள்ள ஸர்ப்பங்களில் மேலான வாஸுகிக்கு நியாமகனுய் இதர ஸர்ப்பங்களைவிட இதற்கு மேன்மையைத் தந்துகொண்டே தன்னிடலோகத்தில் வஸிப்பவர்களுக்கு ஸுகத்தைக்கொடுப்பவனுகையால் வாஸுகி என்ற பெயருடையவனுய் வாஸுகி என்ற ஸர்ப்பத்திலிருப்பவன் (10-28). அநேக தலைகளுள்ள ஸர்ப்பங்களில்மேலான அனந்தனுக்கு (ஆதிசேஷனுக்கு) நியாமகனுய் இதர அநேக பணிரஸ்ஸுகளுள்ள ஸர்ப்பங்களைவிட இவனுக்கு மேன்மையைத் தந்துகொண்டே * மஹாகுணபூர்ணனுகையால் அனந்த பத்தவாச்யனுய் அனந்தனில் (ஆதிசேஷனில்) இருப்பவன். நீரில் ஸஞ்சரிக்கும் ப்ராணிகளில் மேலான வருணனுக்கு நியாமகனுய் இதர ஜலசர (நீரில் ஸஞ்சரிக்கும்) ப்ராணிகளைவிட வருணனுக்கு மேன்மையைத் தந்துகொண்டே, மேலான ஆனந்தத்தைக் கொடுப்பவனுகையால் வருணபத்த வாச்யனுய் வருணனிலிருப்பவன். பித்ருதேவதைகளில் மேலான அர்யமனென்கிற பித்ரு தேவதைக்கு நியாமகனுய் இதர பித்ரு தேவதைகளைவிட இவனுக்கு மேன்மையைத் தந்துகொண்டே, அறியவேண்டியனவைகளை அறிந்துகொண்டிருப்பதினுல் அர்யமனென்கிற பெயருடையவனுய் அர்யமனென்கிற பித்ரு தேவதையிலிருப்பவன். நியமிப்பவர்களில் மேன்மையுள்ள யமனுக்கு நியாமகனுய் இதர நியாமகர்களைவிட இவனுக்கு மேன்மையைத் தந்துகொண்டே நியமிப்பவனுகையால் யமனென்கிற பெயருடையவனுய் யமனிலிருப்பவன் (10-29). தைத்யருள் சிரேஷ்டனை ப்ரஹ்லாதனுக்கு நியாமகனுய் மற்ற தைத்யர்களைவிட இவனுக்கு மேன்மையைத் தந்துகொண்டே, மேலான ஸுகமுடையவ

---

* 'மஹா குணாத்வாத்ய மனந்த மாஹு:' மஹா குணங்களுடைய வனுகையால் யாரை அனந்தனென்று சொல்லுகிறார்களோ அத்தகைய.

ஜதலால் ப்ரஹ்லாதனென்கிற பெயருடையவனுய் ப்ரஹ்லாதனி லிருப்பவன். விலங்கு முதலியவற்றுல் கட்டுப்படுத்துபவரில் மேலானவனை காலனுக்கு நியாமகனுய் இதர கட்டுப்படுத்துபவர் களை விட இவனுக்கு மேன்மையைக் கொடுத்துக்கொண்டே நன்றுய் அறிந்துகொள்ளுபவனுகையால் கால நாமகனுய் காலனி லிருப்பவன். மிருகங்களில் சிரேஷ்டமான ஸிம்ஹத்திற்கு நியா மகனுய் இதர மிருகங்களைவிட இதற்கு மேன்மையைத் தந்து கொண்டே, தன்னைத்தேடும் பக்தர்களுக்கு ப்ரபுவாகையால் மிரு கேந்திரனென்னும் பெயருடையவனுய் ஸிம்ஹத்திலிருப்பவன். பக்ஷிகளில் ச்ரேஷ்டனை கருடனுக்கு நியாமகனுய் இதர பக்ஷி களைவிட இப்பக்ஷிக்கு மேன்மையைத் தந்துகொண்டே, விசேஷ மாய் தன்னை வணங்குபவர்களுக்கு ஆச்ரயணுகையால் வைனதேய னென்ற பெயருடையவனுய் கருடனிலிருப்பவன் (10-30).

ஶுத்தப்படுத்தும் வஸ்துக்களில் ச்ரேஷ்டமான வாயுவுக்கு நியாமகனுய் ஶுத்தப்படுத்தும் இதர வஸ்துக்களைவிட இதற்கு மேன்மையைத்தந்துகொண்டே, ரக்ஷிப்பவர்களுக்கு பூஜ்ய ணுகையால் பவன ஶப்தவாச்யனுய், வாயுவினுள்ளிருப்பவன். ஶஸ்திரதாரிகளில் ச்ரேஷ்டனை, லோகத்தை விளையாடச்செய் யும்ராமனென்கிற ஸாக்ஷாத்ரூபமுடையவன். மீன்களில ச்ரேஷ்ட மான முதலைக்கு நியாமகனுய் இதர மீன்களைவிட இதற்கு மேன் மையைத் தந்துகொண்டே உலகத்திற்கு அல்ப ஞானத்தைக் கொடுப்பவனுகையால் மகரமென்கிற பெயருடையவனுய் முதலையி லிருப்பவன். நதிகளில் மேலான ஜான்ஹவிக்கு (கங்கைக்கு) நியாமகனுய் இதர நதிகளைவிட இதற்கு மேன்மையைத் தந்து கொண்டே ஸம்ஸாரத்தை அஸாரமென்று அறிந்துகொண்டு, அதை விடுபவர்களுக்கு ரக்ஷகனுகையால் ஜான்ஹவி ஶப்தவாச்ய னுய் ஜான்ஹவி (கங்கா) நதியிலிருப்பவன் (10-31). பிறப்பிக்கப் படும் ப்ராணிகளுக்கு காரணன். ரக்ஷகன். நாசகன். வித்யைகளில் மேலான ப்ரஹ்ம வித்யைக்கு நியாமகனுய் இதர வித்யைகளைவிட இதற்கு மேன்மையைத் தந்துகொண்டே, ஜீவர்களுக்கு பதியாய், அவர்களிலிருப்பதினுலும், ஞானஸ்வரூபனுகையினுலும் அத்யாத்ம வித்யா நாமகனுய் அத்யாத்ம (ப்ரஹ்ம) வித்யையிலிருப்பவன்,

வாதம், ஜல்பம், விதண்டாம் என்னும் இக்கதைகளை நடத்தும் ஜனங்களால் செய்யப்படும் வாதத்திற்கு நியாமகனும் வாச்ய னுகையால் வாதஸப்தவாச்யனும் வாதத்திலிருப்பவன் (10-32). அக்ஷரங்களில் ஸ்ரேஷ்டமான அ என்னும் அக்ஷரத்திற்கு நியா மகனும் இதர அக்ஷரங்களைவிட இதற்கு மேன்மையைத் தந்து கொண்டே அ என்று அழைக்கப்படுவதினால் அகார ஸப்தவாச்ய னும் அ என்னும் எழுத்திலிருப்பவன். ஸமாஸங்களில் மேலான த்வந்த்வ ஸமாஸத்திற்கு நியாமகனும் இதர ஸமாஸங்களைவிட இதற்கு ப்ராதான்யத்தைத் தந்துகொண்டே, வெளியிலுமுள்ளு மிரண்டு ரூபங்களுடனிருப்பதினால் த்வந்த்வ ஸப்தவாச்யனும் த்வந்த்வ ஸமாஸத்திலிருப்பவன். நாசமில்லாதவனதால் அக்ஷர ஸப்தவாச்யன். ஸம்ஹாரகனதால் காலநாமகனும் காலத்தி லிருப்பவன். தாரணபோஷணதிகளைச்செய்பவன். எல்லா திக்கு களிலும் முகமுள்ளவன். சதுர்முகனுள்ளிருப்பவன். ஸர்வத்ர ஸர்வாவயவங்களையுடையவன் (10-33). ஸம்ஹாரகனையால் ம்ருத்யு நாமகனும் ம்ருத்யுவுக்கு நியாமகனும் ம்ருத்யுவிலிருப்ப வன். பிறப்பவர்களின் பிறப்புக்கு நியாமகனும் பிறப்பிப்பதினால் உத்பவனென்கிற பெயருடையவனும் பிறப்பிலிருப்பவன். ஸ்த்ரீ களின் கீர்த்திக்கு நியாமகனும் புகழப்படுபவனையால் கீர்த்தி ஸப்தவாச்யனும் கீர்த்தியிலிருப்பவன். ஸ்ரீக்கு (காந்திக்கு) நியா மகனும் ஸ்ரீக்கு ஆஸ்ரயனையால் ஸ்ரீஸப்தவாச்யனும் ஸ்ரீயிலிருப் பவன். வாக்குக்கு நியாமகனென்று சொல்லிக்கொள்ளப்படுவதி னால் வாக்ஸப்தவாச்யனும் வாக்கிலிருப்பவன். ஸ்மரணக்கு (நினைவுக்கு) நியாமகனும் நினைப்பதற்கு யோக்யனையால் ஸ்ம் ருதி நாமகனும் ஸ்ம்ருதியிலிருப்பவன். மேதா நியாமகனும் மேதா ஸப்தவாச்யனும் மேதையிலிருப்பவன். தைர்யத்திற்கு நியாமக னும் ஜகத்தை தரிப்பதினால் த்ருதி ஸப்தவாச்யனும் த்ருதியிலிருப் பவன். க்ஷமைக்கு (பொறுமைக்கு) நியாமகனும் க்ஷமா ஸப்த வாச்யனும் க்ஷமையிலிருப்பவன் (10-34). † ரதந்தராதி நாமங் களில் ஸ்ரேஷ்டமான ப்ருஹத்ஸாமத்திற்கு நியாமகனும் இதர

---

* வாதங்களிலுள்ள (தருக்கத்தின்) வகைகள்.

† ஸாமவேதத்தினுட் பிரிவுகளின் பெயர்.

ஸாமங்களைவிட இதற்கு மேன்மையைத் தந்துகொண்டே, அதிக மான பலமுள்ளவனுதலாலும், அமேயனனதிலும் (அளவிட முடியாதவனுனதிலும்) ப்ருஹத்ஸாமஸப்தவாச்யனுய் ப்ருஹத் ஸாமத்திலிருப்பவன். சந்தஸ்ஸுகளில் ஸ்ரேஷ்டமான காயத் ரிக்கு நியாமகனுய் இதர சந்தஸ்ஸுகளைவிட இதற்கு மேன்மை யைத்தந்துகொண்டே, தன்னை துதிப்போருக்கு ரக்ஷிப்பதிலால் காயத்ரி ஸப்தவாச்யனுய் காயத்ரியிலிருப்பவன். மாதங்களில் மார்கஸிர மாதத்திற்கு நியாமகனுய் இதர மாதங்களைவிட இதற்கு மேன்மையைத்தந்துகொண்டே மார்க்கங்களுக்கு ஸ்ரீக்ஷஸ்தானீய னுகையால் (ஸ்ரீரஸ்னைஸ்ப்போன்றவனுகையால்) மார்க்கஸீர்ஷ ஸப்த வாச்யனுய் மார்க்கஸிரமாதத்திலிருப்பவன். ருதுக்களில் ஸ்ரேஷ்ட மான வஸந்தருதுவுக்கு நியாமகனுய் இதர ருதுக்களைவிட இதற்கு மேன்மையைத் தந்துகொண்டே அவாளவாளிட யோக் தானுஸாரமாய் கெட்ட ஞானத்தையும் நல்ல ஞானத்தையும் பிறப்பிப்பவனுதலால் குஸுமாகர ஸப்தவாச்யனுய் வஸந்தருதுவி லிருப்பவன் (10-35).

வஞ்சகர்களில் சூதுக்கு நியாமகனுய் ஆட்டத்தில் ஆஸக்த னுகையால் த்யூத ஸப்தவாச்யனுய் சூதிலிருப்பவன். தேஜஸ்விகளி லிருக்கும் தேஜஸ்ஸுக்கு நியாமகனுய் ப்ரகாஸிப்பதிலால் தேஜஸ் ஸப்தவாச்யனுய் தேஜஸ்ஸிலிருப்பவன். ஜயஸீலரிட மிருக்கும் ஜயத்திற்கு நியாமகனுய் ஜயஸப்தவாச்யனுய் ஜயத்திலிருப்பவன். நிஸ்சயஞானமுள்ளவர்களிலுள்ள நிஸ்சய ஞானத்திற்கு நியா மகனுய் வ்யவஸாய ஸப்தவாச்யனுய் நிஸ்சயஞானத்திலிருப்பவன். பலமுள்ளவர்களிடமிருக்கும் பலத்திற்கு நியாமகனுய் ஸத்வஸப்த வாச்யனுய் பலத்திலிருப்பவன். (10-36). யாதவர்களில் ஸ்ரேஷ்ட னன வஸுதேவ புத்ரனன ஸ்ரீகிருஷ்ணன் (இது ஸாகூஷாத்ரூபம்) பாண்டு குமாரர்களில் ஸ்ரேஷ்டனன அர்ஜுனனுக்கு நியாமகனுய் பீமனைத்தவிற மற்ற பாண்டவர்களைவிட அர்ஜுனனுக்கு மேன் மையைத் தந்துகொண்டே தனஞ்ஜய ஸப்தவாச்யனுய் அர்ஜுன னுள்ளிருப்பவன். முனிகளில் வேதவ்யாஸர் (இது ஸாகூஷாத் ரூபம்). கவிகளில் ஸ்ரேஷ்டனன உஸனஸ் என்கிற (ஸுக்ராசார்ய ரென்கிற) கவிக்கு நியாமகனுய் இதர கவிகளைவிட இவருக்கு

மேன்மையைத் தந்துகொண்டே, ஸ்ருஷ்டிக்கும் எண்ணமுள்ளவ ணுகையால் உஶனஸ் ஶப்தவாச்யனுப் உஶனஸ் என்கிற (சுக்ரா சார்யனென்கிற) கவியிலிருப்பவன் (10-37). தண்டிப்பவர்களால் செய்யப்படும் தண்டனைக்கு நியாமகனுய் தண்டித்துக்கொண்டிரு ப்பதினுல் தண்ட ஶப்தவாச்யனுய் தண்டனையிலிருப்பவன். ஜய மடைய வேண்டுமென்கிற எண்ணமுள்ளவரிடமுள்ள நீதிரூப மான தர்மத்திற்கு நியாமகனுய் நீதி ஶப்தவாச்யனுப் நீதியிலிரு ப்பவன். இரகசியமான வஸ்துக்களில் ஸ்ரேஷ்டமான த்யான த்திற்கு நியாமகனுய் முனிகளால் பூஜ்யணுகையால் மௌன ஶப்த வாச்யனுய் த்யானத்திலிருப்பவன். ஞானமுள்ளவர்களிலிருக்கும் ஞானத்திற்கு நியாமகனுய் ஞானரூபணுதால் ஞான ஶப்தவாச்ய னுய் ஞானத்திலிருப்பவன் (10-38). ஸமஸ்தபூதங்களுக்கும் காரணன். ஸமஸ்த பதார்த்தங்களிலு மிருப்பவன் (10-39). அள வில்லாத விபூதிரூபங்களையுடையவன் (10-40). எந்த பதார்த்தம் தன்னிட ஜாதியில் மேலானதோ, எந்த பதார்த்தம் செல்வத் துடன் கூடியதோ, எது விசேஷமாய் விருத்தியடைந்திருக் கிறதோ அவ்வெல்லா பதார்த்தங்களிலும் தேஜோரூபமான அம் ஶத்துடனிருப்பவன் (10-41). தன்னிட ஓர் அம்ஶத்தினுல் இவ் வெல்லா உலகத்தையும் வ்யாபித்திருப்பவன். (நிறைந்திருப் பவன்) (10-42).

புருஷோத்தமன். நிச்சயமான பின் செ ல் ல ப் ப ட் ட மாகாத்ம்யமுடையவன் (11-3). யோகேஶ்வரன். ப்ரபு, நாச ரஹிதன் (11-4). அப்ராக்ருதங்களான நாநாவிதங்களான ரூபங்க ளுடையவன். நாநாவிதங்களான வர்ணங்களையும், நாநாவிதங் களான ஆகாரங்களையுமுடையவன். அளவில்லாத ரூபங்களுடைய வன் (11-5). ஆதித்யர்களுக்கும், வஸுக்களுக்கும், ருத்ரர்களுக் கும், அஸ்வினி தேவதைகளுக்குமட்டும், மருத்கணத்திற்கும் இது வரைக்கும் கண்டிராத ஆஶ்சர்யகரமான பதார்த்தங்களுக்கும், இந்த சராசராத்மகமான ப்ரபஞ்சத்திற்கும் ஆஶ்ரயன் (11-6,7). மகாயோகேஶ்வரன் (11-9). அநேக முகங்களையுடையவன். அநேக கண்களையுடையவன். அப்ராக்ருதங்களான அநேக ஆப

ணங்களை தரித்திருப்பவன். அப்ராக்ருதங்களான மேல் தூக்கப் பட்ட அநேக ஆயுதங்களை தரித்திருப்பவன் (11-10).

அப்ராக்ருதங்களான ஹாரங்களை (மாலைகளை) தரித்திருப் பவன். திவ்யமான பீதாம்பரத்தைத் தரித்திருப்பவன். திவ்ய கந்தத்தைப் பூசிக்கொண்டிருப்பவன். ஸர்வாஶ்சர்யமான ரூப முள்ளவன். க்ரீடாதிகுணமுடையவன். எல்லா தேசங்களிலும் (இடங்களிலும்) எல்லா காலங்களிலும் நிறைந்தவன். ஸர்வகுண பூர்ணன். எல்லாதிக்குகளிலும் முகங்களையுடையவன் (11-11). ஆகாயத்தில் ஒரே காலத்தில் உதயமடைந்துள்ள (விடிந்திருக்கும்) ஆயிரக்கணக்கான ஸூர்யர்களின் காந்திக்குச்சரியானகாந்தியுள்ள வன் (11-12). தேவதைகளுக்கு தேவத்தன்மையைக் கொடுப்பவன் (11-13). தேவதைகளுக்கும், ஸமஸ்த பூதவிசேஷஸங்கங்களுக்கும், சதுர்முகனுக்கும், சதுர்முகனின் துடையிலுட்கார்ந்திருக்கும் ருத்ர னுக்கும் அற்புதமான ஸர்ப்பங்களுக்கும் ஆஶ்ரயன் (11-15). அநேக கைகளாலும், அநேக வயருகளிணைலும், அநேக முகங்களிணைலும் அநேக கண்களிணைலும் கூடிய விஶ்வரூபமுடையவன். எல்லா தேசங்களிலும் அளவில்லா ரூபங்களுடையவன். நாசமில்லாத வன். பிறப்பில்லாதவன் (11-16). கிரீடம் கதா சக்ரம் இவைகளு டையவன். * தேஜ: புஞ்ஜன். எல்லா தேசங்களிலும் ப்ரகாஶமுடை யவன். யாராலும் காணுவதற்கு அஶக்யமான விஶ்வரூபமுடைய வன். விஶேஷமாய் நாலுதிக்குகளிலும் எரிந்துகொண்டிருக்குஞ் சூர்யாக்னிகளிட ப்ரகாசத்தைப்போன்ற அளவற்ற ப்ரகாசமுள்ள வன் (11-17). ஞானிகளிணால் அறியப்படுவதற்கு யோக்யன். அக்ஷர (நாசமற்ற) ஸ்வரூபமுடையவன். இந்தஜகத்துக்கு முக்யாஶ்ரயன். நாசமற்றவன். அநாதியான பரம்பரையாய் வந்த தர்மத்திற்கு ரக்ஷகன். அநாதி நித்யனான புருஷன் (11-18). அளவற்ற பராக் ரமமுள்ளவன். அளவற்ற பாஹுக்களை (கைகளை) யுடையவன். சந்ர ஸூர்யர்களுக்கு ஆஶ்ரயமான கண்களையுடையவன். முகத்தில் ப்ரகாஶமான அக்னியையுடையவன். தன்னிட தேஜஸ் ஸினால் இவ்வெல்லா உலகத்திற்கும் தாபமுண்டாக்குபவன் (11-19). ஆகாய பூமியின் மத்தியில் வ்யாபித்திருப்பவன் (நிறைந்

---

* ஒளியின் குவியல்

திருப்பவன்). எல்லாதிக்குகளிலும் வியாபித்திருப்பவன். தர்ஶனத் திலேயே எல்லா ஜகத்துக்கும் பயத்தையுண்டாக்கும் அத்புத மான, உக்ரமான ரூபமுடையவன் (11-20).

எல்லா தேவதைகளால் ப்ரவேசிக்கப்படுபவன். பயமடைந்த, பத்தாஞ்ஜலிகளான (கைகூப்பிக்கொண்டிருக்கும்) ஜனங்களால் துதிக்கப்படுபவன். மகரிஷிகளே முதலானவர்களால் விசேஷ குணங்களைச் சொல்லும் ஸ்தோத்ரங்களால் துதிக்கப்படுபவன் (11-21). ருத்ரர்கள், ஆதித்யர்கள், வஸுக்கள், விஶ்வேதேவதை கள், அஶ்வினி தேவதைகள், மருத்கணங்கள், பித்ருகணங்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், தைத்யர்கள், ஸித்தர்கள், இவர்களால் ஆஶ்சர்யத்தினல் கண்டுகொள்ளப்படுபவன் (11-22). வெகுமுகங் கள், வெகுகண்கள், வெகு புஜங்கள், வெகு வயருகள், வெகு துடைகள், வெகு பாதங்கள், வெகு கோரைப்பற்கள் இவை களால் பயங்கரமான ரூபமுடையவன் (11-23). ஆகாயத்தை தாக்கிக்கொண்டிருக்கும் ரூபமுடையவன், அநேக வர்ணங்களு டையவன். பெரியதாய் திறக்கப்பட்டிருக்கும் வாயுடையவன். ப்ர காஶிக்கும் விஶாலமான கண்களையுடையவன் (11-24). கோரைப் பற்களால் பயங்கரமான ப்ரளயகாலத்தின் அக்னிக்கு ஸத்ருஶ மான முகமுடையவன். உலகத்திற்கு ஆதாரன். தேவதைகளுக்கு ஸ்வாமி (11-25).

இராஜர்களிட கூட்டத்துடன் கூடிய துர்யோதனுதி எல்லா ஜனங்கள், பீஷ்மர், த்ரோணர், கர்ணன் மற்றும் பாண்டவர் பக்ஷத் திலுள்ள யுத்தம் செய்யும் ஜனங்கள் இவர்களை வெகுவேகமாய் உட் செல்லுவித்துக்கொள்ளும் பயங்கரமான முகமுடையவன். பற் களின் ஸந்துகளில் அகப்பட்டுக்கொண்டு பொடிபொடியா யிருக் கும் ஜனங்களின் சிரஸ்ஸுகளையுடையவன் (11-26,27). மழை காலத்தில் நதிகள் அதிகவேகத்துடன் ஸமுத்ரத்தை யடை வதைப்போல் அதிகமாய் எரிந்துகொண்டிருக்கும் முகத்தை ப்ரவேஶிக்கும் வீரர்களையுடையவன் (11-28). எப்படி விளக்கு களைக்குறித்து பதங்கங்கள் (விளக்கையணைக்கும் புழுக்கள்) நாச மடைவதற்காக வருகின்றனவோ அப்படியே நாசமடைவதற்காக முகத்தைக் குறித்து வரும் ஜனங்களையுடையவன். எல்லா ஜகத்

ணதயும் வாயில் போட்டுக்கொண்டு சப்பளிப்பவன். ஸமஸ்த ஜகத் ணதயும் வ்யாபித்திருக்கும் காந்தியுடையவன் (11-29,30). தேச காலங்களில் பரிபூர்ணன். லோகநாசகன்.

மற்றும் அர்ஜுனன்முதலிய சிலரைத்தவிர யுத்தத்தில் சேர்ந் திருக்கும் எல்லா யோதரையும் ஸம்ஹரிப்பதற்காக ப்ரவ்ருத்தரு யிருப்பவன் (முயற்சித்திருப்பவன்)(11-32). த்ரோண பீஷ்ம ஜயத் ரதகர்ணனே முதலான வீரச்ரேஷ்டர்களை மடிந்தவரைப்போல் செய்தவன் (11-34). ஸர்வேந்திரிய ப்ரேரகன். ஜகத்துக்கு ஸந் தோஷகரமானகீர்த்தியுள்ளவன். ராக்ஷஸர்களைப்பயப்படுத்தி திக்கு திக்குகளில் ஓடச்செய்பவன். ஸித்தர்களின் கூட்டங்களால் வணங் கிக்கொள்ளப்படுபவன் (11-36). ஸகல ஜகத்விலக்ஷணன். சதுர்முக ப்ரஹ்மாவையும் படைப்பவன். (11-37). தேவச்ரேஷ்டன். புராணபுருஷன். இந்த ஜகத்துக்கு முக்யமான ஆச்ரயன். எல்லா வற்றையும் தெரிந்துகொள்ளுபவன். வேத்யன். (தெரிந்துகொள் ளப்படுபவன்). உத்தம தேஜஃஸ்வரூபன். ஜகத்தை வ்யாபித்துக் கொண்டிருப்பவன் (11-38). வாயு அக்னி யமன் வருணன் இது முதலிய ஸப்தங்களால் முக்யமாய் சொல்லிக்கொள்ளப்படுபவன் (11-39). அநந்த வீர்யன். அளவற்ற பராக்ரமமுடையவன். எல்லா பதார்த்தங்களிலும் வ்யாபித்துக்கொண்டிருப்பதினல் வேதாதி ப்ரமாணங்களில் ஸர்வ என்கிற பெயரால் அழைக்கப்படுபவன் (11-41, 42). சராசராத்மகமான ஜகத்துக்கு தந்தை. மிகவும் பூஜ்யன். குரு. மூவ்வுலகத்திலும் ஸமாதிகமற்றவன். நிகரற்ற ஐச்வர்யமுடையவன் (11-43). துதிக்கப்படுபவன் (11-44). பக்தி யில்லாமல் செய்யப்படும் வேதாத்யயனத்தினலும், அநேக யஜ் ஞானுஷ்டானங்களாலும். தானங்களாலும், வர்ணச்ரம விஹித மான கர்மங்களாலும், உக்ரமான தபஸ்ஸினலும் அர்ஜுனனைத் தவிர இதரர்களுக்குக் காணப்படாத விச்வரூபமுடையவன். (11-48). தேவதைகளும் காணுவதற்கு அபேக்ஷிக்கும் விச்வரூப முடையவன் (11-52). உத்தமமான பக்தியில்லாமல் அறிவதற்கும் காணுவதற்கும் பிரவேசிப்பதற்கும் அசக்யமான ரூபமுடைய வன் (11-53).

ஸரீரமென்று சொல்லப்படும் மஹாபூதம் முதலான ஸமஸ்த ப்ரபஞ்சரூபமான க்ஷேத்ரத்தை யறிந்தவன் (13-1). மோக்ஷ ஜனகமான ஞானத்திற்கு விஷயன் (அறியப்படுபவன்). பரப்ரஹ்ம ஸ்வரூபன். பஞ்சமஹா பூத விலக்ஷணன் (13-12). ஸர்வத்ர கைகால் களையுடையவன். ஸர்வத்ர (எங்கும்) கண்களையும், தலைகளையும், முகங்களையும், காதுகளையுமுடையவன். எல்லாவற்றையும் வியாபித்துக்கொண்டிருப்பவன் (13-13). எல்லா இந்திரியங்களுக்கும், குணங்களுக்கும் ப்ரகாஸகன். ப்ராகிருதமான இந்திரிய மில்லாதவன். ஆஸக்திரஹிதன். ஸர்வதாரகன். ஸத்வராஜஸ்தமோ குணரஹிதன். ஆனந்தாதி குணங்களை அனுபவிப்பவன் (13-14). பூதங்களின் உள்ளும் வெளியிலுமிருப்பவன். வேருவிதமான கருத்தில் லாதவன். எல்லா தேசங்களிலும் ஸஞ்சரிப்பவன். சூக்ஷ்மமுதலால் பிறரால் அறியமுடியாதவன். தூரத்திலிருப்பவன். ஸமீபத்திலிருப்பவன். (13-15). எல்லா ப்ராணிகளிலும் ஒருவனுகவே இருப்பவன். எல்லா ப்ராணிகளுக்கும் ரக்ஷகன். எல்லாவற்றையும் பக்ஷிப்பவன். பிறப்பிப்பவன் (13-16). பூதங்கள் நாசமடைந்தபோதிலும் தான் நாசமடையாதவன் (13-27). கர்ம ஸம்பந்தமற்றவன் (13-31). ஆகாயம் எல்லாவற்றிலுமிருந்தபோதிலும் எப்படி அந்தந்த பதார்த்தங்களின் குணங்களின் ஸம்பந்தத்தை யடைவதில்லையோ, அப்படியே எல்லா இடங்களிலிருந்தபோதிலும் அந்தந்த பதார்த்தங்களின் குணஸம்பந்தமில்லாதவன் (13-32). ஸூர்யனொருவனே இவ்வுலகத்தை எப்படி ப்ரகாஸப்படுத்துவனோ, அப்படியே எல்லா உலகத்தையும் ப்ரகாஸப்படுத்துபவன் (13-33).

தன்னிட பார்யையான ப்ரஹ்மமென்று சொல்லிக்கொள்ளப்படும் மஹாலக்ஷ்மியை கர்ப்பத்தைத் தரிக்கும்படிக்குச் செய்பவன். அதினால் எல்லா பூதங்களையும் படைப்பவன் (14-3). எல்லா பூதங்களுக்கும் தந்தை (14-4). மஹாலக்ஷ்மியின் ஸ்திதி (இருப்பு)க்குக்காரணன். நாசமற்ற முக்தர்களிட ஸுகத்தின் இருப்புக்குக் காரணன். ஸாஸ்வதமான தர்மத்திற்கு ரக்ஷகன். மோக்ஷ ஸம்பந்தமான ஸுகத்தைக் கொடுப்பவன் (14-27).

விசாரிக்கப்படுபவன். புனராவர்த்திஸ்வரூபமுடையவன். ஆத்ய புருஷன் (முதலிலிருப்பவன்). அனுமானம் ஸம்ஸாரத்திற்கு ப்ரவர்த்தகன் (15-4). ஸூர்யனுல் ப்ரகாஸப்படுத்துவதற்கு முடியாத ரூபமுள்ளவன். சந்த்ரனுல் ப்ரகாஸப்படுத்துவதற்கு முடியாத ரூபமுடையவன். அக்னியால் ப்ரகாஸப்படுத்துவதற்கு முடியாத ரூபமுடையவன் (15-6). உலகத்தை ப்ரகாஸப்படுத்தும் ஸூர்யனிடமிருக்கும் தேஜஸ்ஸுக்கு நியாமகன். உலகத்தை ப்ரகாஸிக்கச்செய்யும் சந்திரனிலுள்ள தேஜஸ்ஸுக்கு நியாமகன். (15-12) அக்னியிலுள்ள தேஜஸ்ஸுக்கு நியாமகன். பூமியிற் புகுந்து தன்னிட ஸக்தியினால் எல்லா ப்ராணிகளையும் தரிப்பவன். சந்திரனில் நியாமகனையிருந்து ரஸரூபமான விபூதிரூபத்தினால் தான்யபல வ்ருக்ஷங்களை விளைவிப்பவன் (15-13).

ப்ராணிகளிட தேகத்தில் வைஸ்வானரனென்கிற அக்னியிலிருக்கும் ரூபத்தினல் ப்ராணபானங்களுடன் கூடிக்கொண்டு நான்கு விதங்களான அன்னத்தை பசனம்செய்பவன் (பக்குவப்படுத்துபவன்) (15-14). ஸர்வப்ராணிகளின் ஹ்ருதயத்தில் வஸிப்பவன். எல்லா வேதங்களாலும் ப்ரதிபாத்யன் (சொல்லிக்கொள்ளப்படுபவன்). வேதார்த்தங்களை நிர்ணயப்படுத்தும் ப்ரஹ்மஸூத்ரங்களைச் செய்தவன். நிஜமான வேதார்த்தங்களை அறிந்தவன் (15-15). க்ஷராக்ஷரபுருஷர்களைவிட (நாசமடையக்கூடிய சரீரமுடைய புருஷர்களைவிடவும், நாசமடையாத சரீரத்துடன்கூடிய புருஷர்களைவிடவும்) உத்தம புருஷன். பரமாத்மாவென்று வேதங்களால் சொல்லிக்கொள்ளப்படுபவன். மூவ்வுலகத்திலும் ப்ரவேஸித்து அனைவகளை ரக்ஷிப்பவன். நாசமற்றவன். ஸமர்த்தன் (15-17). க்ஷரஜீவர்களை மீறினவன். அக்ஷரஜீவனைவிட உத்தமன். ஸ்ருதிஸ்ம்ருதிகளில் புருஷோத்தமனென்று ப்ரஸித்தியடைந்தவன் (15-18). 'ஓம் தத் ஸத்' என்கிற பெயருடையவன். வேதங்களின் அபிவ்யக்திக்குக் காரணன் (17-23). ஸர்வபூதங்களின் (ப்ராணிகளின்) ஹ்ருதய குகையிலிருந்து அந்த அஸ்வதந்த்ரர்களான ப்ராணிகளின் செய்கைகளைச் செய்விப்பவன் (18-61).

ஜீவ ப்ரகரணம்.

க்ஷரரென்றும் அக்ஷரரென்றும் சேதனர்கள் இருவகைப் பட்டவர்கள். பிறப்பிறப்பில்லாத தேகமுள்ள மஹாலக்ஷ்மி அக்ஷர சேதனள். பிறப்பிறப்புள்ள தேகத்துடன் கூடிய சதுர்முகர் முதலிய எல்லா ஜீவர்களும் க்ஷர சேதனர்கள். இவ்விருவகைப்பட்ட சேதனர்களில் அக்ஷர சேதனளான மஹாலக்ஷ்மி வ்யாப்தள். விகாரம் (மாறுதல்) இல்லாதவள் (15-16). கிருஷ்ணனிடம் வேறுனவள். (15-17.) ஸ்ரீ கிருஷ்ணனிடம் கடையானவள் (15-18). ஸ்ரீ பரமாத்மாவால் (கிருஷ்ணரால்) நியம்யள் (கட்டுளையிடப்படுபவள்). எல்லாப்ரபஞ் சத்தைவிட உத்தமள். ஜகத்தை தரிப்பவள். (7-5). எல்லா பூதங் களுக்கும் காரணள் (7-6). பரமாத்மாவின் பார்யாள். ஜகத்தைக் கர்ப்பத்தில் தரிப்பவள் (14-3). ஜகத்துக்குத்தாய் (14-4).

அக்ஷர சேதனள்.

க்ஷரசேதனர்களான ஜீவர்கள் யந்திரத்தின் மேல் நிற்கும் பதார்த்தங்கள் யந்திரத்தை தரித்திருப்பவனால் நியமிக்கப்படு வதைப்போல், எல்லா வ்யாபாரங்களிலும் நிய மிக்கும் ஸ்வபாவமுள்ள நாராயணனால் நியம்யர் கள் (அடக்கப்படுபவர்கள்) (18-61). நாராயணனை விட வேறுபட்டவர்கள் (15-16). பரமாத்மாவின் அம்ஸர்கள் (அம்ஸத்தைப்போல் அல்பர்கள் பரமாத்மாவின் பாகங்களல்ல, பரமாத்மாவுக்கு அடிமைப்பட்டவர்கள்). அநிந்த்யர்கள் (ஆதி யந்தமில்லாதவர்கள்). ப்ரக்ருதிகார்யமான ஸரீரத்திலுள்ள மனது முதலிய ஆறு ஞானேந்திரியங்களையும் விஷயங்களில் ப்ரவர்த்திக் கச்செய்பவர்கள் (15-7). இந்த ஸ்ரோத்ரம் (காது), சக்ஷுஸ் (கண்), த்வக் (தோல்) ரஸனம் (நாக்கு) க்ராணம் (மூக்கு) மனது ரூபங்களான ஞானேந்திரியங்களையும், வாக் பாணி பாத பாயூபஸ் தங்களென்ற கர்மேந்திரியங்களையும் ஆஸ்ரயித்து விஷயங்களை அனுபவிப்பவர்கள். (15-9).

க்ஷரசேதனர் கள்.

ப்ரக்ருதி நிர்மிதமான சரீரத்திலிருந்து ப்ராக்ருதமான ஸுக துக்காதிகளை அனுபவிப்பவர்கள் (13-21). பரமாத்மாவால் பிறப் பவர்கள் (13-24). நாசமடையும் தேகமுடையவர்கள். பழய வஸ்

திரங்களேவிட்டு புதிய வஸ்திரங்களேத் தரிப்பதைப்போல் ஜீர்ணமான (கிழத்தனத்தை யடைந்த) சரீரங்களே விட்டு புதியதான தேகங்களே ஸ்வீகரிப்பவர்கள் (2-22). ஸஸ்திரங்களால் வெட்டப்படமாட்டாதவர்கள். அக்னியிலல் சுடப்படமாட்டாதவர்கள். நீரிலல் நனைக்கப்படமாட்டாதவர்கள் (2-23). எங்கும் நிறைந்த பரமாத்மாவை ஆச்ரயித்திருப்பவர்கள். அணுரூபர்கள் (நுண்ணியவர்கள்) (2-24). ஸ்வரூபத்திலல் பிறப்பவர்களல்லர். இறப்பவர்களுமல்லர் (2-20). தேஹாத்பத்தியுடையவர்கள் (தேகத்தின் ஸம்பந்தமடைபவர்கள்). அவ்யக்தத்திலேயே தேகத்தின் லயமடைபவர்கள் (2-28). தமக்குண்டாயிருக்கும் வெகுஜன்மங்களே யறியாதவர்கள் (4-5). பரமாத்மாவின் பகலாரம்பத்தில் பரமாத்மாவிட மிருந்து வெளியாய், இரவாரம்பத்தில் பரமாத்மாவில் லயமடைபவர்கள்.

க்ஷாரசேதனர்களின் பிறிவும், வர்ணங்களும்.

இந்த க்ஷாரசேதனர்கள் அவாளவாளிட குணகர்மங்களின் விபாகபூர்வகமாய் ப்ராஹ்மண, க்ஷத்ரிய வைஸ்ய, சூத்ர ஸங்கரமென்னும் ஐந்து ஜாதியுடையவர்களாய் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றனர் (4-13). ஸ்வபாவஸித்தமான வெவ்வேறு குணகர்மங்களே யுடையவர்கள் (18-41). ப்ராஹ்மணர்கள் பகவன்னிஷ்டையான (பகவானிடத்திலேயே இடப்பட்ட) புத்தியையும் இந்திரிய நிக்ரஹத்தையும், காயிக (தேகத்திலல் செய்யப்படும்) வாசக (வாக்கிலல் செய்யப்படும்) மானஸிக (மனதிலல் செய்யப்படும்) ங்களென்ற மூவ்வகையான தபஸ்ஸுகளேயும், உள்ஸுத்தி (மனஸ்ஸுத்தி) வெளிஸுத்தி (தேக சுத்தி) இவைகளேயும், பொறுமை, மனே வாக் காய கர்மங்களில் ஓரேவிதமாயிருப்பு, ஞானம், விஞ்ஞானம், 'தர்மாதர்மங்களுண்டு, அவைகளுக்குப் பலனுண்டு' என்கிற ஆஸ்திக்ய புத்தி இவைகளேயுடையவர்கள் (18-42).

க்ஷத்ரியர்கள்—ப்ராகல்ப்யம் (நிபுணத்வம்), தைர்யம், தக்ஷிதை, ஆயாசக்கணக்கான தடைகள் வந்தபோதிலும் ஆரம்பித்த கார்யத்தை முடிக்கும் ஸாமர்த்தியத்தையும், ப்ராணம்

போகும் ஸமயம் நேர்ந்தபோதிலும் யுத்தத்திலிருந்து பின்வாங்காமை, தாத்ருத்வம் (கொடுக்குந்தன்மை), ப்ரஜாபாலன ஸாமர்த்தியம் இவைகளையுமுடையவர்கள். இவர்களுக்கு இக்குணங்கள் ஸ்வாபாவிகமானவைகள் (18-43). வைஶ்யர்களுக்கு—வ்யாபாரம் கோரக்ஷணை இது முதலியவைகள் ஸ்வாபாவிகமானவைகள். ஶூத்ரர்கள் ப்ராஹ்மண க்ஷத்ரிய வைஶ்யர்களின் ஸேவைஎன்கிற ஸ்வாபாவிக தர்மமுடையவர்கள் (18-44). ஸங்கராஜாதியர்கள் பகவத்பக்தி முதலிய குணங்களையும் தமக்குசிதமான நாமஸ்மரணாதி கர்மங்களையுமுடையவர்கள்.

இவ்வைவகையான சேதனர்கள் ஸாத்விகாராஜஸ தாமஸர்களென* மூவ்வகைப்பட்டவர்கள் (17-2). ஸாத்விக ஶ்ரத்தையுடையவர்கள் ஸாத்விகர்கள். ராஜஸ ஶ்ரத்தையுள்ளவர்கள் ராஜஸர்கள். தாமஸ ஶ்ரத்தையுள்ளவர்கள் தாமஸர்கள் (17-3). இம்மூவருக்கும் குணத்ரயங்களின் ஸம்பந்தமுடையவர்கள் (18-40).

ஸாத்விகாதி குணப்பிரிவு.

ஸாத்விகர்கள் அநேக ஜன்மங்களில் செய்திருக்கும் புண்யபலத்தினால் அல்ப பலன்களின் விருப்பமில்லாத மனதுடையவர்கள். தேவீஸம்பத்தை ஆஶ்ரயித்தவர்கள். பகவானைத்தவிர மற்ற பதார்த்தங்களில் மனதில்லாதவர்களாய் ஸர்வ பூதங்களுக்கும் காரணனை, நாசமற்ற ஸ்ரீகிருஷ்ணனின் குணங்களையறிந்து அவனை பஜிப்பவர்கள் (9-13). ஸமஸ்த வேதப்ரதிபாத்யமான ப்ரஹ்ம விஷயகமான வேதாந்தங்களைக் கேட்பவர்கள். உறுதியான அஹிம்ஸை ப்ரஹ்மசர்யம் முதலிய வ்ரதங்களையுடையவர்கள். சிஷ்யர்களுக்கு உபதேசிப்பவர்கள். கல்யாணகுணங்களுடன் கூடியிருக்கும் ஸ்ரீவாஸுதேவனை மனோவாக்காயங்களால் வணங்குபவர்கள். ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் அசையா பக்தியுடையவர்கள். ஸ்ரீ கிருஷ்ணனின் த்யானத்தைச் செய்பவர்கள் (9-14). ஞானயஜ்ஞத்தினால் ஸ்ரீ கிருஷ்ணனை பூஜிப்பவர்கள். எல்லா ஜகத்திலும் வ்யாபித்தவனவன் பரமாத்மா ஒருவனே என்றும் ஜகத்விலக்ஷண

---

* தைவஸ்ருஷ்டி என்றும் ஆஸுரஸ்ருஷ்டி என்றும் (16-5) பிரிக்கப்பட்டிருக்கும் தேவாஸுரர்களில் தேவதைகள் ஸாத்விகரில் சேர்ந்தவர்கள். அஸுரர்கள் தாமஸரில் சேர்ந்தவர்கள்.

னென்றும் உபாஸனை செய்பவர்கள். இதார்களுக்கு பயத்தைத் தராதவர்கள். தாங்கள் சுயம் பயமற்றவர்கள். மனஸ்ஸாந்தி யுடையவர்கள். ஞானேபாயங்களில் ஸ்திரமாயிருப்பவர்கள். ஸத் பாத்ரங்களில் தானம் செய்பவர்கள். இந்திரிய நிக்ரஹமுள்ளவர் கள். ஜ்யோதிஷ்டோமாதி யஜ்ஞங்களைச் செய்பவர்கள். தேவபித்ரு யஜ்ஞங்களைச் செய்பவர்கள். வேதாத்யயனங்களைச் செய்பவர்கள். ப்ரஹ்மசர்யாதி தபஸ்ஸுள்ளவர்கள். மனோவாக்காய கர்மங்களில் ஓரோஷிதமாயிருப்பவர்கள் (16-1). தொந்தரவு செய்யாதவர்கள். நிஜத்தையே சொல்லுபவர்கள். கோபமற்றவர்கள். ஔதார்ய முள்ளவர்கள். பகவானிடத்தில் ஸ்திரமாயிருப்பவர்கள். பிரரிட அபவாதங்களைச் சொல்லாதிருப்பவர்கள். பூதங்களில் தயையுடை யவர்கள். விஷயங்களில் ஆஸக்தியில்லாதவர்கள். கொடுமையற்ற வர்கள். கெட்டகார்யங்களைச்செய்வதில் வெட்கமுள்ளவர்கள். ஸ்தைர்யமுள்ளவர்கள் (16-2). ப்ராகல்ப்ய (தார்ஷ்டிக்ய) முள்ள வர்கள். பொறுமையுள்ளவர்கள். தைர்யமுள்ளவர்கள். பாஹ்யந் தர ஶுத்தியுடையவர்கள், துரோகம் செய்யாதவர்கள். அஹங் காரமில்லாதவர்கள் (16-3). ஸாத்விகஶ்ரத்தையுள்ளவர்கள் (17-3). தேவதைகளைக்குறித்து யாகம்செய்பவர்கள். ஆயுள், சித்தஶுத்தி, சரீரஸாமர்த்யம், ஆரோக்யம், ஸுகம், ப்ரீதி, இவைகளை நன்றாய் வ்ருத்திசெய்யும் ரஸவத்தான பசையுடன் கூடிய, வெகுகாலம் சரீரத்திற்கு குணத்தை கொடுக்கும் மனோஹரமான ஆகாரங்களைப் புசிப்பவர்கள் (17-8). பலத்திலாசையில்லாமல் பகவானிடத்தில் மனதைவைத்து, 'இது நம்மால் செய்யப்பட வேண்டியது' என்கிற புத்தியினால் ஶாஸ்த்ரங்களால் சொல்லப்படும் ஸாத்விக யாகத் தைச்செய்பவர்கள் (17-11). பலேச்சை இல்லாதவர்களாய் தேவ தைகள், ப்ராஹ்மணர்கள், குருக்கள் மற்றும், ஞானிகள் இவர்க ளிட பூஜை, பாஹ்யாந்தர ஶுத்தி, மனோவாக்காய கர்மங்களில் ஓரே விதமாயிருக்கை, ப்ரஹ்மசர்யம், அஹிம்ஸா ரூபமான ஶாரீர ஸம்பந்தமான தபஸ்ஸு இவைகளையுடையவர்கள் (17-14).

பிறருக்கு உபத்ரவமுண்டாக்காத, ஸத்யமான, கேட்ப்பதற்கு ப்ரியமான, ஸுககரமான உச்சாரணமுள்ள வேதாத்யயன ரூட மான, வாங்மயமான் ஸாத்விக தபஸ்ஸுடையவர்கள்; மன:

ப்ரஸன்னதை க்லேசாத்வ மில்லாதிருக்கை, மனனம் செய்கை, (கேட்டதை அடிக்கடி நினைத்தல்), பரமாத்மாவிடத்தில் மனதின் இருக்கை, மனஸ்ஸமாதி (மனதில் காமக்ரோதலோபங்களின்மை) இவ்விதங்களான ஸாத்விகங்களான தபஸ்ஸுடையவர்கள் (17-16). கொடுக்கவேணுமென்கிற ஆஸ்திக்ய புத்தியுடன் கூடிய வராய் ஸாஸ்திரங்களில் சொல்லியவாறு விஹிதமான காலத்தில், விஹிதமான தேசத்தில், ஸத்பாத்ரத்தில் தானம் செய்பவர்கள். "நமக்கு உபகாரம் செய்திருப்பதினால் இவருக்குக் கொடுக்க வேண்டும்" என்கிற எண்ணமற்றவர்களாய் ஸாத்விகமான தானம் செய்பவர்கள் (17-20).

பரஸ்பரம் பின்னமான ஸமஸ்த ப்ராணிகளிலும் நியாமகனாய் விளிக்கும் பரமாத்மா ஒருவனேயென்றும், ஸர்வோத்தமனென்றும் பூதங்களைவிட வேருபட்டவனென்றும், நாசமற்றவனென்றும், ஆஸ்ரயபேதத்தினால் தன்னிட நியாமகரூபங்களில் பேதமற்றவன் என்கிற இவ்விதமான ஸாத்விகஜ்ஞானமுடையவர்கள் (18-21). ஸாஸ்த்ரத்தினால் செய்யத்தகுந்ததென்று தம் தம் வர்ணஸ்ரமங்களுக்கு விஹிதமான ஸ்னேஹத்வேஷமூலகங்களல்லாத கர்மங்களை, அபிமானமற்றவர்களாயும், பலத்தில் ஆசையற்றவர்களாயும் செய்பவர்கள் (18-23). ஸாத்விகமான கர்த்ருத்வமுடையவர்கள். பலத்தில் ஆசையைவிட்டு அஹங்கார மற்றவர்களாய், ஸந்தோஷத்துடன் (தம் இஷ்டம் ஸித்திக்குமாயின் ஸந்தோஷப்படாமலும், ஸித்திக்காவிடின் துக்கப்படாமலும்) கர்மங்களைச் செய்பவர்கள் (18-26). ஸ்வர்க்காதி அல்பமான பலன்களுக்கு ஸாதனமான ப்ரவ்ருத்தி தர்மங்களையும், மோக்ஷத்திற்கு ஸாதனமான நிவ்ருத்தி தர்மங்களையும், கர்த்தவ்யாகர்த்தவ்யங்களையும், பரதர்மானுஷ்டானத்தினாலுண்டாகும் பயத்தையும், ஸ்வதர்மத்தினாலுண்டாகும் அபயத்தையும், பந்தத்தையும், மோக்ஷத்தையும் நிஜமாய் அறிவிக்கும் ஸாத்விக புத்தியுடையவர்கள் (18-30). விஹிதவிஷயகமான பக்தியுடன் கூடிக்கொண்டிருக்கும் மன: ப்ராணேந்த்ரிய க்ரியைகளையும், விஹிதமல்லாத விஷயங்களிற் செல்லாமற் செய்துகொள்ளும் ஸாத்விகதைர்யத்தையுமுடையவர்கள் (18-33). எந்தஸுகத்தில் அதிக பரிசயத்தினால் மனது ஸுக

மடையுமோ, துக்கம் நாசமடையுமோ, எது அனுபவிக்கும்போது விஷத்தைப்போலிருந்து கடைசியில் அம்ருதத்தைப்போன்ற தாகுமோ, எது பரமாத்மாவின் ஞான ப்ரஸாதங்களினாலுண்டா கிறதோ அத்தகைய ஸாத்விகஸுகமுடையவர்கள் (18-37).

இத்தகைய தைவீஸம்பத்துடைய ஸாத்விக ஜனங்கள் தம் தம் வர்ணாஶ்ரமங்களுக்கு உசிதமான கர்மங்களால் பரமாத் மாவைப் பூஜித்து ஞானத்தைச் சம்பாதித்துக்கொண்டு (14-6), நித்ய ஸுகத்தைத் தரக்கூடிய மோக்ஷத்தை யடைவார்கள் (16-5).

ராஜஸர்கள் ராஜஸ ப்ரத்தையுடன் கூடியவர்கள். யக்ஷர்களை யும், ராக்ஷஸர்களையும் பூஜிப்பவர்கள் (17-4). அதிகாரமாயும், புளிப்பாயும், உவர்ப்பாயும், (ஓமத்தைப்போல்) அத்யுஷ்ணமாயும், தீக்ஷ்ணமாயும் (கடுகைப்போல்), ஸ்வாபாவிகமாய் ரஸமற்றதாயும், ஸந்தாபகரமான

ராஜஸ சேதனர்கள்.

தாயும் இருக்கும் பதார்த்தங்களைப் புசிப்பவர்கள் (17-9). பல பேதைக்ஷியுள்ளவர்களாய் தம்மிட பெருமையை வெளிப்படுத்து வதற்காகவே யாகம் செய்பவர்கள் (17-12). ஸத்காரம் (மனதிலு லாதரம்) மானம் (வாக்கிலுல் அதிக்கை), பூஜை இவைகள் தமக்கு வேண்டுமென்கிற எண்ணத்துடன் தம்மிடமில்லாத பெரு மையை வெளியிடுவதற்காகவே மூவ்வகையான தபஸ்ஸைச் செய் பவர்கள் (17-18). ப்ரத்யுபகாரமடையவேண்டுமென்றுகிலும், பலனடைய வேண்டுமென்கிற எண்ணத்திலாகிலும், கஷ்டத் துடன் தானம் செய்பவர்கள் (17-21). பலாசையிலுல் அஹங் காரத்திலுல் கர்மங்களைச் செய்பவர்கள் (18-24). விஷயங்களில் ப்ரீதியுடையவர்கள். கர்மபலன்களை அபேக்ஷிப்பவர்கள். பிறருக்கு தொந்தரவு செய்யவேண்டுமென்கிற எண்ணமுள்ளவர்கள். லோப முடையவர்கள். ஶாஸ்த்ரத்தில் சொல்லிய ஶுத்தி (ஶௌசம்) இல்லாதவர்கள். பலஹுண்டாகில் ஸந்தோஷமடைபவர்கள். பல னடையாவிடின் துக்கப்படுபவர்கள் (18-27). தர்மாதர்மங்களையும், கார்யாகார்யங்களையும் ஸம்ஶயத்துடன் கூடியே அறிந்துகொள் ளும் புத்தியுடையவர்கள் (18-31). பலத்தை அபேக்ஷித்து தர் மார்த்த காமங்களையடைவதற்காகச்செய்யும் கார்யங்களில் தைர்ய

முடையவர்கள் (18-34). அனுபவிக்கும்போது அம்ருதத்தைப் போன்றதாயும், முடிவில் விஷத்தைப்போன்றதாயு மிருக்கும் விஷயேந்த்ரிய சம்பந்தத்திலுண்டாகும் ஸுகமுடையவர்கள். இத்தகைய ராஜஸர்கள் நடத்தாத்தினர்கள். துக்கங்களால் கூடிய ஸுகத்தை யடைபவர்கள் (14-18). (இவர்கள் ஸாத்விகர்களைப் போல் வெறும் ஸுகத்தை மாத்திரமாகிலும், தாமஸரைப்போல் வெறும் துக்கத்தை மாத்திரமாகிலுமடைவதில்லை. ஸுகதுக்கங் களைச்சேர்ந்தே யனுபவித்து வருபவர்கள்).

தாமஸர்கள் (தைத்யர்கள்) மனிதஸரீரத்தைப்போல் ஸாதாரண ஜனங்களுக்குத்தோன்றும் அப்ராக்ருதமான ஸரீரத்தைத் தரித்து, பக்தர்களுக்கு அனுக்ரஹிப்பதற்காகவே அவதரித்த, சராசாரத்மகமான ப்ரபஞ்சத்திற்கு முக்ய நியாமகனான ஸ்ரீ கிருஷ்ணனை—அவனிட ஸர்வோத்தமத்வம் முதலிய மஹாமஹிமைகளை அறியாமல் தூஷிப்பவர்கள் (9-11). வீணாசையுடையவர்கள் (இவர்களிட ஆசைகள் பயனற்றதாகும்). பயனற்ற யஜ்ஞாதி கர்மங்களுள்ள வர்கள் (இவர்கள் செய்யும் யஜ்ஞாதி கர்மங்கள் பயனற்றவை களாகும்.) வீண ஞானமுடையவர்கள். (இவர்களிட ஞானம் பலனுக்கு காரணமாவதில்லை) விவேகமற்றவர்கள். மோஹகமான, அஜ்ஞானத்தைப் பிறப்பிக்கக்கூடிய ஆஸுர (ராக்ஷஸ) ப்ரக்ருதியை ஆஸ்ரயித்தவர்கள். (இவர்களை ராக்ஷஸர்கள், தைத்யர் கள்) (9-12). இவர்கள் தம்பம், மதம், அபிமானம் இவைகளை யுடையவர்கள். ஸாதுக்களை துன்பப்படுத்துபவர்கள். நிஷ்டூரமான (கொடுமையான) வார்த்தைகளை யாடுபவர்கள் (16-4) 'விஹித கர் மங்களைச் செய்யவேண்டும், நிஷித்த கர்மங்களைச்செய்யக்கூடாது' என்கிற ஞானமற்றவர்கள். பாஹ்யாந்தர ஸுத்தியற்றவர்கள். நிஜமாடாதவர்கள். பொய் சொல்லுபவர்கள். ஸதாசாரமற்றவர் கள். முத்துச்சிப்பியில் அஞ்ஞானத்திலல் தோன்றும் வெள்ளி யைப்போல் ஜகத்து ப்ரஹ்மத்தில் அஞ்ஞானத்திலல் தோன்று கிறது, ப்ராந்திகல்பிதமானது, மித்யை (பொய்) என்று சொல்லு பவர்கள். இது முத்துச்சிப்பி என்கிற ஞானமுண்டானவுடன் அதில் தோன்றும் வெள்ளி எப்போது (முக்காலத்திலு) மில்லா

தாமஸ சேதனர்கள்

தது என்று எப்படி தெரியவருகிறதோ, அப்படியே ப்ரஹ்ம ஞானம் பிறந்த உடனே ப்ரஹ்மத்தில் தோன்றும் ஜகத்து எப்போது மில்லாததென்று தெரியவருவதென்று சொல்லுபவர்கள். நியாமகனை பரமாத்மா இல்லை என்று சொல்லுபவர்கள். பரஸ்பர ஸம்பூதமல்லாத (ப்ரக்ருதி மஹதஹங்காராதி க்ரமத்திலல் அல்லது யஜ்ஞத்திலல் மழை, மழையிலல் அன்னம், அன்னத்திலல் ப்ராணிகள் இவ்வித க்ரமத்திலல் பிறக்காத) தென்று சொல்லுபவர்கள். ஸதஸத்விலக்ஷணம் (ஸத்யமானதல்ல, அஸத்யமானதல்ல, பிறந்ததல்ல எல்லாவற்றைவிட விலக்ஷணமானது) என்று சொல்லுபவர்கள். காமத்திற்குக் காரணமான அவித்யா கார்யம் (மாறுதல்) என்று சொல்லுபவர்கள் (16-8). துஷ்டமனதுடையவர்கள். இவ்விதமான ஞானமுடையவர்களாய் கோரமான கர்மங்களைச் செய்பவர்கள். ஸாதுக்களுக்கு பகைவர்கள். ஜகத்தை நாசப்படுத்துவதற்காகவே பிறந்தவர்கள் (16-9). டம்பத்திலும் அஹங்காரத்திலும், மதத்திலும் கூடிக்கொண்டு முடிப்பதற்கு முடியாத விஷயங்களை அபேக்ஷிப்பவர்கள். ஸ்வாபாவிகமான மித்யாஞானத்திலல் துஷ்பாஸ்திரத்தில் சொன்ன தூர் விஷயங்களை கிரகித்து, துராசாரமுடையவர்களாய், அல்பஸுகத்திற்காக ப்ரவர்த்திப்பவர்கள் (16-10). மரணமடைகிறவரைக்கும் முடிவற்ற சிந்தையுடையவர்கள். விஷயானுபவங்களே முக்யமென்றறிந்து அவைகளில் மூழ்கியவராயிருப்பவர்கள். ஐஹிக (இவ்வுலக) ஸுகத்தைத் தவிர ஆமுஷ்மிக (மேலுலகத்தின்) ஸுகமில்லை என்று நிச்சயித்து (16-11), ஆசை என்கிற பாசத்திலல் கட்டுபட்டவராய், காமக்ரோதங்களுக்கு முக்யாஸ்ரயராய் திருட்டு முதலிய தூர்வ்யாபாரங்களைச்செய்து, காம்ய விஷயங்களை அனுபவிப்பதற்கு தனத்தை அபேக்ஷிப்பவர்கள் (18-12). நானே ஈச்வரன் என்று சொல்பவர்கள். தம்மைத்தாமே மேலோரென்று அறிந்துகொள்பவர்கள். வினயமற்றவர்கள். தனத்திலும், மானத்திலும், மதத்திலும் கூடிக்கொண்டு, விதியை (கட்டளையை) மீறி டம்பத்திலல் பெயர் கிடைக்கவேண்டுமென்றே யாகங்களைச் செய்பவர்கள் (16-17) அஹங்காரம், பலம், தர்பம், காமம், க்ரோதம் இவைகளையுடையவர்களாய், தன்னிடத்

திலும் பிறரிடத்திலும் நியாமகனையிருக்கும் பரமாத்மாவை தேவ
ஷிப்பவர்கள் (16-18). தாமஸமான ஸ்ரத்தையுடையவர்கள். பூத
ப்ரேதங்களைப் பூஜிப்பவர்கள் (17-4). ஸாஸ்த்ரங்களில்லாத
ராகமங்களால் சொல்லப்பட்ட, தமக்கும் பிறருக்கும் தொந்த
வைத்தரக்கூடிய தபஸ்ஸையும், யாகங்களையும் தம்பத்திரனும்,
அஹங்காரத்திரனும், ஆக்ரஹத்திரனும் செய்பவர்கள். விஷயங்
களில்ஆஸையும் ஆஸக்தியுமுடையவர்கள் (17-5). விவேகமற்றவர்
களாய் ஸரீரத்தில் நியாமகராயிருக்கும் தேவதைகளுக்கும், மற்
றெல்லாவற்றிற்கும் நியாமகனய் ஸரீரத்திலிருக்கும் பரமாத்
மாவை குணமற்றவனென்றும், அல்பகுணமுடையவனென்றும்
தூஷிப்பவர்கள். ஒருயாமத்தை (மூன்றுமணிநேரம்) கடந்த அன்
னத்தையும், ருசிகெட்ட பதார்த்தங்களையும், பழுதையும், எச்சில்
களையும் ப்ரீதியுடன் புசிப்பவர்கள். அன்னதானமற்ற, தக்ஷிணை
யற்ற, மந்த்ரமற்ற, ஸ்ரத்தையற்ற யஜ்ஞத்தைச்செய்பவர்கள்
(17-13). அவிவேக மூலகமான தராக்ரஹத்தில் தாங்கள்
தாக்கப்பட்டுக்கொண்டே பிறரை காசப்படுத்துவதற்காகவே
காயிக வாசிக மானஸிகமான (தாமஸ) தபஸ்ஸைச்செய்பவர்கள்.
அஸுத்தமான தேஸத்திலும், அஸுத்தமான காலத்திலும் ஆத
வின்றி அபமானப்படுத்திக்கொண்டே அபாத்திரர்களுக்கு
(யோக்கிதையற்றவர்களுக்கு) தானம் செய்பவர்கள் (17-22). கார்ய
மான தேகம், ஸிலாகாஷ்டாதிகளால் செய்யப்பட்ட விக்ரஹம்,
இவைகளும் ஜீவர்களுமே ஸகலகுணபூர்ணமான ப்ரஹ்மமென்கிற
புத்தியுள்ளவர்கள். நிஜமான அர்த்தங்களை அறியாமல் யுக்திக்கு
விருத்தமான மித்யையான அர்த்தங்களை விஷயீகரிக்கும் (அறி
யும்) இழிவான பலவுடைய ஞானமுடையவர்கள் (18-22). மூன்
னேரிடும் பாவத்தையும், தனக்குண்டாகும் கெடுதியையும், பிற
ருக்குண்டாகும் தொந்தரவையும் கவனிக்காமல், தன்னிடதிறமை
யையறியாமலே வெருரும் மூடத்தனத்திரல் கர்மங்களைச் செய்
பவர்கள், (18-25). நியமங்களை விட்டவர்கள். விவேகமற்றவர்கள்.
ஜ்ஞானமற்றவர்கள். மூர்க்கர்கள். இழிவான கார்யங்களைச் செய்
பவர்கள். சோம்பலுடையவர்கள். மனதெளர்ப்பல்யமுடையவர்
கள். இன்று செய்ய வேண்டியதை வெருநாள் கழித்துச் செய்

பவர்கள். (18-28). அஜ்ஞானத்திஞல் மூடப்பட்டிருப்பவராகை யால் அதர்மத்தை தர்மமென்று கிரஹிக்கும் புத்தியுள்ளவர்கள். எல்லாவற்றையும் விபரீதமாய் கிரஹிக்கும் புத்தியுள்வர்கள். (18-32). துஷ்டபுத்தியுடையவர்கள். இவ்விதமான தாமஸர்கள் ஸ்ரீ பரமாத்மாவிஞல் அஸுர யோனியில் பிறப்பிக்கப்படுபவர்கள் (16-19). இவ்விதமாக அஸுரயோனிகளை அடிக்கடி யடைந்து கொண்டே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை யடையாமலே அதோ கதியை (வெறும் துக்காநுபவரூபமான அந்தந்தமஸ்ஸை) யடை பவர்கள் (16-20).

ஜட ப்ரகரணம்.

ஜடமான ப்ரக்ருதி ஸத்வராஜஸ்தமோ குணத்மகமானது. மஹத்தத்வம், அஹங்காரதத்வம், ப்ருதிவீ, அப்பு, தேஜஸ்ஸு, வாயு, ஆகாயம், புத்தி, க்ராணம், த்வக், சக்ஷுஸ், ச்ரோத்ரம், ரஸனம், வாக், பாணி, பாதம், பாயு, உபஸ்தம், சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம், என்கிற 23 வகையானது (13-5). இச்சை, தவேஷம், ஸுகம், துக்கம், ஞானத்மகமான மஞவ்ருத்தி, தைர்யம் என்கிற விகாரங்களையுடையது (13-6). பரமாத்மாவின் அதீனமானது. விடவித்துக்கொள்ளுவதற்கு அசக்யமானது (7-14). தேகத்துடன் கூடியிருக்கும் ஜீவர்களுக்கு உபகாரியாய் தேகத்திலிருப்பதிஞல் அதிபூதமென்று அழைக்கப்படுவது (8-4). சதுர்முகரிட ஆயுள் (நூறு வர்ஷங்கள்) ரூபமான பரமாத்மாவின் பகலானதும் தன்னிடத்திலுள்ள ஜகத்தை வெளிப்படுத்துவது, இரவானதும் மற்றும் தன்னிடம் சேர்த்துக்கொள்ளுவது. (8-18). அடிக்கடி பகலிற் பிறந்து இரவில் நாசமடையும் ஜகத்தை தன்னுள் உள்ளது. (8-19). பரமாத்மாவிஞல் நியம்யமாய் ஜகத்தைப்பிறப் பிப்பது (9-10). அனுதியானது. தன்னுலுண்டாயிருக்கும் தேகத் திலிருக்கும் ஜீவர்களுக்கு தன்னுலுண்டாகும் ஸுகதுக்காதிகளை அனுபவிக்கச் செய்வது (13-20). ஜீவர்களை தன்னிட குணங்களின் ஸம்பந்தத்திஞல் இழிவான மற்றும் மேலான யோனிகளில் பிறப் பிப்பது (13-21). நாசமற்ற தேவ மனுஷ்ய தைத்ய ஜீவர்களை தன்னுலுண்டான தேகத்தில் கட்டுப்படுத்துவது. (14-5).

குணத்ரயங்களின் செய்கை.

தோஷமற்ற ப்ரகாசகமான ஸத்வகுணம் நிர்மலமானதாகை யால் ஸுகத்திலும் ஞானத்திலும் தேவ (ஸாத்விக) ஜீவர்களை கட்டுப்படுத்துகிறது. (ஸுகத்தையும் ஞானத்தையும் கொடுப் பது) (14-6). 'இது நமக்கு வேண்டும்' என்கிற எண்ணத்தையும்,

பதார்த்தங்களில் ஆஸக்தியையும் பிறப்பிக்கும் ராகாத்மகமான ரஜோகுணம் கர்மத்திலல் மனுஷ்ய ஜீவர்களை கட்டுப்படுத்துகிறது (14-7). அஜ்ஞானத்தைப் பிறப்பிக்கும் தமோகுணம் ஸமஸ்த ப்ராணிகளுக்கும் மோகத்தை (மித்யா ஞானத்தை) யுண்டாக்குவது. மற்றும் ப்ரமாதம், ஆலஸ்யம், இவைகளால் தைத்யஜீவர்களை கட்டுப்படுத்துவது (14-8). ஸத்வகுணம் ஸுகத்தைக்கொடுப்பது. ரஜோகுணம் கர்மத்தை யுண்டாக்குவது. தமோகுணம் தத்வ ஞானத்தை மறைத்து ப்ரமாதத்தை யுண்டாக்குவது (14-9). ஸகல ப்ராணிகளின் தேகங்களிலும் ஸத்வகுணம் விருத்தியடைந்திருக்கையில் ரஜோகுணதமோகுணங்களை அடக்கி, தன்னிட காரியத்தை ஸாதித்துக்கொள்ளுவது. ரஜோகுணம் விருத்தியடைந்தபோது ஸத்வகுண தமோகுணங்களை யடக்கி தன்னிட காரியத்தை ஸாதித்துக்கொள்ளுவது. தமோகுணம் விருத்தியடைந்திருக்கும்போது ஸத்வகுண ரஜோகுணங்களை யடக்கி தன் காரியத்தை ஸாதித்துக் கொள்ளுவது (14-10). எப்பொழுது இத்தேகத்தில் ஸ்ரோத்ராதிகளில் (காது முதலியவைகளில்) ஸப்தாதிஜ்ஞானரூபமான ப்ரகாஸமும், மற்றும் ஸுகம் முதலியவைகளுண்டாகின்றனவோ அப்பொழுது ஸத்வகுணம் அபிவ்ருத்தமாயிருக்கிறதென்று அறியவேண்டும் (14-11). ரஜோகுணம் தான் அபிவ்ருத்தமாயிருக்கும்போது—ஸத்பாத்திரங்களில் தனதிகளைக் கொடுப்பதற்கு மனதுவராமற்செய்வது. பயனற்ற வேலைகளைச் செய்விப்பது. காம்யகர்மங்களை ஆரம்பிக்கச்செய்வது, மனதுக்கு ஸுகமின்மை, ஸ்ப்ருஹை (அகப்படாத வஸ்துக்களில் வேண்டுமென்கிற ஆசை) இவைகளை யுண்டாக்குவது. (லோபாதிகள் ரஜோகுணத்தின் காரியங்கள்) (14-12). தமோகுணம் விருத்தியடைந்திருக்கும்போது ஸ்ரோத்ராதிகளில் ஸப்தாதிகளின் ஞான முண்டாகாமை, ப்ரயத்னம் செய்யாமை, அனவதானதை (கவனிக்காமை) விபரீதஜ்ஞானம் இவைகளை யுண்டாக்கக்கூடியது. (அஜ்ஞானாதிகள் தமோகுணகார்யங்கள்) (14-13). ஸத்வகுணம் தான் விருத்தியடைந்திருக்கும்போது மரணமடைபவர்களை விஷ்ணு ஞானிகளையும் நிர்மலமான தேகத்தை யடையும்படியாகச் செய்வது (14-14). ரஜோகுணம் தான் விருத்தியடைந்திருக்கும்போது மரணமடைந்தவரை காம்ய கர்மங்களைச்செய்பவர்களிடகுலத்தில் பிறப்பிப்பது. தமோகுணம் தான் விருத்தியடைந்திருந்தபோது மரணமடைந்தவனை தைத்ய குலத்தில் பிறப்பிக்கிறது (14-15). ஸத்வகுணம் ஞானத்தையும் (தத்வ ஞானத்தையும்) ரஜோகுணம் ஸ்வர்க்காதி விஷயங்களில் ஆஸக்தியையும், தமோகுணம் ப்ரமாத மோக அஜ்ஞானங்களையும் உண்டாக்குவது (14-17).

ஸ்ரீ :

|| ஸ்ரீ ராமசந்த்ரோ விஜயதே ||

ஸ்ரீ பகவத்கீதா.

ப்ரதிபத பதார்த்த தாத்பர்ய விசாரங்களுடன் கூடியது

ஸ்ரீ குருப்யோ நமः

த்ருதராஷ்ட்ர உவாச—

(மூலம்)—தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே ஸமவேதா யுயுத்ஸவः||
மாமகாः பாண்டவாஶ்சைவ கிமகுர்வத ஸஞ்ஜய ||1||

(பதவுரை)—தர்மக்ஷேத்ரே, குருக்ஷேத்ரே, ஸமவேதாः, யுயுத்ஸவः| மாமகாः, பாண்டவாः, ச, ஏவ, கிம், அகுர்வத, ஸஞ்ஜய ||

த்ருதராஷ்ட்ரः =	த்ருதராஷ்டர்
உவாச =	கேட்கிறார்.
ஸஞ்ஜய! =	ஸஞ்ஜயனே!
தர்மக்ஷேத்ரே =	தர்மபூமியான
குருக்ஷேத்ரே =	குருக்ஷேத்ரத்தில்
யுயுத்ஸவः (ஸந்தः) ஏவ =	போர்புரிவதற்கு விருப்பமுள்ளவராயே
ஸமவேதாः =	கூடியிருக்கும்
மாமகாः =	என் ஸம்மந்திகளான தார்யோதனாதிகள்
ச =	மற்றும்
பாண்டவாः =	பாண்டு குமாரர்களான தர்மராஜாதி முதலானவர்கள்
கிம் =	என்ன
அகுர்வத =	செய்தார்கள்?

ஸஞ்ஜய உவாச—

(மூ)—த்ருஷ்ட்வா து பாண்டவானீகம் வ்யூடம் துர்யோதனஸ்
ததா (ஆ) ||
ஆசார்ய முப ஸங்கம்ய ராஜா வசன மப்ரவீத் ||2||

(ப. உ.) த்(ஈ)ருஷ்ட்வா, து, பாண்டவானீகம், வ்யூடம், துர்யோதனः, ததா(ஆ) | ஆசார்யம், உப-ஸங்கம்ய, ராஜா, வசனம், அப்ரவீத் ||

ஸஞ்ஜய: = ஸஞ்ஜயன்
உவாச = சொல்லுகிறான்
ததா(ஓ) = அச்சமயத்தில்
ராஜா = அரசனை
துர்யோதன: = துர்யோதனன்
வ்யூடம் = அணிவகுக்கப் பட்ட
பாண்டவ- = பாண்டவரின்
அனீகம் = படையை
த்ருஷ்ட்வா } = கண்ட
து } உடனே
ஆசார்யம் = த்ரோணசார் யரை
உபஸங்கம்ய = அடைந்து
வசனம் = வார்த்தையை
அப்ரவீத் = ஓதினன்.

(மூ)—பஶ்யைதாம் பாண்டு புத்ராணு மாசார்ய மஹதீம் சமூம்||
வ்யூடாம் த்ருபத புத்ரேண தவ ஶிஷ்யேண தீ(ஈ)மதா ||3||

(ப. உ.) பஶ்ய, ஏதாம், பாண்டு-புத்ராணும், ஆசார்ய, மஹதீம், சமூம்| வ்யூடாம், த்ருபத-புத்ரேண, தவ, ஶிஷ்யேண, தீ(ஈ)மதா ||

ஆசார்ய = த்ரோண சார்யரே!
தவ = உம்மிட
தீ(ஈ)மதா = புத்திமான
ஶிஷ்யேண = சீடனை
த்ருபத-புத்ரேண = த்ருபத குமாரனை
பஶ்ய = பாரும்.
ஏதாம் = இந்த
சமூம் = படையை
வ்யூடாம் = அணிவகுக் கப்பட்டிருக் கும்
பாண்டு-புத்ரா ணும் } = பாண்டுகுமா ரர்களின்
மஹதீம் = பெரிய தான

(மூ)—அத்ர ஶூரா மஹேஷ்வாஸா: பீமார்ஜுன ஸமா யுதி(யி) ||
யுயுதா(யா)னோ விராடஶ் ச த்ருபதஶ் ச மஹாரத: ||4||

(ப. உ.) அத்ர, ஶூரா:, மஹேஷ்வாஸா:, பீமார்ஜுனஸமா:, யுதி (யி)| யுயுதா(யா)ன:, விராட:, ச, த்ருபத:, ச, மஹாரத: (஥:) ||

(எவரெவரெனின்)
அத்ர = இப்படையில்
மஹேஷ் வாஸா: } = பெரியவில்லு களையுடைய
யுதி(யி) = யுத்தத்தில்
பீமார்ஜுன ஸமா: } = பீமார்ஜுனர் களுக்குச் சமானமான
ஶூரா: = வீரர்கள்
ஸந்தி = இருக்கிறார் கள்.
யுயுதான: = ஸாத்யகி
ச = மற்றும்
விராட: = விராட மஹரா ராஜன்
மஹாரத: = மஹாரதி(யி) கனை
த்ருபத: = த்ருபத மஹரா ராஜன்
ச = மற்றும்

(மூ)—த்ருஷ்டகேதுஶ் சேகிதான: காஶிராஜஶ் ச வீர்யவான்||
புருஜித் குந்திபோ(ஜோ)ஜஶ்ச ஶைப்யஶ்ச நரபுங்கவ: ||5||

(ப. உ.) த்ருஷ்டகேது:, சேகிதான:, காஶிராஜ:, ச, வீர்யவான் | புருஜித், குந்திபோ(ஜோ)ஜ:, ச, ஶைப்ய:, ச, நரபுங்கவ: ||

த்ருஷ்டகேது:	= த்(தீ)ருஷ்ட கேது ராஜர்
சேகிதான:	= சேகிதானர்
ச	= மற்றும்
வீர்யவான்	= பலிஷ்ட ரான
காஶிராஜ:	= காஶிராஜர்
புருஜித்	= புருஜித்து ராஜர்
குந்திபோஜ:	= குந்திபோஜர்
ச	= மற்றும்
நரபுங்கவ:	= மனிதஶ் ரேஷ்டரான
ஶைப்ய:	= ஶைப்யர்
ச	= மற்றும்

(மூ)—யுதா(ஶ)மன்யுஶ்ச விக்ராந்த உத்தமௌஜாஶ்ச வீர்யவான் ||
ஸௌபத்ரோ த்ரௌபதே(தே)யாஶ்ச ஸர்வ ஏவ மஹாரதா:
(ஶ:) ||6||

(ப. உ.) யுதா(ஶ)மன்யு:, ச, விக்ராந்த:, உத்தமௌஜா:, ச, வீர்யவான்| ஸௌபத்ர:, த்ரௌபதேயா:, ச, ஸர்வே, ஏவ, மஹாரதா: ||

விக்ராந்த:	= பராக்ரமமுள்ள
யுதா(ஶ) மன்யு:	= யுதாமன்யு
ச	= மற்றும்
வீர்யவான்	= பலிஷ்டரான
உத்த மௌஜா:	= உத்தமௌஜர்
ச	= மற்றும்
ஸௌபத்ர:	= ஸௌபத்ர குமாரனை
அபிமன்யு	
ச	= மற்றும்
த்ரௌப தேயா:	= த்ரௌபதீ குமாரர்களான ப்ரதிவிந்த்யாதிகள்
(ஏதே) ஸர்வே ஏவ	= இவர்களெல்லோரும்
மஹாரதா:	= மஹாரதிகர்கள்.

(மூ)—அஸ்மாகந்து விஶிஷ்டா யே தான்னிபோ(போ)த(ஶ) த்விஜோத்தம ||
நாயகா மம ஸைன்யஸ்ய ஸம்ஜ்ஞார்த்தம் தான் ப்ரவீமி தே ||7||

(ப. உ.) அஸ்மாகம், து, விஶிஷ்டா:, யே, தான், நிபோத(ஶ), த்விஜோத்தம| நாயகா:, மம, ஸைன்யஸ்ய, ஸம்ஜ்ஞார்த்தம், தான், ப்ரவீமி, தே||

த்விஜோத்தம = ப்ராஹ்மண ஸ்ரேஷ்டரே!
அஸ்மாகம் (மத்யே) து = எங்களிலோ
யே = எவரெவர்
விசிஷ்டா: = முக்யமான வர்களோ
தான் = அவர்களை
நிபோத(ய) = தெரிந்து கொள்ளும்.

தே = உமக்கு
ஸம்ஜ்ஞார்த்தம் = தெரிவதற்காக
மம = என்னுடைய
ஸைன்யஸ்ய = படைக்கு (யார்)
நாயகா: = சேனாபதிகளோ
தான் = அவர்களை
ப்ரவீமி = சொல்லுகிறேன்.

(மூ)—ப(ஹ)வான் பீஷ்மஸ்ச கர்ணஸ்ச க்ருபஸ்ச ஸமிதிஞ்ஜய:|
அஸ்வத்தா((யா)மா விகர்ணஸ்ச ஸௌமதத்திஸ் ததை(ய)
வ ச ||8||

(ப. உ.) ப(ஹ)வான், பீஷ்ம:, ச, கர்ண:, ச, க்ருப:, ச, ஸமிதிஞ்ஜய:|
அஸ்வத்தா(யா)மா, விகர்ண:, ச, ஸௌமதத்தி:, ததா(யா), ஏவ, ச ||

ப(ஹ)வான் = தாங்கள்
ச = மற்றும்
பீஷ்ம: = பிதாமஹரான பீஷ்மாசார்யர்
ச = மற்றும்
கர்ண: = கர்ணன்
ச = மற்றும்
ஸமிதிஞ்ஜய: = யுத்தத்தில் ஜயசீலனை
க்ருப: = க்ருபாசார்யர்

ச = மற்றும்
அஸ்வத்தாமா = அஸ்வத்தாமாசார்யர்
ச = மற்றும்
விகர்ண: = விகர்ணன்
ததா(யா) ஏவ = அப்படியே
ஸௌமதத்தி: = ஸோமதத்த குமாரனை பூ(ஹ)ரிஸ்ரவஸ்

(மூ)—அன்யே ச பஹவஸ்ஶூரா மதர்த்தே த்யக்த ஜீவிதா:|
நாநா ஶஸ்த்ர ப்ரஹரணாஸ்ஸர்வே யுத்த(ய) விஶாரதா: ||9||

(ப. உ.) அன்யே, ச, பஹவ:, ஶூரா:, மதர்த்தே, த்யக்தஜீவிதா:|
நாநாஶஸ்த்ர-ப்ரஹரணா:, ஸர்வே, யுத்தவிஶாரதா: ||

ச = மற்றும்
அன்யே = இதரர்களான
ப(ஹ)வ: = அனேகர்களான
ஶூரா: = ஶூரர்கள்

மதர்த்தே (யே) = எனக்காக
த்யக்த ஜீவிதா: = ப்ராணங்களை துறப்பதற்கு

ஸித்தராயிருக்கிறார்கள்.

(ஏதே) ஸர்வே = இவர்களெல்லோரும்

நாநா- = அனேக விதங்களான

ஸஸ்த்ர- = ஸஸ்த்ரங்கள்

ப்ரஹரணா: = அஸ்த்ரங்கள், இவைகளோடு கூடியிருப்பவர்கள்

யுத்த- = போரில்

விஸாரதா: (ஜ்ஞா:) = புலவர்கள்.

(மூ)—அபர்யாப்தம் தத(ஜ்)ஸ்மாகம் பலம் பீஷ்மாபிரக்ஷிதம்||
பர்யாப்தம் த்வித(ஜ்) மேதேஷாம் பலம் பீமாபிரக்ஷிதம் ||10||

(ப. உ.) அபர்யாப்தம், தத், அஸ்மாகம், ப(வ)லம், பீஷ்மாபி(ஹி)ரக்ஷிதம் | பர்யாப்தம், து, இதம், ஏதேஷாம், ப(வ)லம், பீமாபிரக்ஷிதம் ||

பீஷ்ம- = பீஷ்மாசார்யரால்

அபிரக்ஷிதம் = ரக்ஷிக்கப்பட்ட

அஸ்மாகம் = எங்களுடைய

தத் = அந்த

ப(வ)லம் = படை

அபர்யாப்தம் = பாண்டவர் களை வெல்லுவதற்குத் திறமையற்றது.

பீம- = பீமனால்

அபிரக்ஷிதம் = ரக்ஷிக்கப்பட்ட

ஏதேஷாம் = இப்பாண்டவர்களின்

இதம் = இந்த

ப(வ)லம் = படை

பர்யாப்தம் } = நம் படையை வெல்லுவதற்குத் திறமையுள்ளதே.
து }

(மூ)—அயனேஷு ச ஸர்வேஷு யதா(ஜ்ஞா)பா(ஹ்ரு)கமவஸ்திதா:||
பீஷ்மமேவாபி(ஹி)ரக்ஷந்து ப(ஹ)வந்த: ஸர்வ ஏவ ஹி ||11||

(ப. உ.) அயனேஷு, ச, ஸர்வேஷு, யதா(ஜ்ஞா)பா(ஹ்ரு)கம், அவஸ்திதா:| பீஷ்மம், ஏவ, அபி(ஹி)ரக்ஷந்து, ப(ஹ) வந்த:, ஸர்வே, ஏவ, ஹி ||

ஹி = பாண்டவர்களின் படை திறமையுள்ளதாயிருப்பதினால்

ஸர்வேஷு = ஸமஸ்தமான

அயனேஷு = அணிவகுப்புகளினுட்புகும் மார்க்கங்களில்

யதா(ஜ்ஞா) பா(ஹ்ரு)கம் } = உங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற படிக்கு

அவஸ்தி(ஜ்தி) தா (ஸந்த:) } = நின்றவராய்

பீஷ்மம் ஏவ } = பீஷ்மாசார்யரையே

அபிரக்ஷந்து = ரக்ஷியுங்கள்.

(மூ)—தஸ்ய ஸஞ்ஜனயன் ஹர்ஷம் குருவ்ருத்த:(ய:) பிதாமஹ:||
ஸிம்ஹநாதம் வினத்யோச்சை: ஶங்க(வ)ம் த(ஒ)த்(யௌ)மௌள
ப்ரதாபவான் ||12||

(ப. உ.) தஸ்ய, ஸஞ்ஜனயன், ஹர்ஷம், குருவ்ருத்த: (ய:), பிதாமஹ:| ஸிம்ஹநாதம், வினத்ய, உச்சை:, ஶங்கம், தத்மௌள, ப்ரதாபவான்||

குரு- = கௌரவர்களில்
வ்ருத்த: (ய:) = கிழவரான
ப்ரதாப வான் = பராக்ரம முடையவரான (வீரரான)
பிதாமஹ: = பீஷ்மாசார்யர்
தஸ்ய = அந்த துர் யோதனனுக்கு
ஹர்ஷம் = உத்ஸாஹத்தை
ஸஞ்ஜனயன் = உண்டாக்கிக் கொண்டே
உச்சை: = உரக்க
ஸிம்ஹ- = சிங்கத்தைப் போல்
நாதம் = கர்ஜனை
வினத்ய = செய்து
ஶங்க(வ)ம் = ஶங்கை
த(ஒ)த்(யௌ)மௌள = ஊதினர்.

(மூ)—ததஶ்ஶங்கா(வா)ஶ்ச பே(லே)ர்யஶ்ச பணவானக
கோமுகா:(வா:)||

ஸஹஸைவாப்(ஹ்)ய ஹன்யந்த ஸ ஶப்தஸ்துமுலோ-
ப(ஹ)வத் ||13||

(ப. உ.) தத:, ஶங்கா(வா):, ச, பே(லே)ர்ய:, ச, பணவானககோமுகா:| ஸஹஸா, ஏவ, அப்(ஹ்)யஹன்யந்த, ஸ:, ஶப்த:, துமுல:, அப(ஹ)வத்||

தத: = பீஷ்மாசார்யர் ஶங்கூதிய பிறகு
ஶங்கா: (வா:) = ஶங்குகளும்
ச = மற்றும்
பே(லே)ர்ய: = பேரிகைகளும்
ச = மற்றும்
பணவ- = தப்பட்டை களும்
ஆனக- = போர்ப்பரை களும்
கோமுகா: = கோமுகை களும் [லேயே
ஸஹஸா ஏவ = ஒரேகாலத்தி
அப்(ஹ்)ய ஹன்யந்த = வாசிக்கப் பட்டன.
ஸ: = அந்த
ஶப்த: = ஶப்தம்
துமுல: = ஸகல தேஶங் களிலும் பறவியதாக
அப(ஹ)வத் = ஆயிற்று.

(மூ)—தத: ஶ்வேதைர் ஹயைர் யுக்தே மஹதி ஸ்யந்தனே ஸ்தி
(யி)தௌ ||

மாதவ: பாண்டவஶ்சைவ தி(தி)வ்யௌ ஶங்கௌ(வௌ)
ப்ரதத்(ய்)மது: ||14||

(ப. உ.) தத:, ஶ்வேதை:, ஹயை:, யுக்தே, மஹதி, ஸ்யந்தனே, ஸ்தி தௌ| மாதவ:, பாண்டவ:, ச, ஏவ, தி(தி)வ்யௌ, ஶங்கௌ, ப்ரதத் (ய்) மது:||

ததः = துர்யோதனனின்
படையில் ஸங்க
த்வனியான பிறகு
மாதவः = ஸ்ரீகிருஷ்ணன்
ச = மற்றும்
பாண்டவः = அர்ஜுனன்
(ஏதௌ) = இவ்விருவரும்
ச்வேதைः = வெள்ளையான
ஹயை: = குதிரைகளோடு
யுக்தே = கூடிய
மஹதி = மேலான
ஸ்யந்தனே = ரதத்தில்
ஸ்திதௌ, ஏவ = உட்கார்ந்த
வராயே
திவ்யௌ = ச்ரேஷ்ட
மான
ஸங்கௌ(வௌ) = ஸங்குகளை
ப்ரதத்(ய்)மது: = ஊதினார்கள்

(மூ)—பாஞ்சஜன்யம் ஹ்ருஷீகேஸோ தேவதத்தம் தனஞ்ஜயः||
பௌண்ட்ரம் தத்(ய்)மௌ மஹா ஸங்கம் பீமகர்மா
வ்ருகோதரः ||15||

(ப. உ.) பாஞ்சஜன்யம், ஹ்ருஷீகேஸः, தேவத(ஃ)த்தம், தனஞ்ஜயः | பௌண்ட்ரம், தத்(ய்)மௌ, மஹாஸங்கம், பீமகர்மா, வ்ருகோதரः ||

ஹ்ருஷீகேஸः = ஸ்ரீகிருஷ்ணன்
பாஞ்சஜன்யம் = பாஞ்சஜன்ய
மென்னும்
ஸங்கையும்
தனஞ்ஜயः = அர்ஜுனன்
தேவதத்தம் = தேவதத்த
மென்னும்
ஸங்கையும்
பீமகர்மா = பயங்கரமான
கார்யங்களைச்
செய்யும்
வ்ருகோதரः = பீமஸேனர்
பௌண்ட்ரம் = பௌண்ட்ர
மென்னும் [யும்
மஹாஸங்கம் = பெரியஸங்கை
தத்(ய்)மௌ = ஊதினர்கள்.

(மூ)—அனந்தவிஜயம் ராஜா குந்தீபுத்ரோ யுதி(யி)ஷ்டிரः||
நகுலஸ்ஸஹதேவஸ்ச ஸுகோ(வோ)ஷ மணிபுஷ்பகௌ||16||

(ப. உ.) அனந்தவிஜயம், ராஜா, குந்தீபுத்ரः, யுதி(யி)ஷ்டிரः| நகுலः, ஸஹதேவः, ச, ஸுகோ(வொ)ஷ-மணிபுஷ்பகௌ ||

குந்தீபுத்ரः = குந்தீ குமார
ரான
ராஜா = அரசரான
யுதிஷ்டிரः = தர்மராஜர்
அனந்தவிஜயம் = அனந்த
விஜயமென்
னும் பெய
ருடைய ஸங்
கையும்
நகுலः = நகுலன்
ச = மற்றும்
ஸஹதேவः = ஸஹதேவன்
ஸுகோ(வோ)ஷ மணிபுஷ்பகௌ = ஸுகோஷம் மணி புஷ்பகம் என்னும் பெயருடைய ஸங்குகளையும் (ஊதினர்கள்)

(மூ)—காஶ்யஶ்ச பரமேஷ்வாஸ: ஶிக(ண்)ண்டீ ச மஹாரத:||
த்ருஷ்டத்யும்ன விராடஶ்ச ஸாத்யகிஶ்சாபராஜித:|| 17||

(ப: உ:) காஶ்ய:, ச, பரமேஷ்வாஸ:, ஶிகண்டீ, ச, மஹாரத(ழ):|
த்ருஷ்டத்யும்ன:, விராட:, ச, ஸாத்யகி:, ச, அபராஜித:||

பரமேஷ்வாஸ: = உத்தமமான வில்லையுடைய
காஶ்ய: = காசிராஜன்
ச = மற்றும்
மஹாரத:(ழ:) = மஹாரதிகனை
ஶிகண்டீ = ஶிகண்டி
ச = மற்றும்
த்ருஷ்டத்யும்ன: = த்ருஷ்டத்யும்னன்
ச = மற்றும்
விராட: = விராடமஹாராஜன்
ச = மற்றும்
அபராஜித: = பிரரால் ஜயிக்கப்படுவதற்கு ஸாத்யமில்லாத
ஸாத்யகி: = ஸாத்யகி

(மூ)—த்ருபதோ த்ரௌபதேயாஶ்ச ஸர்வஶ: ப்ருதிவீபதே||
ஸௌபத்ராஶ்ச மஹாபாஹு: ஶங்கான் தத்(ஶ்)மு: ப்ருதக் ப்ருதக் ||18||

(ப. உ.) த்ருபத:, த்ரௌபதேயா:, ச, ஸர்வஶ:, ப்ருதிவீபதே| ஸௌபத்ர:, ச, மஹாபாஹு:, ஶங்கான், தத்மு:, ப்ருதக், ப்ருதக்||

ப்ருதிவீபதே = த்ருதராஷ்ட்ரரே!
த்ருபத: = த்ருபத மஹாராஜர்
ஸர்வஶ: = ஸமஸ்தரான
த்ரௌபதேயா: = த்ரௌபதீ குமாரர்கள்
ச = மற்றும்
மஹாபாஹு: = அதிக புஜபலமுள்ள
ஸௌபத்ர(ல)த்ர: = ஸுபத்ரா குமாரனான அபிமன்யு இவர்கள்
ப்ருதக், ப்ருதக் = வெவ்வேறாக
ஶங்கா(வா)ன் = ஶங்குகளை
தத்(ஶ்)மு: = ஊதினர்கள்.

(மூ)—ஸகோ(வோ)ஷோ தா(ர்)ர்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயானி
வ்யதா(தா)ரயத்||
நப(ஹ)ஶ்ச ப்ருதிவீம் சைவ துமுலோ வ்யனு நாதயன் ||19||

(ப. உ.) ஸ:, கோ(வோ)ஷ:, தார்தராஷ்ட்ராணாம், ஹ்ருதயானி, வ்யதாரயத் | நப:(ஹ:), ச, ப்ருதிவீம், ச, ஏவ, துமுல:, வ்யனுநாதயன்||

ச	= மற்றும்
ஸ:	= அந்த
துமுல:	= வ்யாப்த மான
கோ(வோ)ஷ:	= ஶப்தம்
நப:(ஹ:)	= ஆகாயத்தை யும்
ச	= மற்றும்
ப்ருதி(யி)வீம்	= பூமியையும்
வ்யனுநாத யன் ஏவ	= எதிரொலி யையுண்டாக் கியதாகியே
தார்த்தரா ஷ்ட்ராணம்	= த்ருதராஷ் ட்ர குமாரர் களின்
ஹ்ருதயானி	= மனதுகளை
வ்யதாரயத்	= பிளந்தது. (நாங்கள் நாசமடை வோமென் னும் பயத் தை யுண் டாக்கிற்று.)

அவதரணிகை—இவ்விதமாய் இரு படைகளின் செய்கை களைச் சொல்லி, நான்கு ஶ்லோகங்களில் தத்வோபதேஶத்திற் குக் காரணமான அர்ஜுனனின் செய்கைகளைச் சொல்லுகிறார்.

(மூ)—அத(ய) வ்யவஸ்தி(யி)தான் த்ருஷ்ட்வா தா(யா)ர்தராஷ்ட் ரான் கபித்(ய்)வஜ:||

ப்ரவ்ருத்தே ஶஸ்த்ர ஸம்பாதே தனுருத்யம்ய பாண்டவ: ||20||

ஹ்ருஷீகேஶம் தது(வா) வாக்ய மித மாஹ மஹீபதே||

(ப. உ.) அத(ய), வ்யவஸ்தி(யி)தான், த்ருஷ்டட்வா, தார்தராஷ்ட் ரான், கபித்வஜ: | ப்ரவ்ருத்தே, ஶஸ்த்ரஸம்பாதே, த(ய)னு:, உத்யம்ய, பாண்டவ:|| ஹ்ருஷீகேஶம், தது, வாக்யம், இதம், ஆஹ, மஹீபதே |

மஹீபதே	= த்ருதராஷ்ட் ரரே!
அத(ய)	= பிறகு
கபித்(ய்)வஜ:	= வானரத்தை த்வஜத்தி லுள்ள
பாண்டவ:	= அர்ஜுனன்
வ்யவஸ்தி தான்	= யுத்தத்திற்கு ஸித்தமா யிருக்கும்
தார்தராஷ்ட் ரான்	= த்ருதராஷ்ட் ரரின் குமாரர் களை
த்ருஷ்ட்வா	= பார்த்து
ததா(வா)	= அப்பொழுது
ஶஸ்த்ர-	= பாணத்தை
ஸம்பாதே	= விடும் ஸம யம்
ப்ரவ்ருத்தே	= ஸமீபிக்கவே
தனு:	= வில்லை
உத்யம்ய	= மேலுக் கெடுத்துக் கொண்டு
ஹ்ருஷீகே ஶம்(ப்ரதி)	= ஶ்ரீ கிருஷ்ண னைக்குறித்து
இதம்	= இந்த
வாக்யம்	= வார்த்தை யை
ஆஹ	= சொன்னான்.

அர்ஜுன உவாச—

(மூ)—ஸேனயோருபயோர்மத்யே ரதம் ஸ்தாபய மேச்யுத ||21||

யாவதேதான்னிரீக்ஷேஹம் யோத்து(யு)காமானவஸ்திதான்||

கைர்மயா ஸஹ யோத்த(யு)வ்ய மஸ்மின் ரணஸமுத்யமே||22||

யோத்ஸ்யமானு னவேக்ஷேஹம் ய ஏதேத்ர ஸமாக(ஹ)தா:||

தார்தராஷ்ட்ரஸ்ய துர்புத்தே(யே)ர்யுத்தே ப்ரியசிகீர்ஷவ: ||23||

(ப. உ.) ஸேனயோ:, உபயோ:, மத்யே, ரத(ழ)ம், ஸ்தாபய, மே, அச்யுத || யாவத், ஏதான், நிரீக்ஷே, அஹம், யோத்துகாமான், அவஸ்தி(யி)தான்| கை:, மயா, ஸஹ, யோத்தவ்யம், அஸ்மின், ரணஸமுத்யமே|| யோத்ஸ்யமானுன், அவேக்ஷே, அஹம், யே, ஏதே, அத்ர, ஸமாக(ஹ)தா:| தார்(யா)தராஷ்ட்ரஸ்ய, துர்புத்தே:, யுத்தே, ப்ரியசிகீர்ஷவ:||

அர்ஜுன:	= அர்ஜுனன்
உவாச	= சொல்லுகிறான்.
அச்யுத	= ஸ்ரீ கிருஷ்ண!
அஹம்	= நான்
யோத்து காமான்	= போர் செய்வதற்கு ஆசையுள்ள
அவஸ்திதான்	= போருக்குத் தயாராய் நின்றிருக்கும்
ஏதான்	= இவர்களை
யாவத்	= என்னரம்
நிரீக்ஷே	= காணுவே னே
தாவத்	= அன்னேரம்
உபயோ:, ஸேனயோ:	= இரு படைகளின்
மத்யே	= நடுவில்
மே	= என்னுடைய
ரதம்	= ரதத்தை
ஸ்தா(ஸ்தா)பய	= நிறுத்து.
யுத்தே	= போரில்
துர்புத்தே(யே):	= கெட்ட எண்ணமுடைய
தார்தராஷ்ட்ரஸ்ய	= துர்யோதனனிட
ப்ரியசிகீர்ஷவ: (ஸந்த:)	= ப்ரியத்தைச் செய்வதற்கு ஆசையுடையவராய்
ஏதே	= இந்த
யே	= எவரெவர்
அத்ர	= இப்படையில்
ஸமாகதா:	= வந்திருக்கிறார்களோ
அஸ்மின்	= இந்த
ரணஸமுத்யமே	= யுத்தவ்யாபாரத்தில்
மயா	= என்னால்
கை: ஸஹ	= எவரெவர்களோடு
யோத்தவ்யம்	= போர் செய்ய

யோத்ஸ்யமா ணான்	= வேண்டுமோ = போர் செய் யத் தயாரா யிருக்கும்	(தான்) அஹம் அவேக்ஷே	= அவர்களை = நான் = பார்க்கி றேன்.

ஸஞ்ஜய உவாச—

(மூ)—ஏவமுக்தோ ஹ்ருஷீகேஶோ கு(டா)டாகேஶேன பாரத||
ஸேனயோருபயோர் மத்யே ஸ்தா(பி)பயித்வா ரதோத்தமம்||24||
பீஷ்மத்ரோண ப்ரமுக(வ)தः ஸர்வேஷாஞ்ச மஹீக்ஷிதாம்||
உவாச பார்த்த பஶ்யைதான் ஸமவேதான் குரூனிதி ||25||

(ப. உ.) ஏவம், உக்தः, ஹ்ருஷீகேஶः, குடாகேஶேன, பா(ஹா)ரத| ஸேனயோः, உபயோः, மத்யே, ஸ்தாபயித்வா, ரதோத்தமம்|| பீஷ்ம-த்ரோண-ப்ரமுக(வ)தः, ஸர்வேஷாம், ச, மஹீக்ஷிதாம் | உவாச, பார்த்த, பஶ்ய, ஏதான், ஸமவேதான், குரூன், இதி||

ஸஞ்ஜயः	= ஸஞ்ஜயன்	த்ரோண-	= த்ரோண சார்யர்
உவாச	= சொல்லு கிறான்.	ப்ரமுக(வ)தः	= இவர்களிட எதிரிலும்,
பா(ஹா)ரத	= த்ருதராஷ்ட் ரரே !	ச	= மற்றும்
குடாகேஶேன	= அர்ஜுன னால்	ஸர்வேஷாம்	= ஸமஸ்தான
ஏவம்	= இவ்விதமாக	மஹீக்ஷிதாம்	= ராஜர்களின்
உக்தः	= சொல்லிக் கொள்ளப் பட்ட	(ப்ரமுகதः)	= (எதிரிலும்)
ஹ்ருஷீகேஶः	= இந்திரிய ப்ரேரகனென ஸ்ரீ கிருஷ் ணன்	ரதோத்தமம்	= மேலான ரதத்தை
உபயோः- ஸேனயோः	= இருபடைக ளின்	ஸ்தாபயித்வா	= நிறுத்தி,
மத்யே	= நடுவில் [யர்	பார்த்த!	= அர்ஜுனனே!
பீஷ்ம-	= பீஷ்மாசார்	ஏதான்	= இந்த (இங்கு)
		ஸமவேதான்	= கூடியிருக்கும்
		ஏதான்	= இந்த
		குரூன்	= கௌரவர்களை
		பஶ்ய	= பார்
		இதி	= என்று
		உவாச.	= சொன்னான்.

(சூ)—தத்ராபச்யத் ஸ்திதான் பார்த்த: பித்ரூனத(யி) பிதாமஹான்||

ஆசார்யான் மாதுலான் ப்(ஹ்ரீ)ராத்ரூன் புத்ரான் பௌத்ரான்

ஸகீ(வீ)ம்ஸ்ததா(யா) ||26||

ச்வஸுரான் ஸுஹ்ருத(ஜ)ச்சைவ ஸேனயோருபய(ஹ)

யோரபி ||

(ப. உ.) தத்ர, அபச்யத், ஸ்திதான், பார்த்த:, பித்ரூன், அத(யி), பிதாமஹான் | ஆசார்யான், மாதுலான், ப்(ஹ்ரீ)ராத்ரூன், புத்ரான், பௌத்ரான், ஸகீ(வீ)ன், ததா(யா)|| ச்வஸுரான், ஸுஹ்ருத:, ச,* ஏவ, ஸேனயோ:, உப(ஹ)யோ:, அபி |

அத (யி) = பிறகு
பார்த்த: = அர்ஜுனன்
தத்ர = அந்த
உபயோ: } = இருபடை
ஸேனயோ: } களிலும்
அபி }
ஸ்தி(யி)தான் = இருக்கும்
பித்ரூன் = தந்தைக்குச் சமானரான பூரீச்வர வஸ்ஸுக்கு முதலான வர்களையும்
பிதாமஹான் = பீஷ்மாதி களையும்
ஆசார்யான் = குருக்களான த்ரோணாசார்யர் முதலான வர்களையும்
மாதுலான் = ஸல்யன் முதலான மாமன் மார்களையும்
ப்(ஹ்ரீ)ராத்ரூன் = பீமதுர்யோதனதி அண்ணன் தம்பி மார்களையும்
புத்ரான் = அபிமன்யு லக்ஷ்மணதிகளையும்
பௌத்ரான் = லக்ஷ்மணனின் குமாரர் முதலியோர்களையும்
ததா(யா) = அப்படியே
ஸகீ(வீ)ன் = அச்வத்தாமா முதலிய நேசர் களையும்
ச்வஸுரான் = த்ருபதர் முதலிய மாமனர்களையும்
ச = மற்றும்
ஸுஹ்ருத: = க்ருதவர்மாதி களையும்
அபச்யத் = பார்த்தான்.

* 'ஏவ' என்கிற பதத்திற்கு மேல் பரிலோகத்தில் அன்வயம்.

(மூ)—தான் ஸமீக்ஷ்ய ஸ கௌந்தேய: ஸர்வான் பந்தூனவஸ்தி
தான் ||27||

க்ருபயா பரயாவிஷ்டோ விஷீதன் னித மப்ரவீத் ||

(ப. உ.) தான், ஸமீக்ஷ்ய, ஸ:, கௌந்தேய:, ஸர்வான், பந்தூன், அவஸ்
திதான் || க்ருபயா, பரயா, ஆவிஷ்ட:, விஷீதன், இதம், அப்ரவீத் |

ஸ:	= அந்த	க்ருபயா	= தயையுடன்
கௌந்தேய:	= அர்ஜுனன்	ஆவிஷ்ட: (ஸன்)	= கூடியவனாய்
அவஸ்திதான்	= போருக்கு நின்றிருக்கும்	விஷீதன்	= துக்கமுள்ளவனாய்
ஸர்வான்	= ஸமஸ்தான	இதம்	= மேற் சொல்லப் போகும் வார்த்தையை
தான்	= அந்த	அப்ரவீத்	= ஆடினான்.
பந்தூன்	= பந்துக்களை		
ஸமீக்ஷ்ய ஏவ	= கண்ட உடனே		
பரயா	= அதிகமான		

அர்ஜுன உவாச—

(மூ)—த்ருஷ்ட்வேமம் ஸ்வஜனம் கிருஷ்ண யுயுத்ஸூம் ஸமுபஸ்தி
(யி)தம் ||28||

ஸீத(ஓ)ந்தி மம காத்ராணி முக(வ)ஞ்ச பரிஶுஷ்யதி |
வேபது(யூ)ஶ்ச ஶரீரே மே ரோமஹர்ஷஶ்ச ஜாயதே ||29||

(ப. உ.) த்ருஷ்ட்வா, இமம், ஸ்வஜனம், க்ருஷ்ண, யுயுத்ஸூம், ஸமு
பஸ்திதம் || ஸீதந்தி, மம, கா(ஸா)த்ராணி, முகம், ச, பரிஶுஷ்யதி |
வேபது: (யூ:), ச, ஶரீரே, மே, ரோமஹர்ஷ:, ச, ஜாயதே ||

அர்ஜுன:	= அர்ஜுனன்	இமம்	= இந்த
உவாச	= சொல்லு கிறான்.	ஸ்வஜனம்	= பந்துக்களை
கிருஷ்ண	= ஓ கிருஷ்ண!	த்ருஷ்ட்வா	= கண்டு
யுயுத்ஸூம்	= போர் புரியும் விருப்பமுள்ள	மம	= என்னிட
ஸமுபஸ்திதம்	= போருக்கு வேண்டிய பதார்த்தங் களுடன் வந்திருக்கும்	காத்ராணி	= அவயவங்கள்
		ஸீதந்தி	= நெகிழ்ந் கின்றன (தளரு கின்றன).
		ச	= மற்றும்
		முகம்	= முகம்

பரிஷ்வஜதி = வாடுகிறது
ச = மற்றும்
மே = என்னிட
ஷரீரே = ஷரீரத்தில்
வேபது: = நடுக்கம்
ஜாயதே = உண்டாகிறது
ச = மற்றும்
ரோமஹர்ஷ: = மயிர்க்கூச்சல்
(ஜாயதே) = உண்டாகிறது.

(மூ)—கா(ண்)ண்டீவம் ஸ்ரம்ஸதே ஹஸ்தாத் த்வக் சைவ பரி
தஹ்யதே||
ந ச ஷக்னோம்யவஸ்தா (ஆ) தும் ப்(ர்)ரமதீவ ச மே மன: ||30||

(ப. உ.) கா(ண்)ண்டீவம், ஸ்ரம்ஸதே, ஹஸ்தாத், த்வக், ச, ஏவ, பரி தஹ்யதே | ந, ச, ஷக்னோமி, அவஸ்தா(ஆ)தும், ப்(ர்)ரமதி, இவ, ச, மே, மன: ||

காண்டீவம் = காண்டி.வ
தனுஸ்ஸு
ஹஸ்தாத் = கையிலிருந்து
ஸ்ரம்ஸதே = நழுவுகிறது
த்வக் } = தோலும்
ச }
பரிதஹ்ய } = தபிக்கிறது
தே ஏவ } (சுடுகிறது)
மே = என்னுடைய
மன: } = மனதும்
ச }
ப்ரமதி } = மோஹமடை
இவ = ஏவ } கிறது.
அத: = ஆகையால்
அவஸ்தா } = நிற்பதற்கு
(ஆ)தும் }
ந } = ஸமர்த்தனுவ
ஷக்னோமி } தில்லை.

(மூ)—நிமித்தானி ச பஷ்யாமி விபரீதானி கேஷவ ||
ந ச ஷ்ரேயோனு பஷ்யாமி ஹத்வா ஸ்வஜன மாஹவே ||31||

(ப. உ.) நிமித்தானி, ச, பஷ்யாமி, விபரீதானி, கேஷவ | ந, ச, ஷ்ரேய:, அனு-பஷ்யாமி, ஹத்வா, ஸ்வஜனம், ஆஹவே||

கேஷவ = ஸ்ரீகிருஷ்ண!
விபரீதானி = அனிஷ்ட ஸூ
சகங்களான
நிமித் } = ஷகுனங்
தானி, ச } களையும்
பஷ்யாமி = பார்க்கிறேன்.
ஆஹவே = போரில்
ஸ்வஜனம் = பந்துக்களை
ஹத்வா = கொன்று
ஷ்ரேய: } = கீர்த்தியை
ச } யாகிலும்
ந, அனு } = காணுவதில்லை.
பஷ்யாமி }

(மூ)—ந காங்க்ஷே விஜயம் கிருஷ்ண ந ச ராஜ்யம் ஸுகா(வா)னி ச ||
கிம் நோ ராஜ்யேன கோவிந்த கிம் போ(ஹோ)கைர் ஜீவிதேன
வா ||32||

(ப. உ.) ந, காங்க்ஷே, விஜயம், கிருஷ்ண, ந, ச, ராஜ்யம், ஸுகானி, ச | கிம், நஃ, ராஜ்யேன, கோவிந்த, கிம், போ(ஹோ)கைஃ, ஜீவிதேன, வா ||

கிருஷ்ண	= ஓ கிருஷ்ண !	ராஜ்யேன	= ராஜ்யத்தி
விஜயம்	= ஜயத்தை		னல்
ந, காங்க்ஷே	= விரும்புவ	கிம்	= என்ன
	தில்லை		ப்ரயோஜனம்?
ராஜ்யம்	= ராஜ்யத்தையும்	போகைஃ	= போகங்
ஸுகா(வா)னி, ச	= ஸுகத்தையும்		களினல்
ந, காங்க்ஷே	= விரும்புவ	ஜீவிதேன, வா	= பிழைத்திருப்ப
	தில்லை		தினலாயினும்
கோவிந்த	= ஓ கிருஷ்ண !	கிம்	= என்ன
நஃ	= எங்களுக்கு		ப்ரயோஜனம்?

(மூ)—ஏஷாமர்த்தே(யே) காங்க்ஷிதம் நோ ராஜ்யம் போ(ஹோ)காஸ்
ஸுகானி ச||
த இமேவஸ்தி(யி)தா யுத்தே(யே) ப்ராணாம் ஸ்த்யக்த்வா
த(ய)னி ச ||33||

(ப. உ.) ஏஷாம், அர்த்தே, காங்க்ஷிதம், நஃ, ராஜ்யம், போகாஃ, ஸுகானி, ச | தே, இமே, அவஸ்தி(யி)தாஃ, யுத்தே, ப்ராணன், த்யக்த்வா, த(ய)னி, ச ||

நஃ	= நமக்கு	இமே	= இப்பந்துக்கள்
ராஜ்யம்	= ராஜ்யமும்	ப்ராணன்	= ப்ராணத்தில்
போகாஃ	= போகங்களும்		ஆஸையையும்
ஸுகானி, ச	= ஸுகங்களும்	த, ச	= ஸம்பத்து
ஏஷாம், அர்த்தே	= யாருக்காக		களையும்
காங்க்ஷிதம்	= அபேக்ஷிக்	த்யக்த்வா	= விட்டு
	கத்தக்கதா	யுத்தே(யே)	= போர்க்களத்
தே	= அந்த		தில்
		அவஸ்திதாஃ	= நின்றிருக்கிறார்
			கள்.

(மூ)—ஆசார்யா: பிதர: புத்ராஸ்ததை(யை)வ ச பிதாமஹா: ||
மாதுலா: ஸ்வஸுரா: பௌத்ரா: ஸ்யாலாஸ்ஸம்பந்தின ஸ்ததா
(யா) ||34||

(ப. உ.) ஆசார்யா:, பிதர:, புத்ரா:, ததா(யா), ஏவ, ச, பிதாமஹா: | மாதுலா:, ஸ்வஸுரா:, பௌத்ரா:, ஸ்யாலா:, ஸம்பந்தின:, ததா||

போர்க்களத்தில் நின்றவர்கள் யாரெனின்:—

ஆசார்யா:	= குருக்கள்	
பிதர:	= தந்தைகள்	
புத்ரா:	= குமாரர்கள்	
ததா(யா)	= அப்படியே	
ஏவ		
பிதாமஹா:	= பாட்டனார்கள்	
மாதுலா:	= மாமன்மார்கள்	
ஸ்வஸுரா:	= மாமனார்கள்	
பௌத்ரா:	= பேரன்மார்கள்	
ஸ்யாலா:	= மச்சினன்மார்கள்	
ததா(யா)	= அப்படியே	
ஸம்பந்தி(யி)ன:	= சம்பந்திகள் (ஆகையால்)	

(மூ)—ஏதான்ன ஹந்துமிச்சாமி க்(வ்)னதோபி மது(ஸூ)ஸூதன||
அபி த்ரைலோக்ய ராஜ்யஸ்ய ஹேதோ: கிம் நு மஹீக்ருதே||35||

(ப. உ.) ஏதான், ந, ஹந்தும், இச்சாமி, க்(வ்)னத:, அபி, மது ஸூதன| அபி, த்ரைலோக்ய-ராஜ்யஸ்ய, ஹேதோ:, கிம், நு, மஹீக்ருதே||

மதுஸூதன	= கிருஷ்ணா!	
த்ரைலோக்ய-	= மூன்று லோகங்களின்	
ராஜ்யஸ்ய	= ஆதிபத்யத்தின்	
ஹேதோ: அபி	= காரணத்திலாயினும்	
(அஸ்மான்) க்(வ்)னத: அபி	= எங்களை = ஸம்ஹரித்தபோதிலும்	
ஏதான்	= இப்பந்துக்களை	
ஹந்தும்	= ஸம்ஹரிப்பதற்கு	
ந இச்சாமி	= விரும்பமாட்டேன்.	
மஹீக்ருதே	= வெறும் பூமிக்காக	
(ந, ஹன்யாமி, இதி)	= கொல்லமாட்டேனென்று	
கிம் நு	= என்ன கொல்லத் தக்கது.	

(மூ)—நிஹத்ய தார்த்தராஷ்ட்ரான்ன: கா ப்ரீதிஸ்யாஜ் ஜனார்தன||
பாபமேவாச்ரயேதஸ்மான் ஹத்வைதானாததாயின: ||36||

(ப. உ.) நிஹத்ய, தார்த்தராஷ்ட்ரான், ந:, கா, ப்ரீதி:, ஸ்யாத், ஜனார்தன | பாபம், ஏவ, ஆஸ்ரயேத், அஸ்மான், ஹத்வா, ஏதான், ஆததாயின:||

ஜனார்தன = க்ருஷ்ண!
தார்த்தராஷ்ட்ரான் = த்ருதராஷ்ட்ரனின் குமாரர்களை
நிஹத்ய = கொன்று
நः = எங்களுக்கு
கா = என்ன
ப்ரீதிः = ஸந்தோஷம்
ஸ்யாத் = உண்டாகும்?
ஏதான் = இந்த
ஆததாயினः = த்ரோஹிகளை (விஷத்தைத் கொடுப்பவர், வீடுகளுக்கு நெருப்பிடுவோர் பிராண நிலங்களை அபஹரிப்பவர், பிராண பார்யைகளை அபஹரிப்பவர்கள் இவர்களை முதலானவர்கள் ஆததாயிகளென்று சொல்லிக்கொள்ளப்படுவார்கள்).
ஹத்வா = கொன்று
(ஸ்திதான்) = இருக்கும்
அஸ்மான் = எங்களை
பாபம் ஏவ = பாவமே
ஆஶ்ரயேத் = ஆஶ்ரயிக்கும்.

(மூ)—தஸ்மான்னார்ஹா வயம் ஹந்தும் தார்த்தராஷ்ட்ரான் ஸ்வ
பாந்த(ப)வான் ||
ஸ்வஜனம் ஹி கத(ய)ம் ஹத்வா ஸுகினः ஸ்யாம மாதவ||37||

(ப. உ.) தஸ்மாத், ந, அர்ஹாः, வயம், ஹந்தும், தார்த்தராஷ்ட்ரான், ஸ்வ-பாந்தவான் | ஸ்வ-ஜனம், ஹி, கத(ய)ம், ஹத்வா, ஸுகினः, ஸ்யாம, மாதவ ||

மாதவ = ஓ கிருஷ்ண!
தஸ்மாத் = எந்த காரணத்திலுல் பந்துக்களை கொல்வதிலுல் ஐஹிகாமுஷ்மிக பலன்கள் கிடைக்காமல் பாவமே நேரிடுமோ அக்காரணத்திலுல்
ஸ்வ-பாந்தவான் = நம்மிட பந்துக்களான
தார்த்தராஷ்ட்ரான் = துர்யோதனாதிகளை
ஹந்தும் = கொல்வதற்கு
வயம் = நாங்கள்
ந அர்ஹாः = யோக்யர்களல்ல.
ஸ்வஜனம் = பந்துக்களை
ஹத்வா = கொன்று
கத(ய)ம் = எப்படி
ஸுகினः = ஸுகமுடையவர்கள்
ஸ்யாம = ஆவோம்?
ஹி = நிஶ்சயம்.

(மூ)—யத்யப்யேதே ந பஶ்யந்தி லோபோ(ஹோ)பஹத சேதஸः||
குலக்ஷயக்ருதம் தோ(தோ)ஷம் மித்ரத்ரோஹே ச பாதகம்||38||

(ப. உ.) யதி(தி), அபி, ஏதே, ந, பஶ்யந்தி, லோபோ(ஹோ)பஹத-சேதஸः | குலக்ஷயக்ருதம், தோஷம், மித்ரத்ரோஹே, ச, பாதகம் ||

ஏதே = இந்த தர்
யோத
ணதிகள்
லோபோ (ஹோ) = ராஜ்ய
பஹத சேதஸஃ லோபத்
(ஸந்த:) திணல்
கெட்டுப்
போயி
ருக்கும்
தர்மனோன
மூள்ள
வராய்
குலக்ஷியக்ருதம் = வம்ஸத்

தின் நாஸ்
த்திணை லுண்
டாகும்
= தோஷத்தை
யும்,
மித்ரத்ரோஹே = நஸர்
களின்த்ரோ
கத்திணல்
(நேரிடும்)
பாதகம் } = பாவத்தை
ச } யும்
ந், பஸ்யந்தி } = காணமற்
யதி, அபி } போயினும்

(மூ)—கத(ழ்)ம் ந ஜ்ஞேயமஸ்மாபி(ஹி): பாபாத(ஓ)ஸ்மான் னிவர்திதும்॥
குலக்ஷியக்ருதம் தோ(ஹோ)ஷம் ப்ரபஸ்யத்பிர் ஜனர்தன ॥39॥

(ப. உ.) கத(ழ்)ம், ந, ஜ்ஞேயம், அஸ்மாபி:, பாபாத், அஸ்மாத், நிவர்-
திதும் | குலக்ஷயக்ருதம், தோஷம், ப்ரபஸ்யத்பி:, ஜனர்தன ॥

ஜனர்த்தன = ஸ்ரீகிருஷ்ண!
குலக்ஷியக்ருதம் = வம்ஸ நாஸத்
திணலுண்
டாகும்
தோ(ஹோ)ஷம் = தோஷத்தை
ப்ரபஸ் = தெரிந்து
யத்பி:(ஹிஃ) } கொள்ளும்
அஸ்மாபி: = எங்களால்
அஸ்மாத் = இந்த வம்ஸ
நாஸத்திண

பாபாத் = பாவத்தி
னின்லும்
நிவர்த்திதும் = விலகு
வதற்காக
கத(ழ்)ம் } = விசாரிக்கப்
ந } படாமலி
ஜ்ஞேயம் } ருப்பது
எப்படி [ம்?
யுக்தமாகு

(மூ)—குலக்ஷயே ப்ரணஸ்யந்தி குலதர்மாஸ் ஸனாதனா:॥
த(ய)ர்மே நஷ்டே குலம் க்ருத்ஸ்னமத(ய)ர்மோபி(ஹி)
ப(ல)வத்யுத ॥ 40 ॥

(ப. உ.) குலக்ஷயே, ப்ரணஸ்யந்தி, குலதர்மா:, ஸனாதன:। தர்மே,
நஷ்டே, குலம், க்ருத்ஸ்னம், அதர்ம:, அபி(ஹி)பவதி, உத॥

குலக்ஷயே (ஸதி) = வம்ஶ நாஶ மாயின்
ஸநாதந: = பரம்பரை யாய் வந்த
குலதர்மா: = க்ஷத்ரியகுலம் முதலான குல ங்களுக்குத் தகுந்த தர்மங்கள்
ப்ரணஶ்யந்தி = பூர்த்தியாய் நாஶமடை கின்றன.
தர்மே = குலதர்மம்
நஷ்டே (ஸதி) = நாஶமடை யின்
அதர்ம: = அதர்மமும்
க்ருத்ஸ்னம் உத = மற்ற எல்லாம்
குலம் = வம்ஶத்தை
அபிபவதி = பறவுகிறது.

(மூ)—அத(ர்)மாபி(ஹி)பவாத், க்ருஷ்ண ப்ரது(உ—)ஷ்யந்தி குலஸ்த்ரிய: ||
ஸ்த்ரீஷு துஷ்டாஸு வார்ஷ்ணேய ஜாயதே வர்ணஸங்கர: || 41 ||

(ப. உ.) அத(ர்)மாபி(ஹி)ப(ஹ)வாத், க்ருஷ்ண, ப்ரது(உ—)ஷ்யந்தி, குலஸ்த்ரிய: | ஸ்த்ரீஷு—, துஷ்டாஸு—, வார்ஷ்ணேய, ஜாயதே, வர்ணஸங்கர:||

க்ருஷ்ண = ஶ்ரீ கிருஷ்ண!
அதர்மாபி பவாத் = அதர்மம் பறவு கிறதினால்
குலஸ்த்ரிய: = குலஸ்தரீயர் கள்
ப்ரது(உ—) ஷ்யந்தி = தோஷமுடை யவர்களா கிறார்கள்.
வார்ஷ்ணேய = ஶ்ரீ கிருஷ்ண!
ஸ்த்ரீஷு— = குலஸ்த்ரீகள்
துஷ்டாஸு— (ஸதீஷு—) = தோஷத் துடன் கூடிய வராவா ராயின்
வர்ணஸங்கர: = வர்ணங்களின் கலப்பு
ஜாயதே = உண்டா கிறது.

(மூ)—ஸங்கரோ நரகாயைவ குலக்(வ்)ன்னம் குலஸ்ய ச ||
பதந்தி பிதரோ ஹ்யேஷாம் லுப்த பிண்டோதக க்ரியா: || 42 ||

(ப. உ.) ஸங்கர:, நரகாய, ஏவ, குலக்ன்னம், குலஸ்ய, ச | பதந்தி, பிதர:, ஹி, ஏஷாம், லுப்த-பிண்டோ-தக-க்ரியா: ||

ஸங்கர: = இவ்வர்ண ஸாங்கர்யம்
குலக்ன்னம் = குலத்தைதக்கெடு ப்பவர்களுக்கும்
ச = மற்றும்
குலஸ்ய = அக்குலத்தில் பிறந்தவர் களுக்கும்

நரகாய ஏவ = நரகத்திற் காகவே
(பவதி) = காரணமாகிறது
ஏஷாம் = குலத்தைதக் கெடுக்கும் ஜனங்களின்
பிதர: = தந்தை முதலியோர்கள்
லுப்த = லோபமடைந்த (குறைவடைந்த)
பிண்டோ தகக்ரியா: = பிண்டோதகாதி கிரியைகளை யுடையவராய்
(நரகே) = நரகத்தில்
பதந்தி = விழுகிறார்கள்.
ஹி = நிச்சயம்

(மூ)—தோ(ஷோ)ஷைரேதை: குலக்(ஸ்)னனும் வர்ணஸங்கர காரகை: ||

உத்ஸாத்யந்தே ஜாதிதர்மா: குலதர்மாஸ்ச ஸாஸ்வதா: ||43||

(ப. உ.) தோஷை:, ஏதை:, குலக்ஷணம், வர்ணஸங்கரகாரகை:| உத்ஸாத்யந்தே, ஜாதிதர்மா:, குலதர்மா:, ச, ஸாஸ்வதா: ||

குலக்ஷணம் = குலத்தைதக் கெடுக்கும் ஜனங்களின்
வர்ண- = வர்ணங்களின்
ஸங்கர- = ஸாங்கர்யத்தை
காரகை: = உண்டாக்கும்
ஏதை: = முன் சொல்லப் பட்ட
தோஷை: = தோஷங் களினால்
ஸாஸ்வதா: = பரம்பரையாய் வந்த
குலதர்மா: = குலாசாரதர்மங் கள்
ச = மற்றும்
ஜாதி தர்மா: = க்ஷத்ரியத்வம் முதலிய ஜாதி நிமித்தகமான தர்மங்கள்
உத்ஸாத் யந்தே = நாஸமடை கின்றன.

(மூ)—உத்ஸன்ன குலதர்மாணம் மனுஷ்யாணம் ஜனர்தன||
நரகே நியதம் வாஸோ ப(ஹ)வதீத்யனு ஸுஸ்ரும ||44||

(ப. உ.) உத்ஸன்ன-குல-தர்மாணம், மனுஷ்யாணம், ஜனர்தன| நரகே, நியதம், வாஸ:, பவதி, இதி, அனுஸுஸ்ரும ||

ஜனர்தன = ஸ்ரீ கிருஷ்ணனே!
உத்ஸன்ன- = நாஸமடைந்த
குல- = குலம் ஜாதி இவைகளின்
தர்மாணம் = தர்மங்களை யுடைய
மனுஷ்யாணம் = மனிதர் களுக்கு
நியதம் = தவறுமல்
நரகே = நரகத்தில்
வாஸ: = வஸித்தல்
பவதி இதி = உண்டாகிற தென்று
அனுஸுஸ்ரும = பெரியோர் களால் கேட்டிருக் கிறோம்.

(மூ)—அஹோ ப(வ)த மஹத் பாபம் கர்தும் வ்யவஸிதாவயம் ||
யத் ராஜ்யஸுகலோபே(ஹே)ன ஹந்தும் ஸ்வஜனமுத்யதா: ||45||

(ப. உ.) அஹோ, ப(வ)த, மஹத், பாபம், கர்தும், வ்யவஸிதா:, வயம் | யத், ராஜ்ய-ஸுக-லோபே(ஹே)ன, ஹந்தும், ஸ்வஜனம், உத்யதா: ||

ராஜ்ய-	= ராஜ்யத்தை யடைவதால் உண்டாகும்
ஸுக-	= ஸுகத்தின்
லோபே (ஹே)ன	= லோபத் தினல்
ஸ்வஜனம்	= பந்துக்களை
ஹந்தும்	= கொல்லு வதற்கு
வயம்	= நாங்கள்
உத்யதா:	= உத்யுக்தா ளாயிருக்கி றோம்
இதி	= என் று

யத்	= யாதுண்டோ சொல்வது
மஹத் பாபம்	= மஹா பாப காமான
தத்	= அந்த கார் யத்தை
கர்தும்	= செய்வதற் காக
வயம்	= நாங்கள்
வ்யவஸி தா:; இதி	= நிஸ்சயமுடை யவராயிருக்கி றோமென்பது
அஹோ ப(வ)த	= மஹா கஷ் டம்.

(மூ)—யதி(ஹி) மாமப்ரதீகார மஸஸ்த்ரம் ஸஸ்த்ரபாணய: ||
தார்த்தராஷ்ட்ரா ரணே ஹன்யுஸ் தன் மே க்ஷேமதரம்
ப(ஹ)வேத் ||46||

(ப. உ.) யதி(ஹி), மாம், அப்ரதீகாரம், அஸஸ்த்ரம், ஸஸ்த்ரபாணய:| தார்த்தராஷ்ட்ரா:, ரணே, ஹன்யு:, தத், மே, க்ஷேமதரம், ப(ஹ)வேத்||

அப்ரதீகாரம்	= அபகாரம் செய்தாலும் பதில் செய் யாமலிருக் கும் [லாத
அஸஸ்த்ரம்	= ஸஸ்த்ரமில்
மாம்	= என்னை
யதி	= ஒருக்கால்
ஸஸ்த்ரபாணய:	= ஆயுதங் களைத்தரித் திருக்கும்

தார்தராஷ்ட்ரா:	= துர்யோத னாதிகள்
ரணே	= யுத்தத்தில்
ஹன்யு:	= கொன்று லும்
தத்	= அது
மே	= எனக்கு
க்ஷேமதரம்	= வெகு நன் மை தரக் கூடியதாய்
பவேத்	= ஆகும்.

ஸஞ்ஜய உவாச—

(மூ)—ஏவமுக்த்வார்ஜுனஸ் ஸங்க்(வ்)யே ரதோ(யோ)பஸ்த(ய)
உபாவிஶத் ||
விஸ்ருஜ்ய ஸஶரம் சாபம் ஶோகஸம்விக்(ஜ்)ன மானஸ: ||47||

(ப. உ.) ஏவம், உக்த்வா, அர்ஜுன:, ஸங்க்யே, ரதோ(யோ)பஸ்தே(யே), உபாவிஶத் | விஸ்ருஜ்ய, ஸஶரம், சாபம், ஶோக-ஸம்விக்ன-மானஸ:||

ஸஞ்ஜய:	= ஸஞ்ஜயன்	ஸம்விக்ன-	= கலக்க முடைய
உவாச	= சொல்லு கிறான்.	மானஸ:	= மனதுள்ளவ வனுய்
அர்ஜுன:	= அர்ஜுனன்	ஸங்க்(வ்)யே	= போர் களத் தில்
ஏவம்	= இவ்விதமாக	ரதோபஸ்தே	= ரதத்தின் மத்தியில்
உக்த்வா	= சொல்லி	உபாவிஶத்	= உட்கார்ந்த னன்.
ஸஶரம்	= பாணத் தோடு கூடிய		
சாபம்	= வில்லை		
விஸ்ருஜ்ய	= விட்டு		
ஶோக-	= ஶோகத்தி		

ஸ்ரீ பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாதத்தில்
அர்ஜுனனின் விஷாதயோகமென்கிற

முதலாவது அத்தியாயம் முற்றிற்று.

இரண்டாவது அத்தியாயம்.

ஸஞ்ஜய உவாச—

(மூ)—தம் ததா(யா) க்ருபயாவிஷ்டமஸ்ருபூர்ணகுலேக்ஷணம் ॥
விஷீத(ஈ)ந்தமிதம் வாக்யமுவாச மதுஸூதன: ॥ 1 ॥

(ப. உ.) தம், ததா(ஆ), க்ருபயா, ஆவிஷ்டம், அஸ்ருபூர்ணகுலேக்ஷணம், விஷீதந்தம், இத(ஈ)ம், வாக்யம், உவாச, மதுஸூதன: ॥

ஸஞ்ஜய:	= ஸஞ்ஜயன்
உவாச	= சொல்லுகிறான்
ததா(யா)	= முன் சொல்லப் பட்டவாறு
க்ருபயா	= தயையுடன்
ஆவிஷ்டம்	= கூடிக்கொண் டிருக்கும்
அஸ்ருபூர்ண- ஆகுலேக்ஷணம்	= கண்ணீர்களால் நிறைந்த வ்யாகுலத்தை யடைந்த கண்களுடைய
விஷீதந்தம்	= துக்கித்துக் கொண் டிருக்கும்
தம்	= அந்த அர்ஜுனனைக்குறித்து
இதம்	= மேற்சொல்லப் போகும்
வாக்யம்	= வார்த்தையை
மதுஸூதன:	= மதுவென்ற கம்ஸனை ஸம்ஹரித்த ஸ்ரீகிருஷ்ணன்
உவாச	= சொன்னான்.

ஸ்ரீ பகவானுவாச—

(மூ)—குதஸ்த்வா கஶ்மலமித(ஈ)ம் விஷமே ஸமுபஸ்தி(யி)தம் ॥
அனார்ய ஜுஷ்ட மஸ்வர்க்(ர்)ய மகீர்திகர மர்ஜுன ॥ 2 ॥

(ப. உ.) குத:, த்வா, கஶ்மலம், இத(ஈ)ம், விஷமே, ஸமுபஸ்திதம், அனார்யஜுஷ்டம், அஸ்வர்க்யம், அகீர்திகரம், அர்ஜுன ॥

ஸ்ரீ பகவான்	= ஸ்ரீ கிருஷ்ணன்
உவாச	= சொல்லுகிறான்
அர்ஜுன	= அர்ஜுன!
அனார்ய- ஜுஷ்டம்	= அனுஷ்டிக்கப் பட்ட
அஸ்வர்க்யம்	= மோக்ஷத்திற்கு ஸாதனமாகாத
அகீர்த்தி கரம்	= அபகீர்த்தியை தரக்கூடிய
இதம்	= இந்த
கஶ்மலம்	= மோஹினின்று பின் வாங்குவது
த்வா	= க்ஷத்ரியர்களில் உத்தமனை உன்னைக் குறித்து
விஷமே	= துக்கத்திற்கு உசிதமல்லாத யுத்த ஸமயத்தில்

குத: (ஹேதோ:) = எக்காரணத் திஞல் | ஸமுபஸ் திதம் = உண்டா யிற்று?

(மூ)—க்லைப்(வ்)யம் மா ஸ்ம க(ம)ம: பார்த்த நைதத் த்வய்யுபபத்(ஜ்)யதே ||

கூஷ்த்ரம் ஹ்ருதய தௌர்பல்யம் த்யக்த்வோத்திஷ்ட பரம்தப || 3 ||

(ப. உ.) க்லைப்(வ்)யம், மா, ஸ்ம, க(ம)ம:, பார்த்த, ந, ஏதத், த்வயி, உபபத்யதே | கூஷ்த்(ஜ்)ரம், ஹ்ருதயதௌள(ஔள)ர்பல்யம், த்யக்த்வா, உத்திஷ்ட, பரம்தப ||

பார்த்த = அர்ஜுனை!
க்லைப்(வ்)யம் = அதைர் யத்தை
மா-ஸ்ம-கம: = அடையாதே.
ஏதத் = இந்த அதைர்யம்
த்வயி = உன்னிடத்தில்
ந உபபத் யதே = யுக்தமல்ல.
பரம்தப = பகையோ ரைத்துன்பப் படுத்தும்
அர்ஜுன! = அர்ஜுனை!
கூஷ்த்ரம் = மிகவும் கீழ்மையான
ஹ்ருதய- = மனதிலுண் டாயிருக்கும்
தௌர்பல்யம் = அதைர் யத்தை
த்யக்த்வா = விட்டு
உத்திஷ்ட = யுத்தத்திற்கு எழுந்திரு.

அர்ஜுன உவாச—

(மூ)—கத(ய)ம் பீஷ்மமஹம் ஸங்க்(ங்)யே த்ரோணம் ச மது-ஸூதன ||

இஷுபி:(ஹி:) ப்ரதியோத்ஸ்யாமி பூஜார்ஹாவரிஸூதன || 4 ||

(ப. உ.) கத(ய)ம், பீஷ்மம், அஹம், ஸங்க்(ங்)யே, த்ரோணம், ச, மதுஸூதன | இஷுபி:(ஹி:), ப்ரதி, யோத்ஸ்யாமி, பூஜார்ஹௌள, அரி ஸூத(ஊ)ன ||

அர்ஜுன: = அர்ஜுனன்
உவாச = சொல்லுகிறான்.
அரிஸூதன = யத்ருஸம் ஹாரகனை ஸ்ரீகிருஷ்ண!
யத: = எக்காரணத் தால்
(தௌள) = அந்த பீஷ்ம த்ரோணர்கள்
பூஜார்ஹௌள = பூஜிக்கப்படு வதற்குத் தகுந் தவர்களோ
அத: = அக்காரணத் திஞல்

மதுஸூதன = ஸ்ரீகிருஷ்ண!
அஹம் = நான்
ஸம்க்யே = போரில்
பீஷ்மம் = பீஷ்மர
சார்யரை
= மற்றும்

த்ரோணம் = த்ரோண
சார்யரை
ப்ரதி = குறித்து
கத(யி)ம் = எப்படி
இஷுபி:(ஹி:) = அம்புகளினால்
யோத் } = போர்
ஸ்யாமி } புரிவேன்.

(மூ)—கு(ரு)ருனஹத்வா ஹி மஹானுபா(ஹா)வான்
ஸ்ரேயோ போ(ஹோ)க்தும் பை(ஹை)க்ஷ்யமபீஹ லோகே ||
ஹத்வார்த்த காமாம்ஸ்து கு(ரு)ருனிஹைவ
பு(ஹு)ஞ்ஜீய போ(ஹோ)கான் ருதி(யி)ரப்ரதிக்தான் || 5 ||

(ப. உ.) கு(ரு)ருன், அஹத்வா, ஹி, மஹானுபாவான், ஸ்ரேய:, போக்தும், பை (ஹை) க்ஷ்யம், அபி, இஹ, லோகே, ஹத்வா, அர்த்தகா மான், து, கு(ரு)ருன், இஹ, ஏவ, புஞ்ஜீய, போ(ஹோ)கான், ருதிரப்ர திக்தா(யா)ன்||

மஹானுபாவான் = மிகப் பெரு மைமிள்ள
கு(ரு)ருன் = த்ரோண சார்யர் முத லான குருக் கூட்ட
அஹத்வா = கொல்லாமல்
இஹ-லோகே = இவ்வுலகில்
போக்தும் = உண்ணுவ தற்கு
பை(ஹை)க்ஷ்ய மபி } = பிச்சை யெ டுப்பதினால் கிடைக்கும் உணவாகி னும்
ஸ்ரேய: (இதி) = மேலான தென்று

ஹி = ப்ரஸித்தம்
அர்த்தகாமான் = பொருளா சையுள்ள
கு(ரு)ருன் = குருவாகிய த்ரோண திகளை
ஹத்வா = கொன்று
இஹ, ஏவ = இப்பூமியி லேயே
ருதி(யி)ர- = அவர்களிட ரத்தத்தால்
ப்ரதிக்தா(யா)ன் = நனைந்த
போ(ஹோ)கான் = ராஜ்ய போகங்களை
து [கத(யி)ம்] = எப்படி
புஞ்ஜீய = அனுபவிப் பேன் ?

(மூ)—ந சைதத் வித்(த்)ம: கதரன்னோ க(ரு)ரீயோ
யத்(த்)வா ஜயேம யதி(தி) வா நோ ஜயேயு: ||
யானேவ ஹத்வா ந ஜிஜீவிஷாம:
தேவஸ்தி(யி)தா: ப்ரமுகே தார்த்தராஷ்ட்ரா: || 6 ||

(ப. உ.) ந, ச, ஏதத், வித்(த்)மः, கதராத், நः, க(ம)ரீயः, யத்வா, ஜயேம, யதி(ஹி), வா, நः, ஜயேயுः | யான், ஏவ ஹத்வா, ந, ஜிஜீவிஷாமः, தே, அவஸ்திதாः, ப்ரமுகே, தார்த்தராஷ்ட்ராः ||

நः = எங்களுக்கு

[பை(ஹை) க்ஷ்யயுத் த(ய) யோ:] = பிச்சை எடுத்தல், யுத்தம் செய்தல் இவ்விரண்டில்

கதராத் = எது

க(ம)ரீயः = மேலானதோ

(ஏதத்) = இதை

ந, வித்மः = தெரியமாட்டோம்.

யத்வா = யுத்தத்திற்கு ஸம்மதித்த போதிலும்

(வயம்) = நாங்கள்

(ஏதான்) = இத்துர்யோதனாதிகளை

ஜயேம = வெல்லுவோமோ

யதி(ஹி), வா = அல்லது

நः = எங்களை

தார்த்த ராஷ்ட்ராः = துர்யோதனாதிகள்

ஜயேயுः = வெல்லுவார்களோ

(ஏதத்) ச = இதையும்

ந, வித்மः = அறியமாட்டோம்.

யான் = எந்த பந்துக்களை

ஹத்வா = கொன்று

ந ஜிஜீவிஷாமः = பிழைக்க விரும்பமாட்டோமோ

தே = அந்த பந்துக்களான

தார்த்த ராஷ்ட்ராः = துர்யோதனாதிகளை

ஏவ

ப்ரமுகே = எதிரில்

அவஸ்திதாः = நின்றிருக்கிறார்கள்.

(மூ)—கார்பண்ய தோ(ஷோ)ஷோபஹத ஸ்வபா(ஹா)வः
ப்ருச்சாமி த்வாம் த(ய)ர்ம ஸம்மூட சேதாः ||
யத்ஸ்ரேயः ஸ்யான்னிஸ்சிதம் ப்ரூஹி தன்மே
ஸிஷ்யஸ் தேஹம் ஸாதி(யி) மாம் த்வாம் ப்ரபன்னம் ||7||

(ப. உ.) கார்பண்ய-தோ(ஷோ)ஷோ-பஹத-ஸ்வபாவः, ப்ருச்சாமி, த்வாம், தர்ம-ஸம்மூட-சேதாः| யத், ஸ்ரேயः, ஸ்யாத், நிஸ்சிதம், ப்ரூஹி, தத், மே, ஸிஷ்யः, தே, அஹம், ஸாதி(யி), மாம், த்வாம், ப்ரபன்னம்||

கார்பண்ய- = தைன்யரூப

தோஷ- = தோஷத்தினால்

உபஹத- = நாசமடைந்த

ஸ்வபாவः = பராக்ரமம் முதலிய ஸ்வபாவமுடைய

தர்ம- = தர்மத்தில்

ஸம்மூட- = ஸம்சயமுள்ள

சேதாः = மனதுடைய

அஹம் = நான்

த்வாம் = உன்னை

(ஸ்ரீ கிருஷ்ணனை)

ப்ருச்சாமி	= கேட்க்கிறேன்.
யத்	= எது
நிஸ்சிதம்	= நிஸ்சியமாய்
ஸ்ரேய:	= ஸ்ரேயஸ்கரம்
ஸ்யாத்	= ஆகுமோ
தத்	= அதை
மே	= எனக்கு
ப்ரூஹி	= சொல்.
அஹம்	= நான்
தே	= உனக்கு
ஸிஷ்ய:	= சீடன்.
த்வாம்	= உன்னை
ப்ரபன்னம்	= ஸரண மடைந்த
மாம்	= என்னை
ஸாதி(யி)	= இவ்வாறு செய்யென்று உத்திரவளி.

5, 6, 7-வது ஸ்லோகங்களின் கருத்துரை—

ஓ கிருஷ்ணனே! பிச்சை எடுத்துண்ணல் கு(ரு)ருஹத்யாதி தோஷமற்றதாகையால் மேலானதா? அல்லது யுத்தம், குருஹத்யாதி தோஷங்களால் கூடியிருந்தபோதிலும் க்ஷத்ரியர்களுக்கு ஸ்வதர்மமானதினால் அதைச் செய்வது உத்தமமா என்றும், யுத்தம் செய்தாலும் நாங்கள் வெல்லுவோமோ, அல்லது துர்யோதனாதிகள் வெல்லுவார்களோ என்றும் ஸந்தேஹமுண்டாயிருக்கிறது. நாங்கள் வென்றாலும்—யாரைக் கொன்று பிழைப்பதற்கு விரும்பமாட்டோமோ (மரணமடைவோமோ) அத்தகைய துர்யோதனாதிகள் போரில் எதிரில் நின்றிருப்பதினால் எங்களுக்கு ஜயமுண்டாயினும் நாங்கள் மரணமடைவோம். அந்த ஜயமும் பராஜயரூபமேயாகும் என்று இவ்விதமாக கார்பண்ய தோஷத்தினால் (தத்வாஜ்ஞானத்தினால்) மறைவான ஸ்வபாவமுள்ள அர்ஜுனன் எது ஸ்ரேயஸ்ஸுக்கு ஸாதனமோ? யாருக்கு ஜயம் கிடைக்குமோ அவைகளை நிஸ்சயமாக சொல்லவேணுமென்று ஸ்ரீ கிருஷ்ணனைக் குறித்துக் கேட்டனன்.

(மூ)—ந ஹி ப்ரபஸ்யாமி மமாபனுத்யாத்-
யச்சோ(ஶோ)க முச்சோ(ஶோ)ஷண மிந்த்ரியாணாம் ||
அவாப்ய பூ(பூ)மாவஸபத்ன மம்ருத்தம்
ராஜ்யம் ஸுராணாமபி சாதி(தி)பத்யம் ||8||

(ப, உ.) ந, ஹி, ப்ரபஸ்யாமி, மம, அபனுத்யாத், யத், ஸோகம், உச்சோஷணம், இந்த்ரியாணம், அவாப்ய, பூமௌ, அஸபத்னம், ரித்தம், ராஜ்யம், ஸுராணம், அபி, ச, ஆதி (தி)பத்யம் ||

பூமௌ = மண்ணுலகில்
அஸபத்னம் = பகைவரற்ற
ரித்த(ய)ம் = செல்வத்தால் நிறைந்த
ராஜ்யம் = ராஜ்யத்தையும்
ஸுராணாம் = தேவதைகளின்
ஆதி (யி) பத்யம், ச = அதிகாரத்தையும்
அவாப்ய அபி = அடைந்த போதிலும்
இந்த்ரி யாணாம் = இந்த்ரியங் களுக்கு
உச்சோ ஷணம் = துன்பத்தைத் தரும்
மம = என்னிட
ஸோகம் = துக்கத்தை
யத் = எந்தச் செயல்
அபனுத்யாத் = துலக்குமோ
தத் = அந்தச் செயலை
க, ப்ரபஶ் யாமி = அறியேன்.

ஸஞ்ஜய உவாச—

(மூ)—ஏவமுக்த்வா ஹ்ருஷீகேஶம் கு(கு)டாகேஶ: பரம்தப: ||

ந யோத்ஸ்ய இதி கோவிந்த முக்த்வா தூஷ்ணீம் ப(ப)பூ(பூ)வ ஹ ||9||

(ப. உ.) ஏவம், உக்த்வா, ஹ்ருஷீகேஶம், கு(கு)டாகேஶ:, பரம்தப:| ந, யோத்ஸ்யே, இதி, கோவிந்தம், உக்த்வா, தூஷ்ணீம், ப(ப)பூ(பூ)வ, ஹ ||

பரம்தப: = பகையோரைத் துன்பப்படுத்துபவனும்
குடாகேஶ: = அர்ஜுனன்
ஹ்ருஷீகேஶம் = இந்த்ரிய நியாமகனை
கோவிந்தம் = ஸ்ரீ கிருஷ்ணனைக் குறித்து
ஏவம் = இவ்வாறு
உக்த்வா = சொல்லி
ந = போர்புரியமாட்டேன்
யோத்ஸ்ய = என்றும்
இதி (ச) = என்றும்
உக்த்வா = சொல்லி
தூஷ்ணீம் பபூவ = மௌனமடைந்தான்.
ஹ = இத்தகைய தீரனுக்கு இவ்வாறு தோன்றியது ஆஸ்சர்யம்!

(மூ)—தமுவாச ஹ்ருஷீகேஶ: ப்ரஹஸன்னிவ பா(பா)ரத ||

ஸேனயோருபயோர் மத்யே விஷீத(ஊ)ந்தமித(ஊ)ம் வச: ||10||

(ப. உ.) தம், உவாச, ஹ்ருஷீகேஶ:, ப்ரஹஸன், இவ, பா(பா)ரத| ஸேனயோ:, உப(பூ)யோ:, மத்(த்)யே, விஷீத(ஊ)ந்தம், இத(ஊ)ம், வச: ||

பா(ஹா)ரத	= ஓ த்ருதராஷ்ட்ரரே!
ஹ்ருஷீகேச:	= ஸ்ரீகிருஷ்ணன்
உப(ஹ)யோ:	= இருவரிட
ஸைன்யோ:	= படைகளின்
மத்யே	= நடுவில்
விஷீத(ஷ)ந்தம்	= துக்கித்துக் கொண்டிருக்கும்
தம்	= அந்த அர்ஜுனனைக் குறித்து
இதம்	= முன்சொல்லப் போகும்
வச:	= வார்த்தையை
ப்ரஹஸன் இவ	= பரிஹாஸம் செய்பவனைப் போல்
உவாச	= பேசினன்.

அவதாரணிகை :—பரமாத்மாவின் மஹாத்ம்ய ஞானம், அவனிடத்தில் பக்தி இவ்விரண்டுடன் கூடிய ப(ஹ)கவத் பூஜாரூபமான தம் தம் வர்ணஸ்ரமங்களுக்குத் தகுந்த கர்மங்களைச் செய்து, பரமாத்மாவின் க்ருபையை ஸம்பாதித்துக்கொண்டு மோக்ஷத்தை யடைவது மானவர்களின் முக்யமான கடமையாயிருக்கிறது. நீ க்ஷத்ரியனாபடியால், ஸ்ரீ நாராயணனிடத்தில் த்வேஷத்தைச் செய்யும் தாமஸ ஜனங்களின், மற்றும் அவர்களிட பந்துக்களின் ஸம்ஹாரரூபமாகிய பாபம் உனக்கு மோக்ஷத்திற்கு ஸாத(ய)னமான தர்மமாயிருக்கிறது. பந்துக்களிடத்திலுள்ள அன்பினால் "பகவத்த்வேஷிகளும், தாமஸருமான துர்யோதனாதிகள், மற்றும் அவளிட பந்துக்களான பீஷ்மாதிகளின் ஸம்ஹாரம் அதர்மம்" என்று சொல்வது ஞானிகளாடும் வார்த்தைகளல்ல. அவர்களை (பகவத்த்வேஷிகளையும், அவளிட பந்துக்களையும்) கொல்வதே உத்தம தர்மம். ஆகையால் பீஷ்மாதிகளின் ஸம்ஹாரம் பாபத்திற்கும், சோகத்திற்கும் காரணமென்று நீ சொல்வது உன்னிட அவிவேக மூலகமானதென்று ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லுகிறான் :—

ஸ்ரீ பகவானுவாச—

(மூ)—அசோச்யானன்வசோச ஸ்த்வம் ப்ரஜ்ஞா வாதா(ஓ)ம்ஸ்ச பா(ஹா)ஷஸே ||
க(ம)தாஸூகத க(ம)தாஸூம்ஸ்ச நானுசோசந்தி பண்டிதா: ||11||

(ப. உ.) அசோச்யான், அனு, அசோச:, த்வம், ப்ரஜ்ஞாவாதான், ச, பா(ஹா)ஷஸே | க(ம)தாஸூன், அக(ம)தாஸூன், ச, ந, அனுசோசந்தி, பண்டிதா: ||

(பார்த்த) = அர்ஜுனனே!
(யத:) = எக்காரணத்தால்
பண்டிதா: = ஞானிகள்
அக(ம) தாஸ்-ஏன், ச, (இவ) } = ப்ராணன் போகாமலிருக்கும் (பிணமூத்திருக்கும்) ஜனங்களை குறித்து எப்படி துக்கப்படுவதில்லையோ அப்படியே
க(ம) தாஸ்-ஏன் (ப்ரதி) } = ப்ராணனை துறந்திருக்கும் (மரணமடைந்திருக்கும்) ஜனங்களைக் குறித்து
ந, அனுசோசந்தி (அத:) } = துக்கப்படுவதில்லை.
= அக்காரணத்தினால்
(தே) = த்ரௌபதிகள்
(அசோச்யா:) = துக்கப்படுவதற்குத் தகாதவர்கள்.
த்வம் = நீ
(தான்) = அந்த
அசோச்யான் அன } = துக்கப்படுவதற்குத் தகாத த்ரௌபதிகளைக் குறித்து
அசோச: = துக்கப்படுகிறாய்.
ச = மற்றும்
ப்ரஜ்ஞா வாதான் } = உன் அறிவினாலே கற்பனை செய்யப்பட்ட (சாஸ்த்ரவிருத்தமான) வார்த்தைகளை
பாஷே } = ஆடுகிறாய் (இதுஸரியல்ல.)

(க. உ.) :—ஞானிகள் ப்ராணனை விடாமலிருக்கும் பந்துக்களைக் குறித்து எப்படி துக்கப்படுவதில்லையோ, அப்படியே பிராணனை விடுவதற்கு ஸித்த(ய)ராயிருக்கும் பந்துக்களைக் குறித்து துக்கப்படுவதில்லை. ஆகையால் இந்த பந்துக்கள் துக்கப்படுவதற்குத் தகுந்தவர்களல்ல. இத்தகைய பந்துக்களைக் குறித்து நீ துக்கப்படுகிறாயே. மற்றும் பகவத்வேஷிகளையும், அவர்களிடபந்துக்களையும் ஸம்ஹரிப்பதினால் பாவம் நேரிடுமென்று சொல்லுகிறாயே. இப்படிச் சொல்வது ஞானிகளுக்கு ஸம்மதமானதன்று. வெறும் **உன் புத்தியினால் கற்பிக்கப்பட்ட வார்த்தைகள்.** ஆகையால் நீ துக்கமும், பாபமும் நேரிடுகிறதென்று போர் செய்யாமலிருப்பது ஸரியல்ல.

அவதாரணிகை :—பந்துக்களான பீஷ்மத்ரோணாதிகள் போரில் நாசமடைகிறபடியால் அவர்கள் ஏன் துக்கத்திற்கு தகாதவர்கள்? என்கிற அர்ஜுனனின் ஆக்ஷேபத்திற்கு—பீஷ்மத்ரோணாதிகளின் ஸ்வரூபம் (ஜீவம்) நஷ்டமாகிறதென்று உன்

அபிப்ராயமா? அல்லது அவர்களின் ஸரீரம் நாஸமடைகிறதென்று அபிப்ராயமா? என்று விகற்பித்து, ஜீவன் நஷ்டமடைகிறானென்னும் முதல் விகற்பத்திற்குப் பதிலளிக்கிறான்.

(மூ)—ந த்வேவாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே ஜனாதி(யி)பா: ||
ந சைவ ந ப(ஹ)விஷ்யாம: ஸர்வே வயமத: பரம் ||12||

(ப. உ.) ந, து, ஏவ, அஹம், ஜாது, ந, ஆஸம், ந, த்வம், ந, இமே, ஜனாதி(யி)பா: | ந, ச, ஏவ, ந, ப(ஹ)விஷ்யாம:, ஸர்வே, வயம், அத:, பரம் ||

அஹம்	= நான் (கிருஷ்ணன்)
ஜாது	= எக்காலத்திலும்
ந, ஆஸம், து, (இதி), ந	= இருக்கவில்லை என்று இல்லை
(ஆஸம்) ஏவ	= இருந்தேயிருக்கிறேன்
த்வம்	= நீ (அர்ஜுனன்)
ந, (ஆஸீ:) இதி, ந	= இருக்கவில்லை என்று இல்லை (இருந்தேயிருக்கிறாய்)
இமே	= இந்த
ஜனாதி(யி)பா:	= ராஜர்கள்
(ந ஆஸ:: இதி) ந	= இருக்கவில்லை என்று இல்லை (இருந்தேயிருக்கிறார்கள்)
அத:பரம்	= இனிமேலும்
ஸர்வே	= ஸமஸ்தான
வயம்(அஹம் ச த்வம் ச ஏதே ச)	= நான் (கிருஷ்ணன்) நீ (அர்ஜுனன்) இந்த ராஜர்கள்
ந, பவிஷ்யாம:,(இதி), ந,	= முன் இருப்பதில்லை என்று இல்லை
(பவிஷ்யாம: ஏவ)	= இருந்தேயிருப்போம்.

(க. உ.):—ஓ அர்ஜுன! நான், நீ, இந்த ராஜர்கள் (ஸமஸ்த ஜீவர்களும்) பின்னல் இருக்கவில்லை என்று இல்லை, முன்னல் இருப்பதில்லை என்பதும் இல்லை, இப்பவோ இருக்கவே யிருக்கிறோம். (ஜீவர்கள் நித்யர்கள்) ஆகையால் பீஷ்மத்ரோணாதிகளின் ஸ்வரூபம் (ஜீவம்) நஷ்டமடைகிறதென்று துக:கப்படுகிறேன் என்று சொல்வது ஞானிகளின் பேச்சல்ல; ஆகையால் அவர்கள் (பீஷ்மாதிகள்) துக:கப்படுவதற்குத் தகுந்தவர்களல்லர்.

அவதாரணிகை:—பீஷ்மத்ரோணாதிகளின் ஜீவன் நாஶமடையாவிடினும், அவர்களிடை ஶரீரம் நாஶமடைவதினால் யுத்தம் செய்யமாட்டேனென்னும் இரண்டாம் விகற்பத்திற்கு பதிலளிக்கிறான்.

(மூ)—தே(ஹே)ஹிநோஸ்மின் யதா(யா) தே(ஹே)ஹே கௌமாரம்
யௌவனம் ஜரா ||
ததா(யா) தே(ஹே)ஹாந்தர ப்ராப்திர் தீ(யீ)ரஸ்தத்ர
ந முஹ்யதி ||13||

(ப. உ.) தேஹினः, அஸ்மின், யதா(யா), தேஹே, கௌமாரம், யௌவனம், ஜரா | ததா(யா), தேஹாந்தரப்ராப்திः, தீ(யீ)ரः, தத்ர, ந, முஹ்யதி||

(யதः)	= எக்காரணத்தால்
தே(ஹே)ஹினः	= ஜீவனுக்கு
அஸ்மின்	= இந்த
தே(ஹே) ஹே	= ஶரீரத்தில்
கௌமாரம்	= பால்யாவஸ்தை
யௌவனம்	= யௌவனாவஸ்தை
ஜரா	= ஜராவஸ்தை
(ஏதாஸாம்)	= இவைகளின்
(ப்ராப்திः)	= அடைதல்
யதா(யா)	= எப்படியோ
ததா(யா)	= அப்படியே
தே(ஹே) ஹாந்தர ப்ராப்திः	= வேறு ஶரீரத்தை அடைதலும்
(ப(ஹ)வதி)	= ஆகிறது.
(அதः)	= ஆகையால்
தீ(யீ)ரः	= புத்திமான்
தத்ர	= முன்னிருந்த ஶரீரம் போகிறதென்னும் விஷயத்தில்
ந, முஹ்யதி	= மோஹமடைவதில்லை.

(க. உ.):—ஶரீரத்தில் முதலிலிருந்த பால்யாவஸ்தை போயினும் எப்படி யௌவனாவஸ்தை வருகிறதோ, அது போயினும், ஜராவஸ்தை (கிழத்தனம்) எப்படி வருகிறதோ அப்படியே இந்த ஶரீரம் போயினும் வேறு ஶரீரம் வருகிறது. ஆகையால் பீஷ்மாதிகளின் ஶரீரம் நாஶமடைகிறதென்று நீ துःகப்படுவது யுக்தமல்ல.

அவதாரணிகை:—யுத்தம் செய்தால் யுத்தத்தில் பீஷ்மத்ரோணாதிகளின் சின்னபின்னங்களான ஶரீரங்களின் தர்ஶனத்தினால் துःகமுண்டாகிறது. ஆகையால் போர் புரியேன் என்னும் அர்ஜுனனின் ஆக்ஷேபத்திற்குப் பதிலளிக்கிறான்:—

(மூ)—மாத்ராஸ்பர்ஶாஸ்து கௌந்தேய ஶீதோஷ்ண ஸுகது:

கதா(ஃா):‖

ஆக(ம)மாபாயிநோநித்யாஸ்தாம் ஸ்திதிக்ஷஸ்வ பா(ஹா)

ரத ‖14‖

(ப. உ.) மாத்ராஸ்பர்ஶா:, து, கௌந்தேய, ஶீதோஷ்ணஸுகதுக் கதா (ஃா):, ஆக(ம)மாபாயின:, அனித்யா:, தான், திதிக்ஷஸ்வ, பாரத‖

கௌந்தேய	= அர்ஜுன!	ராஸுகது: கங்களைக்கொடுப்பவைகளா? (அல்ல) இது என்னுடையது என்னும் அபிமானத்துடன் கூடியுல்தான் ஸுகது: கங்களைக்கொடுக்கின்றன.
யது:	= எக்காரணத்தினால்	
ஶீதோஷ்ணஸுகது:கதா: (ஃா:)	= குளிர்ச்சி, வெப்பம் முதலிய விஷயங்களின் அனுபவத்வாரா ஸுகது:கங்களைக்கொடுக்கும்	
மாத்ராஸ்பர்ஶா:	= விஷயேந்திரிய ஸம்பந்தங்கள்	
ஆகமாபாயின:	= வருவதும் போவது மானவைகள், ஸ்வரூபத: அனித்யமான வைகள்	
*அநித்யா:	= (ப்ரவாஹரூபத்திலும்) அநித்யங்களாயிருப்பவைகள்	
அத:	= அக்காரணத்தினால்	
மாத்ராஸ்பர்ஶா: து (ஏவ)	= விஷயேந்த்ரியங்களின் ஸம்பந்தங்களே	
ஶீதோஷ்ணஸுகது:கதா: (கிம்)	= ஶீதோஷ்ணங்கள் முதலிய விஷயங்களின் அனுபவத்வா	
பா(ஹா)ரத	= அர்ஜுன!	
தான்	= சின்ன பின்னங்களான பீஷ்மாதிகளின் ஶரீரங்களுக்கும், உன் இந்த்ரியங்களுக்கும் உண்டாகும் ஸம்பந்தங்களை (ஸம்பந்தத்தில் உண்டான ஞானங்களை)	
திதிக்ஷஸ்வ	= அபிமானத்தை விட்டு ஸுகது:கங்களைக்கொடுக்காதவைகளாகச் செய்துகொள்.	

விஷய ஸம்பந்தங்கள் வருகின்றன போகின்றன என்று சொல்வதிலேயே அநித்யங்கள் என்று வ்யக்தமாய்க்கொண்டிருக்க, மறுபடியும்

(க. உ.) :—விஷயஸம்பந்தங்கள் தாங்கள் இருக்கும் எல்லா காலங்களிலும் ஸுகதுஃகங்களைக் கொடுக்காமல் சில காலங்களில் மாத்திரம் கொடுக்கின்றன, சில காலங்களில் கொடுப்பதில்லை. ஆகையால் வெறும் விஷய ஸம்பந்தங்கள் ஸுகதுஃகங்களைக் கொடுப்பனவுகளல்ல. அபிமானம் (இது என்னுடையதென்னும் ஞானம்) இருப்பவனுக்கே ஸுகதுஃகங்களைக் கொடுக்கின்றன. அபிமானத்தை விட்டவனுக்கு (நிரபிமானிக்கு) விஷயஸம்பந்தங்கள் ஸுகதுஃகங்களைக் கொடுப்பதில்லை என்பது எல்லாருக்கும் அனுபவஸித்தமானது. ஆகையால் நீ அபிமானத்தைவிட்டு நின்னபின்னமான பீஷ்மாதிகளின் தேஹஸம்பந்தத்தை (அவர்களின் ஶரீரங்களுக்கும் உன்னிட இந்த்ரியங்களுக்கும் உண்டாகும் ஸம்பந்தத்தினால் பிறந்த அறிவை) வீணக்கிக்கொள். (விக்ருதமான தேஹ இந்த்ரிய ஸம்பந்தத்தினால் துஃகமுண்டாகாமற் செய்துகொள்.)

விசாரம் :—'யம் ஹி ந வ்யதயந்த்யேதே' என்னும் 2-15 வது உத்தரஶ்லோகத்தில், ஏதே = இந்த விஷய ஸம்பந்தங்கள், யம் = யாரை, ந வ்யதயந்தி = துஃகப்படுத்துவதில்லையோ, அவன் மோக்ஷத்தை அடைவதற்கு ஸமர்த்தனாகிறானென்று பூர்வஶ்லோகத்தில் இருக்கும் 'திதிக்ஷஸ்வ' என்னும் பதத்தினால் சொல்லப்பட்ட அர்த்தத்தையே 'ந வ்யதயந்தி' துஃக முண்டாக்குவதில்லையோ என்று சொல்லப்பட்டிருப்பதால் (அநுவாதம் செய்திருக்கிறபடியால்) 'திதிக்ஷஸ்வ' என்னும் பதத்திற்கு ஸஹித்துக்கொள் (பொறுத்துக்கொள்) என்னும் அர்த்தத்தை ஶங்கராசார்யர் செய்தது யுக்தமாகாது. ஆகையால் அபிமானத்

அநித்யங்களென்று சொல்வதற்குக் காரணமென்னவெனில் :—ஆற்றின் ப்ரவாஹத்தின் தண்ணீரைப்போல் விடாமல் வந்துகொண்டும் போய்க்கொண்டு மிருப்பனவைகளென்றும், கிம்ஶாக வ்ருக்ஷத்தின் (முருக்கு மரத்தின்) புஷ்பங்களைப்போல் சில நாட்களிலிருப்பது சில நாட்களிலில்லாமலிருப்பது என்றும் அநித்யம் இரண்டு விதங்கள். அவைகளில் மாத்ரா ஸ்பர்ஶங்கள் (விஷயஸம்பந்தங்கள்) முதல்சொன்னபிரவாஹத்தின் நீரைப்போல் அநித்தியங்களல்ல வென்றறிவிப்பதற்காக மருபடியும் 'அநித்யாஃ' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

னத்த் துறந்து, துக்கமுண்டாக்காதவைகளாகச் செய்துகொள் ளென்னும் அர்த்தமே ஸரியானது.

அபிமான மிருந்தால்தான் ஸுகதுக்கங்கள் உண்டாகின்றன என்னும் விஷயத்தில் உதாஹரணம் :—

1. யஜமானனுக்கு தன்னிட மேலான குதிரையின்மேல் 'இது என்னுடையது' என்னும் அபிமான மிருக்கும்போது அந்தக் குதிரைக்குக் கொஞ்சம் இளைப்புண்டானதும் அதைக் கண்டு தான் வெகு துக்கப்படுகிறான். அக்குதிரையை பிறகுக்கு அதிக லாபத்திற்கு விற்ற பிறகு மருநொடியிலேயே அதே குதிரை உயிர்துறந்தாலும், அக்குதிரை என்னுடையது என்னும் அபிமானம் போய்விட்டிருப்பதினால் துக்கமாவதில்லை. அவ்வளவே யன்றி 'நான் குதிரையை விற்காமலிருந்தால் அதிக நஷ்டமுண்டா யிருக்கும், அத்ருஷ்டவிசேஷத்தினால் விற்றுயிற்று, எனக்கு விசேஷலாபம் கிடைத்தது என்று ஸந்தோஷத்தையுமடைகிறான்.

2. கலியாணமாவதற்குமுன் வதூவரர்களுக்கு பரஸ்பரம் தேஹத்தில் நோயுண்டாயினும் அவர்களுக்கு பரஸ்பர அபிமான மில்லாததினால் துக்கமுண்டாவதில்லை. அவர்களுக்கே பரஸ்பர லாபம் கிடைத்தபோதிலும் ஸுகமும் ஆவதில்லை. அவர்களுக்கு கலியாணமானதும் என்னுடையதென்னும் அபிமான முண்டா யிருப்பதினால் பரஸ்பர தேஹத்தில் நோய் உண்டானதும் துக்க முண்டாகிறது. ஆகையால் வெரும் விஷய ஸம்பந்தங்களே ஸுகதுக்கங்களுக்குக் காரணமாவதில்லை. அபிமானமே காரண மென்பது எல்லோருக்கும் அனுபவஸித்தமான விஷயமே.

மற்றும் 'நிர்மமோ நிரஹங்காரः' (கீதா. 2-21) முதலிய ச்லோகங்களில் இது என்னுடையதென்னும் அபிமானத்தை விடவேண்டுமென்று ஸ்ரீ கிருஷ்ணனே சொல்லியிருக்கிறான். ஆகையால் விஷயங்களை அனுபவிப்போன் அபிமானத்துடன் கூடி யிருந்தால்தான் விஷயஸம்பந்தங்கள் ஸுகதுக்கங்களுக்குக் காரண மாகின்றன.

அவதாரணிகை :—போர் செய்து அப்போரில் சின்னபின்னங்களான பீஷ்மத்ரோணாதிகளின் ஸரீர தர்ஸனத்தால் உண்டாகும் துர்கத்தை, அபிமானத்தைத் துறந்து துர்கமுண்டாகாமற் செய்துகொள்வதைவிட "ப்ரக்ஷாளனாத்தி பங்கஸ்ய தூராதஸ்பர்ஸனம் வரம்=சேற்றை மெரித்துக் காலலம்பிக்கொள்ளுவதைவிட சேற்றை மெரிக்காமலிருப்பதே மேலானது" என்னும் நியாயத்தை யனுஸரித்து, யுத்தத்தைச் செய்யாமலிருந்தால் பீஷ்மத்ரோணாதிகளின் தேகம் சின்னபின்னமாகாதிலுல் துர்கப்ரஸக்தியே இல்லாமற் போய்க்கொண்டிருக்க, யுத்தத்தைச் செய்து அதனாலுண்டாகும் பீஷ்மத்ரோணாதிகளின் சின்னபின்னமான தேஹ தர்ஸனத்திலுல் ப்ரஸக்தமான துர்கத்தை, அபிமானத்தை விட்டு ஏன் துர்கமுண்டாகாமற் செய்துகொள்ளவேண்டும்? என்கிற அர்ஜுனனின் ஆக்ஷேபத்திற்கு பதிலளிக்கிறான் :—

(மூ)—யம் ஹி ந வ்யதயந்த்யேதே புருஷம் புருஷர்ஷப(ஹ) ||
ஸம துர்கஸுகம் தீ(ரீ)ரம் ஸோம்ருதத்வாய கல்பதே ||15||

(ப. உ.) யம், ஹி, ந, வ்யதய(ந்தி)யந்தி, ஏதே, புருஷம், புருஷர்ஷப |
ஸமதுர்கஸுகம், தீ(ரீ)ரம், ஸ:, அம்ருதத்வாய, கல்பதே ||

புருஷர்ஷப	= புருஷஸ்ரேஷ்டனே அர்ஜுன!	ஸமதுர்கஸுகம்	= எப்படி துர்கம்புருஷார்த்தமல்லாதிலுல் அங்கீகரிக்கத் தகுந்ததல்லவோ (விரும்புவதற்கு யோக்யமல்லவோ) அப்படியே விஷயானுபவத்தால் கிடைக்கும் ஐஹிக ஸுகம் மோக்ஷத்திற்கு விரோதியானபடியால் அனுபாதேயமான (விரும்பத்தகாததாயுள்ள)
ஏதே	= விஷயங்களுக்கு இந்த்ரியங்களுடன் ஸம்பந்தங்கள் (அதனால் பிறந்த ஞானம்)		
தீ(ரீ)ரம்	= துர்கப்ரஸக்தி(காரணங்கள்) உண்டானாலும் அபிமானத்தைத் துறந்து துர்கமுண்டாகாமற் செய்துகொள்ளும் தைர்யமுடைய		

யம்	= எந்த	அம்ரு தத்வாய	= மோக்ஷத்திற்காக
புருஷம்	= அபிமான ஜீவனை (ஸ்த்ரீ களையும் புருஷர் களையும்)	கல்பதே	= ஸமர்த்தனாகிறான்.
ந வ்யத(ய) யந்தி	= துக்கப்படுத்துவதில்லையோ	ஹரி	= இவ்விஷயம் ப்ரமாணங்களிலால் ஸித்தமானது.
ஸ:	= அந்த புருஷன்		

(க. உ.):—தம்தம் வர்ணாச்ரமங்களுக்கு விதிதமான கர்மங்கள் அவச்ய கர்த்தவ்யங்களானதால், அந்த கர்மங்களைச் செய்யும் காலத்தில் துக்கத்திற்குக் காரணங்கள் உண்டானால் அபிமானத்தை விட்டு துக்கமுண்டாகாமற் செய்துகொண்டு தம் தம் வர்ணாச்ரம விஹிதமான கர்மங்களைச் செய்து பரமாத்மாவுக்கு ஓப்புவிப்பவனே ஞானத்தின் வழியாய் மோக்ஷத்தை யடைவனேயல்லாது, துக்கங்களுண்டாகுமென்கிற பயத்தினால் விஹிதமான கர்மங்களை விட்டவன் மோக்ஷத்தை யடைவதில்லை. நீ க்ஷத்ரியனுதலால் உனக்கு விதிதமான யுத்தத்தைச் செய்து, அந்த யுத்தத்தில் சின்னபின்னமான சரீரதர்சனத்தினால் உண்டாகும் துக்கத்தை, அபிமானத்தைத் துறந்து, அவைகளை வாமம்செய்துகொண்டு, ஞானத்தின் வழியாய் மோக்ஷத்தை யடையவேண்டுமேயல்லாது யுத்தத்தை விடக்கூடாது.

அவதாரணிகை :—பீஷ்மத்ரோணாதிகளின் ஸம்ஹாரத்தினால் குலதர்மாதிகள் நஷ்டமாய், அதிகமான துக்கங்களைக் கொடுக்கும் நரகம் கிடைப்பதினால் யுத்தம் செய்யமாட்டேனென்கிற அர்ஜுனனின் ஆக்ஷேபத்திற்கு—எப்படி சாஸ்த்ரத்தினால் நிஷித்தமான கர்மங்களினால் ஸுகமுண்டாவதில்லையோ, அப்படியே சாஸ்த்ர விதிதமான கர்மங்களினால் துக்கம் எப்பொழுதும் உண்டாவதில்லை என்று நிச்சயமாயிருப்பதினால் யுத்தமென்கிற கர்மம் க்ஷத்ரியர்களுக்கு ஸத் கர்மமானதினால் (சாஸ்த்ர ஸம்மதமானதினால்) இதனால் பாவம் துக்கம் இவைகளின் ப்ரஸக்தியே இல்லாததினால், "பாவமுண்டாவதினால் நான் யுத்தம் செய்யேன்" என்று சொல்வது அயுக்தமானதென்று பதிலளிக்கிறான்:—

(மூ)—நாஸதோ வித்யதே பா(ஹா)வோ நாபா(ஹா)வோ வித்யதே ஸத: ||
உப(ஹ)யோரபி த்ருஷ்டோந்தஸ்த்வனயோஸ்தத்வ த(ஃ)ர்ஸிபி (ஹி): ||16||

(ப. உ.) ந, அஸத:, வித்யதே, பா(ஹா)வ:, ந, அபா(ஹா)வ:, வித்யதே, ஸத: | உபயோ:, அபி, த்ருஷ்ட:, அந்த:, து, அனயோ:, தத்வ-த(ஃ)ர்ஸிபி (ஹி): ||

அஸத: = அஸாதுவான (துஷ்டமான) கர்மங்களினால்
பா(ஹா)வ: = ஸுகம்
ந, வித்யதே = இல்லை.
ஸத: = ஸாதுவான (ஸாஸ்த்ர விஹிதமான) கர்மங்களினால்
அபா(ஹா)வ: = நாஸம் (து:கம்)
ந, வித்யதே = இல்லை.
தத்வத(ஃ)ர்ஸிபி: = தத்வ ஞானிகளால்
அனயோ: = இந்த
உப(ஹ)யோ: = ஸத்கர்மங்களினால் பாபமில்லை என்பது துஷ்கர்மங்களால் ஸுகமில்லை என்பது இவ்விரு விஷயங்களின்
அந்த:, அபி = நிர்ணயமாயினும் (நிர்ணய மூலகமான ஸம்ப்ரதாயமாயினும்)
த்ருஷ்ட: = பார்க்கப் பட்டதாய் இருக்கிறது.

அவதரணிகை :—ஈஸ்வரனைப் போல் ஜீவனும் நித்யனதலால் அந்த ஈஸ்வரனின் ப்ரீதிக்காக ஜீவன் என் கர்மத்தைச் செய்யவேண்டும் என்னும் அர்ஜுனனின் மூலகதமான ஸங்கைக்கு 17, 18 இவ்விரண்டு ஸ்லோகங்களினால் பதில் சொல்லுகிறான் :—

(மூ)—அவிநாஸி து தத் வித்தி(யி) யேன ஸர்வமித(ஃ)ம் ததம் ||
விநாஸ மவ்யயஸ்யாஸ்ய ந கஸ்சித் கர்து மர்ஹதி ||17||

(ப. உ.) அவிநாஸி, து, தத், வித்தி(யி), யேன, ஸர்வம், இதம், ததம்| விநாஸம், அவ்யயஸ்ய, அஸ்ய, ந, க:, சித், கர்தும், அர்ஹதி ||

தத் = அந்த பரமாத்மா
அவிநாஸி து (ஏவ) (இதி) = ஸ்வரூப நாஸமும், தோஷ நாஸமும், து:க ப்ராப்தி, அபூர்ணத்வம் என்னுமிந்நான்கு
யேன = எந்த பரமாத்மாவினால்
இதம் ஸர்வம் = இவ்வெல்லா ஜகத்தும்
ததம் = வ்யாப்தமாயிருக்கிறதோ

வித நாமங்களுமற்றவனென்று

விந்தி(யி) = தெரிந்துகொள்

அவ்யயஸ்ய = நாமமற்ற

அஸ்ய = இந்த பரமாத்மாவின்

விநாமம் = நாமத்தை

கர்தும் = செய்வதற்கு

கஃ, சித் = எவனும்

ந, அர்ஹதி = ஸமர்த்தனல்லவதில்லை.

(மூ)—அந்தவந்த இமே தே(ஹே)ஹா நித்யஸ்யோக்தா: ஶரீரிண: ॥
அனாஶினோப்ரமேயஸ்ய தஸ்மாத் யுத்யஸ்வ பாரத ॥18॥

(ப. உ.) அந்தவந்த:, இமே, தேஹா:, நித்யஸ்ய, உக்தா:, ஶரீரிண:। அனாஶின:, அப்ரமேயஸ்ய, தஸ்மாத், யுத்யஸ்வ, பாரத ॥

நித்யஸ்ய = நித்யனான

ஶரீரிண: = ஶரீரமுடைய ஜீவர்களின்

இமே = இந்த கண்ணுக்குப் புலப்படும்

தேஹா: = ஶரீரங்கள்

அந்தவந்த: (இதி) = நாமமுள்ளவைகளென்று

உக்தா: = சொல்லப் பட்டிருக்கின்றன.

தஸ்மாத் = பரமாத்மா இப்படி நான்குவித மான நாமமற்றவன், ஜீவன் ஶரீரநாமமுடையவன், ஆகையால் பரமாத்மா ஸர்வோத்தமனாதலால்

பாரத = அர்ஜுனனே!

அனாஶின: = நான்குவித நாமங்களற்ற

அப்ரமேயஸ்ய = அப்ரமேயனை (அளவிடப்படாத) பரமாத்மாவின்

(பூஜார்த்தம்) = பூஜைக்காக

யுத்யஸ்வ = யுத்தத்தைச் செய்.

17, 18, ஶ்லோகங்களின் கருத்து:—பரமாத்மா நான்குவித மான நாமமற்றவன். ஜீவன் தேஹ நாமமுள்ளவன். ஆகையால் பரமாத்மா ஸர்வோத்தமன், மோக்ஷாதி புருஷார்த்தங்களைக் கொடுப்பவனாகையால் 'ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மானவ:' (கீதா 18-46) என்று சொல்லியுள்ளவாறு என்னுடைய (ஶ்ரீ கிருஷ்ணனின்) பூஜைக்காக யுத்தத்தைச் செய்.

அவதரணிகை:—சைத்ரன் மைத்ரனைக் கொன்றான், மைத்ரன் சைத்ரனால் கொல்லப்பட்டான் என்று வ்யவஹாரமிருக்க, ஜீவன் சாவதில்லை, நித்யன் என்று சொல்வது எப்படிப் பொருந்தும் என்னும் அர்ஜுனனின் ஆக்ஷேபத்திற்கு, மைத்ரன் (ஜீவன்)

மரணத்தை யடைபவனல்ல, சைத்ரன் (ஜீவன்) ஸ்வதந்த்ரமாய் கொல்பவனுமல்ல, ஆகையால் சைத்ரன் கொல்லுகிறான், மைத்ரன் கொல்லப்படுகிறான் என்று வ்யவஹரிப்பவர்கள் அஜ்ஞானிகள் என்று பதில் அளிக்கிறான் :—

(மூ)—ய ஏநம் வேத்தி ஹந்தாரம் யஶ்சைனம் மன்யதே ஹதம் ||
உபௌ(ஹௌ) தௌ ந விஜானீதௌ நாயம் ஹந்தி ந ஹன்யதே ||19||

(ப. உ.) யः, ஏனம், வேத்தி, ஹந்தாரம், யः, ச, ஏனம், மன்யதே, ஹதம் | உபௌ(ஹௌ), தௌ, ந, விஜானீதः, ந, அயம், ஹந்தி, ந, ஹன்யதே ||

யः	= எவன்
ஏனம்	= இந்த ஜீவனை
ஹந்தாரம்	= மற்றொரு ஜீவனை ஸ்வதந்த்ரமாகக் கொல்பவனென்று
வேத்தி	= தெரிந்துகொள்ளுகிறானே
ச	= மற்றும்
யः	= எவன்
ஏனம்	= இந்த ஜீவனை
ஹதம்	= கொல்லப்பட்டவனென்று
மன்யதே	= தெரிந்து கொள்கிறானே
தௌ, உபௌ	= அவ்விருவரும்
ந, விஜானீதः	= அஜ்ஞானிகள் (ஏனென்றால்)
அயம்	= இந்த ஜீவன் (அஸ்வதந்த்ரனாகையால் ஸ்வதந்த்ரனுமல்ல)
ந, ஹந்தி	= கொல்பவனல்ல.
(ஜீவः)	= ஜீவன்
ந, ஹன்யதே	= ஸ்வரூபத: நித்யனாதலால் கொல்லப்படுபவனல்ல.

அவதாரணிகை—ஜீவன் ஸ்வரூபத: பிறப்பதில்லை, இறப்பதுமில்லை என்னும் விஷயத்தில் காடகோபனிஷத்தின் ஸம்மதியைச் சொல்லுகிறான்:—

(மூ)—ந ஜாயதே ம்ரியதே வா கதா(ஆ)சின்னாயம்
பூ(ஹ)த்வா ப(ஹ)விதா வா ந பூ(ஹ)யः||
அஜோ நித்யः ஶாஶ்வதோயம் புராணோ
ந ஹன்யதே ஹன்யமானே ஶரீரே ||20||

(ப. உ.) ந, ஜாயதே, ம்ரியதே, வா, கதா(ஆ)சித், ந, அயம், பூ(ஹ)த்வா, ப(ஹ)விதா, வா, ந, பூ(ஹ)யः | அஜः, நித்யः, ஶாஶ்வதः, அயம், புராணः, ந, ஹன்யதே, ஹன்யமானே, ஶரீரே||

அயம் = இந்த ஜீவன்
ந, ஜாயதே = (ஸ்வரூபத்திலு
ல்) பிறப்பதில்லை.
வா = மற்றும்
ந, ம்ரியதே = (ஸ்வரூபத்திலுல்)
இறப்பதுமில்லை.
பூ(ஹூ)த்வா, வா(ஏவ) } = எல்லாவிதத்திலும் இருந்தே
பூ(ஹூ)ய: = மற்றும்
ப(ஹ)விதா = பிறப்பவன்
ந = அல்ல (பிறப்பவன் என்னும் வ்யவஹாரத்திற்கு விஷயனல்ல)
கிம், து புராண: (புரம் அணதி புராண:) } = வேறென்ன வெ = ஸரீரத்தையடைபவன் (ஈஸ்வரனின் ஸ்வரூபமும், தேஹமும், நித்யம், ஜீவனின் ஸ்வரூபமும்

நித்யமேயாயினும் அவனிடதே ஹம்பிறக்கிறது. ஆயினும் ஈஸ்வரனைப் போல் எல்லா விதத்திலும் இருந்தே பிறந்தவன் என்னும் வ்யவஹாரத்திற்குவிஷயனல்ல)
அஜ: = ஸ்வரூபத: பிறப்பில்லாதவன்.
நித்ய: = ஸ்வரூபத: நாஸமில்லாதவன்
ஸாஸ்வத: } = ஸ்வரூபத: விகாரமற்றவன்.
ஸாரீர = தேஹம்
ஹன்ய-மானே (அபி) } = நஷ்டமாயினும்
ந, ஹன்யதே } = நாஸமடைபவனல்ல.

(க. உ.):—காடகோபனிஷத்தில் "தேஹம் நஷ்டமாயினும், ஜீவன் நாஸமடைவதில்லை, ஜீவன் நித்யன், நிர்விகாரன்" என்று சொல்லியிருப்பதினால், ஜீவன் மரணமடைகிறான், மற்றும் ஜீவனைக் கொல்லுகிறார்கள் என்று வ்யவஹரிப்பவர்கள் அஜ்ஞானிகளென்று முதலில் சொல்லியது ப்ராமாணிகமானது.

(மூ)—வேதா(ஆ)விநாசினம் நித்யம் ய ஏனமஜ மவ்யயம்॥
கத(ய)ம் ஸ புருஷ: பார்த்த(ய) கம் கா(வா)தயதி ஹந்தி
கம் ॥21॥

(ப. உ.) வேத, அவிநாசினம், நித்யம், ய:, ஏனம், அஜம், அவ்யயம் |
கத(ய)ம், ஸ:, புருஷ:, பார்த்த, கம், கா(வா)தயதி, ஹந்தி, கம் ॥

பார்த்த = அர்ஜுன!
ய: = எவன்
ஏனம் = இந்த ஜீவனை
நித்யம் = வளருகிறவனல்லவென்றும்
அவ்யயம் = க்ஷீணமடைபவ

னல்லவென்றும்
அஜம் = பிறப்பில்லாதவ
னென்றும்
(அத ஏவ) = அதிலேயே
அவிக்ரு } = நாசரஹித
பரினம் } னென்றும்
வேத = தரித்து
கொள்கிறதே
ஸ:, புருஷ: = அந்த மனிதன்
கத(ம்)ம் = எப்படி
கம் = யாரை
கா(வா)தயதி = ஸம்ஹாரம்
செய்விப்பவனை
வான்? (ஆவ
தில்லை)
கத(ம்)ம் = எப்படி
கம் = யாரை
ஹந்தி = கொல்வான்!
(கொல்வதில்லை.)

அவதரணிகை:—ஜீவன் எப்படி பழையதான வஸ்த்ரங்களை விட்டு, புதியதான வஸ்த்ரங்களை ஸ்வீகரிக்கிறதே, அப்படியே பழையதான தேஹத்தை விட்டு புதியதான சரீரத்தை அடைவதினால் பீஷ்மத்ரோணாதிகளின் சரீரம் நாசமடைகிறதென்று துக:கப்படக்கூடாது என்று சொல்லுகிறான்:—

(மூ)—வாஸாம்ஸி ஜீர்ணானி யதா(ஃ)ம் விஹாய
நவானி க்ருஹ்ணாதி நரோபராணி ||
ததா(ஃ) சரீராணி விஹாய ஜீர்ணான்-
யன்யானி ஸம்யாதி நவானி தே(ஓ)ஹீ ||22||

(ப. உ.) வாஸாம்ஸி, ஜீர்ணானி, யதா(ஃ)ம், விஹாய, நவானி, க்ருஹ்ணாதி, நர:, அபராணி| ததா(ஃ)ம், சரீராணி, விஹாய, ஜீர்ணானி, அன்யானி, ஸம்யாதி, நவானி, தேஹீ ||

நர: = மனிதன்
யதா(ஃ)ம் = எப்படி
ஜீர்ணானி = பழையதான
வாஸாம்ஸி = வஸ்த்ரங்களை
விஹாய = விட்டு
நவானி = புதியதான
அபராணி = வேறு வஸ்த்ரங்களை
க்ருஹ்ணாதி = எடுத்துக்கொள்கிறதே
ததா(ஃ)ம் = அப்படியே
தே(ஓ)ஹீ = ஜீவன்
ஜீர்ணானி = பழையதான
சரீராணி = தேஹங்களை
விஹாய = விட்டு
நவானி = புதியதான
அன்யானி (சரீராணி) = வேறு தேஹங்களை
ஸம்யாதி = அடைகிறான்.

(மூ)—நைனம் சி(ஹி)ந்தந்தி சஸ்த்ராணி நைனம் த(ஃ)ஹதி பாவக:||
ந சைனம் க்லேத(ஃ)யந்த்யாபோ ந சோஷயதி மாருத: ||23||

(ப. உ.) ந, ஏனம், சி(ஹி)ந்தந்தி, சஸ்த்ராணி, ந, ஏனம், த(ஃ)ஹதி, பாவக:| ந, ச, ஏனம், க்லேத(ஃ)யந்தி, ஆப:, ந, சோஷயதி, மாருத: ||

ஸஸ்த்ராணி = ஆயுதங்கள்
ஏனம் = இந்த ஜீவனை
ந சி(ஹி)ந்தந்தி = வெட்டுவதில்லை.
பாவக: = அக்னி
ஏனம் = இந்த ஜீவனை
ந, தஹதி = ஸுடுவதில்லை.
ஆப: = ஜலம்
ஏனம் = இந்த ஜீவனை
ந க்லேதயந்தி = நனைக்கிறதில்லை.
ச = மற்றும்
மாருத: = காற்று
ந, ஸோஷயதி = உலர்த்துவதில்லை.

(மூ)—அச்சே(ஹே)த்யோய மதா(ஔ)ஹ்யோய மக்லேத்யோஸோஷ்ய ஏவ ச||

நித்ய: ஸர்வகதஸ்தா(ஔ)ணுரசலோயம் ஸனாதன: ||24||

(ப. உ.) அச்சே(ஹே)த்ய:, அயம், அதா(ஔ)ஹ்ய:, அயம், அக்லேத்ய:, அஸோஷ்ய:, ஏவ, ச| நித்ய:, ஸர்வக(ம)த:, ஸ்தா(ஔ)ணு:, அசல:, அயம், ஸனாதன:.

அயம் = இந்த ஜீவன்
அச்சே(ஹே)த்ய: = வெட்டப்படுபவனல்ல.
அயம் = இந்த ஜீவன்
அதா(ஔ)ஹ்ய: = சுடப்படுபவனல்ல.
அக்லேத்ய: = நனைக்கப்படுபவனல்ல.
ச = மற்றும்
அஸோஷ்ய:, ஏவ நித்ய: = உலர்த்தப்படுபவனுமல்ல. நித்யன்.
ஸர்வகத ஸ்தாணு: (ஸர்வகத ஸ்தஸ்சா ஸௌ அணுஸ்ச ஸர்வகத ஸ்தாணு:) = எல்லா வற்றிலுமிருக்கும் பரமாத்மாவிடத்தில் இருப்பவன். மற்றும் அணுரூபமுள்ளவன்.
அசல: = பாரதந்தர்யாதிதர்மங்களில் விடப்படாதவன்.
அயம் ஸனாதன: = அனாதியாயிருப்பவன்.

அவதாரணிகை :—"ஈஸ்வரன் எல்லாவற்றிலும் இருப்பவனாயின் நமக்கு காணப்படவேண்டுமல்லவா? காணப்படுவதில்லையாதலால் மேற் ஸ்லோகத்தில் ஈஸ்வரன் (பரமாத்மா) ஸர்வகதன் என்று சொல்லியது பொருந்துவதில்லை." என்னும் அர்ஜுனனிடம் ஆக்ஷேபத்திற்கு ஸமாதா(யா)னம் சொல்லுகிறான்:—

(மூ)—அவ்யக்தோய மசிந்த்யோய மவிகார்யோய முச்யதே ||
தஸ்மாதேனம் விதித்வைவம் நானுஶோசிது மர்ஹஸி ||25||

(ப. உ.) அவ்யக்த:, அயம், அசிந்த்ய:, அயம், அவிகார்ய:, அயம், உச்யதே | தஸ்மாத், ஏனம், விதித்வா, ஏவம், ந, அனுஶோசிதும், அர்ஹஸி ||

அயம் = பின் ஸ்லோகத்தில் 'ஸர்வகத:' என்னும் பதத்தினால் சொல்லிக் கொள்ளப் பட்ட பரமாத்மா

அவ்யக்த: = தன்னிச்சையில்லாமல் பிறரால் கண்டு கொள்ளத் தக்கவனல்ல.

அயம் = இந்த பரமாத்மா

அசிந்த்ய: = எண்ணமுடியாத ஶக்தியுடையவன்.

அவிகார்ய: = அசிந்த்ய ஶக்தி நாஶமென்னும் விகாரமற்றவன் (பரமாத்மா எப்பொழுதும் யோசிக்க முடியாத வல்லமையுடையவனல்லவா? அதனால் எல்லாவற்றிலும் இருந்தவனையும் காணப்படாமலிருக்கலாம். ஆகையால் அவன் 'ஸர்வகத' னென்று சொல்லியது யுக்தமானதே).

தஸ்மாத் = ஜீவனும் நித்யனாதலால்

ஏனம் = இந்த ஜீவனை

ஏவம் = நித்யனென்று

விதித்வா = தெரிந்து கொண்டு

(த்வம்) = நீ

அனுஶோசிதும் } = துக்கப்படுவதற்கு

ந அர்ஹஸி } = அர்ஹனல்ல. (துக்கமடையாதே.)

(மூ)—அத(ஶ) சைனம் நித்யஜாதம் நித்யம் வா மன்யஸே ம்ருதம் ||
ததா(ஶா)பி த்வம் மஹாபா(வா)ஹோ நைனம் ஶோசிது மர்ஹஸி ||26||

(ப. உ.) அத(ஶ), ச, ஏனம், நித்யஜாதம், நித்யம், வா, மன்யஸே, ம்ருதம் | ததா(ஶா), அபி, த்வம், மஹாபா(வா)ஹோ, ந, ஏனம், ஶோசிதும், அர்ஹஸி ||

மஹா, பாஹோ = அதிக பலசாலியான அர்ஜுனன்!
த்வம் = நீ
ஏனம் = இந்த ஜீவனை
நித்யஜாதம் = நியமமாக சரீர ஸம்பந்த ரூபமான பிறப்பு, புள்ளவனென்றும்
வா = மற்றும்
க:, சித், அபி } = எவனுமிலும்
அகர்மக்ருத் (ஸன்) } = கர்மங்களைச் செய்யாதவனுய்
ஜாது = எப்பொழுதும்
க்ஷணம் = அற்பகாலமாகிலும்
ந, திஷ்டதி = இருப்பதில்லை.
ஹி = ப்ரஸித்தம்
அவஸ: (அவஸன) } = விஷ்ணுவின் வசனுன
ஸர்வ:(ஸர்வேண) } = ஸகல ஜனங்களால்
ப்ரக்ருதிஜை: } = ப்ரக்ருதி கார்யங்களான
குண: = ஸத்வரஜஸ்தமோ குணங்களால்
கர்ம = கர்மம்
காரியதே = செய்விக்கப் படுகிறது.

(மூ)—கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய ஆஸ்தே மனஸா ஸ்மரன் ||
இந்த்ரியார்த்தான் விமூடாத்மா மித்(தீ)யாசாரஸ்ஸ உச்யதே||6||
யஸ்த்விந்த்ரியாணி மனஸா நியம்யாரப(ஹ)தேர்ஜுன ||
கர்மேந்த்ரியை: கர்மயோக மஸக்தஸ்ஸ விசிஷ்யதே || 7 ||

(ப. உ.) கர்மேந்த்ரியாணி, ஸம்யம்ய, ய:, ஆஸ்தே, மனஸா, ஸ்மரன்| இந்த்ரியார்த்தான், விமூடாத்மா, மித்யாசார:, ஸ:, உச்யதே|| ய:, து, இந்த்ரியாணி, மனஸா, நியம்ய, ஆரப(ஹ)தே, அர்ஜுன | கர்மேந்த்ரியை:, கர்மயோக(ர்)ம், அஸக்த:, ஸ:, விசிஷ்யதே ||

ய: = யார்
கர்மேந்த்ரியாணி } = கர்மங்களைச் செய்யும் வாய், கை, கால் முதலிய இந்த்ரியங்களை
ஸம்யம்ய = அடக்கிக் கொண்டு (கர்மங்களைச் செய்யாமல்)
இந்த்ரியார்த்தான் } = கண் முதலிய இந்த்ரியங்களுக்கு விஷயங்களான ஸ்த்ரீ, ரூப, அன்ன, ரஸாதிகளை
மனஸா = மனதினல்
ஸ்மரன் (ஸன்) } = நினைப்பவனுய்
ஆஸ்தே = இருக்கிறுனே
ஸ: = அவன்
விமூடாத்மா = ப்ராந்தன்;
மித்யாசார: = டாம்பிகன் (வஞ்சகன்)

இதி = என்று
உச்யதே = சொல்லிக் கொள்ளப்படுகிறான்
அர்ஜுன = ஓ அர்ஜுன!
ய:, து = எவனுகிலும்
இந்த்ரியாணி = சக்ஷுராதி ஞானேந்த்ரியங்களை
மனஸா = மனதினல்
நியம்ய = ஸ்வாதீனப்படுத்திக் கொண்டு (சக்ஷுராதி இந்த்ரியங்களை துர்விஷயங்களைக் குறித்துப் போகாமற் செய்து கொண்டு)
அஸக்த: = பலாபேக்ஷை

யற்றவனுய்
கர்மேந்த்ரியை: = கர்மங்களுக்குச் சாதகமான வாக் பாணி பாதாதி இந்த்ரியங்களால்
கர்மயோகம் = தம் தம் வர்ணஸ்ரமங்களுக்குத் தகுந்த யுத்தாதி கர்மரூப ஞானே பாயத்தை
ஆரப(ஹ)தே = செய்பவனுகிறானே
ஸ: = அவன்
விசிஷ்யதே = கர்மத்தைத் செய்யாதவனை விட உத்தமனுகிறன்.

(மூ)—நியதம் குரு கர்ம த்வம் கர்ம ஜ்யாயோ ஹ்யகர்மண: ||
சரீரயாத்ராபி ச தே ந ப்ரஸித்(தி)யேத(ஈ)கர்மண: || 8 ||

(ப. உ.) நியதம், குரு, கர்ம, த்வம், கர்ம, ஜ்யாய:, ஹி, அகர்மண: |
சரீரயாத்ரா, அபி, ச, தே, ந, ப்ரஸித்(தி)யேத், அகர்மண: ||

ஹி = எக்காரணத்தால்
அகர்மண: = கர்மத்தைச் செய்யாமலிருப்பதைவிட
கர்ம = கர்மத்தைச் செய்வது
ஜ்யாய: = ச்ரேஷ்டமானதோ
(அத:) = அக்காரணத்தால்
த்வம் = நீ
நியதம் = உனக்கு விதித

கர்மம் = யுத்தமென்னும் கர்மத்தை
குரு = செய்.
ச = மற்றும்
அகர்மண: = கர்மத்தைச் செய்யாமலிருக்கும்
தே = உனக்கு
சரீரயாத்ரா, அபி = தேஹ ரக்ஷணை கூட
ந, ப்ரஸித்(தி)யேத் = ஸித்திக்காது.

(மூ)—யஜ்ஞார்த்தாத் கர்மணோன்யத்ர லோகோயம் கர்மப(ஹ)ந்த(ய)ன: ||
தத(ஈ)ர்த்தம் கர்ம கௌந்தேய முக்தஸங்க(ஹ)ஸ்ஸமாசர || 9 ||

(ப. உ.) யஜ்ஞோர்த்தாத், கர்மணஃ, அன்யத்ர, லோகஃ, அயம், கர்மப(ன்)ந்த(ய)னஃ | தத(ஏ)ர்த்தம், கர்ம, கௌந்தேய, முக்தஸங்க(ஸ்)ஃ, ஸமாசர ||

கௌந்தேய	= அர்ஜுன !
(யதஃ)	= எக்காரணத்தால்
யஜ்ஞோர்த்தாத்	= யஜ்ஞார்த்தமாக பரமாத்மாவின் உத்தேசமாயுள்ள
கர்மணஃ	= கர்மத்தைதவிட
அன்யத்ர	= இதரமான கர்மங்களில் (காம்ய கர்மங்களில்)
(ப்ரவ்ருத்தஃ)	= முயற்சியுடைய
அயம் லோகஃ	= இந்த மனிதன்
கர்மபந்த(ய)னஃ	= கர்மத்தை ப(ன்)ந்த(ய) கமாயுடையவ
முக்தஸங்கஃ(ஸ்ஃ) (ஸன்)	= பலத்திலை யற்றவனாய்
ததர்த்தம்	= அந்த பரமாத்மாவின் உத்தேசமாக
கர்ம	= உனக்கு (க்ஷத்ரியனுக்கு) விதிதமான யுத்தாக்ய கர்மத்தை
ஸமாசர	= செய்.

(மூ)—ஸஹயஜ்ஞாஃ ப்ரஜாஃ ஸ்ருஷ்ட்வா புரோவாச ப்ரஜாபதிஃ ||
அனேன ப்ரஸவிஷ்யத்(யி)வமேஷ வோஸ்த்விஷ்டகாம
து(யூ)க் || 10 ||

(ப. உ.) ஸஹயஜ்ஞாஃ, ப்ரஜாஃ, ஸ்ருஷ்ட்வா, புரா, உவாச, ப்ரஜாபதிஃ; அநேந, ப்ரஸவிஷ்யத்(யி)வம், ஏஷஃ, வஃ, அஸ்து, இஷ்டகாமது(யூ)க் ||

ப்ரஜாபதிஃ	= ப்ரஜாபதியானவர்
புரா	= பூர்வகாலத்தில்
ஸஹயஜ்ஞாஃ	= யஜ்ஞத்தோடு கூடிய
ப்ரஜாஃ	= ப்ரஜைகளை
ஸ்ருஷ்ட்வா	= ஸ்ருஷ்டித்து
உவாச	= சொன்னார் (என்தவார்த்தையைச் சொன்னவென்றால்அதை சொல்லுகிறார்.)
யூயம்	= நீங்கள்
அனேன	= இந்த யாகத்
தேன	= அதனால்
(இஷ்டகாமான்)	= இஷ்டமான விஷயங்களை
ப்ரஸவிஷ்யத்வம்	= அடையுங்கள் (ஸம்பாதித்துக் கொள்ளுங்கள்)
ஏஷஃ	= இந்த யஜ்ஞம்
வஃ	= உங்களுக்கு
இஷ்டகாமது(யூ)க்	= விரும்பும் விஷயங்களின் போகங்களைகொடுப்பவைகளாய்
அஸ்து	= ஆகட்டும்.

(மூ)—தே(ஏ)வான் பா(ஹா)வயதானேன தே தே(ஏ)வா பா(ஹா)வ யந்து வ: ||
பரஸ்பரம் பா(ஹா)வயந்த: ஸ்ரேய: பரமவாப்ஸ்யத(ழ) || 11 ||

(ப. உ.) தே(ஏ)வான், பா(ஹா)வயத, அனேன, தே, தே(ஏ)வா:, பா(ஹா)வயந்து, வ: | பரஸ்பரம், பா(ஹா)வயந்த:, ஸ்ரேய:, பரம், அவாப்ஸ்யத(ழ) ||

அனேன = இந்த யஜ்ஞத்தால்
தே(ஏ)வான் = தேவதைகளை
பா(ஹா)வயத = பூஜியுங்கள் (த்ருப்தி படுத்துங்கள்)
தே, தேவா: = அந்த தேவதைகள்
வ: = உங்களை
பா(ஹா)வயந்து = இஷ்டமான பலன்களை கொடுத்து ஸந்தர்ப்பித்துவாராக.
ஏவம் = இவ்விதமாக
பரஸ்பரம் = ஒருவருக்கொருவர்
பா(ஹா)வயந்த: = த்ருப்தி படுத்திக்கொண்டவராய்
பரம் = உத்தமமான
ஸ்ரேய: = ஸ்ரேயஸ்ஸை
அவாப்ஸ்யத(ழ) = அடையுங்கள்.

(மூ)—இஷ்டான் போ(ஹோ)கான் ஹி வோ தேவா தா(ஆ)ஸ்யந்தே யஜ்ஞபா(ஹா)விதா: ||
தைர்த(ஈ)த்தானப்ரதா(ஆ)யைப்(ஹீ)யோ யோ பு(ஹூ)ங்க்தே ஸ்தேன ஏவ ஸ: ||12||

(ப. உ). இஷ்டான், போ(ஹோ)கான், ஹி, வ:, தேவா:, தா(ஆ)ஸ்யந்தே, யஜ்ஞபா(ஹா)விதா: | தை:, த(ஈ)த்தான், அப்ரதாய, ஏப்(ஹீ)ய:, ய:, பு(ஹூ)ங்க்தே:, ஸ்தேன:, ஏவ, ஸ: ||

யஜ்ஞபா(ஹா)விதா: = யாகத்தால் பூஜிக்கப் பட்ட
தே(ஏ)வா: = தேவர்கள்
வ: = உங்களுக்கு
இஷ்டான் = ப்ரியமான
போ(ஹோ)கான் = போக்யமான விஷயங்களை
தா(ஆ)ஸ்யந்தே = கொடுப்பார்கள்.
ஹி = ப்ரஸித்தம்.
ய: = எவன்
தை: = அந்த தேவர்களால்
த(ஈ)த்தான் = கொடுக்கப் பட்ட அன்னதிகளை
ஏப்(ஹீ)ய: = அந்த தேவர்களுக்கு
அப்ரதாய = கொடுக்காமல்

புங்க்தே	= அனுபவிக்கிறார்கள்	ஸ்தேன: ஏவ }	= திருடனையா வான்.
ஸ:	= அவன்		

(மூ)—யஜ்ஞ ஶிஷ்டாஶினஸ் ஸந்தோ முச்யந்தே ஸர்வ கில்பி

(வி)ஷை: ||

பு(ஹ்ம)ஞ்ஜதே தே த்வக(வ)ம் பாபா யே பசந்த்யாத்ம கார

ணத் ||13||

(ப. உ.) யஜ்ஞ-ஶிஷ்டா-ஶின:, ஸந்த:, முச்யந்தே, ஸர்வகில்பிஷை: | பு(ஹ்ம)ஞ்ஜதே, தே, து, அக(வ)ம், பாபா:, யே, பசந்தி, ஆத்மகாரணாத் ||

(ஜ்ஞ:)	= ஜனங்கள்	ஆத்ம காரணத் }	= தேவதேதாத்தே ஶமின்றி தங்க ளுக்காகவே
யஜ்ஞ-	= தேவர்களால் கொடுக்கப் பட்ட அன்ன திகளால் யாகத் தைச் செய்து	பசந்தி	= சமத்துக் கொள்ளுகிறார் களோ
ஶிஷ்ட-	= மிகுதியை	தே	= அவர்கள்
அஶின:	= உண்பவராய்	பாபா:	= பாவிகளாவர்.
ஸர்வ கில்பிஷை: }	= ஸகல பாவங் களினின்றும்	அகம் து }	= பாவத்தையே (பாபகாரண மான உணவை யே)
முச்யந்தே	= முக்தராகிறார் கள்.	புஞ்ஜதே	= புசிக்கிறார்கள்.
யே	= யார்		

(க. உ.):—இவ்விதமாக ப்ரஜாபதியானவர் யஜ்ஞங்களை ஸ்ருஷ்டித்து 'நீங்கள் யஜ்ஞத்தால் தேவர்களை ஸந்தோஷப்படுத்துங்கள். அந்த தேவர்கள் நீங்கள் செய்த யஜ்ஞத்தால் த்ருப்தராய், உங்களுக்கு வேண்டிய இஷ்டங்களைக் கொடுப்பார்கள். நீங்கள் தேவர்களால் கொடுக்கப்பட்ட அன்னதிகளை அவர்களுக்கு யஜ்ஞத்தின் மூலமாகக் கொடுக்காமற் போனால் உங்களுக்கு பாபம் ஸம்பவிக்கிறது. தேவர்களுக்குக் கொடுத்து மீதியுள்ளதை புசித்தால் நீங்கள் ஸமஸ்த பாபங்களினின்றும் விலக்கப்படுவீர்கள் (பாபமற்றவராவீர்கள்)' என்று சொல்லியிருப்பதால் யஜ்ஞாதிகர்மங்கள் அவஶ்யமாய்ச்செய்யத்தக்கவைகள்.

(மூ)—அன்னத் ப(ஹ)வந்தி பூ(ஹ்·இ)தானி பர்ஜன்யாத(உ)ன்ன ஸம்
ப(ஹ்)வः ||

யஜ்ஞாத் ப(ஹ்)வதி பர்ஜன்யோ யஜ்ஞः கர்மஸமுத்ப(ஹ்)வः
||14||

கர்ம ப்ரஹ்மோத்பவம் வித்தி(யி) ப்ரஹ்மாக்ஷர ஸமுத்பவம் ||
தஸ்மாத் ஸர்வக(ஹ)தம் ப்ரஹ்ம நித்யம் யஜ்ஞே ப்ரதிஷ்டிதம்
||15||

ஏவம் ப்ரவர்திதம் சக்ரம் நானுவர்தயதீஹ யः ||
அகா(ஹா)யு ரிந்த்ரியாராமோ மோக(ஹ)ம் பார்த்த ஸ ஜீவதி||16||


(ப. உ.) அன்னத், ப(ஹ)வந்தி, பூ(ஹ்மி)தானி, பர்ஜன்யாத், அன்ன
ஸம்ப(ஹ்)வः | யஜ்ஞாத், ப(ஹ்)வதி, பர்ஜன்யः, யஜ்ஞः, கர்மஸமுத்ப(ஹ்)வः||
கர்ம, ப்ரஹ்மோத்ப(ஹ்)வம், வித்தி(யி), ப்ரஹ்ம, அக்ஷரஸமுத்ப(ஹ்)வம் |
தஸ்மாத், ஸர்வக(ஹ)தம், ப்ரஹ்ம, நித்யம், யஜ்ஞே, ப்ரதிஷ்டிதம் || ஏவம்,
ப்ரவர்திதம், சக்ரம், ந, அனுவர்தயதி, இஹ, யः | அகா(ஹா)யுः, இந்த்ரியா
ராமः, மோகம்(ஹம்) பார்த்த, ஸः, ஜீவதி ||

அன்னத் = அன்னத்தால்
பூ(ஹ்மி) தானி } = ப்ராணிகள்
ப(ஹ்)வந்தி = பிறக்கின்றன.
பர்ஜன்யாத் = பர்ஜன்யனால் (ஸூர்யனால்)
அன்ன- = உணவுகள்
ஸம்ப(ஹ்)வः = உண்டாகின்றன.
யஜ்ஞாத் = யாகத்தினால்
பர்ஜன்யः = மழை
ப(ஹ்)வதி = உண்டாகிறது.
யஜ்ஞः = யாகம்
கர்ம ஸமுத்ப(ஹ்)வः } = கர்மத்தால் பிறக்கக்கூடியது.
கர்ம = கர்மம்
ப்ரஹ்மோத்பவம் } = ப்ரஹ்மத்தால் உண்டாவது.
ப்ரஹ்ம = ப்ரஹ்மம்

அக்ஷர- = வேதாக்ஷரங்களால்
ஸமுத்ப(ஹ்)வம் } = வெளியாகிறது. (வேதம் பூதங்களால் = பிராணிகளால் வெளியாவது)
(இதி) = என்று
வித்தி(யி) = தெரிந்து கொள்.
ஸர்வக(ஹ)தம் } = எங்கும் நிறைந்த
ப்ரஹ்ம = பரப்ரஹ்மம்
தஸ்மாத் = யஜ்ஞத்தால் பரம்பரையாய் வெளியாகிற படியால்
யஜ்ஞே = யாகத்தில்
நித்யம் = எப்பொழுதும்
ப்ரதிஷ்டிதம் = ஸ்திரமாக

இருக்கிறது.

யः	= எவன்	
ஏவம்	= இவ்வாறு	
ப்ரவர்த்திதம்	= நடந்துக்கொண்டிருக்கும்	
சக்ரம்	= ஜகச்சக்ரத்தை	
இஹ	= இந்த லோகத்தில்	
ந, அநுவர்தயதி	= அநுஸரிப்பதில்லையோ (சக்ரத்தை நிறுத்திவிடுகிறானே)	
பார்த்த	= அர்ஜுன!	
ஸः	= அவன்	
அகா(வா)யுः	= பாபத்திற்குசாதகமான ஆயுளுடையவன்.	
மோகம்	= வீணாக	
ஜீவதி	= பிழைக்கிறான்.	



(க. உ.) :—இவ்வாறு நடக்கப்பட்ட சக்ரத்தில் சேர்ந்த யஜ்ஞத்தைச் செய்யாவிடில் பர்ஜன்யம் (மழை) முதலியவைகள் உண்டாகாமல் இந்த ஜகச்சக்ரம் நின்று பாபம் நேரிடுகிறது. மற்றும் இச்சக்ரத்தை நடத்தாதவனிட பிழைப்பு வ்யர்த்தமாகிறது. ஆகையால் க்ருஹஸ்தாச்ரமிகள் யஜ்ஞ, தான, தபோரூப கர்மங்க

ளைச் செய்யவேண்டியது. ஸன்யாஸி முதலானவர்கள் வித்யா தானம், அபயதானம், தன்னில் போஜ்யமான அன்னதானம், அத்யயனம், ப்ரவசனம், த்யானம் முதலிய வாசனிக (வாக்கினில் செய்யப்படும்) மானஸிக (மனதினில் செய்யப்படும்) யஜ்ஞங் களையும், க்ருச்ர சாந்த்ராயணாதி தபோரூபங்களான காயிக (தேகத்தினில் செய்யப்படும்) யாகங்களையும் செய்து இந்த ஜகச்சக்ரத்தை நடத்திக்கொண்டிருக்கத்தக்கது.

அவதரணிகை:—"இப்படி எல்லோராலும் கர்மம் செய்யப் படவேண்டியதேயாயின் கர்மத்தைச் செய்வதிலேயே மனது நிலைநின்று அவஶ்யமாய் செய்யவேண்டிய, விடாமல் பரமாத்மா விடத்திலேயே மனதை நிருத்துவதென்னும் அஸம்ப்ரஜ்ஞாத ஸமாதியே பொருந்தாமற் போகும்" என்னும் ஶங்கைக்கு பதில் சொல்லுகிறான்:—

(மூ)—யஸ்த்வாத்மரதிரேவ ஸ்யாதா(ஆ)த்ம-த்ருப்தஶ்ச மானவ: ||
ஆத்மன்யேவ ச ஸந்துஷ்டஸ்தஸ்ய கார்யம் ந வித்யதே ||17||

(ப. உ.) ய:, து, ஆத்மரதி:, ஏவ, ஸ்யாத், ஆத்மத்ருப்த:, ச, மானவ: | ஆத்மனி, ஏவ, ச, ஸந்துஷ்ட:, தஸ்ய, கார்யம், ந, வித்யதே ||

து	= ஸமாதியிலிருக்கும்	விஷயங்களில் பேதமென்னும் புத்தியையுடையவனே,	
ய:	= எந்த		
மானவ:	= அபேராக்ஷ ஞானியான மனிதன்	ச	= மற்றும்
ஆத்மரதி: ஏவ	= பரமாத்மாவினிலேயே ஸுகத்தையடைந்தவனாய்(பரமாத்மாவின் தர்ஶனத்திலேயே ஸுகமடைபவன்)	ஆத்மனி ஏவ	= பரமாத்மாவிடத்திலேயே அதிகமான
		ஸந்துஷ்ட:	= ஸந்தோஷமுள்ளவனாகவே
		தஸ்ய	= அந்த ஸமர்த்தனுக்கு
ஸ்யாத்	= ஆகிறானே,	கார்யம்	= செய்யவேண்டிய கர்மம்
ச	= மற்றும்		
ஆத்ம த்ருப்த:	= பரமாத்மாவின் ப்ரஸாதத்திலேயே இதர	ந வித்யதே	= இருப்பதில்லை.

(மூ)—நைவ தஸ்ய க்ருதேனார்த்தோ நாக்ருதேநேஹ கஶ்சன ||
ந சாஸ்ய ஸர்வபூ(ஊ)தேஷு கஶ்சிதர்த்த-வ்யபாஶ்ரய: ||18||

(ப. உ.) ந, ஏவ, தஸ்ய, க்ருதேன, அர்த்த:, ந, அக்ருதேன, இஹ, க:, சன | ந, ச, அஸ்ய, ஸர்வபூ(ஊ)தேஷு, க:, சித், அர்த்தவ்யபாஶ்ரய: ||

தஸ்ய	= அஸம் ப்ரஜ்ஞாத ஸமாதி ஸ்தானமனி தனுக்கு	கஶ்சன (தோஷ:)	= எந்த தோஷமும் செய்யாமலி ருப்பதால்
க்ருதேன	= செய்யப் பட்ட யஜ்ஞங்களால்	ந	= இல்லை.
அர்த்த:	= ஸமாதியால் பிறந்த ஆத்ம ஞானத்தால் உண்டாகும் ஸுகத்தை விட அதிகமான ஸுகம்	ச	= மற்றும்
		அஸ்ய	= அஸம் ப்ரஜ்ஞாத ஸமாதிஸ் தானமனி தனுக்கு
ந, ஏவ	= இல்லவேயில்லை.	ஸர்வ பூ(ஊ) தேஷு	= கு(மூ)ருக்கள் முதலானவர் களில்
இஹ	= ஸமாத்யவஸ் தையில்	க:, சித்	= எந்த
அக்ருதேன	= முக்யமான ஸந்த்யாவந்த னாதி கர்மங்களை	அர்த்த-	= ப்ரயோஜனத் தின்
		வ்ய பாஶ்ரய:	= ஸம்பந்தமும்
		ந	= இல்லை.

(க. உ.):—அஸம்ப்ரஜ்ஞாத ஸமாதிஸ்தானமனிதன் பரமாத்மாவின் தர்ஶனாதிகளால் க்ருதக்ருத்யன் (செய்ய வேண்டிதைச்செய்தவன்) ஆகிற படியால், அந்த பரமாத்மாவின் தர்ஶனத்தால் உண்டாகும் ஸுகரூபமான ப்ரயோஜனத்தைவிட கர்மங்களினால் லாகட்டும், கு(மூ)ருக்கள் முதலானவர்களாலாகட்டும் அவனுக்கு அதிக ப்ரயோஜன முண்டாவதில்லை. மற்றும் நித்யங்களான ஸந்த்யாவந்தனாதிகளைச் செய்யாமற்போயினும் ப்ரத்யவாயமும் (பாவமும்) இல்லை. நித்ய நைமித்திக கர்மங்களைச் செய்யாமல் அஸம்ப்ரஜ்ஞாத ஸமாதியை செய்வதற்கு எவ்வித பாதகமும் இல்லை. அஸம்ப்ரஜ்ஞாத ஸமாதியற்ற மனிதனால் யஜ்ஞாதிகள் அவஶ்யகமாய் செய்யப்படவேண்டியவைகளை.

(மூ)—தஸ்மாத(ஓ)ஸக்தஸ்ஸததம் கார்யம் கர்ம ஸமாசர ||
அஸக்தோ ஹ்யாசரன் கர்ம பரமாப்னோதி பூருஷ: || 19 ||

(ப. உ.) தஸ்மாத், அஸக்த:, ஸததம், கார்யம், கர்ம, ஸமாசர | அஸக்த:, ஹி, ஆசரன், கர்ம, பரம், ஆப்னோதி, பூருஷ: ||

தஸ்மாத் = அஸம் ப்ரஜ்ஞாதஸமாதிரஹிதனை மனிதரில் கர்மங்கள் அவச்யமாய்ச்செய்யப்படவேண்டியிருப்பதால்
(த்வம்) = நீ
கார்யம் = க்ஷத்ரியர்களால் செய்யப்படவேண்டிய
கர்ம = யுத்தகர்மத்தை
அஸக்த: (ஸன்) } = பலத்தில் ஆசையற்றவனாய்

ஸததம் = எப்பொழுதும்
ஸமாசர = செய்.
ஹி = ஏனெனின்
பூருஷ: = புருஷன்
அஸக்த: (ஸன்) } = பலச்சையற்றவனாய்
கர்ம = தனக்கு விதிதமானகர்மத்தை
ஆசரன் (ஸன்) } = செய்பவனாய்
பரம் = பரமாத்மாவை
ஆப்னோதி = அடைகிறான்.

(க. உ.):—இவ்வாறு ஜீவபரமாத்மாக்களுக்கு ப்ராப்த்ருப்ராப்யபாவத்தைச் சொல்லியிருப்பதால் ஜீவ பரமாத்மாக்களின் பேதமே ஸித்தமாகிறது.

(மூ)—கர்மணைவ ஹி ஸம்ஸித்தி(யி)மாஸ்தி(யி)தா ஜனகாதய:||
லோக ஸங்க்ரஹ மேவாபி ஸம்பஸ்யன் கர்துமர்ஹஸி || 20 ||

(ப. உ.) கர்மண, ஏவ, ஹி, ஸம்ஸித்திம், ஆஸ்தி(யி)தா:, ஜனகாத(ஓ)ய: | லோகஸங்க்ரஹம், ஏவ, அபி, ஸம்பஸ்யன், கர்தும், அர்ஹஸி ||

ஜனகாதய: = ஜனக ப்ரியவ்ரதாதி மகா ராஜர்கள்
கர்மண, ஏவ } = கர்மத்தாலேயே
ஸம்ஸித்திம் = மோக்ஷத்திற்குக் காரணமான அபரோக்ஷ ஞானத்தை
ஆஸ்தி(யி)தா: = அடைந்திருக்கிறார்கள்.

ஹி = இதுப்ரஸித்தம்
த்வம் = நீ
ஏவ = கர்மத்திற்குஞாதி பலங்களிருப்பதேயல்லாமல்
லோகஸங்க்ரஹம், அபி } = நான் கர்மத்தைச்செய்யாவிடின் ஜனங்கள் கர்மங்களைச் செய்யமாட்டார்கள்.

ஆகையால் ஜனங்களால் கர்மங்களைச் செய்விக்கவேண்டுமென்பதையாயினும்

ஸம்பச்யன் = தெரிந்து கொள்ளச் (கர்ம) கர்தும் அர்ஹஸி = செய்வதற்கு = ஸமர்த்தனாகுக (கர்மங்களைச் செய்.)

(மூ)—யத்(ஈ)யதா(ஆ)சரதி ச்ரேஷ்டஸ்தத்ததே(ஏ)வேதரோ ஜனஃ ||
ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ்தத(உ)னுவர்த்ததே || 21 ||

(ப. உ.) யத், யத், ஆசரதி, ச்ரேஷ்டஃ, தத், தத், ஏவ, இதரஃ, ஜனஃ | ஸஃ, யத், ப்ரமாணம், குருதே, லோகஃ, தத், அனுவர்ததே ||

ச்ரேஷ்டஃ = உத்தமனான புருஷன்
யத், யத் = எந்தெந்த கர்மங்களை
ஆசரதி = செய்கிறானோ
இதரஃ, ஜனஃ = இதர ஜனங்கள்
தத், தத், ஏவ = அந்தந்த கர்மங்களையே
ஆசரதி = செய்கிறார்கள்.
ஸஃ = அந்த ச்ரேஷ்டனான மனிதன்
யத் = எந்த க்ரந்தத்தை
ப்ரமாணம் (இதி) } = ப்ரமாணமென்று
குருதே = செய்கிறானோ (தெரிந்து கொள்கிறானே)
லோகஃ = ஜனங்கள்
தத் = அந்த ப்ரமாணமென்று தெரிந்து கொண்ட க்ரந்தத்தை
அனுவர்ததே } = அனுஸரிக்கிறார்கள்.

(மூ)—ந மே பார்த்தாஸ்தி கர்தவ்யம் த்ரிஷு லோகேஷு கிஞ்சன ||
நானவாப்தமவாப்தவ்யம் வர்த ஏவ ச கர்மணி || 22 ||

(ப. உ.) ந, மே, பார்த்த, அஸ்தி, கர்தவ்யம், த்ரிஷு, லோகேஷு, கிம், சன | ந, அனவாப்தம், அவாப்தவ்யம், வர்த, ஏவ, ச, கர்மணி ||

பார்த்த = அர்ஜுன!
(யதஃ) = எக்காரணத்தால்
த்ரிஷு, லோகேஷு } = மூன்று லோகங்களிலும்
மே = எனக்கு
அனவாப்தம் = கிடைக்காததும்
அவாப்தவ்யம் } = கிடைக்கத்தக்கதும்
கிஞ்சன = சற்றேனும்
ந = இல்லை.
(அதஃ) = அக்காரணத்தால்
மே = எனக்கு
கர்தவ்யம் = ப(ஹ)லாபேக்ஷையால் செய்

வர்த (ஏவ) = இருக்கவே யிருக்கிறேன். (ஜனங்களால் கர்மங்களைச் செய்விப்பதற்காக நான் கர்மங் களைச் செய்கிறேன்.)

யத்தக்க கர்மம்
ந, அஸ்தி = இல்லை.
ச = அப்படியிருந்த போதிலும்
கர்மணி = கர்மத்தில் (கர்மத்தைச் செய்வதில்)

(மூ)—யதி(ஹி) ஹ்யஹம் ந வர்தேயம் ஜாது கர்மண்யதந்த்ரித: ||
மம வர்த்மானு வர்தந்தே மனுஷ்யா: பார்த(ய) ஸர்வச: ||23||

(ப. உ.) யதி(ஹி), ஹி, அஹம், ந, வர்தேயம், ஜாது, கர்மணி, அதந்த்ரித: | மம, வர்த்ம, அனுவர்தந்தே, மனுஷ்யா:, பார்த்த, ஸர்வச: ||

பார்த்த = அர்ஜுனனே!
அஹம் = நான்
ஜாது = எப்பொழுதாவது
அதந்த்ரி த: (ஸன்) = ஆலஸ்யமற்றவனாய்
கர்மணி = கர்மத்தில்
யதி, ந, வர்தேயம் = ப்ரவ்ருத்தனாகாவிடில்
ஸர்வச: = ஸமஸ்தான

மனுஷ்யா: = மனிதர்கள்
மம = என்னுடைய
வர்த்ம = மார்க்கத்தை (கர்மத்தைச் செய்யாமலிருக்கும் மார்க்கத்தை)
அனுவர்தந்தே = அனுஸரிக்கிறார்கள்.
ஹி = ப்ரஸித்தம்.

(மூ)—உத்ஸீதேயுரிமே லோகா ந குர்யாம் கர்ம சேத(ஈ)ஹம் ||
ஸங்கரஸ்ய ச கர்தா ஸ்யா முபஹன்யா மிமா: ப்ரஜா: ||24||

(ப. உ.) உத்ஸீதே(ஈ)யு:, இமே, லோகா:, ந, குர்யாம், கர்ம, சேத், அஹம் | ஸங்கரஸ்ய, ச, கர்தா, ஸ்யாம், உபஹன்யாம், இமா:, ப்ரஜா: ||

அஹம் = நான்
கர்ம = கர்மத்தை
ந, குர்யாம் சேத் = செய்யாமற் போவேனெனில்
இமே = இந்த
லோகா: = ஜனங்கள்
உத்ஸீ தே(ஈ)யு: = கர்மங் களைச் செய்யாத தினால் நரகாத்யனர்த்தங் களை அடைவார்கள்.
= மற்றும்

ஸங்கரஸ்ய = கர்ம (தர்ம) லோபத்தாலுண்டாகும் அதர்மத்தால் எல்லோரிடகுலமும் கெட்டு, ஸ்த்ரீகளின் தோஷத்தால் உண்டாகும் வர்ணஸாங்கர்யத்தின்
கர்தா = செய்பவன்
ஸ்யாம் = ஆவேன்,

இமா: = இந்த
ப்ரஜா: = ஜனங்களை
உபஹன் யாம் = நாசப்படுத்திய வனேவன் (ஜனங் கள் நரகாத் தனர்த் தங்களை யடைவ தற்கு நானே காரண னேவன்.)

(மூ)—ஸக்தா: கர்மண்யவித்வாம்ஸோ யதா(யா) குர்வந்தி பாரத ||
குர்யாத் வித்வாம் ஸ்ததா(யா)ஸக்தஶ்சிகீர்ஷுர் லோக ஸங்க்ரஹம் ||25||

(ப. உ.) ஸக்தா:, கர்மணி, அவித்(த்)வாம்ஸ:, யதா(யா), குர்வந்தி, பாரத | குர்யாத், வித்(த்)வான், ததா(யா), அஸக்த:, சிகீர்ஷு:, லோக ஸங்க்ரஹம் ||

பாரத = பரத குலத்தி லுதித்த அர் ஜுன!
அவித்வாம்ஸ: = அஞ்ஞா கள்
கர்மணி = கர்மவிஷயத்தில்
ஸக்தா: (ஸந்த:) = பலாபேக்ஷை யுடையவர்களாய்
யதா (யா) = எவ்வாறு
கர்ம = கர்மத்தை
குர்வந்தி = செய் கிறார் களோ,
ததா(யா) = அவ்வாறே
வித்வான் = ஞானியும்
அஸக்த: (ஸன்) = பலாபேக்ஷை யற்றவனாய்
லோக ஸங்க்ரஹம் = லோக ஸங்க்ர ஹத்தை
சிகீர்ஷு: = செய்வ தற்கு ஆசை யுள்ளவ னாய் (ஜனங் களால் கர்மங் களைச் செய்விப் பதற்காக)
(கர்ம) = கர்மத்தை
குர்யாத் = செய்யத்தக்கது

(மூ)—ந புத்திபே(ஜே)த(உ)ம் ஜனயேத(உ)ஜ்ஞானம் கர்மஸங்கி(கி) னம்||
ஜோஷயேத்ஸர்வ கர்மாணி வித்வான் யுக்தஸ்ஸமாசரன் ||26||

(ப. உ.) ந, புத்திபேதம், ஜனயேத், அஜ்ஞானம், கர்மஸங்கி(கி)னம் | ஜோஷயேத், ஸர்வகர்மாணி, வித்வான், யுக்த:, ஸமாசரன்||

புத்திபே (ஜே)தம் = புத்தியின் மாறு தலை
ந, ஜனயேத் = உண்டாக்கக் கூடாது (கர்மத் தைச் செய்ய வேண்டு மென்
அஜ்ஞானம் = பகவத் ஸ்வரூப ஞானமற்ற
கர்மஸம் கி(கி)னம் = கர்மத்தைச் செய்வதில் கருத்துடைய ஜனங்களின்

ஸமாசரன் (ஸன்) = செய்து கொண்டே
ஸர்வ- = ஸமஸ்த
கர்மாணி = கர்மங்களையும்
ஜோஷயேத் = செய்விக்கத் தக்கது (அஜ்ஞானிகளால் கர்மங்களைச் செய்விக்க வேண்டும்.)

னும் எண்ணத்தை மாற்றக் கூடாது.)
வித்வான் = ஞானியானவன்
யுக்த:(ஸன்) = பரமாத்மா விடத்தில் மனதைச் செலுத்தியவனாய்
கர்மாணி = கர்மங்களை

(ஸ)—ப்ரக்ருதே: க்ரியமாணானி கு(ஹ்ரு)ண: கர்மாணி ஸர்வஶ: ||
அஹங்கார-விமூடாத்மா கர்தாஹமிதி மன்யதே || 27 ||

(ப. உ.) ப்ரக்ருதே:, க்ரியமாணானி, கு(ஹ்ரு)ண:, கர்மாணி, ஸர்வஶ: | அஹங்கார-விமூடாத்மா, கர்தா, அஹம், இதி, மன்யதே ||

(ப்ரக்ருதே:) = ஜட ப்ரக்ருதியின்
(குணை:) = ஸத்வ ரஜஸ் தமோ குணங்கள் இவைகளால்
க்ரியமாணானி = செய்யப்படும்
ஸர்வஶ: = ஸமஸ்தமான
கர்மாணி = நல்ல கர்மங்கள் மிஸ்ர (கலப்பு) கர்மங்கள்; கெட்ட கர்மங்கள் இவைகளை
(ப்ரதி) = குறித்து
அஹம் = நானே (ஓருவனே)
கர்தா = ஸ்வதந்திரமாக செய்பவன்
இதி = என்று
மன்யதே = நினைத்து கொள்கிறான்.

அஹங்கார- = அஹங்காரத்தால்
விமூட- = மோகமடைந்த
ஆத்மா = அறிவுடையவன்
ப்ரக்ருதே: = மேலான கார்யங்களையுடைய பரமாத்மாவின்
குணை: = ஞானேந்த்ரியங்கள்
(ப்ரக்ருதே:) = உத்தம, மத்யம அதம ஜீவர்களின் ஸ்வபாவத்திற்கு
(குணை:) = அநு குணங்களாகிய தத்வஞானம், மிஸ்ர ஞானம், மித்யா ஞானம் இவைகள்

(ஸ)—தத்ஸவித்து மஹாபா(ஹா)ஹோ கு(ஹ்ரு)ணகர்ம விபா(ஹா)க (ஹ்ரு)யோ: ||
கு(ஹ்ரு)ண கு(ஹ்ரு)ணேஷ்வ வர்தந்த இதி மத்வா ந ஸஜ்ஜதே || 28 ||

(ப. உ.) தத்வவித், து, மஹாபா(வா)ஹோ, கு(ஂ)ணகர்மவிபா(ஹா)க (ஂ)யோ: | கு(ஂ)ண:, கு(ஂ)ணேஷு, வர்தந்தே, இதி, மத்வா, ந, ஸஜ்ஜதே ||

மஹாபா(வா)ஹோ = அர்ஜுன!

குணகர்மவிபா(ஹா)க(ஂ)யோ: = பரமாத்மாவின் ஞானேச்சா ப்ரயத்னம்முதலிய குணங்கள், மற்றும் ப்ரக்ருதியின் ஸத்வராஜஸ்தமோ குணங்கள், மற்றும் ஸ்வதந்த்ரனான பரமாத்மாவின் கர்மங்கள், பரமாத்மாவின் அதீனனானஜீவனால் செய்யப்படும்கர்மங்கள், விகாரமடைந்த ப்ரக்ருதியின்கர்மங்கள் இவைகளே முதலிய குணகர்மங்களின் வித்யாஸங்களின்

தத்வவித் = தத்வங்களை அறிந்தவன்

குண: = பரமாத்மாவின் ஞானேச்சா ப்ரயத்னங்கள்

குணேஷு = ஜீவனின் ஸ்வபாவாதி குணங்களில்

வர்தந்தே = ப்ரகங்களாயிருக்கின்றன

இதி = என்று

மத்வா = தெரிந்து கொண்டு

ந, ஸஜ்ஜதே = ஆஸக்தனவதில்லை. (நானே செய்கிறேனென்றறிவதில்லை)

(மூ)—ப்ரக்ருதேர்கு(ஂ)ண ஸம்மூடாஸ்ஸஜ்ஜந்தே கு(ஂ)ணகர்மஸு ||

தானக்ருத்ஸ்னவிதோ(ஹோ) மந்தான் க்ருத்ஸ்ன வின்ன விசாலயேத் ||29||

(ப. உ.) ப்ரக்ருதே:, குண-ஸம்மூடா:, ஸஜ்ஜந்தே, குண-கர்மஸு | தான், அக்ருத்ஸ்னவித:(ஹ:), மந்தா(ஹா)ன், க்ருத்ஸ்னவித், ந, விசாலயேத் ||

யே = எந்த

அக்ருத்ஸ்னவித:(ஹ:) = குணம், கர்மம், இவைகளின் விபா(ஹா)கத்தைத் தெரியாத ஜனங்கள்

ப்ரக்ருதே: = ஜடப்ரக்ருதியின்

குண- = ஸத்வராஜஸ்தமோ குணங்களால்

ஸம்மூடா: = மோஹிதராய்

குண- = ப்ரக்ருதி கார்யமான இந்த்ரியின்

	பங்களிலும் (குணங்களிலும்)
கர்மஸு	= கர்மங்களிலும்
ஸஜ்ஜந்தே	= அதிகமான ராக முடையவராகிறார்கள்.
க்ருத்ஸ்னவித்	= முன் சொல்லிய வாறு குணகர்ம விபாகத்தைத் தெரிந்தவன்
தான்	= அந்த
மந்தான்	= குணகர்ம விபாகத்தைத் தெரிந்து கொள்ளாமலிருக்கும் ஜனங்களை
ந, விசாலயேத்	= குணகர்மங்களில் ஸ்னேஹத்தைவிடுவிக்கக் கூடாது.

(மூ)—மயி ஸர்வாணி கர்மாணி ஸம்ன்யஸ்யாத்யாத்ம சேதஸா ||

நிராசீர் நிர்மமோ பூத்வா யுத்யஸ்வ விக(ஜ்)தஜ்வர: ||30||

(ப. உ.) மயி, ஸர்வாணி, கர்மாணி, ஸம்ன்யஸ்ய, அத்யாத்ம-சேதஸா | நிராஷீ:, நிர்மம:, பூத்வா, யுத்யஸ்வ, விகதஜ்வர:||

ஆத்யாத்ம சேதஸா (ஆத்யாத்மனிசேத:)	= ப்ரேரஷ்டனான பரமாத்மாவிடத்திலிருக்கும் மனதால்
நிராசீ: (ஸன்)	= பலாபேக்ஷையற்றவனாய்
நிர்மம:(ஸன்)	= கர்த்ருத்வாபிமானத்தையற்றவனாய்
ஸர்வாணி	= ஸமஸ்தங்களான
கர்மாணி	= உன்னால் செய்யப்பட்டகர்மங்களை
மயி	= என்னிடத்தில் (ஸ்ரீக்ருஷ்ணனிடத்தில்)
ஸம்ன்யஸ்ய	= அற்பித்து (இவ்வெல்லா கர்மங்களும் விஷ்ணு பூஜாத்மகமென்று அனுஸந்தானம் செய்துகொண்டு)
விக(ஜ்)தஜ்வர:(ஸன்)	= துக்கமற்றவனாய்
யுத்யஸ்வ	= யுத்தத்தைச் செய்க.

(மூ)—யே மே மதமித(ஏ)ம் நித்யமனுதிஷ்டந்தி மானவா: ||

ச்ரத்தா(ஆ)வந்தோநஸூயந்தோ முச்யந்தே தேபி கர்மபி:

(ஹி:) ||31||

(ப. உ.) யே, மே, மதம், இத(ஏ)ம், நித்யம், அனுதிஷ்டந்தி, மானவா; | ச்ரத்தா(ஆ)வந்த:, அனுஸூயந்த:, முச்யந்தே, தே, அபி, கர்மபி: (ஹி:) ||

யே = எந்த
மானவா: = மனிதர்கள்
ப்ரத்தா வந்த: (ஸந்த:) = என் வார்த்தை யில் ப்ரத்தையு டையவர்களா ய்
அனஸூ யந்த: (ஸந்த:) = என் னிடத்தில் பொறுமை செய்யாமல் (கஷ்டமான கர் மத்தில் என்னை ப்ரேரேபிக்கிறா னென்றுதோஷ த்தை நினைக்கா மல்)
மே = என்னுடைய
இதம் = இந்த மூன்றெழுத் தை
மதம் = மதத்தை
நித்யம் = எப்பொழுதும்
அனுதிஷ் டந்தி = அனுஷ்டிக் கிறார்களோ
தே, அபி = அவர்களும்
கர்மபி: (ஹி:) = கர்மங்களினின் றும்
முச்யந்தே = விடுவிக்கப் படுகிறார்கள்.

(மூ)—யேத்வேதத(ஸ)ப்(ஹீ)யஸூயந்தோ நானுதிஷ்டந்தி மே மதம் ||
ஸர்வஜ்ஞான விமூடாம் ஸ்தான் வித்தி(யீ) நஷ்டானசேதஸ:
||32||

(ப. உ.) யே, து, ஏதத், அப்(ஹீ)யஸூயந்த:, ந, அனுதிஷ்டந்தி, மே, மதம் | ஸர்வஞானவிமூடான், தான், வித்தி(யீ), நஷ்டான், அசேதஸ: ||

யே, து = யார்
அப்(ஹீ)ய ஸூயந்த: (ஸந்த:) = த்வேஷத்தைச் செய்து கொண்டே
ஏதத் = இந்த
மே = என்னுடைய
மதம் = மதத்தை
ந, அனு திஷ்டந்தி = ஆசரிப்பதில்லையோ
ஸர்வ ஜ்ஞான விமூடான் = தெரிந்து கொள்வதற்கு யோக்யமான ஸகல வஸ்து விஷயக மான ஞான மற்ற
தான் = அந்த ஜனங்களை
நஷ்டான் = நாசமடைந்த வராக (நரகத்தி னைத் தங்களை அடைந்தவராக)
வித்தி(யீ) = தெரிந்து கொள்.

அவதரணிகை :—உன்னுடைய மதத்தை அனுஷ்டிப்பதால் மோக்ஷம் கிடைத்துக்கொண்டிருக்க, ஜனங்கள் ஏன் அதை அனுஷ்டிப்பதில்லை? என்னும் அர்ஜுனனின் ஆக்ஷேபத்திற்கு, அவர்களின் தாமஸஸ்வபாவமே காரணமென்றுசொல்லுகிறான்—

(மூ)—ஸத்(ஜ்)ருஶம் சேஷ்டதே ஸ்வஸ்யா: ப்ரக்ருதேர் ஞானவானபி||
ப்ரக்ருதிம் யாந்தி பூ(பூ)தானி நிக்ரஹ: கிம் கரிஷ்யதி || 33 ||

(ப. உ.) ஸத்(ஜ்)ருஶம், சேஷ்டதே, ஸ்வஸ்யா:, ப்ரக்ருதே:, ஞான வான், அபி | ப்ரக்ருதிம், யாந்தி, பூ(பூ)தானி, நிக்ரஹ:, கிம், கரிஷ்யதி ||

ஞான வான், அபி	= ஞானியாயினும்	பூதானி	= ப்ராணிகள்
ஸ்வஸ்யா:	= தன்னுடைய	ப்ரக்ருதிம்	= தம் தம் ஸ்வபாவத்தை
ப்ரக்ருதே:	= ஸ்வபாவத்திற்கு	யாந்தி	= அடைகிறார்கள்
ஸத்ருஶம்	= அநுகூணமாக	நிக்ரஹ:	= மேலே நிக்ரஹம்
சேஷ்டதே	= வ்யாபாரங்களை செய்கிறான்.	கிம்	= என்ன
		கரிஷ்யதி	= செய்யும் ?

அவதாரணிகை :—இந்த்ரிய நிக்ரஹம் செய்வது மிகவும் கஷ்டமாயினும் அதிக ப்ரயத்னத்தால் ஆவஶ்யகமாக அதைச் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறான் :—

(மூ)—இந்த்ரியஸ்யேந்த்ரியஸ்யார்த்தே ராகத்(ஜ்)வேஷௌ வ்யவஸ்தி
(யி)தௌ ||
தயோர்ந வஶமாக(ஆ)ச்சே(ஹ)த் தௌ ஹ்யயஸ்ய பரிபந்தி(யி)
னௌ ||34||

(ப. உ.) இந்த்ரியஸ்ய, இந்த்ரியஸ்ய, அர்த்தே, ராக(ஆ)த்வேஷௌ, வ்யவஸ்திதௌ | தயோ:, ந, வஶம், ஆக(ஆ)ச்சே(ஹ)த், தௌ, ஹி, அஸ்ய, பரிபந்தி(யி)னௌ ||

இந்த்ரியஸ்ய-இந்த்ரியஸ்ய	= ப்ரதி இந்த்ரியத்தின்		வேஷங்களின்
அர்த்தே	= விஷயத்தில்	வஶம்	= அதீனம்
ராகத் வேஷௌ	= அநுகூலமாயின் அன்பும், ப்ரதிகூலமாயின் த்வேஷமும்	ந, ஆகச்சேத்	= ஆகக் கூடாது. (ராகத்வேஷங்களை யநுஸரித்து நடக்கக் கூடாது)
வ்யவஸ்திதௌ (யி)தௌ	= அவஶ்யகமாய் உண்டாகின்றன	தௌ	= அந்த ராகத்வேஷங்கள்
[ததா(யா)] (அபி)	= அப்படியிருந்த போதிலும்	அஸ்ய	= கீர்த்தியை அபேக்ஷிப்பவர்களிட
தயோ:	= அந்த ராகத்		

பரிபந்தி (யி)னௌ } = ஸத்ருக்கள். (கீர்த்தியை நாஸமடையும் | ஹி = படி செய்பவைகள்) = ப்ரஸித்தம்.

அவதரணிகை:—"நான் யுத்தமென்னும் கர்மத்தைச் செய்வதில்லை. ஸனகாதிகளைப்போல் த்பாஞ்திகளைச் செய்துகொண்டே, பிக்ஷையினால் ஜீவனம் செய்கிறேன்" என்னும் அர்ஜுனனின் வார்த்தைகளுக்கு ஸமாதானத்தைச் சொல்லுகிறான்:—

(மூ)—ச்ரேயான் ஸ்வத(ய)ர்மோ விகு(ஹ்ரு)ணஃ பரதர்மாத் ஸ்வனுஷ்டிதாத் ||

ஸ்வதர்மே நித(ய)னம் ச்ரேயஃ பரதர்மோ ப(ஹ்ரு)யாவஹஃ ||35||

(ப. உ.) ச்ரேயான், ஸ்வத(ய)ர்மஃ, விகு(ஹ்ரு)ணஃ, பரத(ய)ர்மாத், ஸ்வனுஷ்டிதாத் | ஸ்வத(ய)ர்மே, நித(ய)னம், ச்ரேயஃ, பரத(ய)ர்மஃ, ப(ஹ்ரு)யாவஹஃ ||

ஸ்வதர்மஃ = தம் தம் வர்ணச்ரமங்களுக்கு விதிக்கப்பட்ட தர்மம்
விகு(ஹ்ரு)ணஃ, (அபி) } = சில பாகங்களில் குறைந்தாலும் (ஸரியாக முடிப்பதற்கு முடியாமல் குறைவாயினும்)
ஸ்வனுஷ்டிதாத் } = ஸம்பூர்ணமான பாகங்களால் செய்வதற்கு ஸாத்யப்படும்
பரதர்மாத் = இதர வர்ணச்ரமங்களுக்கு விதிக்கப்பட்ட தர்மத்தைவிட
ச்ரேயான் = ச்ரேயஸ்கரமானது.
ஸ்வதர்மே = தம் தம் தர்மத்தில்
நிதனம், (அபி) } = மரணமுண்டானாலும்
ச்ரேயஃ = ச்ரேயஸ்கரமானது.
பரதர்மஃ = இதர வர்ணச்ரமங்களுக்கு விதிக்கப்பட்ட தர்மம்
ப(ஹ்ரு)யாவஹஃ = அனர்த்தத்தைத் தருவது.

(க. உ.) இதர வர்ணச்ரமதர்மங்கள் ஸகல அங்கங்களுடன் செய்வதற்கு ஸாத்யமாயிருந்து, அவைகளைச் செய்வதைவிட, தம் தம் வர்ணச்ரமதர்மங்கள் ஸகல அங்கங்களுடன் செய்வதற்கு முடியாமல் அநேக அங்கங்களால் குறைவாயிருந்தபோதிலும் அவைகளைச் செய்வதே ச்ரேயஸ்கரமானது.

[உதாஹரணம் :—(1) ஸ்த்ரி தனக்கு விஹிதமான தன் புருஷனிட பணிவிடை செய்வதில் பல குறைகளிருந்தாலும் அதிககுற்றமாவதில்லை. தனக்கு விஹிதமல்லாத இதர ஸ்த்ரீக்கு விஹிதமான இதர புருஷனிட பணிவிடையை வெகு மேன்மையாய்ச் செய்தபோதிலும் அப்பணிவிடை அதிக குற்றமாகிறது.

(2) சேவகன் தான் செய்யவேண்டிய வேலைகளில் கொஞ்சம் குறைவாயினும் அதிக குற்றமாவதில்லை. அவனை வேறு அதிகாரியால் செய்யப்படவேண்டிய வேலைகளை வெகுவிமர்சையாய் செய்தபோதிலும் அதிக குற்றமாகிறது.]

ஆகையால் நீ க்ஷத்ரியர்களுக்கு விஹிதமான யுத்தத்தைச் செய்யவேண்டுமேயல்லாது ஸன்யாஸிகளுக்கு விஹிதமான பிக்ஷாடனாதிகளைச் செய்யக்கூடாது.

அவதரணிகை :—ராகத்வேஷாதிகளில் எது ப்ரபலமானது? எதனால் மனிதர்களுக்கு பாபகர்மங்களில் ப்ரவர்த்தியுண்டாகிறது? அதைச் சொன்னால் அதை விட்டுவிடலாம் என்கிற கருத்துடன் அர்ஜுனன் ஸ்ரீகிருஷ்ணனை வினவுகிறான்.

அர்ஜுன உவாச:—

(மூ)—அத(ய) கேன ப்ரயுக்தோயம் பாபம் சரதி பூருஷ: ||
அனிச்சன்னபி வார்ஷ்ணேய ப(வ)லாதிவ நியோஜித: ||36||

(ப. உ.) அத(ய), கேன, ப்ரயுக்த:, அயம், பாபம், சரதி, பூருஷ:| அனிச்ச(ஹ)ன், அபி, வார்ஷ்ணேய, ப(வ)லாத், இவ, நியோஜித: ||

வார்ஷ்ணேய	= வ்ருஷ்ணி குலத்திலுதித்த ஸ்ரீகிருஷ்ண!	அத(ய)	= பரமாத்மாவைதவிர
அயம்	= இந்த	கேன	= காம, க்ரோத, லோப, மோஹ, மத, மத்ஸரம் இவைகளில் எதனால்
பூருஷ:	= மனிதன்		
அனிச்ச (ஹ)ன் அபி	= பாப கார்யங்களை செய்வதில் விருப்பமில்லாவிடினும்	ப்ரயுக்த:	= ஏவப்பட்டவனைப்
ப(வ)லாத்	= கட்டாயமாய்	பாபம்	= பாபகார்யத்தை
நியோஜித: இவ	= கார்யத்தில் ஏவப்பட்டவனைப்போல்	சரதி	= செய்கிறான்?

ஸ்ரீ பகவான் உவாச :—

(மூ)—காம ஏஷ க்ரோத ஏஷ ரஜோகு(�முⅭ)ண ஸமுத்ப(ஹ)வः ||
மஹாஶனே மஹாபாப்மா வித்யேன மிஹ வைரிணம் ||37||

(ப. உ.) காமः, ஏஷः, க்ரோதः(யः), ஏஷः, ரஜோகு(முⅭ)ண ஸமுத்ப(ஹ)வः| மஹாஶனः, மஹாபாப்மா, வித்தி(யீ), ஏனம், இஹ, வைரிணம் ||

ஸ்ரீபகவான் = ஸ்ரீ கிருஷ்ணன்
உவாச = (காமமே[ஆஸை யே]பாபகார் யத்தில் ப்ரவர்த் திக்கச் செய்வ தென்று பதில்) சொல்லுகி றான் :—

ஏஷः = இந்தஜனங்களை கெட்ட கார்யங் களில் ப்ரவர்த்தி க்கும் படிக்கு செய்வது

காமः = காமமே(ஆஸை யே)

க்ரோதம் பாபகார்யத்தில் ப்ர வர்த்திக்கும்படி செய்வதாகக் கண்டு வந்துகொண்டிருக்க, காமத்தையே ப்ரவர்த்தகமென் று எவ்வாறு சொல்லுகிறாய் எனின் சொல்லுகிறான் :—

ஏஷः = இந்த காமமே

க்ரோதः = கோபம் (கோப த்திற்குக் காமம் காரணமாவ தால் கோபமும் காமத்திலேயே சேர்ந்தது.)

ஏஷः = இந்த காமம்

ரஜோகுணை- = ரஜோகுணத் தால்

ஸமுத்ப (ஹ)வः } = பிறந்தது.

மஹாஶனः = அதிகமான (பூர்த்தி செய்வ தற்கு ஸாத்யம ல்லாத) விஷயங் களையுடை யது.)

மஹாபாப்மா = மகாபாபத்திற் குக் காரண மானது.

இஹ = ஐஹிகாமுஷ் மிகபுருஷார்த்த ஸம்பாதன விஷயத்தில்

ஏனம் = இந்த காமத் தை

வைரிணம் = ஶத்ருவான தாக (ப்ரதிபந்த கத்தைச்செய்வ தாக)

வித்தி(யீ) = தெரிந்துக் கொள்.

(மூ)—தூ(யூ)மேனாவ்ரியதே வஹ்னிர்யதா(ஆ)த(ஃ)ர்ஶோ
மலேன ச ||
யதோ(யோ)ல்பே(ஷே)னாவ்ருதோ கர்ப(ஹ)ஸ்ததா(ஆ)
தேனேத(ஃ)மாவ்ருதம் ||38||

(ப. உ.) தூ(யூ)மேன, ஆவ்ரியதே, வஹ்நி:, யதா(யா), ஆத(ஏ)ர்ஸ:, மலேன, ச | யதா (யா), உல்பே(வே)ன, ஆவ்ருத:, க(ஹ)ர்ப:(ஹ:), ததா (யா), தேன, இத(ஏ)ம், ஆவ்ருதம் ||

வஹ்நி: = நெருப்பு
யதா(யா) = எப்படி
தூ(யூ)மேன = புகையால்
ஆவ்ரியதே = மூடப்படுகிறதோ
ததா(யா) = அப்படியே
இத(ஏ)ம் = இந்த உத்தம ஜீவ ஸமூதாயம்
தேன = அந்த காமத்தால்
ஆவ்ருதம் = மூடப்பட்டிருக்கிறது.
ச = மற்றும்
யதா(யா) = எப்படி
ஆதர்ஸ: = கண்ணாடி
மலேன = தூசியினால்
ஆவ்ரியதே = மூடப்படுகிறதோ
ததா(யா) = அப்படியே
இத(ஏ)ம் = இந்த மத்யம ஜீவ ஸமூஹம்
ஆவ்ருதம் = மூடப்பட்டிருக்கிறது.
யதா(யா) = எப்படி
கர்ப:(ஹ:) = கர்ப்பமானது
உல்பே (வே)ன = மாயையால் (கர்ப்பவேஷ்டன சர்மத்தால்)
ஆவ்ருத: = மூடப்பட்டிருக்கிறதோ
ததா(யா) = அப்படி
இத(ஏ)ம் = இந்த அதம ஜீவ ஸமூஹம்
ஆவ்ருதம் = மூடப்பட்டிருக்கிறது.

(க. உ.) :—உத்தம, மத்யம, அதம ஜீவர்கள் காமத்தால் மூடப்பட்டிருப்பதினால் அவர்களுக்கு ஞானமுண்டாவதில்லை. (காமம் ஜீவர்களை மூடிக்கொண்டு ஞானமுண்டாகாமற் செய்கிறது.)

அவதாரணிகை :—காமம் ஞானமுண்டாவதற்கு ப்ரதிபந்தகம் (தடங்கல்) செய்கிறது என்று மாத்ரமல்ல. ஶாஸ்த்ரங்களால் உண்டான ஞானத்தையும் நாஶப்படுத்துகிறதென்று இரண்டு ஶ்லோகங்களால் சொல்லுகிறான் :—

(மூ)—ஆவ்ருதம் ஞான மேதேன ஞானினோ நித்யவைரிணா ||
காமரூபேண கௌந்தேய துஷ்பூரேணானலேன ச || 39 ||

(ப. உ.) ஆவ்ருதம், ஞானம், ஏதேன, ஞானின:, நித்யவைரிணா | காமரூபேண, கௌந்தேய, து(ஊ)ஷ்பூரேண, அனலேன, ச ||

கௌந்தேய = அர்ஜுனனே!
ஞானினः = ஞானியின்
ஞானம் = பாபஸ்தர ஜன்ய ஞானம்
ஏதேன = இந்த
துஷ்பூரேண = முடிப்பதற்கு சாத்யமல்லாத
ச = மற்றும்
அனலேன = த்ருப்தியற்ற
நித்ய, வைரிணே = நித்யசத்ருவான
காமரூபேண = காமத்தால்
ஆவ்ருதம் = போற்கப்பட்டிருக்கிறது. (மூடப்பட்டிருக்கிறது.)

(மூ)—இந்த்ரியாணி மநோ புத்திரஸ்யாதி(யி)ஷ்டான முச்யதே ||
ஏதைர்விமோஹயத்யேஷ ஞானமாவ்ருத்ய தே(தே)ஹினம்
||40||

(ப. உ.) இந்த்ரியாணி, மனः, புத்திः, அஸ்ய, அதி(யி)ஷ்டானம், உச்யதே | ஏதைः, விமோஹயதி, ஏஷः, ஞானம், ஆவ்ருத்ய, தே(தே)ஹினம் ||

அஸ்ய = இந்த காமமென்னும் சத்ருவுக்கு
இந்த்ரியாணி = கண் முதலிய இந்த்ரியங்கள்
மனः = விருப்பங்களைப் பிறப்பிக்கும் மனது
புத்திः = நிச்சயத்தைப் பிறப்பிக்கும் புத்தி (இவைகள்)
அதி(யி)ஷ்டானம் = ஆச்ரயம் (இருப்பிடம்)
(இதி) = என்று
உச்யதே = சொல்லப்படுகிறது.
ஏஷः = இந்த காமம்
ஏதைः = கண் முதலிய இந்த்ரியங்களால் (உண்டாகும்)
ஞானம் = ஞானத்தை
ஆவ்ருத்ய = சூழ்ந்து கொண்டு (உண்டாகாமற் செய்து) அல்லது
ஞானம் = சாஸ்த்ரத்தால் உண்டான அறிவை
ஆவ்ருத்ய = மூடிக்கொண்டு (அதனால் கார்யமாகாமற் செய்து)
தே(தே)ஹினம் = ஜீவனை
விமோஹயதி = மோகப்படுத்துகிறது. (மயக்குகிறது.)

(மூ)—தஸ்மாத் த்வமிந்த்ரியாண்யாதௌ(தௌ)நியம்ய பரதர்ஷப () ||
பாப்மானம் ப்ரஜஹி ஹ்யேனம் ஞான-விஜ்ஞான-நாசனம்
||41||

(ப. உ.) தஸ்மாத், த்வம், இந்த்ரியாணி, ஆதௌ(ஔ), நியம்ய, பரதர்ஷப(ஹ) | பாப்மானம், ப்ரஜஹி, ஹி, ஏனம், ஞான-விஞான-நாஶனம் ||

பரதர்ஷப	= பரதகுலத்தில் ச்ரேஷ்டனான அர்ஜுனனே!
தஸ்மாத்	= இந்த்ரியங்களின் மூலமாய் காமம் மோஹகமானதால்
த்வம்	= நீ
ஆதௌ (ஔ)	= முதலில்
இந்த்ரியாணி	= இந்த்ரியங்களை
நியம்ய	= அடக்கி ஸ்வாதீனத்தில் வைத்துக் கொண்டு (துர்விஷயங்களில் போகாமற் செய்து கொண்டு)
ஞான-	= ஸாதாரண ஞானம்
விஜ்ஞான-	= விசேஷ ஞானம் இவைகளை
நாஶனம்	= நாஶப்படுத்தும்
பாப்மானம்	= பாபிஷ்டமான (பாபஜனகமான)
ஏனம்	= இக்காமத்தை
ப்ரஜஹி	= நாஶப்படுத்து.
ஹி	= இந்த்ரியங்களின் ஜயம் காமத்தை நாசப்படுத்துமென்பது ப்ரஸித்தம்.

அவதரணிகை :—பரமாத்மா ஸர்வோத்தமன், மற்றவர்களெல்லோரும் அவனிட ஆதீனர்கள் என்னும் ஞானமே இதரபதார்த்த விஷயகமான காமத்தை நாஶப்படுத்துகிறது. ஆகையால் பரமாத்மாவை ஸர்வோத்தமனென்று தெரிந்துகொண்டு, காமத்தை நாஶப்படுத்திக்கொள்ளென்று சொல்லுகிறான் :—

(மூ)—இந்த்ரியாணி பராண்யாஹுரிந்த்ரியேப்(ஹீ)யः பரம் மனः||
மனஸஸ்து பரா புத்தி(யி)ர்யோ புத்தேः(யேः) பரதஸ்துஸः ||42||
ஏவம் புத்தேः(யேः) பரம் பு(வு)த்வா(யா)ஸம்ஸ்தப்யாத்மான
மாத்மனா ||
ஜஹி ஶத்ரும் மஹாபா(வா)ஹோ காமரூபம் து(தூ)ராஸதம்
(தி)ம் ||43||

(ப. உ.) இந்த்ரியாணி, பராணி, ஆஹுः, இந்த்ரியேப்(ஹீ)யः, பரம், மனः | மனஸः, து, பரா, பு(வு)த்தेः(யிः), யः, புத்தேः(யேः), பரதः, துஸः || ஏவம், புத்தேः, பரம், புத்வா(யா), ஸம்ஸ்தப்(ஹீ)ய, ஆத்மானம், ஆத்மனா| ஜஹி, ஶத்ரும், மஹாபா(வா)ஹோ, காமரூபம், து(தூ)ராஸத(தி)ம்||

இந்த்ரியாணி = இந்த்ரியாபிமானிகளான தேவதைகள்
(ஸரீராத்) = ஸரீராபிமானி தேவர்களைவிட
பராணி (இதி) } = உத்தமர்களென்று
ஆஹு: = (ஞானிகள்) சொல்லுகிறார்கள்.
இந்த்ரியேப்(ஹி)ய: } = இந்த்ரியாபிமானிதேவர்களைவிட
மன: = மனோபிமானி தேவன்
பரம் = உத்தமன்.
மனஸ:, து = மனோபிமானி தேவனைவிட
புத்தி:(யி:) = புத்யபிமானி தேவதை
பரா = உத்தமமானது.
ய: = எவன்
புத்தே:, து = புத்யபிமானி தேவதையைவிட அதிக
பரத: = உத்தமனாய்
(அஸ்தி) = இருக்கிறானே
ஸ: = அவன்
ஆத்மா = பரமாத்மா.

மஹாபா ஹோ } = அர்ஜுனை!
ஏவம் = இவ்விதமாக
புத்தே: = புத்யபிமானி தேவதையை விட
பரம் = உத்தமனை பரமாத்மாவை
பு(வ)த் (யி)வா } = அறிந்து கொண்டு
ஆத்மனா = புத்தியால்
ஆத்மானம் = மனதை
ஸம்ஸ்தப் (ஹி)ய } = ஸ்தம்பனம் செய்து கொண்டு (விஷயங்களைக் குறித்து போகாமற் செய்து கொண்டு)
து(ஹு)ர ஸத(ஹ)ம் } = கஷ்டப்பட்டு போக்கடித்துக் கொள்வதற்கு ஸாத்யமான
காமரூபம் = காமரூபமாகிய
ஸத்ரும் = புருஷார்த்தத்தை நாஸப்படுத்தும் ஸத்ருவை
ஜஹி = நாஸப்படுத்திக் கொள்.

(க. உ.):—பரமாத்மா ஸ்வோத்தமனென்று தெரிந்து கொண்டு, இதர விஷயங்களை ஆபேக்ஷிக்காமல், அந்த பரமாத்மாவின் பூஜார்த்தமாய் க்ஷத்ரியனை உனக்கு விதிமான (யோக்யமான) யுத்தமென்னும் கர்மத்தை நீ செய்.

ஓம் தத் ஸத்

ஸ்ரீ பகவத் கீதையில் ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுன ஸம்வாதத்தில்
கர்மயோக மென்னும்

மூன்றுவது அத்தியாயம் முற்றிற்று.

நான்காவது அத்தியாயம்.

அவதாரணிகை :—யோகத்தில் ருசியை (ஆசையை) உண்டாக்குவதற்காக பின்னுள் சொல்லப்பட்ட யோகம் (ஞாநேயோபாயம்) பூர்வீகர்களால் ஆசரிக்கப்பட்டிருக்கிறதென்று 1, 2, 3 ச்லோகங்களால் சொல்லுகிறான் :—

ஸ்ரீ பகவானுவாச —

(மூ)—இமம் விவஸ்வதே யோக(ஹ)ம் ப்ரோக்தவானஹ மவ்யயம் ||
விவஸ்வான் மனவே ப்ராஹ மனுரிக்ஷ்வாகவேப்(வி)ரவீத் ||1||

(ப. உ.) இமம், விவஸ்வதே, யோக(ஹ)ம், ப்ரோக்தவான், அஹம், அவ்யயம் | விவஸ்வான், மனவே, ப்ராஹ, மனுः, இக்ஷ்வாகவே, அப்(வி)ரவீத் ||

ஸ்ரீ பகவான்	= ஸ்ரீக்ருஷ்ணன்	ப்ரோக்தவான்	= சொல்லியிருக்கிறேன்.
உவாச	= சொல்லுகிறான்.	விவஸ்வான்	= ஸூர்யன்
அஹம்	= நான் (ஸ்ரீகிருஷ்ணன்)	மனவே	= தன்குமாரனை மனுவுக்கு
அவ்யயம்	= நாசமற்றதாகக் கொடுக்கும்	ப்ராஹ	= சொன்னான்.
இமம்	= இந்த	மனுः	= மனு
யோக(ஹ)ம்	= நாசமற்ற பாயத்தை	இக்ஷ்வாகவே	= தன்குமாரனை இக்ஷ்வாகு ராஜனுக்கு
விவஸ்வதே	= ஸூர்யனுக்கு	அப்(வி)ரவீத்	= சொன்னான்.

(மூ)—ஏவம் பரம்பரா ப்ராப்தமிமம் ராஜர்ஷயோ விதுः(ஹுः) ||
ஸ காலேனேஹ மஹதா யோகோ(ஹோ) நஷ்டः பரந்தப ||2||

(ப. உ.) ஏவம், பரம்பராப்ராப்தம், இமம், ராஜர்ஷயः, விதுः(ஹுः) | ஸः, காலேன, இஹ, மஹதா, யோகः(ஹः), நஷ்டः, பரந்தப ||

ராஜர்ஷயः	= நிமிமுதலான ராஜரிஷிகளும், ருஷிகளும்,	பரம்பரா	= பரம்பரையாய்
		ப்ராப்தம்	= வந்த
ஏவம்	= இவ்விதமாக	இமம்	= இந்த யோகத்தை (ஞாநேயபாயத்தை)

(ஸ்வபித் ருப்ய:) = தம் தம் தந்தை களான இக்ஷ்வாகு முதலான வர்களால்

வித:(ஏ:) = தெரிந்து கொண்டார்கள்.

பரந்தப = பரத்ருதாபகனை அர்ஜுன!

ஸ:, யோக: (ஹ:) = அந்த யோகம்

மஹதா, காலேன இஹ = வெகு காலமாய் விட்டதால் = இந்த லோகத்தில் (மண்ணுலகில்)

நஷ்ட: = தெரியாமற் போய்விட்டிருக்கிறது.

(ஸூ)—ஸ ஏவாயம் மயா தேத்(ஜீ)ய யோக(ஹ:) ப்ரோக்த: புராதன: ||
ப(ஹ)க்தோஸி மே ஸகா(வா) சேதி ரஹஸ்யம் ஹ்யேதது
(ஏ)த்தமம் || 3 ||

(ப. உ.) ஸ:, ஏவ, அயம், மயா, தே, அத்(ஜீ)ய, யோக(ஹ):, ப்ரோக்த:, புராதன:| ப(ஹ)க்த:, அஸி, மே, ஸகா(வா), ச, இதி, ரஹஸ்யம், ஹி, ஏதத், உத்தமம் ||

புராதன: = ப்ராசீனமான
ஸ:, ஏவ = அதுவே
அயம் = இந்த
யோக:(ஹ:) = யோகம்.
மே = எனக்கு
பக்த:, அஸி = பக்தனாயிருக்கிறாய்
ச = மற்றும்
ஸகா(வா) = நேசனாய்
அஸி = இருக்கிறாய்
(இதி) = என்று
மயா = என்னால் (ஸ்ரீகிருஷ்ணனால்)
அத்(ஜீ)ய = இப்பொழுது
தே = உனக்கு
ப்ரோக்த: = சொல்லப்பட்டது.
ஏதத் = இந்த யோக(ஹ)ம்
ரஹஸ்யம் = மிகவும் ரஹஸ்யமானது,
உத்தமம் = உத்தமமானது
(இதி) = என்று
ஹி = ப்ரஸித்தம்.

அர்ஜுன உவாச—

(ஸூ)—அபரம் ப(ஹ)வதோ ஜன்ம பரம் ஜன்ம விவஸ்வத: ||
கத(ஶ)மேதத்(ஜீ) விஜானீயாம் த்வமாதௌ(ஔ) ப்ரோக்த
வானிதி || 4 ||

(ப. உ.) அபரம், ப(ஹ)வத:, ஜன்ம, பரம், ஜன்ம, விவஸ்வத: | கத(ஶ)ம், ஏதத், விஜானீயாம், த்வம், ஆதௌ(ஔ), ப்ரோக்தவான், இதி ||

அர்ஜுன: = அர்ஜுனன்
உவாச = வினவுகிறான்.
ப(ஹ)வத: = உன்னுடைய (ஸ்ரீ கிருஷ்ணனுடைய)
ஜன்ம = பிறப்பு
அபரம் = பிறகு(இப்பால்) உண்டானது.
விவஸ்வத: = ஸூர்யனின்
ஜன்ம = ஜன்மம்
பரம் = பூர்வ காலிகமானது. (முற்காலத்தி லுண்டானது.)

(அத:) = ஆகையால்
த்வம் = நீ (கிருஷ்ணன்)
ஆதௌ (ஔள) } = முதலில்
விவஸ்வதே = சூர்யனுக்காக
ப்ரோக்தவான் } = சொல்லியிருக்கிறாய்
இதி = என்னும்
ஏதத் = இவ்விஷயத்தை
(அஹம்) = நான்
கத(ய)ம் = எப்படி
விஜானீயாம் = நிஜமென்று தெரிந்து கொள்வது?

(க. உ.) :—ஸூர்யன் முன்னிருந்தவன், நீ பிறகு இப்பால் பிறந்தவன். ஆகையால் 'ஸூர்யனுக்கு நான் இந்த யோகத்தைச் சொன்னேன்' என்று நீ சொல்வது எப்படிப் பொருந்தும்? என்று ஆக்ஷேபம்.

ஸ்ரீ பகவானுவாச—

(மூ)—ப(வ)ஹூனி மே வ்யதீதானி ஜன்மானி தவ சார்ஜுன ||
தான்யஹம் வேத(உ) ஸர்வாணி ந த்வம் வேத்த(ய)பரந்தப||5||

(ப. உ.) ப(வ)ஹூனி, மே, வ்யதீதானி, ஜன்மானி, தவ, ச, அர்ஜுன | தானி, அஹம், வேத(உ), ஸர்வாணி, ந, த்வம், வேத்த(ய), பரந்தப ||

ஸ்ரீ பகவான் = ஸ்ரீ கிருஷ்ணன்
உவாச = பதில் அளிக்கிறான்.
அர்ஜுன = அர்ஜுனே!
மே = என்னுடைய
ப(வ)ஹூனி = அனேகங்களான
ஜன்மானி = ஜன்மங்கள் (அவதாரங்கள்)
வ்யதீதானி = கடந்திருக்கின்றன.
ச = மற்றும்
தவ = உன்னுடைய

ப(வ)ஹூனி = அனேகமான
ஜன்மானி = ஜன்மங்கள்
வ்யதீதானி = கடந்திருக்கின்றன.
அஹம் = நான்
தானி = அந்த
ஸர்வாணி = எல்லா ஜன்மங்களையும்
வேத(உ) = தெரிந்தவனாயிருக்கிறேன்.
பரந்தப = ஸத்ருதாபகனான அர்ஜுனே!
த்வம் = நீ

தானி = அந்த ஜன்மங்களை | நவேத்த(யு) = தெரிந்தவனல்ல.

அவதாரணிகை :—பிறப்பும், இறப்பும் இல்லாத பரமாத்மாவுக்கு ஜன்மம் (உத்பத்தி) என்பது எப்படிப் பொருந்தும்? என்னும் ஆக்ஷேபத்திற்கு—ஜன்மமென்றால் மனிதர்களைப்போல் கர்மானுஸாரமாய் பஞ்ச பூ(ஹ-வி)தங்களால் புதியதாய் உண்டாகும் ஸரீர ஸம்பந்த(ய)மல்ல. எப்பொழுதும் இருக்கும் அவனிடஸ்வரூபத்திலேயே ப்ரத்யக்ஷமாவதே என்று ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லுகிறான் :—

(மூ)—அஜோபி ஸன்னவ்யயாத்மா பூ(ஹ-வி)தானமீஸ்வரோபி ஸன் ||
ப்ரக்ருதிம் ஸ்வாமதி(யி)ஷ்டாய ஸம்ப(ஹ)வாம்யாத்மமாயயா ||
|| 6 ||

(ப. உ.) அஜ:, அபி, ஸன், அவ்யயாத்மா, பூ(ஹ-வி)தானம், ஈஸ்வர: அபி, ஸன் | ப்ரக்ருதிம், ஸ்வாம், அதி(யி)ஷ்டாய, ஸம்ப(ஹ)வாமி, ஆத்மமாயயா ||

அஜ:, அபி = ஸரீரத்தினால் உத்பத்தியில்லாதவனாயினும்

அவ்யயாத்மா, ஸன், அபி = நாஸமற்றதேதஹமுடையவனாயிருப்பினும்

பூ(ஹ-வி)தானம் = ப்ராணிகளுக்கு

ஈஸ்வர:, (ஸன்), (அபி) = தலைவனாயிருப்பினும்

ஸ்வாம் = ஸ்வகீயமான (எனதாகிய)

ப்ரக்ருதிம் = ஸ்வபா(ஹா)வத்தை (அஸங்கத்வம் முதலான

அதி(யி)ஷ்டாய } = ஆஸ்ரயித்துக்கொண்டே (அவதரித்தபோதிலும் அஸங்கதம் முதலியதர்மங்களை விடாமலே)

ஆத்மமாயயா = என் அறிவினால் (கர்மத்தாலல்லாமல்)

ஸம்ப(ஹ)வாமி = ப்ராது(ஹு)ர்ப(ஹ)விக்கிறேன் (ப்ரத்யக்ஷனாகிறேன்).

அவதாரணிகை :—ஸ்ரீ கிருஷ்ணன் தான் அவதரிப்பதற்குக் காரணத்தைச் சொல்லுகிறான் :—

(மூ)—யதா(ஆ) யதா(ஆ) ஹி த(ய)ர்மஸ்ய க்(கீ)லாநிர் ப(ஹ)வதி பாரத ||

அப்யுத்தா(�் ா)ன மத(ய)ர்மஸ்ய ததா(ஆ)த்மானம் ஸ்ருஜாம்ய ஹம் || 7 ||

(ப: உ.) யதா(ஆ), யதா(ஆ), ஹி, த(ய)ர்மஸ்ய, க்லானி:, ப(ஹ)வதி, பா(ஹா)ரத || அப்யுத்தா(ஃா)னம், அத(ய)ர்மஸ்ய, ததா(ஆ), ஆத்மானம், ஸ்ருஜாமி, அஹம் ||

பா(ஹா)ரத = அர்ஜுனை!
யதா(ஆ), யதா(ஆ) } = எந்தெந்த காலத்தில்
த(ய)ர்மஸ்ய = தர்மத்திற்கு
க்(கீ)லானி: = இழிவு (நாசம்)
ப(ஹ)வதி = உண்டாகிறதோ
அத(ய)ர் மஸ்ய } = அதர்மத்திற்கு
அப்யுத்தா (ஃா)னம் } = அபிவ்ருத்தி (யி)
ப(ஹ)வதி = உண்டாகிறதோ
ததா(ஆ) = அக்காலத்தில்
அஹம் = நான்
ஆத்மானம் = என்னை
ஸ்ருஜாமி = ஸ்ருஷ்டித்துக் கொள்ளுகிறேன். (நான் ப்ராதுர்பவிக்கிறேன்)
ஹி = ப்ரஸித்தம்.

அவதரணிகை:—பூர்ண காமனுக்கு யாதொரு ப்ரயோஜனமுமில்லாவிடினும், ஸஜ்ஜனர்களைக் காப்பாற்று வதற்காகவே அவதரிக்கிறேன் என்று சொல்லுகிறான்:—

(மூ)—பரித்ராணாய ஸாதூ(ஹூ)னாம் விநாஸாய ச து(ஹு)ஷ்க்ருதாம் || தர்ம ஸம்ஸ்தா(ஃா)பனார்த்தா(ஃா)ய ஸம்ப(ஹ)வாமி யுகே (கே) யுகே(கே) || 8 ||

(ப. உ.) பரித்ராணாய, ஸாதூ(ஹூ)னாம், விநாஸாய, ச, து(ஹு)ஷ்க்ருதாம் | த(ய)ர்ம-ஸம்ஸ்தா(ஃா)பனார்த்தா(ஃா)ய, ஸம்ப(ஹ)வாமி, யுகே(கே), யுகே(கே) ||

ஸாதூ (ஹூ)னாம் } = ஸாத்விகர்களின்
பரித்ராணாய = ரக்ஷணைக்காகவும்
ச = மற்றும்
து(ஹு)ஷ்க்ருதாம் } = பாபிகளின் (தாமஸரின்)
விநாஸாய = நாசத்திற்காகவும் (அவர்களுக்கு தமஸ்

ஸுண்டாவதற் காகவும்)

தர்ம-
ஸம்ஸ்தா
(யா)பனார்
த்தா(யா)ய = தர்மத்தை நிலை நிறுத்து வதற்காகவும்

யுகே(மே), யுகே(மே) = ஒவ்வொரு யுகத்திலும்

ஸம்ப(ஹ)வாமி = அவதரிக்கிறேன்.

அவதரணிகை:—ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஜன்ம கர்மங்களை அறிந்தவனுக்கு ப(ஹ)லத்தைச் சொல்லுகிறான்:—

(மூ)—ஜன்ம கர்ம ச மே தி(தி)வ்யமேவம் யோ வேத்தி தத்வத: ||
த்யக்த்வா தே(தே)ஹம் புனர்ஜன்ம நைதி மாமேதி ஸோர்
ஜுன || 9 ||

(ப. உ.) ஜன்ம, கர்ம, ச, மே, தி(தி)வ்யம், ஏவம், ய:, வேத்தி, தத்வத: | த்யக்த்வா, தே(தே)ஹம், புன:, ஜன்ம, ந, ஏதி, மாம், ஏதி, ஸ:, அர்ஜுன ||

அர்ஜுன = அர்ஜுனனே!
ய: = எவன்
மே = என்னுடைய
ஜன்ம = அவதாரத்தையும்
ச = மற்றும்
கர்ம = கர்மத்தையும்
ஏவம் = முன்சொல்லிய வாறு
தி(தி)வ்யம் = ப்ரக்ருதி ஸம்பந்தமற்று லோகவிலக்ஷண மான வைகளென்றும்
தத்வத: = நிஜமானவைகளென்றும்
வேத்தி = தெரிந்துகொள்கிறானோ
ஸ: = அவன் (என்னிட லோகவிலக்ஷண மான ஜன்ம கர்மங்களை அறிந்தவன்)
தே(தே)ஹம் = ஶரீரத்தை
த்யக்த்வா = விட்டு
புன: = மற்றும்
ஜன்ம = பிறப்பை
ந, ஏதி = அடைவதில்லை.
மாம் = என்னை
ஏதி = அடைகிறான். (முக்தனாகிறான்).

அவதரணிகை:—முன் சொல்லியவாறு ஞானமடைந்தவர்கள் பலத்தை அடைந்திருக்கிறார்களென்று சொல்லுகிறான்:—

(மூ)—வீதராக(ம)ப(ஹ)யக்ரோதா(யா) மன்மயா மாமுபா(ஸ்ரி)ரிதா:||
ப(ஹ)வோ ஞானதபஸா பூதா மத்பா(ஹ்ரா)வ மாக(ம)தா: || 10 ||

(ப. உ.) வீத-ராக(ஸ)-ப(ஹ)ய-க்ரோதா:(யா:), மன்மயா:, மாம், உபாஸ்ரிதா:| ப(ஹ)வோ:, ஞான-தபஸா, பூதா:, மத்பா(ஹா)வம், ஆகதா: ||

வீத-	= விடப்பட்ட	
ராக(ஸ)-	= ராகமென்ன	
ப(ஹ)ய-	= ப(ஹ)யமென்ன	
க்ரோதா: (யா:)	= க்ரோதமென்ன இவைகளை யுடைய	
மன்மயா:	= என்னையே உத்தமையுடையவர்கள் (ஸ்ரீ க்ருஷ்ணனே ப்ரஷ்டனென்றறிந்திருப்பவர்கள்)	
மாம்	= என்னை (ஸ்ரீ கிருஷ்ணனை)	
உபாஸ்ரிதா:	= ஆஸ்ரயித்திருக்கும்	
ப(ஹ)வோ:	= அனேக ஜனங்கள்	
ஞான-	= அறிவு மற்றும்	
தபஸா	= தபஸ்ஸு இவைகளால்	
பூதா: ஸந்த:	= ஸுத்த(ய)ராய்	
மத்பா(ஹா)வம் (மயி பாவம்,)	= என்னிடத்தில் (பரமாத்மாவிடத்தில்) இருப்பை (மோக்ஷத்தை)	
ஆக(ஸ)தா:	= அடைந்திருக்கிறார்கள். (ஸாயுஜ்ய லக்ஷ்ணமோக்ஷத்தை அடைந்திருக்கிறார்கள்)	

(க. உ.):—காமக்ரோதா(யா)திகளைத் துறந்து, பரமாத்மாவையே ஸர்வோத்தமனென்று அறிந்துகொண்டு, பரமாத்மாவையே ஆஸ்ரயித்துக்கொண்டிருக்கும் ஜனங்கள் இந்த ஞான மகிமையால் பரமாத்மாவில் ஸ்தி(யி)திரூபமாகிய (இருப்பென்னும்) ஸாயுஜ்ய ரூபமான மோக்ஷத்தை அடைந்திருக்கிறார்கள்.

விசாரம்:—"மன்மயா:" என்னும் பதத்திலிருக்கும் "மய" ஶப்தத்திற்கு ப்ரதா(யா)னமென்னும் அர்த்தமிருப்பதினால் "அஹம் மய: ப்ரதா(யா)ன: ஏஷோ(அ)ம் தே மன்மயா:" என்னும் விக்ரஹத்தினால் பரமாத்மாவே ப்ரதா(யா)னமாயுடையவ ரென்று அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது.

ஶங்கராசார்யர்:—"மன்மயா:" என்னும் பதத்திற்கு "ப்ரஹ்ம த(ஆ)ர்ஶின:" என்று அர்த்தம் செய்து, மற்றும் அதற்கு "ஈஶ்வராபே(ஹே)த(ஆ) த(ஆ)ர்ஶின:" ஜீவப்ரஹ்மாபேதமறிந்தவர்கள் என்று விவரித்திருக்கிறார். அது ஸரியானதல்ல. ஏனெனின்:— ஈஶ்வராபே(ஹே)த(ஆ)ஞானத்தை "ஈஶ்வரோஹம்" (கீதா 16-14)

என்னும் ஸ்லோகத்தில் ஆஸுர (தாமஸரின்) ஸ்வபா(ஹா)வ மென்று நிந்தித்திருப்பதிலும், தானே ஈச்வரனென்னும் ஞானத்திலல் தமஸ்ஸுண்டாகிறது, மோக்ஷமுண்டாவதில்லை என்று. சொல்லியிருக்கிறபடியாலும், கீதா கர்த்தாவாகிய ஸ்ரீ கிருஷ்ணனுக்கு சங்காசார்யரால் செய்யப்பட்டிருக்கும் அர்த்தம் அஸம்மதமானது, மற்றும் விருத்தமுமானது. 'மன்மயா:' என்னும் பதத்திற்கு அந்த அர்த்தம் ஆவதுமில்லை. ஆகையால் 'மன்மயா:' என்னும் பதத்திற்கு "ஈச்வராபே(ஹே)த(உ) த(உ)ர்சின:" என்னும் சங்காசார்யரின் விவரணம் அங்கீகரிக்கத்தக்கதல்ல.

"மத்பா(ஹா)வமாக(ஹ)தா:" என்னும் பதத்திற்கு "மயி பா(ஹா)வம் மத்பாவம்" என்று பதத்தைப் பிரித்து, மயி = பரமாத்மாவில், பா(ஹா)வம் = ஸ்தி(யி)தியை, அடைகிறானென்று அர்த்தமாகிறபடியால், பரமாத்மாவிடத்தில் ஸ்தி(யி)திரூபமான ஸாயுஜ்ய மோக்ஷத்தை அடைகிறான் என்று அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. ஸ்ரீத(ய)ரஸ்வாமி முதலான அத்வைதிகள் "மத்பா(ஹா)வம் = மத்ஸாயுஜ்யம், ப்ராப்தா:" என்று அர்த்தம் செய்திருக்கிறார்கள். இந்த அர்த்தத்தையே ஸ்ரீ கிருஷ்ணனும் "நிவஸிஷ்யஸி மய்யேவ" (கீதா 12-8) என்னும் ஸ்லோகத்தில், ஞானி பரமாத்மாவில் ஸ்தி(யி)தியை = இருப்பை அடைகிறான் என்று வெளிப்படையாகச் சொல்லியிருப்பதால் இந்த அர்த்தமே ப்ராமாணிகமானது. 3-2-6-வது ப்ரஹ்மஸூத்ரத்தின் வ்யாக்யானமான "வேதாந்த கல்பதரு" என்னும் அத்வைத க்ரந்த(ய)த்தில் "ஸகுணப்ரஹ்மோபாஸன ப(ஹ)லம் ஈச்வர ஸாயுஜ்யம் ஹி..... பே(ஹே)தாச்ரயத்வாத்" என்று சொல்லியிருப்பதால், ஸாயுஜ்ய மோக்ஷமென்றால் பரமாத்மாவைவிட வேறாக, பரமாத்மாவுடன் கூடியிருப்பதேயல்லாது பரமாத்மாவுடன் ஐக்யமல்ல.

(மூ)—யே யதா(யா) மாம் ப்ரபத்யந்தே தாம் ஸ்ததை(யை)வ ப(ஜ)ஜாம்யஹம் ||

மம வர்த்மாநுவர்தந்தே மநுஷ்யா: பார்த்த(ய) ஸர்வஶ: ||11||

(ப. உ.) யே, யதா(யா), மாம், ப்ரபத்(த்)யந்தே, தான், ததா(யா), ஏவ, ப(ஜ)ஜாமி, அஹம் | மம, வர்த்ம, அநுவர்தந்தே, மநுஷ்யா:, பார்த்த(ய), ஸர்வஶ: ||

யே = யார்
யதா(யா) = எவ்விதமாக
மாம் = என்னை (கிருஷ்ணனை)
ப்ரபத்(ஜி)யந்தே } = அடைகிறார்களோ (பஜிக்கிறார்களோ)
தான் = அவர்களை
ததா(யா)ஏவ } = அவரிடசேவையை அனுசரித்தே
அஹம் = நான் (ஸ்ரீ கிருஷ்ணன்)
ப(ஹ)ஜாமி = பஜிக்கிறேன்.

(அவர்களிடசேவையையனுசரித்துஸ்வர்க்கமோக்ஷாதி பலங்களைக்கொடுக்கிறேன்.)

பார்த்த = அர்ஜுன!
ஸர்வஶ: = எல்லா
மனுஷ்யா: = மனிதர்களும்
மம = என்னுடைய
வர்த்ம = மார்க்கத்தை (வழியை)
அனுவர்தந்தே } = அனுஸரிக்கிறார்கள்.

அவதரணிகை:—ஸகல ப(ஹ)லங்களையும் கொடுக்கும் உன்னை (ஸ்ரீ கிருஷ்ணனை)க் குறித்து கர்மங்களைச் செய்யாமல், இதர தேவதைகளைக் குறித்து ஏன் கர்மங்களைச் செய்கிறார்கள்? என்னும் ஸங்கைக்குப் பதில் அளிக்கிறான்:—

(மூ)—காங்க்ஷந்த: கர்மணாம் ஸித்தி(யி)ம் யஜந்த இஹ தே(தே)வதா:
க்ஷிப்ரம் ஹி மானுஷே லோகே ஸித்தி(யி)ர் ப(ஹ)வதி கர்

மஜா || 12 ||

(ப. உ.) காங்க்ஷந்த:, கர்மணாம், ஸித்தி(யி)ம், யஜந்தே, இஹ, தே(தே)வதா: | க்ஷிப்ரம், ஹி, மானுஷே, லோகே, ஸித்தி: (யி:), ப(ஹ)வதி கர்மஜா ||

கர்மணாம் = கர்மங்களின்
ஸித்தி(யி)ம் = ப(ஹ)லத்தை
க்ஷிப்ரம் = ஸீக்ரமாய்
காங்க்ஷந்த: = அபேக்ஷிக்கும் ஜனங்கள்
இஹ = இவ்வுலகில்
தே(தே)வதா: } = என்னைவிடவேறுன இந்த்ராதி தேவர்களை
யஜந்தே = யாகாதிகளால் பூஜிக்கின்றனர்.

ஹி = ஏனெனின்
மானுஷே, லோகே } = மனுஷ்ய லோகத்தில்
கர்மஜா = இதர தேவதையின் உத்தேஶமாய்ச் செய்த கர்மங்களிலுண்டாகும்
ஸித்தி(யி): = ப(ஹ)லமானது
க்ஷிப்ரம் = ஸீக்ரத்தில்
ப(ஹ)வதி = கிடைக்கிறது.

(க. உ.) :—"அந்தவத்து ப(ஹ)லம் தேஷாம்" (7-23) என்னும் ஸ்லோகத்தில் சொல்லியுள்ளவாறு அன்ய தேவர்களின் உத்தேஸ்யமாய்ச்செய்யப்பட்ட கர்மங்களினல் கிடைக்கும் ப(ஹ)லம் நாஸமடையக் கூடியதாயினும், அற்பமாயினும், ஸீக்ரத்தில் கிடைக்கும் என்னும் ஆஸையினல் அன்னிய தேவதைகளின் பொருட்டு கர்மங்களைச் செய்கின்றனர்.

அவதாரணிகை :—பரமாத்மாவின் ஸ்வரூபத்தை நிரூபிக்கின்றனன்:—

(மூ)—சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் கு(கு)ணகர்ம விபா(ஹ)க(கு)ஸ: ||
தஸ்ய கர்த்தாரமபி மாம் வித்(த்)யகர்தாரமவ்யயம் || 13 ||

(ப. உ.) சாதுர்வர்ண்யம், மயா, ஸ்ருஷ்டம், கு(கு)ணகர்மவிபா(ஹ)க(கு)ஸ: | தஸ்ய, கர்தாரம், அபி, மாம், வித்தி(த்யு), அகர்தாரம், அவ்யயம் ||

மயா = என்னல் (ஸ்ரீ கிருஷ்ணனல்)
சாதுர்வர்ண்யம் = ப்ராஹ்மண, க்ஷத்ரிய, வைஸ்ய, ஸூத்ர என்னும் நான்கு வர்ணங்களின் கூட்டம்
குணகர்ம விபா(ஹ)க(கு)ஸ: = பரஸ்பரம் வெவ்வேறான அவரவரிட குணங்களுடனும் கர்மங்களுடனும் கூடியதாய்
ஸ்ருஷ்டம் = ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கிறது
அவ்யயம் = நாஸமற்ற
மாம் = என்னை
தஸ்ய = அந்த நான்கு வர்ணங்களின்
கர்தாரம் = கர்தாவாக
வித்தி(த்யு) = தெரிந்து கொள்.
அகர்தாரம் (நித்யதேதகர்தா யஸ்யதம்) அபி = கர்த்தா இல்லாதவனையும் (பரமாத்மாவை ஸ்ருஷ்டிப்பவனில்லை, பிறப்பற்றவன் என்றும்)
வித்தி(த்யு) = தெரிந்து கொள்.

(மூ)—ந மாம் கர்மாணி லிம்பந்தி ந மே கர்மப(ஹ)லே ஸ்ப்ருஹா ||
இதி மாம் யோபி(ஹி)ஜானாதி கர்மபி(ஹி)ர்ந ஸ ப(ஹ)த்(த்)யதே || 14 ||

(ப. உ.) ந, மாம், கர்மாணி, லிம்பந்தி, ந, மே, கர்மப(ஹ)லே, ஸ்ப்ருஹா | இதி, மாம், யः, அபி(ஹி)ஜானாதி, கர்மபி:(ஹி:), ந, ஸः, ப(ஹ)த்(ந்)யதே ||

கர்மாணி	= கர்மங்கள்
மாம்	= என்னை
ந, லிம்பந்தி	= ஸம்ப(ஹ)ந்தப் படுவதில்லை. (ஜகத் ஸம்ஹாராதிவ்யாபாரத்திஞல் எனக்கு பாபமுண்டாவதில்லை. ரகூஷணைதிகளால் புண்யமுண்டாவதில்லை என்றால் நான் ஸம்பந்தமற்றவன் நிர்லிப்தன்)
மே	= எனக்கு
கர்மப(ஹ)லே	= கர்மத்திலுண்டாகும் பலத்தில்
ஸ்ப்ருஹா	= அபேகூஷை
ந	= இல்லை.
இதி	= இவ்விதமாக
மாம்	= என்னை (ஸ்ரீகிருஷ்ணனை)
யः	= எவனொருவன்
அபி(ஹி) ஜானாதி	= ஸரியாகதெரிந்துகொள்கிறானோ
ஸः	= அவன்
கர்மபி:(ஹி:)	= கர்மங்களினால்
ந, ப(ஹ)த்(ந்)யதே	= கட்டப்படுவதில்லை.

(க. உ.) :—பரமாத்மாவுக்கு கர்மலேபமில்லை என்று எவன் தெரிந்துகொள்கிறானோ, அவனுக்கும் அந்த ஞானத்தின் ஸாமர்த்யத்தினால் பாபங்களின் ஸம்பந்தமாவதில்லை. (மூக்தனாகின்றான்)

(மூ)—ஏவம் ஜ்ஞாத்வா க்ருதம் கர்ம பூர்வைரபி முமுக்ஷுபி:(ஹி:) ||
குரு கர்மைவ தஸ்மாத் த்வம் பூர்வை: பூர்வதரம் க்ருதம்
|| 15 ||

(ப. உ.) ஏவம், ஜ்ஞாத்வா, க்ருதம், கர்ம, பூர்வை:, அபி, முமுக்ஷுபி.: (ஹி:)| குரு, கர்ம, ஏவ, தஸ்மாத், த்வம், பூர்வை:, பூர்வதரம், க்ருதம். ||

முமுக்ஷுபி:(ஹி):	= மோக்ஷத்தில் அபேக்ஷையுடைய
பூர்வை:, அபி	= பூர்விகரான ஜனகப்ரியவ்ரதாதி அரசர்களாலும்
ஏவம்	= பரமாத்மாவுக்கு
கர்மப(ஹ)லம் கர்மப(ஹ)லாபேக்ஷையுமில்லை என்று முன் ஸ்லோகத்தில் சொல்லியிருக்கிறவாறு	

ஜ்ஞாத்வா = தெரிந்துகொண்டு
கர்ம = கர்மம்
க்ருதம் = செய்யப்பட்டிருக்கிறது.
தஸ்மாத் = ஆகையால்
த்வம் = நீ
பூர்வை: = முன்னோர்கள்
பூர்வதரம் = வெகு காலத்திற்கு முன்னிருந்து
க்ருதம் = செய்யப்பட்ட
கர்ம = கர்மத்தை
குரு ஏவ } = செய்தே தீரவேண்டியது.

(மூ)—கிம் கர்ம கிமகர்மேதி கவயோப்யத்ர மோஹிதா: ||
தத்தே கர்ம ப்ரவக்ஷ்யாமி யஜ்ஞ்யாத்வா மோக்ஷ்யஸேஶுபா
(ஹா)த் ||16||

(ப. உ.) கிம், கர்ம, கிம், அகர்ம, இதி, கவய:, அபி, அத்ர, மோஹிதா:| தத், தே, கர்ம, ப்ரவக்ஷ்யாமி, யத், ஞாத்வா, மோக்ஷ்யஸே, அஶுபாத்||

கர்ம = ஸத்கர்மம்
கிம் = எது?
அகர்ம = கர்மமின்மை மற்றும்விருத்தமான கர்மம்
கிம் = எது?
இதி = என்று
அத்ர = இந்த கர்மத்தின் விஷயத்தில்
கவய:, அபி } = ஞானிகளும்
மோஹிதா: = ஸம்ஶயாதிகளுடன் கூடியவராயிருக்கின்றார்கள்.
தத் (தஸ்மாத்) } = அக்காரணத்தினால்
யத் = எந்தகர்மத்தை
ஞாத்வா = தெரிந்துகொண்டு (அவ்வாறு நடந்து)
அஶுபா (ஹா)த் } = அமங்களமானஸம்ஸார கட்டினின்றும்
மோக்ஷ்யஸே = முக்தனாவாயோ
தத் = அந்த
கர்ம = கர்மத்தை
தே = உனக்காக
ப்ரவக்ஷ்யாமி = சொல்லுகின்றேன்.

(மூ)—கர்மணோஹ்யபி போ(வோ)த்த(ய்)வ்யம் போ(வோ)த்த(ய்)வ்யம் ச விகர்மண: ||
அகர்மணஶ்ச போ(வோ)த்த(ய்)வ்யம் க(ஹ்)ஹன கர்மணோ
க(ஹ்)தி: || 17 ||

(ப. உ.) கர்மண:, ஹி, அபி, போ(வோ)த்த(ய்)வ்யம், போ(வோ)த்த(ய்)வ்யம், ச, விகர்மண:| அகர்மண:, ச, போ(வோ)த்த(ய்)வ்யம், க(ஹ்)ஹன, கர்மண:, க(ஹ்)தி: ||

கர்மணி = கர்மத்தின்
(தத்வம்)அபி = தத்வத்தையும் (ஸ்வரூபத்தை தயும்)
போ(ஹோ)த்த(ய்ய)வ்யம் } = தெரிந்துக் கொள்ள வேண்டும்.
ச = மற்றும்
விகர்மண: = விருத்த(ய) மான கர்மத்தின்
(தத்வம்) = தத்வத்தையும்
(போ)த்த(ய்ய)வ்யம் } = தெரிந்துகொள்ள வேண்டும்.

அகர்மண: = கர்மாபா(ஹா)வத்தின் (கர்மம் செய்யாமலிருட்பதின்)
(தத்வம்) சபோத்தவ்யம் } = தத்வத்தையும் தெரிந்துகொள்ள வேண்டும்
கர்மண: = கர்மத்தின்
க(ஜ்)தி: = ஞானம்
க(ஜ்)ஹன = க(ஜ்)ஹனமானது. (கதாசித் ஞானமாய் அறியமுடியாதது.)

(மூ)—கர்மண்யகர்ம யः பச்யேத்(த்)கர்மணி ச கர்ம யः ||
ஸ புத்தி(ய்)மான் மனுஷ்யேஷு ஸ யுக்தः க்ருத்ஸ்ன கர்ம க்ருத் || 18 |

(ப. உ.) கர்மணி, அகர்ம, யः, பச்யேத், அகர்மணி, ச, கர்ம, யः | ஸः புத்தி(ய்)மான், மனுஷ்யேஷு, ஸः, யுக்தः, க்ருத்ஸ்ன-கர்ம-க்ருத் ||

கர்மணி = வர்ணச்ரமத்திற்குத் தகுந்த கர்மம்
(க்ரியமாணை), (அபி) } = தன்னால் செய்யப்பட்டுக்கொண்டிருந்தாலும்
அகர்ம = கர்மாபா(ஹா)வத்தை (நான் சுதந்திர கர்த்தா அல்லவென்று)
யः = எவன்
பச்யேத் = காண்கிறானே
ச = மற்றும்
யः = எவன்
அகர்மணி = தான் கர்மத்தைச் செய்யாமலிருக்கும் நித்ராதி காலத்தில்

கர்ம = ஈச்வரனின் வ்யாபாரத்தை
பச்யேத் = காண்கிறானே
ஸः = அவன்
மனுஷ்யேஷு = மனிதர்களில்
புத்தி(ய்)மான் } = புத்தியுடையவன்.
ஸः = அவன்
யுக்தः = ஞானயோகத்தையுடையவன்
ஸः = அவன்
க்ருத்ஸ்ன-கர்ம- = ஸகலமான கர்மங்களை
க்ருத் = செய்பவன் (அதாவது கர்மப[ஹ]லத்தை அடைந்தவனாகிறான்.)

(மூ)—யஸ்ய ஸர்வே ஸமாரம்பா:(ஹா:) காம-ஸங்கல்ப-வர்ஜிதா: ||
ஞானக்னி-த(ஃ)க்(ஶீ)த(ய)கர்மாணம் தமாஹு:: பண்டிதம்
பு(வோ)தா:(யா:) || 19 ||

(ப. உ.) யஸ்ய, ஸர்வே, ஸமாரம்பா:(ஹா:), காம-ஸங்கல்ப-வர்ஜிதா:| ஞானக்னி-த(ஃ)க்(ஶீ)த(ய)-கர்மாணம், தம், ஆஹு::, பண்டிதம், பு(வோ)தா (யா:)||

யஸ்ய	= எந்த மனிதனின்	வர்ஜிதா:	= விடப்பட்டிருக்கின்றனவோ,
ஸர்வே	= ஸமஸ்தமான		
ஸமாரம்பா:(ஹா:)	= கர்மங்களின் ஆரம்பங்கள்	தம்	= அந்த மனிதனை
		பு(வோ)தா: (யா:)	= ஞானிகள்
காம-	= ப(ஹ)லாபேக்ஷை	ஞான-	= ஞானமென்னும்
ஸங்கல்ப-	= மக்களுண்டாவதற்காக இந்த கர்மங்களைச் செய்கிறேன், ஸ்வர்கத்திற்காக இந்த கர்மங்களைச் செய்கிறேன் என்னும் எண்ணம் இவைகளால்	அக்(ஶீ)னி-	= நெருப்பிலை
		த(ஃ)க்த(ய)-	= ஹோமம் செய்யப்பட்ட
		கர்மாணம்	= கர்மங்களையுடைய
		பண்டிதம் (இதி)	= தத்வ ஜ்ஞானி = என்று
		ஆஹு::	= சொல்லுகிறார்கள்.

(மூ)—த்யக்த்வா கர்மப(ஹ)லாஸங்க(ஹ)ம் நித்யத்ருப்தோ நிராஶ்ரய: ||
கர்மண்யபி(ஹி)ப்ரவ்ருத்தோபி நைவ கிஞ்சித் கரோதி ஸ: ||20||

(ப. உ.) த்யக்த்வா, கர்மப(ஹ)லாஸங்க(ஹ)ம், நித்யத்ருப்த:, நிராஶ்ரய:| கர்மணி, அபி(ஹி)ப்ரவ்ருத்த:, அபி, ந, ஏவ, கிம், சித், கரோதி, ஸ: ||

(ய:)	= எவன்	நிராஶ்ரய:	= யோக க்ஷேமங்களுக்காக (இல்லாததை தஸம் பாதிப் பதற்காகவும், இருந்ததைப் காப்பாற்றிக்கொள்வதற்காகவும்) மற்றெருவரை ஆஶ்ரயிப்பதில்லையோ
கர்ம-	= கர்மங்களிலும்,		
ப(ஹ)ல-	= கர்மங்களால் உண்டாகும் ப(ஹ)லங்களிலும்		
அஸங்க(ஹ)ம்	= ஆஸக்தியை		
த்யக்த்வா	= விட்டு		
நித்ய-	= எப்பொழுதும்		
த்ருப்த:	= போதும் என்கிற புத்தியுடையவனே		

ஸ: = அம்மனிதன்
கர்மணி = கர்மத்தைத் செய்வதில்
அபி(ஹி)ப்ரா வ்ருத்த: அபி = ஆஸக்தனையிலும் (கர்மம் செய்யினும்)
கிஞ்சித் = எந்த கர்மத்தையும்
ந, கரோதி ஏவ = செய்யாதவனே கர்ம ப(ஹ)லத்தை அபேக்ஷிக் காமலிருப்பதினால், கர்மத்தை செய்தாலும், கர்மத்தின் து(ஹ்)ஷ்டப(ஹ)லரூபமான ஸம்ஸாரத்தை அடையாதவனே ஆகிறான்.

(மூ)—நிராஶீர்யத சித்தாத்மா த்யக்த-ஸர்வ-பரிக்(ஹ்)ரஹ: ||
ஶாரீரம் கேவலம் கர்ம குர்வன்னாப்னோதி கில்பி(ஹ்வி)ஷம் ||21||

(ப. உ.) நிராஶீ:, யத-சித்தாத்மா, த்யக்த-ஸர்வ-பரிக்(ஹ்)ரஹ: | ஶாரீரம், கேவலம், கர்ம, குர்வன், ந, ஆப்னோதி, கில்பி(ஹ்வி)ஷம் ||

யத- = ஸ்வாதீ(ஈ)னமான
சித்த- = சித்தம்
ஆத்மா = மனது இவைகளையுடைய
நிராஶீ: = [மனது ஸ்வாதீ(ஈ)னத்திலிருப்பதினால்] காமமற்றவனை(ஆசையற்றவனாய்)
த்யக்த- = துறந்த
ஸர்வ- = ஸகல
பரிக்(ஹ்)ரஹ: = போகங்களின் ஸாதனங்களையுடையவன்
கேவலம் = கேவலமாய் (வெறும்)
ஶாரீரம் = தேஹ ஸம்ரக்ஷணைக்கு (மாத்ரம்) உபயுக்தமான
கர்ம = கர்மத்தை
குர்வன், (ஸன்) = செய்கிறவனுக்கு
கில்பி(ஹ்வி)ஷம் = பாவத்தை
ந ஆப்னோதி = அடைவதில்லை.

(மூ)—யத்(ஹ்)ருச்சா(ஹா)லாப(ஹ) ஸந்துஷ்டோ த்(ஹ்)வந்த்(ஹ்)வாதீதோ விமத்ஸர: ||
ஸம: ஸித்தா(ஹ்யா)வஸித்தௌ(ஹ்யௌ) ச க்ருத்வாபி ந நிப(ஹ)த்(ஹ்)யதே || 22 ||

(ப. உ.) யத்(ஹ்)ருச்சா(ஹா)-லாப(ஹ)-ஸந்துஷ்ட:, த்(ஹ்)வந்த்(ஹ்)வா-தீத:, விமத்ஸர: | ஸம:, அஸித்தௌ(ஹ்யௌ), அஸித்தௌ(ஹ்யௌ), ச, க்ருத்வா, அபி, ந, நிப(ஹ)த்(ஹ்)யதே ||

யத்(ஜீ)ருச் சா(ஹா)- = ப்ரயத்னமில்லாமலே
லாப(ஹ)- = கிடைத்த விஷயங்களால்
ஸந்துஷ்ட: = ஸந்தோஷமுள்ள
த்(ஜீ)வந்த்(ஜீ)வ ரதீத: = த்வந்த்வங்களால் ரஹிதனாய் (ஸுகதுக்காதிகளைக் கடந்த வனாய்) [த்வந்த்வங்கள் விவரிக்கப்படுகிறது:—
ஸித்திதள(யீள) = பலம் கிடைத்தபோதிலும்
அஸித்திதள(யீள), ச = பலம் கிடைக்காமற்போயினும்
ஸம: = ஸமனாய் (ஸுகதுக்கங்களையடையாமல்)
விமத்ஸர: = மாத்ஸர்யம் (பொறாமை) அற்றமனிதன்
(கர்மாணி) = கர்மங்களை
க்ருத்வா, அபி = செய்தபோதிலும்
ந, நிப(வ)த்(ய்)யதே = கர்மங்களினால் கட்டப்படுவதில்லை.

(மூ)—க(ஹ)தஸங்க(ஹ)ஸ்ய முக்தஸ்ய ஜ்ஞானவஸ்தி(யி)த சேதஸ: ||
யஜ்ஞாயாசரத: கர்ம ஸமக்(ஸ்)ரம் ப்ரவிலீயதே || 23 ||

(ப. உ.) க(ஹ)த-ஸங்க(ஹ)ஸ்ய, முக்தஸ்ய, ஜ்ஞானவஸ்தி(யி)த-சேதஸ: | யஜ்ஞாய, ஆசரத:, கர்ம, ஸமக்(ஸ்)ரம், ப்ரவிலீயதே ||

க(ஹ)தஸங் க(ஹ)ஸ்ய = பலஸ்னேஹமற்றவனும்
யுக்தஸ்ய = தேஹாதிகளில் அபிமானத்தைத் துறந்தவனுமும்
ஜ்ஞான- = பரமாத்மாவின் ஜ்ஞானமுண்டாவதற்காக
அவஸ்தி(யி)த = ஆஸக்தமான
சேதஸ: = மனதுடையவனுமும்
யஜ்ஞாய = ஸ்ரீபரமாத்மாவின் பொருட்டே
கர்ம = யஜ்ஞார்தி கர்மங்களை
ஆசரத: = செய்யும் மனிதனின்
ஸமக்(ஸ்)ரம் = ஸகலமான
(கர்ம) = கர்மங்களும்
ப்ரவிலீயதே = நாஸமடைகின்றன. (ஸம்ஸாரபந்தங்களை உண்டாக்குவதில்லை.)

(மூ) ப்ரஹ்மார்பணம் ப்ரஹ்ம ஹவிர் ப்ரஹ்மாக்(ஸ்)னௌ ப்ரஹ்மணா ஹுதம் ||
ப்ரஹ்மைவ தேந க(ஹ)ந்தவ்யம் ப்ரஹ்மகர்ம ஸமாதி(யி)னா || 24 ||

(ப. உ.) ப்ரஹ்ம, அர்பணம், ப்ரஹ்ம, ஹவி:, ப்ரஹ்ம, அக்னௌ, ப்ரஹ்மணா, ஹுதம் | ப்ரஹ்ம, ஏவ, தேன, க(ம)ந்தவ்யம், ப்ரஹ்ம, கர்ம, ஸமாதி(யி)னா ||
(க. உ.) என்னிட பக்தர்கள் இதர தேவதைகளை யடைந்தபோதிலும் கடைசியில் ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவான என்னையும் அடைந்தே தீருகிறார்கள் என்றால் முக்தராகிறார்கள். சிவன் முதலிய அன்ய தேவதைகளைப் பூஜிப்பவர்கள் சிவாதி தேவர்களை அடைகிறார்களேயொழிய முக்தராவதில்லை. ஆகையால் நித்ய புருஷார்த்தமான மோக்ஷத்தை அபேக்ஷிப்பவர்கள் என்னையே முக்கியமாய்ப் பூஜிக்கவேண்டும். இதர தேவதைகளை என்னிட (கிருஷ்ணனின்) பரிவாரங்களென்று பூஜிக்கவேண்டும்.

अव्यक्तं व्यक्तिमापन्नं मन्यन्ते मामबुद्धयः ।
परं भावमजानन्तो ममाव्ययमनुत्तमम् ॥ २४ ॥

(மூ)—அவ்யக்தம் வ்யக்திமாபன்னம் மன்யந்தே மாமபு(ஹ்ரு)த்த(ய்ய)யः ॥

பரம் பா(ஹா)வமஜானந்தः மமாவ்யயமனுத்தமம் ॥ 24 ॥

(ப. உ.) அவ்யக்தம், வ்யக்திம், ஆபன்னம், மன்யந்தே, மாம், அபு(ஹ்ரு)த்த(ய்ய)யः | பரம், பா(ஹா)வம், அஜானந்தः, மம, அவ்யயம், அனுத்தமம் ॥

மம = என்னிட
பரம் = பிறரைவிட வேறேயான
அவ்யயம் = நாசமற்ற
அனுத்தமம் (நவித்யதே உத்தமம் யஸ்மாத் தத்) = அத்யுத்தமமான
பா(ஹா)வம் = ஸ்வரூபத்தை
அஜானந்தः = தெரிந்து கொள்ளாத
அபு(ஹ்ரு)த்த(ய்ய)யः = அற்பஞானிகள்
அவ்யக்தம் = ப்ராக்ருத தேஹமற்ற
மாம் = என்னை
வ்யக்திம் = ப்ராக்ருத

தேகத்தை ஆபன்னம்	= அடைந்த வனுக	மன்யந்தே	= தெரிந்துகொள் கிறார்கள்.

नाहं प्रकाशस्सर्वस्य योगमायासमावृतः ।
मूढोऽयं नाभिजानाति लोको मामजमव्ययम् ॥ २५ ॥

(மூ)—நாஹம் ப்ரகாஶ: ஸர்வஸ்ய யோக(ஂ)மாயா ஸமாவ்ருத: ||
மூடோயம் நாபி(ஜி)ஜானாதி லோகோ மாமஜமவ்யயம் || 25 ||

(ப. உ.) ந, அஹம், ப்ரகாஶ:, ஸர்வஸ்ய, யோக(ஂ)-மாயா-ஸமாவ்ருத:| மூட:, அயம், ந, அபி(ஜி)ஜானாதி, லோக:, மாம், அஜம், அவ்யயம் ||

அஹம்	= நான் (ஸ்ரீகிருஷ்ணன்)	ஸர்வஸ்ய	= எல்லா ஜனங்களுக்கும்
யோக(ஂ)-	= யோகம் (என்னிட ஸாமர்த்தியம்)	ப்ரகாஶ:	= ஞானவிஷயமாக
மாயா-	= மாயை (தூர்க்கை) இவர்களால்	ந	= ஆவதில்லை.
ஸமாவ்ருத: (ஸன்) (யோகஂ மாயாஸமாவ்ருத:)	= மூடப்பட்டவனாய்	அத:	= இக்காரணத்தினால்
		அயம்	= இந்த
		மூட:	= மூடரான
		லோக:	= ஜனங்கள்
		அஜம்	= பிறப்பற்ற
		அவ்யயம்	= நாசமற்ற
		மாம்	= என்னை
		ந, அபி(ஜி)ஜானாதி	= தெரிந்துகொள்வதில்லை.

அவதாரணிகை :—இருவர் நடுவில் தெரை போட்டிருக்குமாயின் ஒருவருக்கொருவர் எப்படி காணப்படுவதில்லையோ அப்படியே, மாயையினால் நீ (கிருஷ்ணன்) மூடப்பட்டிருப்பதினால் ஜனங்களால் நீ கண்டுகொள்ளப்படாமலிருப்பாயாயின் உனக்கும் ஜனங்கள் காணப்படமாட்டார்களல்லவோ என்கிற சங்கைக்குப் பதிலளிக்கிறான் :—

वेदाहं समतीतानि वर्तमानानि चार्जुन ।
भविष्याणि च भूतानि मां तु वेद न कश्चन ॥ २६ ॥

(மூ)—வேதா(ஹா)ஹம் ஸமதீதானி வர்தமாநானி சார்ஜுந ||
ப(ஹ)விஷ்யாணி ச பூ(ஹூ)தானி மாம் து வேத(ஹ) ந கஸ்
சன || 26 ||

(ப. உ.) வேத(ஹ), அஹம், ஸமதீதானி, வர்தமாநானி, ச, அர்ஜுந | ப(ஹ)விஷ்யாணி, ச, பூ(ஹூ)தானி, மாம், து, வேத(ஹ), ந, கஃ, சந ||

அர்ஜுந = ஓ அர்ஜுனா!
அஹம் = நான்
ஸமதீதானி = கடந்துபோன
பூ(ஹூ)தானி = ப்ராணிகளையும்
வேத(ஹ) = தெரிந்து கொண்டிருக்கிறேன்.
ச = மற்றும்
வர்தமாநானி = இப்போதிருக்கும் ப்ராணிகளையும்
ப(ஹ)விஷ்யாணி, ச = இனிமேலுண்டாகும் ப்ராணிகளையும்
[வேத(ஹ)] = அறிந்துகொண்டிருக்கிறேன்.
மாம், து = என்னையோ
கஃ, சன = யாரும்
[ந, வேத(ஹ)] = இருந்தது இருந்தாற்போல் அறிவதில்லை.

(க. உ.)—அந்த மாயை (தெரை) ஜனங்களின் ஞானத்திற்குத் தடையாகிறதேதொழிய எனக்கு ஜனங்களின் ஞானமுண்டாவதற்குத் தடையாவதில்லை.

इच्छाद्वेषसमुत्थेन द्वन्द्वमोहेन भारत ।
सर्वभूतानि संमोहं सर्गे यान्ति परन्तप ॥ २७ ॥

(மூ)—இச்சா(ஹா)த்(ஜ்)வேஷ ஸமுத்தே(யே)ன த்(ஜ்)ந்த்(ஜ்)வ
மோஹேந பாரத ||
ஸர்வபூ(ஹூ)தானி ஸம்மோஹம் ஸர்கே(ஸே) யாந்தி பரந்
தப || 27 ||

(ப. உ.) இச்சா(ஹா)-த்(ஜ்)வேஷ-ஸமுத்தே(யே)ன, த்வ(ஜ்)ந்த்(ஜ்)வ-மோஹேந, பா(ஹா)ரத | ஸர்வபூ(ஹூ)தாநி, ஸம்மோஹம், ஸர்கே(ஸே), யாந்தி, பரந்தப ||

பரந்தப = சத்ருக்களைத் தபிக்கச் செய்பவனும்
பாரத = அர்ஜுனா!
ஸர்வபூ(ஹூ)தானி = ஸமஸ்தப்ராணிகளும்
இச்சா(ஹா)த்(ஜ்)வேஷ- = விருப்பம் பகை இவைகளால்
ஸமுத்தே(யே)ன = பிறந்த

மல் இது இஷ்ட மானதுஎன்கிற இது முதலிய அஜ்ஞானத் தினால்)

ஸர்கே(ஏ) = ஸ்ருஷ்டி காலத்தில் (ஸ்ருஷ்டி காலம் முதல்)

ஸம்மோஹம் = மித்யா ஞானத்தை

யாந்தி = அடைகிறார்கள்.

த்வ(ஜ்)ந்த் } = ஸுக துக்கம், லாப நஷ்டம் முதலிய பதார்த்த விஷயக மான

மோஹன = மோஹத்தினல் (துக்கம் எவ் வாறு விடத்தக் கதோ அவ்வா ரே விஷய ஸுக மும் விடத்தக் கது என்றறியா

येषां त्वन्तगतं पापं जनानां पुण्यकर्मणाम् ।
ते द्वन्द्वमोहनिर्मुक्ताः भजन्ते मां दृढव्रताः ॥ २८ ॥

(மூ)—ஏஷாம் த்வந்தக(ஏ)தம் பாபம் ஜனானம் புண்யகர்மணாம் ॥
தே த்(ஜ்)வந்த்(ஜ்)வ-மோஹ-நிர்முக்தாः ப(ஹ)ஜந்தே மாம்
த்ருடவ்ரதாः ॥ 28 ॥

(ப. உ.) ஏஷாம், து, அந்தக(ஏ)தம், பாபம், ஜனானம், புண்யகர்மணாம்|
தே, த்(ஜ்)வத்(ஜ்)வ-மோஹ-நிர்முக்தாः, ப(ஹ)ஜந்தே, மாம், த்ருடவ்ரதாः ॥

யேஷாம் = எந்த

புண்ய- = புண்யகரமான

கர்மணம் = கர்மங்களைச் செய்யும்

ஜனானம் = ஜனங்களின்

பாபம் = பாவமானது

அந்த க(ஏ)தம் } = முடிவடைந்திருக்கிறதோ

தே, து (ஏவ) = அவர்களே

த்(ஜ்)வந்த் (ஜ்)வ- } = சுக துக்கம், லாப நஷ்டம் முதலிய விஷயங்களான

மோஹ- = மோகத்தி னின்றும்

வினிர்முக்தாः (ஸந்தः) } = விடுதலை யடைந்தவர்களாய்

த்ருட- = ஸ்ரீ க்ருஷ்ணனையே எப்பொழுதும் ஸேவிக்கவேண்டும் என்கிற த்ருடமான

வ்ரதாः (ஸந்தः) } = ஸங்கல்பமுள்ளவர்களாய்

மாம் = என்னை

ப(ஹ)ஜந்தே = பஜிக்கிறார்கள்.

जरामरणमोक्षाय मामाश्रित्य यतन्ति ये ।
ते ब्रह्म तद्विदुः कृत्स्नमध्यात्मं कर्म चाखिलम् ॥ २९ ॥

(மூ)—ஜராமரணமோக்ஷாய மாமாஶ்ரித்ய யதந்தி யே ||
தே ப்ரஹ்ம தத்விது:(ஊ:) க்ருத்ஸ்னமத்(யீ)யாத்மம் கர்ம
சாகி(வி)லம் || 29 ||

(ப. உ.) ஜரா-மரண-மோக்ஷாய, மாம், ஆஶ்ரித்ய, யதந்தி, யே | தே, ப்ரஹ்ம, தத், விது:(ஊ:), க்ருத்ஸ்னம், அத்(யீ)யாத்மம், கர்ம, ச, அகி(வி)லம் ||

யே	= யார்	தே	= அவர்கள்
ஜரா-	= கிழத்தனம்	தத்	= அந்த
மரண-	= மரணம் இவை களால்	ப்ரஹ்ம	= ப்ரஹ்மத்தை
மோக்ஷாய	= விடுவிக்கப் படுவதற்காக (மோக்ஷத்தை யடைவதற் காக)	விது:(ஊ:)	= தெரிந்து கொள்ளுகிறார் கள்.
மாம்	= என்னை	க்ருத்ஸ்னம்	= ஸமஸ்தமான
ஆஶ்ரித்ய	= ஆஶ்ரயித்துக் கொண்டு	அத்யாத்மம்	= அத்யாத்மத்தையும்
யதந்தி	= முயற்சிக்கிறார் களோ	அகி(வி)லம்	= ஸமஸ்தமான
		கர்ம, ச	= கர்மத்தையும்
		விது:(ஊ:)	= தெரிந்து கொள்ளுகிறார் கள்.

साधिभूताधिदैवं मां साधियज्ञं च ये विदुः ।
प्रयाणकालेऽपि च मां ते विदुर्युक्तचेतसः ॥ ३० ॥

(மூ)—ஸாதி(யி)பூ(ஊ)தாதி(யி)தை(ஐ)வம் மாம் ஸாதி(யி)யஜ்ஞம்
ச யே விது:(ஊ:) ||
ப்ரயாணகாலேபி ச மாம் தே விது(ஊ)ர்யுக்தசேதஸ: || 30 ||

(ப. உ.) ஸாதி(யி)பூ(ஊ)தாதி(யி)தை(ஐ)வம், மாம், ஸாதி(யி)யஜ்ஞம், ச, யே, விது:(ஊ:) | ப்ரயாணகாலே, அபி, ச, மாம், தே, விது:(ஊ:), யுக்தசேதஸ: ||

யே	= யார்	ஸாதி(யி) யஜ்ஞம்	= அதி(யி) யஜ்ஞத் துடன் கூடிய
ஸாதி(யி) பூ(ஊ)தா தி(யி)தை (ஐ)வம்	= அதி(யி)பூ(ஊ) தம் அதி(யி)தை வம் இவைகளு டன் கூடிய	மாம்	= என்னை
ச	= மற்றும்	விது:(ஊ:)	= தெரிந்து கொள்ளுகிறார் களோ

ச	= மற்றும்	யுக்த-	= பரமாத்மா விடத்தில் வைக்கப்பட்ட
ப்ரயாண காலே, அபி	= மரணகாலத்திலும்	சேதஸ:	= மனதுடையவர்கள் (என்று தெரிந்து கொள்ளவேண்டியது.)
மாம்	= என்னை		
வித:(ஜா:)	= தெரிந்து கொள்ளுகிறார்களோ		
தே	= அவர்கள்		

அத்யாத்மம், அதிபூதம், அதிதைவம், அதியஜ்ஞம் என் பவைகள் யாது என்பதை மேல் அத்யாயத்தில் விவரிக்கிறான்.

ஓம் தத் ஸத்

ஸ்ரீமத் பகவத் கீதையில் ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுன ஸம்வாதத்தில்

ஜ்ஞான விஜ்ஞான யோகமென்னும்

ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

எட்டாவது அத்தியாயம்.

अर्जुन उवाच—

किं तद्ब्रह्म किमध्यात्मं किं कर्म पुरुषोत्तम ।
अधिभूतं च किं प्रोक्तम् अधिदैवं किमुच्यते ॥ १ ॥

அர்ஜுன உவாச—

(மூ)—கிம் தத் ப்ரஹ்ம கிமத்(யீ)யாத்மம் கிம் கர்ம புருஷோத்தம ||
அதி(யி)பூ(பூ)தம் ச கிம் ப்ரோக்தமதி(யி)தை(ஏ)வம்
கிமுச்யதே || 1 ||

(ப. உ.) கிம், தத், ப்ரஹ்ம, கிம், அத்(யீ)யாத்மம், கிம், கர்ம, புருஷோத்தம | அதி(யி)பூ(பூ)தம், ச, கிம், ப்ரோக்தம், அதி(யி)தை(ஏஎ)வம், கிம், உச்யதே ||

அர்ஜுன:	= அர்ஜுனன்	கிம்	= யாது?
உவாச	= கேட்கிறான்.	ச	= மற்றும்
புருஷோத்தம	= ஸ்ரீ கிருஷ்ண!	அதி(யி)பூ(பூ)தம்	= அதிபூதம்
தத்	= உன்னால் முன் அத்யாயத்தில் சொல்லப்பட்ட	கிம் (இதி)	= என்று
		ப்ரோக்தம்	= சொல்லப்பட்டிருக்கிறது?
ப்ரஹ்ம	= ப்ரஹ்மம்	அதி(யி)தை(ஏஎ)வம்	= அதிதைவமும்
கிம்	= எது?	கிம் (இதி)	= என்று
அத்(யீ)யாத்மம்	= அத்யாத்மம்	உச்யதே	= சொல்லப்படுகிறது.
கிம்	= எது?		
கர்ம	= கர்மம்		

अधियज्ञः कथं कोऽत्र देहेऽस्मिन्मधुसूदन ।
प्रयाणकाले च कथं ज्ञेयोऽसि नियतात्मभिः ॥ २ ॥

(மூ)—அதி(யி)யஜ்ஞ: கத(ஏ)ம் கோத்ர தே(ஏ)ஹஸ்மின் மது
(ஸூ)ஸூதன(ஊ)ன ||
ப்ரயாணகாலே ச கத(ஏ)ம் ஞேயோஸி நியதாத்மபி:(ஹி:) || 2 ||

(ப. உ.) அதி(யி)யஜ்ஞ:, கத(ய)ம், க:, அத்ர, தே(தே)ஹே, அஸ்மின், மது(ய)ஸூதன(ந)ன | ப்ரயாணகாலே ச, கத(ய)ம், ஜ்ஞேய:, அஸி, நியதாத்மபி:(பி:) ||

மது(ய)ஸூதன(ந)ன	= ஸ்ரீ கிருஷ்ண!	ச	= மற்றும்
அஸ்மின்	= இந்த	ப்ரயாண காலே	= இறக்கும் சமயத்தில்
தே(தே)ஹே	= சரீரத்தில்	நியத-	= நியமிக்கப்பட்ட
அதி(யி) யஜ்ஞ:	= அதி(யி)யஜ்ஞன்	ஆத்மபி:(பி):	= மனதுள்ள மனிதர்களால்
க:	= யார்?	கத(ய)ம்	= எவ்வாறு
அத்ர	= இச்சரீரத்தில்	ஜ்ஞேய:	= தெரிந்து கொள்ளப்படுபவன்
கத(ய)ம்	= எப்படியிருக்கிறான்?	அஸி	= இருக்கிறாய்?

श्रीभगवानुवाच—

अक्षरं ब्रह्म परमं स्वभावोऽध्यात्ममुच्यते ।
भूतभावोद्भवकरो विसर्गः कर्मसंज्ञितः ॥ ३ ॥

ஸ்ரீ பகவானுவாச = ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லுகிறான் :—

(மூ)—அக்ஷரம் ப்ரஹ்ம பரமம் ஸ்வபா(பா)வோத்(தி)யாத்மமுச்யதே||

பூ(பூ)தபா(பா)வோத்ப(ற்)வகரோ விஸர்க:(க:)கர்ம

ஸம்ஜ்ஞித: || 3 ||

(ப. உ.) அக்ஷரம், ப்ரஹ்ம, பரமம், ஸ்வபா(பா)வ:, அத்(தி)யாத்மம், உச்யதே | பூ(பூ)தபா(பா)வோத்ப(ற்)வகர:, விஸர்க:(க:), கர்ம-ஸம்ஜ்ஞித: ||

ப்ரஹ்ம	= ப்ரஹ்மமென்று சொல்லப்படுவது	திருல் சொல்லப்படுகிறுளென்னும் ஸந்தேஹம் உண்டாகாமலிருப்பதற்காகவே 'உத்தமாக்ஷரம்' என்று! சொல்லப்பட்டிருக்கிறது.) [நான்குவகைநாசங்களையுமற்றது.
பரமம்	= மேலான	
அக்ஷரம்	= அக்ஷரம்(லக்ஷ்மீதேவியும் அக்ஷரஸப்தவாச்யளாயிருப்பதிருல் ப்ரஹ்மம் அக்ஷரம் என்றுல் அந்த லக்ஷ்மியே இங்கு ப்ரஹ்மஸப்தத்	

ஸ்வபா (ஹா)வ: } = ஜீவனுக்கு உபகாரகமாயிருக்கும் ஸரீரம், இந்த்ரியங்கள் முதலியபதார்த்தங்கள்

அத்(யீ) யாத்மம் (இதி) } = அத்(யீ)யாத்மமென்று

உச்யதே = சொல்லப் படுகிறது.

பூ(ஹூ) தபா(ஹா) வோத்(ஜீ) ப(ஹ)வகர: } = ஜீவர்களையும், ஜடபதார்த்தங்களையும் ஸ்ருஷ்டிக்கும்

விஸர்க:(ஸ) = ஸ்ருஷ்டி-வ்யாபாரம் (பரமாத்மாவின் ஸ்ருஷ்டி-வ்யாபாரம்)

கர்மஸம்ஜ்ஞித: } = கர்மமென்று சொல்லப்படுகிறது.

अधिभूतं क्षरो भावः पुरुषश्चाधिदैवतम् ।
अधियज्ञोऽहमेवात्र देहे देहभृतां वर ॥ ४ ॥

(மூ)—அதி(யி)பூ(ஹூ)தம் க்ஷரோபா(ஹா)வ: புருஷஸ்சாதி(யி)தை(ஜெ)வதம் ||

அதி(யி)யஜ்ஞோஹமேவாத்ர தே(ஜே)ஹே தே(ஜே)ஹப்(ஹீ)ருதாம் வர || 4 ||

(ப. உ.) அதி(யி)பூ(ஹூ)தம், க்ஷர:, பா(ஹா)வ:, புருஷ:, ச, அதி(யி)தை(ஜெ)வதம் | அதி(யி)யஜ்ஞ:, அஹம், ஏவ, அத்ர, தே(ஜே)ஹே, தே(ஜே)ஹப்(ஹீ)ருதாம், வர ||

தேஹப் (ஹீ)ருதாம் } = ஸரீரத்தைத் தரித்தவர்களில்

வர = ஸ்ரேஷ்டனே அர்ஜுனே!

க்ஷர: = நாஸமடையும்

பா(ஹா)வ: = பதார்த்தங்களின் கூட்டம்

அதி(யி)பூ(ஹூ)தம் } = அதிபூதமென்று சொல்லப்படுகிறது.)

=மற்றும்

அதி(யி)தை(ஜெ)வதம் } = அதி(யி)தைவம்

புருஷ: = ஹிரண்யகர்பன் (சதுர்முக ப்ரஹ்மா)

அத்ர = இந்த

தே(ஜே)ஹே = சரீரத்தில் (இருக்கும்)

அதி(யி)யஜ்ஞ: } = அதி(யி)யஜ்ஞன்

அஹம் ஏவ = நானே.

अन्तकाले च मामेव स्मरन्मुक्त्वा कलेवरम् ।
यः प्रयाति स मद्भावं याति नास्त्यत्र संशयः ॥ ५ ॥

(மூ)—அந்தகாலே ச மாமேவ ஸ்மரன் முக்த்வா களேவரம் ||
யः ப்ரயாதி ஸ மத்(த்)பா(ஹா)வம் யாதி நாஸ்த்யத்ர ஸம்ஶயः|| 5 ||

(ப. உ.) அந்தகாலே, ச, மாம், ஏவ, ஸ்மரன், முக்த்வா, களேவரம் | யः, ப்ரயாதி, ஸः, மத்(த்)பா(ஹா)வம், யாதி, ந, அஸ்தி, அத்ர, ஸம்ஶயः ||

யः = எவன்
அந்த காலே, ச = மரணகாலத்திலும்
மாம், ஏவ = என்னையே (ஸ்ரீ கிருஷ்ணனையே)
ஸ்மரன் (ஸன்) = நினைப்பவனாய்
களேவரம் = ஸரீரத்தை
முக்த்வா = விட்டு
ப்ரயாதி = போகிறானே
ஸः = அவன்
மத்(த்)பா (ஹா)வம் மயிபா (ஹா)வம் = என்னுள்ளிருப்பை (மோக்ஷத்தை)
யாதி = அடைகிறான்.
அத்ர = இவ்விஷயத்தில்
ஸம்ஶயः = ஸந்தேஹம்
ந, அஸ்தி = இல்லை.

यं यं वाऽपि स्मरन्भावं त्यजत्यन्ते कलेवरम् ।
तं तमेवैति कौन्तेय सदा तद्भावभावितः ॥ ६ ॥

(மூ)—யம் யம் வாபி ஸ்மரன் பா(ஹா)வம் த்யஜத்யந்தே களேவரம் ||
தம் தமேவைதி கௌந்தேய ஸதா(ஆ) தத்(த்)பா(ஹா)வ
பா(ஹா)விதः || 6 ||

(ப. உ.) யம், யம், வா, அபி, ஸ்மரன், பா(ஹா)வம், த்யஜதி, அந்தே, களேவரம் | தம், தம், ஏவ, ஏதி, கௌந்தேய, ஸதா(ஆ), தத்(த்)பா(ஹா)வ பா(ஹா)விதः ||

கௌந்தேய = அர்ஜுன!
ஸதா(ஆ) = எப்பொழுதும்
தத்(த்)பா (ஹா)வ பா(ஹா) விதः (தஸ்மின் பா[ஹா]வः தத்[த்]பா[ஹா]வः தேன பா[ஹா]விதः) = அந்த பதார்த்தத்திலேயே மனதிருப்பதால் அந்த பதார்த்தமான விஷயமான நினைவையுண்டாக்கும் ஸம்ஸ்காரமுடைய மனிதன்
அந்தே = மரண காலத்தில்
யம், யம், வா = ஏதேதேயா கட்டும் (எந்ததெந்த)
பா(ஹா)வம் = பதார்த்தத்தை
ஸ்மரன் (ஸன்) = நினைப்பவனாய்
களேவரம் = தேஹத்தை
த்யஜதி = விடுகிறானே
தம், தம், ஏவ = அந்தந்த பதார்த்தத்தையே
ஏதி = அடைகிறான்.

तस्मात्सर्वेषु कालेषु मामनुस्मर युध्य च ।
मय्यर्पितमनोबुद्धिः मामेवैष्यस्यसंशयम् ॥ ७ ॥

(மூ)—தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு மாமனுஸ்மர யுத்(த்⁻)ய ச ||
மய்யர்பித மனோபு(வ²)த்தி(யீ)ர் மாமேவைஷ்யஸ்யஸம்ஶயம்
|| 7 ||

(ப. உ.) தஸ்மாத், ஸர்வேஷு, காலேஷு, மாம், அனுஸ்மர, யுத்(த்⁻)ய, ச | மயி, அர்பித-மனோ-புத்தி:(யீ:), மாம், ஏவ, ஏஷ்யஸி, அஸம்ஶயம் ||

தஸ்மாத் = விடாமற் செய்யும் என்னிடு நினைவு, மோக்ஷத்திற்குக்காரண மான மரண காலத்திலுண் டாகும் என்னிட (ஸ்ரீ கிருஷ்ணனிட) நினைவுக்குக் காரண மாதலால்
ஸர்வேஷு = எல்லா
காலேஷு = காலங்களிலும்
மாம் = என்னை
அனுஸ்மர = நினைத்துக் கொண்டிரு.
ச = மற்றும்
மயி = என்னிடத்தில்
அர்பித- = வைக்கப்பட்ட
மன:- = மனது
புத்தி: (ஸன்) = புத்தி இவை களையுடைய வனுய்
யுத்(த்⁻)ய = போர் செய்க.
அஸம்ஶய(ம்) (யதா(யீ)பவதி ததா(யீ)) = ஸந்தேதமின்றி
மாம், ஏவ = என்னையே
ஏஷ்யஸி = அடைவாய். (சேருவாய்).

अभ्यासयोगयुक्तेन चेतसा नान्यगामिना ।
परमं पुरुषं दिव्यं याति पार्थानुचिन्तयन् ॥ ८ ॥

(மூ)—அப்(ஹீ)யாஸ-யோக(ஃ)-யுக்தேன சேதஸா நான்ய-கா(ஃ)மினு
பரமம் புருஷம் தி(ஹி)வ்யம் யாதி பார்த்தா(ஃ)னு சிந்தயன் ||8||

(ப. உ.) அப்(ஹீ)யாஸ-யோக(ஃ)-யுக்தேன, சேதஸா, நான்யகா(ஃ)மினு | பரமம், புருஷம், தி(ஹி)வ்யம், யாதி, பார்த்த, அனுசிந்தயன் ||

பார்த்த = அர்ஜுன!
அப்யாஸ- = அடிக்கடி முயற்சி என்னும்
யோக(ஃ)- = உபாயத்துடன்
யுக்தேன = கூடிய
நான்யகா (ஃ)மினு = பரமாத்மாவை தவிர வேறு விஷயங்களில்

	போகாம லிருக்கும்		யிருக்கும் என்னை (ஸ்ரீகிருஷ்ணனை)
சேதஸா திர(ஸி)வ்யம்	= மனதிலல் = விளையாட்டு முதலிய குணங்களுடன் கூடிய	அனுசிந்தயன்	= தியானம் செய்துகொண்டிருக்கும் மனிதன்
பரமம் புருஷம் (புரி ஶய தே திவி)	= உத்தமனை = எல்லோருடைய தேஹங்களில் நியாமகனை	யாதி	= (பரமாத்மாவையே) அடைகிறான்.

அவதாரணிகை:—உன்னை எவ்வாறு ஸ்மரிக்கவேண்டும் என்னும் கேள்விக்குப் பதில் சொல்லுகிறான்:—

कविं पुराणमनुशासितारं अणोरणीयांसमनुस्मरेद्यः ।
सर्वस्य धातारमचिन्त्यरूपं आदित्यवर्णं तमसः परस्तात् ॥ ९ ॥
प्रयाणकाले मनसाऽचलेन भक्त्या युक्तो योगबलेन चैव ।
भ्रुवोर्मध्ये प्राणमावेश्य सम्यक् स तं परं पुरुषमुपैति दिव्यम् ॥ १० ॥

(மூ)—கவிம் புராணமனுஶாஸிதார-
மணோரணீயாம்ஸமனுஸ்மரேத்(ஈ) யः ||
ஸர்வஸ்ய தா(யா)தாரமசிந்த்யரூப-
மாதி(ஹி)த்யவர்ணம் தமஸ: பரஸ்தாத் || 9 ||

ப்ரயாணகாலே மனஸாசலேன
ப(ஹ)க்த்யா யுக்தோ யோக(ஹ)ப(வ)லேன சைவ ||
ப்(ஹீ)ருவோர்மத்(யீ)யே ப்ராணமாவேஶ்ய ஸம்யக்
ஸ தம் பரம் புருஷமுபைதி தி(ஹி)வ்யம் || 10 ||

(ப. உ.) கவிம், புராணம், அனுஶாஸிதாரம், அணோ:, அணீயாம்ஸம், அனுஸ்மரேத், யः | ஸர்வஸ்ய, தா(யா)தாரம், அசிந்த்யரூபம், ஆதி(ஹி)த்ய வர்ணம், தமஸ:, பரஸ்தாத் || ப்ரயாணகாலே, மனஸா, அசலேன, ப(ஹ)க்த்யா, யுக்த:, யோக(ஹ)ப(வ)லேன, ச, ஏவ | ப்(ஹீ)ருவோ:, மத்(யீ)யே, ப்ராணம், ஆவேஶ்ய, ஸம்யக், ஸ:, தம், பரம், புருஷம், உபைதி, தி(ஹி)வ்யம் ||

யः = எவன்
கவிம் = ஸர்வஜ்ஞனை
புராணம் = அநாதியான
அநுஶாஸிதாரம் = எல்லா ப்ராணிகளுக்கும் ஶாஸகனை (தண்டிப்பவனை)
அணோः = ஸூக்ஷ்ம பதார்த்தத்தைவிட
அணீயாம்ஸம் = மிகவும் ஸூக்ஷ்மனை
ஸர்வஸ்ய = ஸகலஜனங்களுக்கு
தா(ஶா)தாரம் = தரிப்பவனும், ரக்ஷகனுமாகிய
அசிந்த்ய- = ஸம்பூர்ணமாகத் தெரிந்து கொள்வதற்கு அஶக்யமான
ரூபம் = ரூபமுடைய
ஆதி(தி)த்யவர்ணம் = ஸூர்யனின் வர்ணத்தைப் போன்ற வர்ணமுடைய
தமஸः = ஸாத்வராஜஸ் தமோகுணத்மகமான ப்ரக்ருதியை
பரஸ்தாத் = கடந்தவனை (குணத்ரய ஸம்ப(ஹ)ந்தமற்றவனை)
(ஸ்தி[யி]தம்) = இருக்கும் பரமாத்மா

வை
ப(ஹ)க்த்யா- = பக்தியோடு
யுக்தः (ஸன்) = கூடினவனாய்
ப்ரயாண காலே = மரணகாலத்தில்
ச = மற்றும்
யோக(ஹ)ப(ஹ)லேன = வாயு ஜயரூபமான பலத்தால்
ப்(ஹ்)ருவோः = புருவங்களின்
மத்(யி)யே = நடுவில்
ப்ராணம் = ப்ராணவாயுவை
ஆவேஶ்ய = ப்ரவேஶிக்கச் செய்து
அசலேன = பரமாத்மாவிடமிருந்து அணையாதிருக்கும்
மனஸா = மனதினால்
ஸம்யக் = நன்றாக
அநுஸ்மரேத் = ஸ்மரிக்கின்றானோ
ஸः = அவன்
தி(ஹி)வ்யம் = க்ரீடை (விளையாட்டு) முதலியகுணவிபூஷிதனை
பரம் = உத்தமனை
தம் = அந்த
புருஷம் = பரமாத்மாவை
உபைதி = அடைகிறான். (சேருகிறான்).

(க. உ.):—"மாம் ஏஷ்யஸி" என்று 7-வது ஶ்லோகத்திலும், "பாம் புருஷம் யாதி" என்று 8-வது ஶ்லோகத்திலும் "பரம் புருஷமுபைதி" என்று 10-வது ஶ்லோகத்திலும், ஜீவன் பரமாத்மாவை அடைகிறானென்று சொல்லியிருப்பதாலும்;

7-வது ஸ்லோகத்தில் "மய்யர்பித மநோபுத்(வா)தி:(யு:)" "மாமேவைஷ்யஸி" என்னும் வாக்யங்களினால் பரமாத்மாவிடத்தில் மனதை வைத்தவர்கள் பரமாத்மாவையே அடைகிறார்கள் என்று சொல்லியிருப்பதினாலும்; "தம் தமேவைதி கௌந்தேய ஸதா(ஆ) தத்(ஈ)பா(ஆ)வ பா(ஆ)வித:" என்னும் ஆறுவது ஸ்லோகத்தில் "தஸ்மின் பா(ஆ)வ: தத்(ஈ)பா(ஆ)வ:" என்று பரமாத்மாவிடத்தில் மனதை வைத்தவர்கள் பரமாத்மாவை அடைகிறார்களென்று சொல்லியிருப்பதினாலும்; ப்ராப்ய ப்ராபகபாவத்தால் பே(ஏ)த(உ)த்தைச்சொல்லியிருப்பதினாலும்; 'ஸ்மரன் மத்(ஈ)பா(ஆ)வம் யாதி' என்கிற ஐந்தாவது ஸ்லோகத்திலும் பரமாத்மாவை ஸ்மரித்துக்கொண்டு (பரமாத்மாவிடத்தில் மனதை வைத்து) மரணமடைபவன் "மத்(ஈ)பா(ஆ)வம்" என்னிடத்தில் (பரமாத்மாவிடத்தில்) இருப்பை (மோக்ஷத்தை) அடைகிறானென்று அர்த்தம் செய்யவேண்டுமேயல்லாது "மம பா(ஆ)வ: மத்(ஈ)பா(ஆ)வ:" க்ருஷ்ணத்வத்தை அடைகிறானென்று (பரமாத்மாவே ஆகிறானென்று) அர்த்தம் செய்யக்கூடாது. அத்(ஈ)வைத மதத்தின்படிக்கு ஜீவன் எப்பொழுதும் ப்ரஹ்ம ஸ்வரூபமேயாயிருக்கிறபடியாலும், ப்ரஹ்மத்தை அடைகிறானென்பதும், க்ருஷ்ணன் ஸகுணனைபடியால், ஜீவனே கிருஷ்ணனாகிறானென்பதும் பொருந்துவதில்லை.

यदक्षरं वेदविदो वदन्ति विशन्ति यद्यतयो वीतरागाः ।
यदिच्छन्तो ब्रह्मचर्यं चरन्ति तत्ते पदं सङ्ग्रहेण प्रवक्ष्ये ॥ ११ ॥

(மூ)—யத(உ)க்ஷரம் வேத(உ)விதோ(ஓ) வத(உ)ந்தி
விஶந்தி யத்(ஈ)யதயோ வீதராகா:(ஆ:) ||
யதி(ஈ)ச்ச(ஹ)ந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தி
தத்தே பத(உ)ம் ஸங்க்ரஹேண ப்ரவக்ஷ்யே || 11 ||

(ப. உ.) யத், அக்ஷரம், வேத(உ)வித:(உ:), வத(உ)ந்தி, விஶந்தி, யத், யதய:, வீதராகா:(ஆ:) | யத், இச்ச(ஹ)ந்த:, ப்ரஹ்மசர்யம், சரந்தி, தத், தே, பத(உ)ம், ஸங்க்ரஹேண, ப்ரவக்ஷ்யே ||

வேத(ஏ)விதः(ஏः) = வேதார்த்தத்தையறிந்தவர்கள்

யத் = எந்த பரமாத்மாவின் ஸ்வரூபத்தை

அக்ஷரம் = நாசரகிதமானதாக

வத(ஏ)ந்தி = சொல்லுகிறார்களோ

வீத- = போக்கடித்துக் கொள்ளப்பட்ட

ராகா:(மா:) = காமக்ரோதங்களையுடைய (காமக்ரோதங்களைத்துறந்த)

யதயः = மேலை ஜயத்தில் முயற்சியுள்ளவர்கள்

யத் = எந்த பரமாத்மாவின் ஸ்வரூபத்தை

விஸந்தி = (முக்தராய்) ப்ரவேசிக்கின்றனரோ

யத் = எந்த பரமாத்மாவின் ஸ்வரூபத்தை

(ஜ்ஞாதும்) இச்ச(ஆ)ந்த:(ஸந்த:) = தெரிந்து கொள்வதற்காக விருப்பமுடையவர்களாய்

ப்ரஹ்மசர்யம் = ப்ரஹ்மத்தினிடத்தில் மனது முதலிய இந்த்ரியங்களின் ஸஞ்சாரரூபமான ப்ரஹ்மசர்யத்தை

சரந்தி = செய்கிறார்களோ

தத் = அந்த

பத(ஏ)ம் = அடையத்தக்க பரமாத்மாவின் ஸ்வரூபத்தை

ஸங்க்ர ஹேண = ஸங்கேபமாக

தே = உனக்காக

ப்ரவக்ஷ்யே = சொல்லுகிறேன்.

सर्वद्वाराणि संयम्य मनो हृदि निरुद्ध्य च ।
मूर्ध्न्याधायात्मनः प्राणं आस्थितो योगधारणाम् ॥ १२ ॥
ओमित्येकाक्षरं ब्रह्म व्याहरन्मामनुस्मरन् ।
यः प्रयाति त्यजन्देहं स याति परमां गतिम् ॥ १३ ॥

(மூ)—ஸர்வ-த்(ஈ)வாராணி ஸம்யம்ய மநோ ஹ்ருதி(தி) நிருத்(ரு)ய ச ||
மூர்த்(ர்)ன்யாதா(யா)யாத்மன: ப்ராணமாஸ்தி(தி)தோ யோக
(கு)தா(யா)ரணம் || 12 ||

ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம வ்யாஹரன் மாமனுஸ்மரன் ||
ய: ப்ரயாதி த்யஜன் தே(தே)ஹம் ஸ யாதி பரமாம் க(கு)திம்
|| 13 ||

(ப. உ.) ஸர்வ-த்(த்)வாராணி, ஸம்யம்ய, மன:, ஹ்ருதி(தி), நிருத்(ரி)ய, ச | மூர்த்(ர்)னி, ஆதா(யா)ய, ஆத்மன:, ப்ராணம், ஆஸ்தி(யி)த:, யோக(ம)-தா(யா)ரணம் || ஓம், இதி, ஏகாக்ஷரம், ப்ரஹ்ம, வ்யாஹரன், மாம், அனுஸ்மரன் | ய:, ப்ரயாதி, த்யஜன், தே(தே)ஹம், ஸ:, யாதி, பரமாம், க(ம)திம் ||

ஸர்வத்(த்) வாராணி } = (வாயு ஸ்ருசாரமுள்ள) ஸகலமான இந்த்ரிய மார்க்கங்களும்

ஸம்யம்ய = தடுத்துக் கொண்டு

ச = மற்றும்

ஹ்ருதி(தி) = ஹ்ருதயத்தில்

மன: = மனதை

நிருத்(ரி)ய = தடுத்துக் கொண்டு (மனது வெளியில் போகாமற் செய்து கொண்டு)

ஆத்மன: = தன்னுடைய

ப்ராணம் = ப்ராணவாயுவை

மூர்த்(ர்)னி = ஸஹஸ்ரம் நாடி மூலமாக ப்ரஹ்மரந்த்ரத்தில்

ஆதா(யா)ய = வைத்து

யோக(ம)- = அகண்டஸ்ம்ருதிரூபமான (யோக(ம)த்தின்)

தா(யா)ரணம் } = தாரணையை

ஆஸ்தி (யி)த: (ஸன்) } = அடைந்தவனாய்

ஓம், இதி = ஓம் என்னும்

ஏகாக்ஷரம் = முக்கியமான ஏழுத்தினால் வாச்யனான (ஓங்கார ப்ரதிபாத்யனை)

ப்ரஹ்ம = பூர்ணனை

மாம் = என்னை (ஸ்ரீ கிருஷ்ணனை)

வ்யாஹரன் (ஸன்) } = உச்சரிப்பவனாய்

அனுஸ்மரன் = ஸ்மரித்துக் கொண்டு (நினைத்துக் கொண்டு)

தே(தே)ஹம் = ஸரீரத்தை

த்யஜன் = விட்டவனாய்

ய: = எவன்

ப்ரயாதி = புறப்படுகிறானோ

ஸ: = அவன்

பரமாம் = உத்தமமான

க(ம)திம் = ஸ்தா(யா)னத்தை (மோக்ஷத்தை)

யாதி = அடைகிறான்,

अनन्यचेतास्सततं यो मां स्मरति नित्यशः ।
तस्याहं सुलभः पार्थ नित्ययुक्तस्य योगिनः ॥ १४ ॥

(மூ)—அனன்ய-சேதா: ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்யஶ: ||
தஸ்யாஹம் ஸுலப:(ஹ:) பார்த்த நித்யயுக்தஸ்ய யோகி(�here)ன:
|| 14 ||

(ப. உ.) அனன்ய-சேதா:, ஸததம், ய:, மாம், ஸ்மரதி, நித்யஶ: ||
தஸ்ய, அஹம், ஸுலப:(ஹ:), பார்த்த, நித்ய-யுக்தஸ்ய, யோகி(ஹி)ன: ||

பார்த்த	= அர்ஜுன !	தஸ்ய	= அந்த
ய:	= எவன்	நித்ய-	= எப்பொழுதும்
ஸததம்	= எப்பொழுதும்	யுக்தஸ்ய	= (என்னை அடைவதற்குக் காரணமான) வ்யாபாரமுடைய
அனன்ய-	= பரமாத்மாவைத் தவிர அன்னிய விஷயங்களில்	யோகி(ஹி)ன:	= யோகி(ஹி)க்கு
சேதா:(ஸன்)	= மனதைச்செலுத்தாதவனாய்	அஹம்	= நான்
நித்யஶ:	= நிரந்தரமும்	ஸுலப:(ஹ:)	= அனாயாஸமாக அடையப்படத் தகுந்தவன்.
மாம்	= என்னை		
ஸ்மரதி	= நினைக்கிறானே		

मामुपेत्य पुनर्जन्म दुःखालयमशाश्वतम् ।
नाप्नुवन्ति महात्मानः संसिद्धिं परमां गताः ॥ १५ ॥

(மூ)—மாமுபேத்ய புனர்ஜன்ம து:(து:)கா(வா)லயமஶாஶ்வதம் ||
நாப்னுவந்தி மஹாத்மான: ஸம்ஸித்தி(யி)ம் பரமாம் க(கு)தா: || 15 ||

(ப. உ.) மாம், உபேத்ய, புன:, ஜன்ம, து: (து:)கா(வா)லயம், அஶாஶ்வதம் | ந, ஆப்னுவந்தி, மஹாத்மான:, ஸம்ஸித்தி(யி)ம், பரமாம், க(கு)தா:||

மஹாத்மான:	= ஞானிகள்	உபேத்ய	= அடைந்து
(யத:)	= எந்த காரணத்தால்	து:(து:) காலயம்	= து:கத்திற்கு ஆஸ்ரயமான (காரணமான)
பரமாம்	= உத்தமமான	அஶாஶ் வதம்	= அநித்யமான
ஸம்ஸித்தி (யி)ம்	= மோக்ஷத்தை	ஜன்ம	= தேஹ ஸம்பந்தத்தை
க(கு)தா:	= அடைந்திருக்கிறார்களோ	புன:	= மறுபடியும்
(அத:)	= அக்காரணத்தால்	ந, ஆப்னு வந்தி	= அடைவதில்லை.
மாம்	= என்னை		

आब्रह्मभवनाल्लोकाः पुनरावर्तिनोऽर्जुन ।
मामुपेत्य तु कौन्तेय पुनर्जन्म न विद्यते ॥ १६ ॥

(மூ)—ஆப்ரஹ்மப(ஹ)வனால்லோகாः புனராவர்திநோர்ஜுன ||
மாமுபேத்ய து கௌந்தேய புனர்ஜன்ம ந வித்(தீ)யதே || 16 ||

(ப. உ.) ஆப்ரஹ்மப(ஹ)வனத், லோகாः, புனः, ஆவர்தினः, அர்ஜுன | மாம், உபேத்ய, து, கௌந்தேய, புனः, ஜன்ம, ந, வித்(தீ)யதே ||

அர்ஜுன	= அர்ஜுன !	மூதலியவை
ஆப்ரஹ்மப(ஹ)வனத்	= சதுர்முகப்ரஹ்மாவின் இல்லம் மூதல் (ஸத்யலோகம் மூதல்)	களை அடைவார்கள்.
லோகாः	= ஸ்வர்க்கமே மூதலிய ஸகல லோகங்களில் இருக்கும் ஜனங்கள்	
புனः	= மறுபடியும்	
ஆவர்தினः	= பூமியில் பிறப்பு	
கௌந்தேய	= அர்ஜுனை !	
மாம்	= என்னை	
உபேத்ய	= அடைந்து	
புனः	= மறுபடியும்	
ஜன்ம	= ஜன்மத்தை	
ந, து = ஏவவித்(தீ)யதே	= இல்லவேயில்லை	

सहस्रयुगपर्यन्तमहर्यद्ब्रह्मणो विदुः ।
रात्रिं युगसहस्रान्तां तेऽहोरात्रविदो जनाः ॥ १७ ॥

(மூ)—ஸஹஸ்ரயுக(ஂ)பர்யந்த மஹர்யத்(தீ)ப்ரஹ்மணோ விதுः(உ:) ||
ராத்ரிம் யுக(ஂ)ஸஹஸ்ராந்தாம் தேஹோராத்ரவிதோ(ஓ)
ஜனாः || 17 ||

(ப. உ.) ஸஹஸ்ரயுக(ஂ)பர்யந்தம், அஹः, யத், ப்ரஹ்மணः, விதுः (உ:) | ராத்ரிம், யுக(ஂ)ஸஹஸ்ராந்தாம், தே, அஹோராத்ரவிதः(உ:), ஜனாः ||

(யே)	= யார்	ஸஹஸ்ர யுக(ஂ) பர்யந்தம்	= * சதுர்முக ப்ரஹ்மாவின் இரண்டு பாரார்த்த
ப்ரஹ்மணः	= ப்ரப்ரஹ்மாவின்		
யத், அஹः	= எந்த பகலை		

*மனிதர்களின் எண்ணூற்று அறுபத்து நான்கு கோடி (864,00,00,000 வருஷங்கள் நான்முக ப்ரஹ்மாவுக்கு ஒரு நாளாகும். அத்தகைய 360 (முன்னூத்தறுவது) நாட்கள் ப்ரஹ்மாவுக்கு ஒரு வருஷமாகிறது. இம் மாதிரி வருஷங்கள் நூறுயின் த்விபாரார்த்தமென்று சொல்லிக்கொள்ளப் படுகிறது.

	ம் வரைக்கு முள்ளதாகவும்	விது:(ஊ:)	= தெரிந்துகொள் கிறார்களோ
ராத்ரிம்	= இரவை	தே, ஜன:	= அந்த மனிதர் கள்
யுகஸஹஸ்ராந்தாம்	= அநேக யுகங் கள் வரைக்கு முள்ளதாகவும்	அஹோராத்ரவித: (ஊ:)	= பரமாத்மாவின் பகலிரவுகளை யறிந்தவர்கள்.

விசாரம்:—இந்த ஸ்லோகத்தில் ஆபாதத: நான்முக ப்ரஹ்மாவின் பகலிரவுகளைச் சொல்வதுபோல் தோன்றுகிறது. ஆயினும் அப்படியே அர்த்தம் செய்யின் 'அவ்யக்தாத் வ்யக்தய: ஸர்வா: ப்ரபவந்த்யஹராகமே! ராத்ர்யாகமே ப்ரலீயந்தே தத்ரைவாவ்யக்த ஸம்ஜ்ஞகே' என்னும் உத்தர ஸ்லோகத்தில் 'பொழுது விடியும் காலத்தில் ஸகல பதார்த்தங்களும் உண்டாகின்றன. இரவு உண்டாகும்போது எல்லா பதார்த்தங்களும் நாஸமடைகின்றன' என்று சொல்வது பொருந்துவதில்லை. ஆகையால் பரமாத்மாவின் பகல் இரவென்று இங்கு அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது.

अव्यक्ताद्व्यक्तयस्सर्वाः प्रभवन्त्यहरागमे ।
राज्यागमे प्रलीयन्ते तत्रैवाव्यक्तसंज्ञके ॥ १८ ॥

(மூ)—அவ்யக்தாத்(ஈ)வ்யக்தய: ஸர்வா: ப்ரப(ஊ)வந்த்யஹராக(ஃ)மே ॥
ராத்ர்யாக(ஃ)மே ப்ரலீயந்தே தத்ரைவாவ்யக்த ஸம்ஜ்ஞகே ॥ 18 ॥

(ப. உ.) அவ்யக்தாத், வ்யக்தய:, ஸர்வா:, ப்ரப(ஊ)வந்தி, அஹோராக(ஃ)மே | ராத்ர்யாக(ஃ)மே, ப்ரலீயந்தே, தத்ர, ஏவ, அவ்யக்த-ஸம்ஜ்ஞகே ॥

அவ்யக்தாத்	= தன்னுடைய (ஸ்ரீ கிருஷ்ணனுடைய) அனுக்ரஹமில்லமல் தான் காணப்படுபவனல் லாததினால் அவ்யக்த	ஸ்ருஷ்டியனை பரமாத்மாவினால்	
		ஸர்வா:	= ஸகலமான
		வ்யக்தய:	= பதார்த்தங் களும்
		அஹராகமே	= பொழுது விடிந்ததும்

	(ப்ரளயத்தின் முடிவில்)
ப்ரப(ஹ)வந்தி	= * (பராதீன விசேஷாவாப்தி என்னும் உத்பத்தி யை) பிறப்பையடைகின்றன.
ராத்ர்யாக(ஹ)மே	= இரவு ஆனதும்
அவ்யக்த ஸம்ஜ்ஞகே	= அவ்யக்தஸப்த வாச்யனான

ததர, ஏவ	= அந்த பரமாத்மாவிடத்திலேயே
ப்ரலீயந்தே	= * (பராதீன விசேஷாவாப்த்ய பாவரூப மானலயத்தை) நாசத்தை அடைகின்றன.

भूतग्रामस्स एवायं भूत्वाभूत्वा प्रलीयते ।
राज्यागमेऽवशः पार्थ प्रभवत्यहरागमे ॥ १९ ॥

(மூ)—பூ(ஹூ)தக்(ஹீ)ராமः ஸ ஏவாயம் பூ(ஹூ)த்வா பூ(ஹூ)த்வா ப்ரலீயதே ॥

ராத்ர்யாக(ஹ)மேவசஃ பார்த்த(ஹ) ப்ரப(ஹ)வத்யஹராக(ஹ)மே ॥ 19 ॥

(ப. உ.) பூ(ஹூ)தக்(ஹீ)ராமः, ஸः, ஏவ, அயம், பூ(ஹூ)த்வா, பூ(ஹூ)த்வா, ப்ரலீயதே। ராத்ர்யாக(ஹ)மே, அவசஃ, பார்த்த(ஹ), ப்ரப(ஹ)வதி, அஹராக(ஹ)மே ॥

பார்த்த	= அர்ஜுன!
ஸः	= பூர்வத்தில் உத்பத்தி நாசங்களை உடையதாக சொல்லப்பட்ட
அயம், ஏவ	= இதே
பூ(ஹூ)தக்ராமः	= சராசர பதார்த்தங்களின் கூட்டம்
அஹராகமே	= பரமாத்மாவுக்குப் பகலுண்டானதும்

ப்ரப(ஹ)வதி	= பிறக்கிறது.
பூ(ஹூ)த்வா, பூ(ஹூ)த்வா	= தினந்தோறும் பிறந்து பிறந்து
ராத்ர்யாக(ஹ)மே	= இரவானதும்
அவசஃ	= பரமாத்மாவின் ஆதீ(ஹீ)னமாய்
ப்ரலீயதே	= நாசமடைகிறது.

---

* கோவிந்தராஜர் இந்த ஸங்க்ரஹ மென்னும் வ்யாக்யானம்.

परस्तस्मात्तु भावोऽन्योऽव्यक्तो व्यक्तात्सनातनः ।
यस्स सर्वेषु भूतेषु नश्यत्सु न विनश्यति ॥ २० ॥

अव्यक्तोऽक्षर इत्युक्तस्तमाहुः परमां गतिम् ।
यं प्राप्य न निवर्तन्ते तद्धाम परमं मम ॥ २१ ॥

(மூ)—பரஸ்தஸ்மாத்து பா(ஹா)வோன்யோவ்யக்தோவ்யக்தாத் ஸனாதன: ॥

ய: ஸ ஸர்வேஷு பூ(ஹூ)தேஷு நஸ்யத்ஸு ந வினஸ்யதி ॥ 20 ॥

அவ்யக்தோக்ஷர இத்யுக்தஸ்தமாஹு: பரமாம் க(ஹ)திம் ॥
யம் ப்ராப்ய ந நிவர்தந்தே தத்தா(ஆ)ம பரமம் மம ॥ 21 ॥

(ப. உ.) பர:, தஸ்மாத், து, பா(ஹா)வ:, அன்ய:, வ்யக்த:, அவ்யக்தாத், ஸனாதன: | ய:, ஸ:, ஸர்வேஷு, பூ(ஹூ)தேஷு, நஸ்யத்ஸு, ந, வினஸ்யதி ॥ அவ்யக்த:, அக்ஷரம், இதி, உக்த:, தம், ஆஹு:, பரமாம், க(ஹ)திம் | யம், ப்ராப்ய, ந, நிவர்தந்தே, தத், தா(ஆ)ம, பரமம், மம ॥

அவ்யக்த:, து = அவ்யக்தஸப்த வாச்யனான பரமாத்மா
தஸ்மாத் = உத்பத்தி நாஸமுடைய
வ்யக்தாத் = பூத ஸமூதாயத்தைவிட
அன்ய: = பின்னனானவன் (வேறானவன்)
பா(ஹா)வ: = சுதந்திரன்
பர: = உத்தமன்
ஸனாதன: = அனாதி (ஹி) யாயிருப்பவன்.
ய: = எந்த பரமாத்மா
ஸர்வேஷு = ஸமஸ்தமான
பூ(ஹூ)தேஷு = ப்ராணிகள்
நஸ்யத்ஸு = நாஸமடைந்துகொண்டிருக்க

ந, வினஸ்யதி = நாஸமடைவதில்லையோ
ஸ: = அத்தகைய
அவ்யக்த: = அவ்யக்தஸப்த வாச்யனான பரமாத்மா
அக்ஷர:, = (நாஸரஹிதனுகையால்) அக்ஷரன்
இதி = என்று
உக்த: = சொல்லிக்கொள்ளப்படுகிறான்.
தம் = இந்த அக்ஷரஸப்த வாச்யனான பரமாத்மாவையே
பரமாம் = உத்தமமாகிய
க(ஹ)திம், (இதி) = அடையப்படவேண்டிய ஸ்தா(யா)னமென்று

ஆஹு: = சொல்லுகிறார்கள்.
யம் = எந்த ஸ்வரூபத்தை
ப்ராப்ய = அடைந்து
ந, நிவர்தந்தே } = திரும்பி வருவதில்லையோ
தத் = அது
மம = என்னுடைய
பரமம் = உத்தமமான
தா(யா)ம = ஸ்வரூபம்.

पुरुषस्स परः पार्थ भक्त्या लभ्यस्त्वनन्यया ।
यस्यान्तस्थानि भूतानि येन सर्वमिदं ततम् ॥ २२ ॥

(மூ)—புருஷ: ஸ பர: பார்த்த(யி)ப(ஹ)க்த்யா லப்(ஹீ)ய ஸ்த்வனன்யயா||
யஸ்யாந்த:ஸ்தா(யா)னி பூ(ஹூ)தானி யேன ஸர்வமித(ஏ)ம்
ததம் || 22 ||

(ப. உ.) புருஷ:, ஸ:, பர:, பார்த்த(யி), ப(ஹ)க்த்யா, லப்(ஹீ)ய:, து, அனன்யயா | யஸ்ய, அந்தஸ்தா(யா)னி, பூ(ஹூ)தானி, யேன, ஸர்வம், இத(ஏ)ம், ததம் ||

பார்த்த(யி) = அர்ஜுன!
பூ(ஹூ)தானி = சர சராத்மகமான ஸகல ப்ராணிகள்
யஸ்ய = எந்த என்னுடைய
அந்த: ஸ்தா(யா)னி } = உள்ளிருப்பனவகளாயிருக்கின்றனவோ,
யேன = எந்த என்னால்
இத(ஏ)ம் = இந்த
ஸர்வம் = ஸகலமான ஜகத்து
ததம் = வ்யாப்தமாயிருக்கிறதோ ('அந்தர்ப [வ] ஹிஸ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ் தி[யி]த:' என்னும் ஸ்ருதியில் சொல்லியவாறு பரமாத்மாஸகல பதார்த்த(யி)ங்களின் உள்ளும் வெளியிலும் வ்யாபித்திருக்கிறே(ன)ன் [நிறைந்திருக்கிறேன்]
ஸ: = அத்தகைய
பர: = ஸர்வோத்தமனான
புருஷ: து = ஷட்குணபூர்ணனான பரமாத்மாவே (நானே)
அனன்யயா = அன்னிய தேவதைகளின் விஷயமல்லாமல் என் விஷயமான
ப(ஹ)க்த்யா = பக்தியினால்
லப்(ஹீ)ய: = அடையப் படுபவன்.

यत्र काले त्वनावृत्तिमावृत्तिं चैव योगिनः ।
प्रयाता यान्ति तं कालं वक्ष्यामि भरतर्षभ ॥ २३ ॥

(மூ)—யத்ர காலே த்வனாவ்ருத்திமாவ்ருத்திம் சைவ யோகி(ந்)ன: ||
ப்ரயாதா: யாந்தி தம் காலம் வக்ஷ்யாமி ப(ஹ்)ரதர்ஷப(ஹ) ||23||

(ய. உ.) யத்ர, காலே, து, அனாவ்ருத்திம், ஆவ்ருத்திம், ச, ஏவ, யோகி(ந்)ன:| ப்ரயாதா:, யாந்தி, தம், காலம், வக்ஷ்யாமி, ப(ஹ்)ரதர்ஷ ப(ஹ) ||

ப(ஹ்)ரதர் ஷப(ஹ)	= அர்ஜுன !	தேகத்தை விட்டு சென்ற வர்கள்
யத்ர, காலே, து	= எந்த காலத்தில் (எந்த காலாத் யபிமானி தேவ தைகளால் நிய ம்யமான வழி யில்)	
ப்ரயாதா:	= (ஸரீரத்தை விட்டு) சென்ற	
யோகி(ந்)ன:	= யோகிகள்	
ஆவ்ருத்திம்	= மறுபடியும்இவ் வுலகத் திற்குத் திரும்பி வருவ தையும்	அனாவ்ருத் திம் = இந்த லோகத் தைக் குறித்து மறுபடியும் திரும்பி வராம லிருப்பதையும்
ச(யத்ர, காலே, து, ப்ரயாதா:)	= எந்த காலாத் யபிமானி தேவ தைகளால்நியம் யமான வழியில்	யாந்தி, ஏவ = அடைந்தேதிரு கிறார்களோ
		தம் = அத்தகைய
		காலம் = காலாத்யபி மானி தேவதை களினால் அதிஷ் டிதமான வழி யை (வழிகளை)
		வக்ஷ்யாமி = சொல்லு கிறேன்.

अग्निर्ज्योतिरहश्शुक्लः षण्मासा उत्तरायणम् ।
तत्र प्रयाता गच्छन्ति ब्रह्म ब्रह्मविदो जनाः ॥ २४ ॥

(மூ)-அக்(ஹ்)னிர்ஜ்யோதிரஹ: ஸுக்ல: ஷண்மாஸா உத்தராயணம்||
தத்ர ப்ரயாதா க(ஹ)ச்ச(ஹ)ந்தி ப்ரஹ்ம ப்ரஹ்மவிதோ(ஓ)
ஜன: || 24 ||

(ப. உ,) அக்(ஹ்)னி:, ஜ்யோதி:, அஹ:, ஸுக்ல:, ஷண்மாஸா:, உத்த ராயணம்| தத்ர, ப்ரயாதா:, க(ஹ)ச்ச(ஹ)ந்தி, ப்ரஹ்ம, ப்ரஹ்மவித:(த:), ஜன: ||

அக்(ஹ்னி)னி: = அக்னி நாமக தேவதை
ஜ்யோதி: = அர்ச்சி: என்னும் பெயருடைய தேவதை
அஹ: = பகலுக்கு அபிமானி தேவதை
ஸுக்ல: = ஸுக்ல பக்ஷத்திற்கு அபிமானி தேவதை
ஷண்மாஸா: = ஆறு மாதங்களுக்கு அபிமானி தேவதைகள்
உத்தராயணம் = உத்தராயணத்திற்கு அபிமானி தேவதை

தத்ர = (இவர்களிருக்கின்றனரோ) = அந்த தேவதைகளால் நியம்யமான (அதிஷ்டிதமான) வழியில்
ப்ரயாதா: = செல்லும்
ப்ரஹ்ம வித(ஹ:) = ப்ரஹ்ம ஞானிகளான
ஜன: = ஜனங்கள்
ப்ரஹ்ம = பரமாத் மாவை (பரப்ரஹ்மத்தை)
க(ஹ்)ச்ச (ஹ)ந்தி = அடைகிறார்கள்.

धूमो रात्रिस्तथा कृष्णः षण्मासा दक्षिणायनम् ।
तत्र चान्द्रमसं ज्योतिर्योगी प्राप्य निवर्तते ॥ २५ ॥

(மூ)—தூ(ய-இ)மோ ராத்ரிஸ்ததா(யா) க்ருஷ்ண: ஷண்மாஸா
த(உ)க்ஷிணையனம் ||
தத்ர சாந்த்(ந்)ரமஸம் ஜ்யோதிர்யோகீ(ஈ) ப்ராப்ய நிவர்ததே
|| 25 ||

(ப. உ.) தூ(ய-இ)ம:, ராத்ரி:, ததா(யா), க்ருஷ்ண:, ஷண்மாஸா:, த(உ)க்ஷிணையனம் | தத்ர, சாந்த்(ந்)ரமஸம், ஜ்யோதி:, யோகீ(ஈ), ப்ராப்ய, நிவர்ததே ||

தூ(ய-இ)ம: = புகைக்கு அபிமானி தேவதை
ராத்ரி: = இரவுக்கபிமானி தேவதை
ததா(யா) = மற்றும்
க்ருஷ்ண: = க்ருஷ்ண பக்ஷத்திற்கு அபிமானி தேவதை
ஷண்மாஸா: = ஆறு மாதங்களுக்கு அபிமானி தேவதை

த(உ)க்ஷிணையனம் = தக்ஷிணையன அபிமானி தேவதை
தத்ர = அந்த (தேவதைகளினால் அதிஷ்டித மான [நியமிக்கப்பட்ட] வழியில்)
ப்ரயாதா: = செல்லும்
யோகீ(ஈ) = கர்மயோகியானவன்

சாந்த்ர மஸம், ஜ்யோதி: = சந்த்ரலோகத்தை

ப்ராப்ய = அடைந்து

ஏதே = இந்த முன் சொல்லப் பட்ட

ஶுக்ல-க்ருஷ்ணே = ஶுக்ல பக்ஷாபிமானி தேவதைகளால் அதி(யி)ஷ்டித மான

க(ஹ)தீ = மார்க்கங்கள்

ஜகத: = ஞானயோகிகளான மற்றும் கர்மயோகிகளான ஜனங்களுக்கு

ஶாஶ்வதே = ஶாஶ்வதமான வைகள்

இதி = என்று

மதே = ஸம்மதங்களாயிருக்கின்றன.

ஹி = இது ப்ரமாணப்ரஸித்தமானது.

நிவர்தந்தே = மறுபடியும் ஸம்ஸாரத்திற்கு வருகின்றன.

शुक्लकृष्णे गती ह्येते जगतश्शाश्वते मते ।
एकया यात्यनावृत्तिमन्ययाऽऽवर्तते पुनः ॥ २६ ॥

(மூ)—ஶுக்ல-க்ருஷ்ணே க(ஹ)தீ ஹ்யேதே ஜக(ஹ)தः ஶாஶ்வதே மதே ॥

ஏகயா யாத்யனாவ்ருத்திமன்யயாவர்த்ததே புனः ॥ 26 ॥

(ப. உ.) ஶுக்ல-க்ருஷ்ணே, க(ஹ)தீ, ஹி, ஏதே, ஜகதः, ஶாஶ்வதே, மதே । ஏகயா, யாதி, அனாவ்ருத்திம், அன்யயா, ஆவர்ததே, புனः ॥

ஏகயா = ஶுக்ல பக்ஷாபிமானி தேவதையினால் அதிஷ்டிதமான வழியால்

(க[ஹ]தः) = சென்றவன்

அனாவ்ருத்திம் = மறுபடியும் பூலோகத்திற்கு வராமலிருப்பதை

யாதி = அடைகிறான். (ஸம்ஸாரத்தை அடைவதில்லை மோக்ஷத்தை அடைகிறான்)

அன்யயா = க்ருஷ்ண பக்ஷாபிமானி தேவதையால் அதிஷ்டிதமான வழியால்

(க[ஹ]தः) = சென்றவன்

புனः = மறுபடியும்

ஆவர்ததே = ஸம்ஸாரத்திற்கு வருகிறான் (மோக்ஷமடைவதில்லை).

नैते सृती पार्थ जानन् योगी मुह्यति कश्चन ।
तस्मात्सर्वेषु कालेषु योगयुक्तो भवार्जुन ॥ २७ ॥

(மூ)—நைதே ஸ்ருதீ பார்த்த(�work) ஜானன் யோகீ(ஈ) முஹ்யதி கஸ்சன ||
தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு யோக(அ)யுக்தோ ப(ஹ)வார்ஜுன || 27 ||

(ப. உ.) ந, ஏதே, ஸ்ருதீ, பார்த்த(work), ஜானன், யோகீ(ஈ), முஹ்யதி, கஸ், சன | தஸ்மாத், ஸர்வேஷு, காலேஷு, யோக(அ)யுக்த:, ப(ஹ)வ, அர்ஜுன ||

பார்த்த(work)	= அர்ஜுன!	தால் (யோகம் புருஷார்த்தத் திற்குக் காரணமான திறல்)
யோகீ(ஈ)	= ப்ரஹ்ம மாப ராக்ஷி ஞான மூடைய		
கஸ், சித்	= எவன்	அர்ஜுன	= அர்ஜுன!
ஏதே, ஸ்ருதீ	= இவ்வழிகளை	ஸர்வேஷு	= ஸமஸ்தமான
ஜானன் (ஸன்)	= தெரிந்து கொண்டவனுய்	காலேஷு	= காலங்களிலும்
ந, முஹ்யதி	= பரமாத்மாவின் விஸ்மரணை (நினைவின்மை) ரூபமான மோஹத்தை அடைவதில்லை	யோக(அ)-	= பகவத் பக்தி பூர்வகமாய் க்ஷத்ரியர்களுக்குத் தகுந்த கர்மானுஷ்டான ரூபமான யோகத்துடன்
யோ		யுக்த:	= கூடியவனுக
தஸ்மாத்	= அக்காரணத்	ப(ஹ)வ	= ஆகுக.

वेदेषु यज्ञेषु तपस्सु चैव दानेषु यत्पुण्यफलं प्रदिष्टम् ।
अत्येति तत्सर्वमिदं विदित्वा योगी परं स्थानमुपैति चाद्यम् ॥ २८ ॥

(மூ)—வேதே(ஏ)ஷு யஜ்ஞேஷு தபஸ்ஸு சைவ
தா(ஆ)னேஷு யத்புண்ய-ப(ஹ)லம் ப்ரதி(இ)ஷ்டம் ||
அத்யேதி தத் ஸர்வமித(உ)ம் விதி(இ)த்வா
யோகீ(ஈ) பரம் ஸ்தா(யா)னமுபைதி சாத்(ஈ)யம் || 28 ||

(ப. உ.) வேதே(ஏ)ஷு, யஜ்ஞேஷு, தபஸ்ஸு, ச, ஏவ, தா(ஆ)னேஷு, யத், புண்ய-ப(ஹ)லம், ப்ரதி(இ)ஷ்டம் | அத்யேதி, தத், ஸர்வம், இத(உ)ம், விதி(இ)த்வா, யோகீ(ஈ), பரம், ஸ்தா(யா)னம், உபைதி, ச, ஆத்(ஈ)யம் ||

யோகீ = யோகியான வன்
இத(ஈ)ம் = இந்த அத்யாத் மம் முதலிய வைகளின் ஸ்வ ரூபங்களையும், பரமாத்மாவின் ஸமஸ்தஜகத்பாத(ஈ) கத்வம் முதலிய குணங் களையும், ஸாக்ஷாத் க்ருஷ்ணதிர் மார்க்கங்களை யும்
விதி(தி)த்வா = அறிந்து கொண்டு
வேதே (தே)ஷு = வேதாத்யய னங்களிலும்
யஜ்ஞேஷு = யாகங்களிலும்
ச = மற்றும்
தபஸ்ஸு = க்ருச்(ரீ)ராசாந் த்ராயணாதி வ்ர தங்களிலும்
தா(தா) னேஷு = தானங்களிலும்
யத் = எந்த
புண்ய-ப (ஹ)லம் = புண்ய பலன்
ப்ரதி(தி)ஷ் டம் = சொல்லப்பட் டிருக்கிறதோ
தத் = அந்த
ஸர்வம், ஏவ = ஸகலமான ப(ஹ)லத்தை தையும்
அத்யேதி, ச = மீறுகிறான். (வேதாத்யய னம் முதலிய வைகளால் உண் டாகும் பலத் தை அடைந்து, அதைவிட அதிகமான பலத்தையும் அடைகிறான்.)
ச = மற்றும்
ஆத்(தீ)யம் = ஸுதனமான
பரம் = உத்தமமான
ஸ்தா(தா)னம் = விஷ்ணு ஸ்தா (தா)னமாகிய வைகுண்டத் தையும்
உபைதி = அடைகிறான்.

ஓம் தத் ஸத்

ஸ்ரீ பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாதத்தில்
அக்ஷர ப்ரஹ்ம யோகமென்னும்

எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

ஒன்பதாவது அத்தியாயம்.

श्रीभगवानुवाच—

इदं तु ते गुह्यतमं प्रवक्ष्याम्यनसूयवे ।
ज्ञानं विज्ञानसहितं यज्ज्ञात्वा मोक्ष्यसेऽशुभात् ॥ १ ॥

ஸ்ரீ பகவானுவாச :—

(மூ)—இத(ஈ)ம் து தே கு(ஹ்ய)தமம் ப்ரவக்ஷ்யாம்யனஸூ-யவே ॥

ஜ்ஞானம் விஜ்ஞானஸஹிதம் யஜ்ஞாத்வா மோக்ஷ்யஸேஶுபா(ஹா)த் ॥ 1 ॥

(ப. உ.) இத(ஈ)ம், து, தே, கு(ஹ்ய)தமம், ப்ரவக்ஷ்யாமி, அனஸூயவே | ஜ்ஞானம், விஜ்ஞான-ஸஹிதம், யத், ஜ்ஞாத்வா, மோக்ஷ்யஸே, அஶுபா(ஹா)த் ॥.

ஸ்ரீ பகவான்	= ஸ்ரீ கிருஷ்ணன்	விஜ்ஞான ஸஹிதம்	= விசேஷ மாய் அறிய வேண்டிய வஸ்துவுடன் கூடிய
உவாச	= சொல்லுகிறான்	ஞானம், து	= அறிவதற்கு யோக்யமான வஸ்துவை (பகவத் ஸ்வரூபத்தையே)
யத்	= எந்தஜ்ஞேய விஜ்ஞேயங்களை	அனஸூயவே	= பொறாமை யற்ற
ஜ்ஞாத்வா	= தெரிந்து கொண்டு	தே	= உனக்கு
அஶுபா(ஹா)த்	= அமங்கள மான ஸம்ஸாரத்தி னின்றும்	ப்ரவக்ஷ்யாமி	= சொல்லுவேன்.
மோக்ஷ்யஸே	= முக்தனாகுவாயோ		
இத(ஈ)ம்	= இவ்விதமாகிய		
கு(ஹ்ய)தமம்	= அதிரகஸிய மான		

राजविद्या राजगुह्यं पवित्रमिदमुत्तमम् ।
प्रत्यक्षावगमं धर्म्यं सुसुखं कर्तुमव्ययम् ॥ २ ॥

(மூ)—ராஜவித்(த்3)யா ராஜகு(ஹ்)ஹ்யம் பவித்ரமித(ஈ)முத்தமம் ॥
ப்ரத்யக்ஷாவக(ம)மம் த(ர்)ம்யம் ஸுஸுக(வ)ம் கர்துமவ்யயம் ॥ 2 ॥

(ப. உ.) ராஜவித்(ஜ்)யா, ராஜகு(ஹ்)ஹ்யம், பவித்ரம், இத(உ)ம், உத்தமம் | ப்ரத்யக்ஷாவக(ம)மம், த(ய)ர்ம்யம், ஸுஸுக(வ)ம், கர்தும், அவ்யயம் ||

இத(உ)ம் = முன் சொல்லப் பே பாவது

ராஜவித் (ஜ்)யா } = உத்தமமான வித்யை(வேத்ய மானது அறி யத்தக்கவை களில் பரம சிரேஷ்ட மானது)

ராஜகு (ஹ்)ஹ்யம் } = ரஹஸ்யமாய் வைக்கவேண் டியவைகளில் ச்ரேஷ்ட மானது

பவித்ரம் = புனிதமாக்கச் செய்வது

உத்தமம் = ச்ரேஷ்ட மானது.

ப்ரத்யக்ஷா வக(ம)மம் } = பரமாத்மாவின் அபரோக்ஷ ஞானத்திற்கு ஸாதனமானது.

அவ்யயம் = நாஸமற்ற மோக்ஷஸாதன மானது.

த(ய)ர்ம்யம் = ஸர்வதா(யா)ர்கனை பகவானிடத்வ விஷயகமான பரோக்ஷ ஞானத்தை

கர்தும் = ஸம்பாதிப் பதற்கு

ஸுஸுக (வ)ம் } = மிகவும் ஸுலபமானது.

अश्रद्दधानाः पुरुषा धर्म्यस्यास्य परन्तप।
अप्राप्य मां निवर्तन्ते मृत्युसंसारवर्त्मनि ॥ ३ ॥

(மூ)—அச்ரத்த(ஹ்)தா(யா)ன: புருஷா த(ய)ர்ம்யஸ்யாஸ்ய பரந்தப ||
அப்ராப்ய மாம் நிவர்தந்தே ம்ருத்யு-ஸம்ஸார-வர்த்மனி || 3 ||

(ப. உ.) அஸ்ரத்த(ஹ்)தா(யா)ன:, புருஷா:, த(ய)ர்ம்யஸ்ய, அஸ்ய, பரந்தப | அப்ராப்ய, மாம், நிவர்தந்தே, ம்ருத்யு-ஸம்ஸார-வர்த்மனி ||

பரந்தப = ஶத்ருக்களுக்கு தாபத்தை உண்டுபண்ணும் அர்ஜுன!

த(ய)ர்ம் யஸ்ய } = பரமாத்மாவின் விஷயகமான

அஸ்ய = இந்த ஞான விஷயத்தில்

அச்ரத்த (ஹ்)தா (யா)ன: } = ச்ரத்தையற்ற வர்களான

புருஷா: = புருஷர்கள்

மாம் = என்னை

அப்ராப்ய = அடையாமல்

ம்ருத்யு- = ம்ருத்யுரூப மான

ஸம்ஸார- = ஸம்ஸார மென்

வர்த்மனி = ஹம் வழியில் (வழிக்கு) | நிவர்தந்தே = மறுபடியும் வருகிறார்கள்.

मया ततमिदं सर्वं जगदव्यक्तमूर्तिना ।
मत्स्थानि सर्वभूतानि न चाहं तेष्ववस्थितः ॥ ४ ॥

(மூ)—மயா ததமித(ஏ)ம் ஸர்வம் ஜக(ஂ)த(ஏ)வ்யக்த மூர்தினா ॥
மத்ஸ்தா(யா)னி ஸர்வபூ(ஊ)தானி ந சாஹம் தேஷ்வவஸ்தி(யி)தः ॥ 4 ॥

(ப. உ.) மயா, ததம், இத(ஏ)ம், ஸர்வம், ஜக(ஂ)த், அவ்யக்த-மூர்தினா | மத்ஸ்தா(யா)னி, ஸர்வ-பூ(ஊ)தானி, ந, ச, அஹம், தேஷு, அவஸ்தி(யி)தः ॥

அவ்யக்த- = அவ்யக்தமான (காணத் தகாதான)
மூர்தினா = ரூபமுடைய
மயா = என்னால்
இத(ஏ)ம் = இந்த
ஸர்வம் = சராசரத் மகமான
ஜக(ஂ)த் = ப்ரபஞ்சம்
ததம் = வ்யாபிக்கப் பட்டிருக்கிறது
ஸர்வ- = எல்லா
பூ(ஊ)தானி = ஜீவ ஜடாத்மக மான ப்ராணிகள்
மத்ஸ் தா(யா)னி } = என்னை ஆஸ்ரயித்திருக்கின்றன.
அஹம் = நான்
தேஷு = அவைகளில்
ந, அவஸ் ஸ்(யி)தः, ச, ஏவ } = ஆஸ்ரயிக்காமலிருப்பவனே.

न च मत्स्थानि भूतानि पश्य मे योगमैश्वरम् ।
भूतभृन्न च भूतस्थो ममात्मा भूतभावनः ॥ ५ ॥

(மூ)—ந ச மத்ஸ்தா(யா)னி பூ(ஊ)தானி பஶ்ய மே யோக(ஂ)மைஶ்வரம் ॥
பூ(ஊ)த-ப்(ஹீ)ருன்ன ச பூ(ஊ)தஸ்தோ(யோ) மமாத்மா பூ(ஊ)தபா(ஹ)வனः ॥ 5 ॥

(ப. உ.) ந, ச, மத்ஸ்தா(யா)னி, பூ(ஊ)தானி, பஶ்ய, மே, யோக(ஂ)ம், ஐஶ்வரம் | பூ(ஊ)தப்(ஹீ)ருத், ந, ச, பூ(ஊ)தஸ்தः(யः), மம, ஆத்மா, பூ(ஊ)தபா(ஹா)வனः ॥

ச = மற்றும்
பூ(ஹ-ஏ)தானி = ப்ராணிகள்
மத்ஸ்தா(யா)னி = என்னிடத்தில் இருப்பவைகள்
= அல்ல (எப்படி அக்னி முதலியவைகள் இதர பாண்டங்களில் ஸம்பந்தப்பட்டு தம்மிட உஷ்ணம் முதலிய குணங்களை அப்பாண்டங்களில் பரவச் செய்கின்றனவோ அவ்வாறு அக்னி முதலியவைகள் என்னிடத்திலிருந்து அவைகளின் உஷ்ணம் முதலிய தர்மங்களை என்னிடத்தில் பரவச் செய்வதில்லை.)

ஏனெனின் :—
மே = என்னுடைய
ஐச்வரம் = ஈச்வரஸம்பந்தமான
யோகம்(ம)ம் = ஸாமர்த்யத்தை (திறமையை)
பச்ய = பார்!
ச = மற்றும்
பூ(ஹ-ஏ)த- = ப்ராணிகளை
பா(ஹ)வன: = படைப்பவனை
பூ(ஹ-ஏ)தப்(ஹி)ருத் = ப்ராணிகளை தரிப்பவனை
மம = என்னுடைய
ஆத்மா = ஸ்வரூபம்
பூ(ஹ-ஏ)தஸ்த:(ஃ) = ப்ராணிகளிருப்பது
= அல்ல. (நான் ப்ராணிகளில் இருந்த போதிலும் என்னிட குணங்கள் ப்ராணிகளுக்கு ஸம்பந்தப்படுவதில்லை).

यथाऽऽकाशस्थितो नित्यं वायुस्सर्वत्रगो महान् ।
तथा सर्वाणि भूतानि मत्स्थानीत्युपधारय ॥ ६ ॥

(மூ)—யதா(யா)காஶஸ்தி(யி)தோ நித்யம் வாயு: ஸர்வத்ரகோ(கோ) மஹான் ||

ததா(யா) ஸர்வாணி பூ(ஹ-ஏ)தானி மத்ஸ்தா(யா)னீத்
யுபதா(யா)ரய || 6 ||

(ப. உ.) யதா(யா), ஆகாஶ-ஸ்தி(யி)த:, நித்யம், வாயு:, ஸர்வத்ரக:(க:), மஹான் | ததா(யா), ஸர்வாணி, பூ(ஹ-ஏ)தானி, மத்ஸ்தா(யா)னி, இதி, உபதா(யா)ரய ||

யதா(யா) = எப்படி
நித்யம் = எப்பொழுதும்
ஆகாஶ- = ஆகாயத்தில்
ஸ்தி(யி)த: = இருக்கும்
மஹான் = பெரியதான
வாயு: = காற்று
ஸர்வத்ர க:(ஸ:) } = (அந்தந்த பதார்த்தங்களின் ஸம்பந்தமில்லாமல்) எல்லாவிடங்களிலும் இருக்கிறதோ

ததா(யா) = அப்படியே
ஸர்வாணி = ஸமஸ்தமான
பூ(ஹ-வி)தானி = ப்ராணிகள்
மத்ஸ்தா (யா)னி } = என்னிடத்தில் பரஸ்பர (அன்யோன்ய) தர்மஸம்பந்தமில்லாமல் இருக்கின்றன
இதி = என்று
உபதா (யா)ய } = தெரிந்து கொள்.

தாத்பர்யம்:—ஜகத்து பரமாத்மாவிடத்திலிருப்பதினால் பரமாத்மாவின் குணங்களின் ஸம்பந்தம் ஜகத்திற்காகிலும், ஜகத்தின் குணங்களின் ஸம்பந்தம் பரமாத்மாவுக்காகிலும் ஆவதில்லை.

सर्वभूतानि कौन्तेय प्रकृतिं यान्ति मामिकाम् ।
कल्पक्षये पुनस्तानि कल्पादौ विसृजाम्यहम् ॥ ७ ॥

(மூ)—ஸர்வபூ(ஹ-வி)தானி கௌந்தேய ப்ரக்ருதிம் யாந்தி மாமிகாம் ||
கல்பக்ஷயே புனஸ்தானி கல்பாதௌ(ஔ) விஸ்ருஜாம்யஹம் || 7 ||

(ப. உ.) ஸர்வ - பூ(ஹ-வி)தானி, கௌந்தேய, ப்ரக்ருதிம், யாந்தி, மாமிகாம் | கல்பக்ஷயே, புன:, தானி, கல்பாதௌ(ஔ), விஸ்ருஜாமி, அஹம் ||

கௌந்தேய = அர்ஜுன !
கல்பக்ஷயே = ப்ரளயகாலத்தில்
ஸர்வ-பூ(ஹ-வி)தானி } = ஸகல ஜீவஜடங்களும்
மாமிகாம் = என் அதீனமான
ப்ரக்ருதிம் = த்ரிகுணாத்மகமான ப்ரக்ருதியை
யாந்தி = அடைகின்றன. (அந்தப்ரக்ருதியில் லயத்தை அடைகின்றன = அடங்குகின்றன).
கல்பாதௌ(ஔ) } = ஸ்ருஷ்டிகாலத்தில்
தானி = அவைகளை
அஹம் = நான்
புன: = மறுபடியும்
விஸ்ருஜாமி = பலவிதங்களாக ஸ்ருஷ்டிக்கிறேன்.

प्रकृतिं स्वामवष्टभ्य विसृजामि पुनः पुनः ।
भूतग्राममिमं कृत्स्नमवशं प्रकृतेर्वशात् ॥ ८ ॥

(மூ)—ப்ரக்ருதிம் ஸ்வாமவஷ்டப்(ஜீ)ய விஸ்ருஜாமி புனः புனः ||
பூ(ஹூ)தக்(தீ)ராமமிமம் க்ருத்ஸ்னமவஶம் ப்ரக்ருதேர்
வஶாத் || 8 ||

(ப. உ.) ப்ரக்ருதிம், ஸ்வாம், அவஷ்டப்(ஜீ)ய, விஸ்ருஜாமி, புனः, புனः | பூ(ஹூ)தக்(தீ)ராமம், இமம், க்ருத்ஸ்னம், அவஶம், ப்ரக்ருதேः, வஶாத் ||

ஸ்வாம் = ஸ்வாதீனமான
ப்ரக்ருதிம் = த்ரிகுணத்மகமான ப்ரக்ருதியை
அவஷ்டப்(ஜீ)ய } = ஆஸ்ரயித்து (உபாதான = மாறுதலடையும் காரணமாகச் செய்து கொண்டு)
ப்ரக்ருதேः = என் ஆதீனமான ப்ரக்ருதிக்கு
வஶாத் = அதீனமாயிருப்பதால்
அவஶம் = பரதந்த்ரமான
இமம் = இந்த
க்ருத்ஸ்னம் = ஸமஸ்தமான
பூ(ஹூ)தக்(தீ)ராமம் } = பூதங்களின் கூட்டத்தை
புனः, புனः = அடிக்கடி
விஸ்ருஜாமி = ஸ்ருஷ்டிக்கிறேன்.

न च मां तानि कर्माणि निबध्नन्ति धनञ्जय ।
उदासीनवदासीनमसक्तं तेषु कर्मसु ॥ ९ ॥

(மூ)—ந ச மாம் தானி கர்மாணி நிப(�வ)த்(ய்)னந்தி த(ய)னஞ்ஜய ||
உதா(ஊ)ஸீனவதா(ஊ)ஸீனமஸக்தம் தேஷு கர்மஸு || 9 ||

(ப. உ.) ந, ச, மாம், தானி, கர்மாணி, நிப(வ)த்(ய்)னந்தி, த(ய)னஞ்ஜய | உதா(ஊ)ஸீனவத், ஆஸீனம், அஸக்தம், தேஷு, கர்மஸு ||

த(ய)னஞ்ஜய } = அர்ஜுன !
தேஷு = அந்த
கர்மஸு = கர்மங்களில்
அஸக்தம் = அபிமான மற்ற (அக்கர்மங்களில் அபிமானமில்லாததினால்)
= மற்றும்
உத(ஊ)ஸீனவத் } = உதாஸீனனை (கர்மத்தைத் செய்து கொண்டிருந்தபோதிலும் செய்யாதவனை) போல்
ஆஸீனம் = இருக்கும்
மாம் = என்னை
தானி = அந்த

கர்மாணி	= ஸ்ருஷ்டி முதலிய கர்மங்கள்	லோகத்துக்கள் உண்டாவதில்லை.)
ந, நிப(வ)த்(ய்)னந்தி	= கட்டுவதில்லை. (அக்கர்மங்களினால் என்னை)	

मयाऽध्यक्षेण प्रकृतिः सूयते सचराचरम् ।
हेतुनाऽनेन कौन्तेय जगद्धि परिवर्तते ॥ १० ॥

(மூ)—மயாத்(ய்)யக்ஷேண ப்ரக்ருதிः ஸூயதே ஸசராசரம் ||
ஹேதுனானேன கௌந்தேய ஜகத் விபரிவர்ததே || 10 ||

(ப. உ.) மயா, அத்(ய்)யக்ஷேண, ப்ரக்ருதிः, ஸூயதே, ஸசராசரம் | ஹேதுனா, அனேன, கௌந்தேய, ஜக(அ)த், விபரிவர்ததே ||

கௌந்தேய	= அர்ஜுன !	
அத்(ய்)யக்ஷேண	= ஸ்வாமியான	
மயா	= என்னால்	
ப்ரக்ருதிः	= ஜட ப்ரக்ருதியானது	
ஸசராசரம்	= சராசரத்துடன் கூடிய ஜகத்தை	
ஸூயதே	= பிறப்பிக்கிறது.	
அனேன	= என்னால் ப்ரேரிக்கப்பட்ட (ஏவப்பட்ட) இந்த ப்ரக்ருதி ரூபமான	
ஹேதுனா	= காரணத்தால்	
ஜகத்	= ப்ரபஞ்சம்	
விபரிவர்ததே	= அடிக்கடி பிறக்கிறது.	

अवजानन्ति मां मूढा मानुषीं तनुमाश्रितम् ।
परं भावमजानन्तो मम भूतमहेश्वरम् ॥ ११ ॥
मोघाशा मोघकर्माणो मोघज्ञाना विचेतसः ।
राक्षसीमासुरीं चैव प्रकृतिं मोहिनीं श्रिताः ॥ १२ ॥

(மூ)—அவஜானந்தி மாம் மூடா:(ஜா:)மானுஷீம் தனுமாஶ்ரிதம் ||
பரம் பா(ஹா)வமஜானந்தோ மம பூ(ஊ)தமஹேஶ்வரம்||11||
மோகா(ஷா)ஶா மோக(ஷ) கர்மாணோ மோக(ஷ) ஜ்ஞானோ விசேதஸ: ||
ராக்ஷஸீ-மாஸுரீம் சைவ ப்ரக்ருதிம் மோஹினீம் ஶ்ரிதா: || 12 ||

(ப. உ.) அவஜானந்தி, மாம், மூடா:(ஜா:), மானுஷீம், தனும், ஆஶ்ரிதம் | பரம், பா(ஹா)வம், அஜானந்த:, மம, பூ(ஊ)த-மஹேஶ்வரம் || மோகா(ஷா)ஶா:, மோக(ஷ)கர்மாண:, மோக(ஷ)ஜ்ஞானோ:, விசேதஸ: | ராக்ஷஸீம், ஆஸுரீம், ச, ஏவ, ப்ரக்ருதிம், மோஹினீம், ஶ்ரிதா: ||

பூ(ஊ-ஏ)த- = ஸகல ப்ராணி களுக்கும்
மஹேஶ்வரம் = மூக்ய ஸ்வாமி யான
மம = என்னுடைய
பரம் = உத்தமமான
பா(ஆ)வம் = நிஜமான ரூபத்தை
அஜானந்த: = அறியாத
மூடா:(ஆ:) = மூடர்கள்
மாநுஷீம் = மானிட தேஹத்தைப் போன்ற
தநும் = தேஹத்தை
ஆஶ்ரிதம் = அடைந்த
மாம் = என்னை
அவஜானந்தி = அறிவதில்லை. (ஸர்வோத்தமனென்று அறியாமல் தூஷிக்கின்றனர்).
மோக(வ)- = வீணான
ஆஶா: = ஆஶையுடையவர்கள் (விரும்பிய பொருள்களை அடையாதவர்கள்)
மோக(வ)- = வ்யர்த்தமான
கர்மாண: = கர்மங்களையுடையவர்கள்
மோக(வ)- = வீணான
ஜ்ஞாந: = அறிவுடையவர்கள்
விசேதஸ: = விருத்தமான மனதுடையவர்கள் (இவர்கள்)
ராக்ஷஸீம் = ராக்ஷஸ ஸம்பந்தியான
ச = மற்றும்
ஆஸுரீம் = அஸுர ஸம்பந்தியான
மோஹிநீம் = புத்தி ப்ரம்ஶகரமான
ப்ரக்ருதிம் ஏவ = ஸ்வபாவத்தையே
ஶ்ரிதா: = ஆஶ்ரயிக்கிறார்கள். (ஆகையினாலேயே என்னை ஸர்வோத்தமனென்று தெரிந்து கொள்வதில்லை.)

महात्मानस्तु मां पार्थ दैवीं प्रकृतिमाश्रिताः ।
भजन्त्यनन्यमनसो ज्ञात्वा भूतादिमव्ययम् ॥ १३ ॥

(மூ)—மஹாத்மானஸ்து மாம் பார்த்த தை(ஏ)வீம் ப்ரக்ருதி மாஶ்ரிதா: ||
ப(ஜ)ஜந்த்யனன்ய-மனஸோ ஜ்ஞாத்வா பூ(ஊ)தாதி(தி)மவ்யயம் || 13 ||

(ப. உ.) மஹாத்மான:, து, மாம், பார்த்த, தை(ஏ)வீம், ப்ரக்ருதிம், ஆஶ்ரிதா: | ப(ஜ)ஜந்தி, அனன்யமனஸ:, ஜ்ஞாத்வா, பூ(ஊ)தாதி(தி)ம், அவ்யயம் ||

பார்த்த = அர்ஜுன !
தை(தெ)வீம் } = உத்தம ஜீவ ஸம்பந்தியான
ப்ரக்ருதிம் = ஸ்வபாவத்தை
ஆஸ்ரிதா: = ஆஸ்ரயித்த
மஹாத்மான:, து } = மேலான மன துடையவர்களோ
பூ(ஹு-வ்)தாதி(ஹி)ம் } = ப்ராணிகளுக்குக் காரணனை
அவ்யயம் = நாஸமற்ற
மாம் = என்னை
ஜ்ஞாத்வா = தெரிந்து கொண்டு
அனன்ய- = என்னிடத்திலேயே
மனஸ: (ஸந்த:) } = மனதுடையவராய்
ப(ஹு)ஜந்தி = ஸேவிக்கின்றனர்.

सततं कीर्तयन्तो मां यतन्तश्च दृढव्रताः ।
नमस्यन्तश्च मां भक्त्या नित्ययुक्ता उपासते ॥ १४ ॥

(மூ)—ஸததம் கீர்தயந்தோ மாம் யதந்தஸ்ச த்(ஹ்)ருட(ஹ)வ்ரதா: ||
நமஸ்யந்தஸ்ச மாம் ப(ஹ)க்த்யா நித்யயுக்தா உபாஸதே || 14 ||

(ப. உ.) ஸததம், கீர்தயந்த:, மாம், யதந்த:, ச, த்(ஹ்)ருட(ஹ)வ்ரதா: | நமஸ்யந்த:, ச, மாம், ப(ஹ)க்த்யா, நித்யயுக்தா:, உபாஸதே ||

த்(ஹ்)ருட(ஹ)- = உறுதியான
வ்ரதா: = உபவாஸம் முதலிய நியமங்களையுடைய
நித்ய- = எப்பொழுதும்
யுக்தா: = என்னிடத்தில் மனதுடைய ஞ்ஜனர்கள்
ஸததம் = எப்பொழுதும்
கீர்தயந்த: = க்ருஷ்ணக்ருஷ்ணனென்று என்னிட நாமத்தையே உச்சரித்துக் கொண்டு
ச = மற்றும்
யதந்த: = என்னிட பூஜையில் முயற்சியுள்ளவராய்
ப(ஹ)க்த்யா = பக்தியுடன்
மாம் = என்னை
நமஸ்யந்த:,ச = நமஸ்கரித்துக் கொண்டும்
மாம் = என்னை
உபாஸதே = ஸேவிக்கின்றனர்.

ज्ञानयज्ञेन चाप्यन्ये यजन्तो मामुपासते ।
एकत्वेन पृथक्त्वेन बहुधा विश्वतोमुखम् ॥ १५ ॥

(மூ)—ஜ்ஞான-யஜ்ஞேன சாப்யன்யே யஜந்தோ மாமுபாஸதே ||
ஏகத்வேன ப்ருத(ஶ)க்த்வேன ப(ஹ)ஹுதா(ஶா) விஶ்வதோமுக(ஹ)ம் || 15 ||

(ப. உ.) ஜ்ஞானயஜ்ஞேன, ச, அபி, அன்யே, யஜந்த:, மாம், உபாஸதே | ஏகத்வேன, ப்ருத(ம)க்த்வேன, ப(ஹு)தா(யா), விஶ்வதோ-முக(வ)ம் ||

அன்யே	= மற்றும் சில மஹான்கள்		லும் தன்னுள் பேத மற்ற வனென்றும்
விஶ்வதோமுக(வ)ம்	= ஸகல திசைகளிலும் முகத்தையுடைய	ப்ருத(ம)க்த்வேன	= ஜீவ ஜடாத்மக ப்ரபஞ்சத்தை விட பின்னனென்றும்
மாம்	= என்னை	ச	= மற்றும்
ஜ்ஞான-	= ஞான ரூப மான	ப(ஹு)தா(யா) அபி	= கஶவ ராதி அனேக ரூபங் களையுடையவ னென்றும்
யஜ்ஞேன	= யஜ்ஞத்தால்	உபாஸதே	= உபாஸிக்கின்ற னர்.
யஜந்த:	= பூஜித்துக் கொண்டு		
ஏகத்வேன	= ஸகலமான ப்ராணிகளில் இருந்த போதி		

अहं क्रतुरहं यज्ञः स्वधाहमहमौषधम् ।
मन्त्रोऽहमहमेवाज्यमहमग्निरहं हुतम् ॥ १६ ॥

(மூ)—அஹம் க்ரதுரஹம் யஜ்ஞ: ஸ்வதா(யா)ஹமஹமௌஷத(ம)ம் ||
மந்த்ரோஹ மஹமேவாஜ்ய மஹமக்(ஶ்)னிரஹம் ஹுதம்

|| 16 ||

(ப. உ.) அஹம், க்ரது:, அஹம், யஜ்ஞ:, ஸ்வதா(யா), அஹம், அஹம், ஔஷத(ம)ம் | மந்த்ர:, அஹம், அஹம், ஏவ, ஆஜ்யம், அஹம், அக்(ஶ்)னி:, அஹம், ஹுதம் ||

அஹம்	= நான்		நியாமகன்.
க்ரது:	= ஜ்யோதிஷ்டோமாதி கர்மத்திற்கு நியாமகன்.	அஹம்	= நான்
அஹம்	= நான்	ஸ்வதா(யா)	= பித்ருத்ருப்தி ப்யகமான திலோதகம் முதலியவைகளுக்கு நியாமகன்.
யஜ்ஞ:	= தேவதைதகளின் உத்தேஶமாய் பொருளீகரூபமான யாகத்திற்கு	அஹம்	= நான்
		ஔஷத(ம)ம்	= ஔஷதங்களுக்கு நியாமக

	ணுய் ஔளஷதங் களி லிருப்ப வன்.
மந்த்ர:	= மந் த்ர த் தி ற் கு நி யா ம க ணுய் மந்த்ர த் தி லிருப்பவன்
அஹம்	= நான்.
ஆஜ்யம்	= நெ ய் க் கு நி யா ம க ணுய் நெய்யிலிருப்ப வன்
அஹம்	= நான்.
அக்(ஹ்)னி:	= அக்(ஹ்)னி க் கு நி யா ம க ணுய் அக்னியி லிருப் பவன்
அஹம்	= நான்.
ஹுதம்	= ஹோ மக்ரியை க்கு நி யா ம க ணுய்ஹோமத் தி லிருப்பவனும்
அஹம், ஏவ	= நா னே ன (இவ் வெல்லாம் என் அதீனம்).

விசாரணை :—இந்த ஸ்லோகத்திலுள்ள "அஹம் க்ரது:" இது முதலிய வாக்யங்களினல் யாகாதிகளுக்கு பரமாத்மாவுடன் ஆபாதத: அபேதம் (ஐக்யம்) தோன்றிக்கொண்டிருந்தபோதி லும், பூர்வோத்தர வாக்யங்களும், ப்ரமாணந்தரங்களும் யாகாதி களுடன் பரமாத்மாவுக்கு பேதத்தைச் சொல்லுகிறதினலும், பரதந்த்ரமான ஜன்யமான, யாகாதிகளுக்கு ஸ்வதந்த்ரனை, அனுதியான பரமாத்மாவுடன் அபேதம் (ஐக்யம்) பொருந்தாத தினலும், "ய: ப்ருதி(யி)வ்யாம் திஷ்டன்" இது முதலிய ப்ரமாணங்கள் பரமாத்மா அந்தந்த பதார்த்தங்களில் நியாமகனி யிருக்கிறனென்று சொல்வதினலும், இப்படி அர்த்தம் செய் யப்பட்டிருக்கிறது. "காமோஸ்மி ப(ஹ)ரதர்ஷப(ஹ)" என்னும் 7-வது அத்தியாயத்தின் 11-வது ஸ்லோகத்தில் ஸங்காசார்யரும் மேற்சொல்லிய காரணத்தால் 'காமோஸ்மி' என்னும் பதத் திற்கு காமத்திற்கு ஸ்வாமி என்று அர்த்தம் செய்திருக்கிறர். இவ்விஷயத்தின் விஸேஷ விசாரங்களை 7-வது அத்தியாயத்தின் 12-வது ஸ்லோகத்தில் பார்க்கத்தக்கது.

पिताऽहमस्य जगतो माता धाता पितामहः ।
वेद्यं पवित्रमोङ्कार ऋक्साम यजुरेव च ॥ १७ ॥

गतिर्भर्ता प्रभुस्साक्षी निवासश्शरणं सुहृत् ।
प्रभवप्रलयस्थानं निधानं बीजमव्ययम् ॥ १८ ॥

(மூ)—பிதாமஹஸ்ய ஜக(ஂ)தோ மாதா தா(யா)தா பிதாமஹ: ||
வேத்(தீ)யம் பவித்ரமோங்கார: ரு(ஐ)க்-ஸாம-யஜுரேவ ச||17||
க(ஂ)திர்ப(ஹ)ர்தா ப்ரபு:(ஹு:) ஸாக்ஷீ நிவாஸ: ஶரணம்
ஸுஹ்ருத் ||
ப்ரப(ஹ)வ: ப்ரலய: ஸ்தா(யா)னம் நிதா(தா)னம் பீ(வீ)ஜமவ்
யயம் || 18 ||

(ப. உ.) பிதா, அஹம், அஸ்ய, ஜகத:, மாதா, தா(யா)தா, பிதாமஹ:| வேத்(தீ)யம், பவித்ரம், ஓங்கார:, ரு(ஐ)க், ஸாம, யஜு:, ஏவ, ச || க(ஂ)தி:, ப(ஹ)ர்தா, ப்ரபு:(ஹு:), ஸாக்ஷீ, நிவாஸ:, ஶரணம், ஸுஹ்ருத்| ப்ரப(ஹ)வ:, ப்ரலய:, ஸ்தா(யா)னம், நிதா(யா)னம், பீ(வீ)ஜம், அவ்யயம் ||

அஹம் ஏவ = நானே
அஸ்ய = இந்த
ஜக(ஂ)த: = ப்ரபஞ்சத்திற்கு
பிதா = தந்தை.
மாதா = தாய்.
தா(யா)தா = போஷகன்.
பிதாமஹ: = பூஜ்யன்.
ச = மற்றும்
வேத்(தீ)யம் = அறியப் படத் தகுந்தவன்.
பவித்ரம் = ஶுத்தனானவன்
ஓங்கார: = ஓங்கார ஶப்த வாச்யன்.
ரு(ஐ)க் = பூஜ்யனை படியால் ரு(ஐ)க் என்று சொல்லப்படுபவன்.
ஸாம = எல்லா ரூபங்களிலும் ஸமனியிருப்பதினால் ஸாமகாமகன்.
யஜு: = பூஜ்யனை தினால் (யாகத்திற்குஉத்தேஶ்யனை படியால்) யஜு:
க(ஂ)தி: = மோக்ஷாபேக்ஷையுடையவர்களால் தெரியப்படுவதினால் கதி ஸப்தவாச்யன்.
ப(ஹ)ர்தா = போஷகன்.
ப்ரபு:(ஹு:) = ஸ்வாமி.
ஸாக்ஷீ = எல்லாவற்றையும்காண்பவன்.
நிவாஸ: = ஆஶ்ரயன்.
ஶரணம் = பயமடைந்தவர்களைக் காப்பாற்றுபவன்.
ஸுஹ்ருத் = அநிமித்தோபகாரி (ப்ரதிபலனை விரும்பாமலே உபகரிப்போன்)
ப்ரப(ஹ)வ: = ஜகத்தைஸ்ருஷ்டிப்பவன்.
ப்ரலய: = ஜகத்தைநாஶம் செய்பவன்.
ஸ்தா(யா)னம் } = எல்லாவற்றிற்கும் ஆதாரன்.

நிதா(யா)னம் = ப்ரளயகாலத்தில் ஜகத்தைத் தன் வயிற்றில் வைத்துக் கொள்பவன்.
அவ்யயம் = நாசமற்றவன்.
பீ(வீ)ஜம் = காரணன்.

तपाम्यहमहं वर्षं निगृह्णाम्युत्सृजामि च ।
अमृतं चैव मृत्युश्च सदसच्चाहमर्जुन ॥ १९ ॥

(மூ)—தபாம்யஹமஹம் வர்ஷம் நிக்(கீ)ருஹ்ணாம்யுத்ஸ்ருஜாமி ச ॥
அம்ருதம் சைவ ம்ருத்யுஸ்ச ஸத(ஸ)ஸச்சாஹமர்ஜுன ॥ 19 ॥

(ப. உ.) தபாமி, அஹம், அஹம், வர்ஷம், நிக்(கீ)ருஹ்ணமி, உத்ஸ்ருஜாமி, ச, । அம்ருதம், ச, ஏவ, ம்ருத்யுः, ச, ஸத், அஸத், ச, அஹம், அர்ஜுன ॥

அஹம் = நான்
தபாமி = ஸூர்யனிலிருந்து தாபத்தையுண்டு பண்ணுகிறேன்.
வர்ஷம் = மேகங்களிலிருந்து மழையை
உத்ஸ்ருஜாமி = உண்டாக்குகிறேன்.
ச = மற்றும்
நிக்(கீ)ருஹ்ணமி = மழையை நிறுத்துகிறேன்.
அர்ஜுன = அர்ஜுன!
அஹம் = நான்
அம்ருதம் = தேஹம், இந்த்ரியங்கள் இவைகளிலிருந்து ஸரீரத்தை தமாணமடையாமல் காப்பாற்று வதினால் அம்ருதனென்று சொல்லப்படுகிறேன்.
ச = மற்றும்
ம்ருத்யுः = ஸம்ஹாரகனபடியால் ம்ருத்யுவென்று சொல்லப்படுகிறேன்.
ஸத் = ஸாதுகுணபூர்ணன்.
ச = மற்றும்
அஸத் = ஸாதுகுணபூர்ணனைவேறுபுருஷர்களையற்றவன்.
அஹம், ஏவ = நானே (பரமாத்மாவொருவனே ஸாதுகுணபூர்ணன். இதரர்கள் அல்ல.)

त्रैविद्या मां सोमपाः पूतपापाः यज्ञैरिष्ट्वा स्वर्गतिं प्रार्थयन्ते ।
ते पुण्यमासाद्य सुरेन्द्रलोकमश्नन्ति दिव्यान्दिवि देवभोगान् ॥ २० ॥

(மூ)—த்ரைவித்(ஈ)யா மாம் ஸோமபா: பூதபாபா:
யஜ்ஞைரிஷ்ட்வா ஸ்வர்க(ம்)திம் ப்ரார்த்த(ர்)யந்தே ||
தே புண்யமாஸாத்(ஈ)ய ஸுரேந்த்(ஈ)ரலோக-
மச்னந்தி தி(தி)வ்யான் தி(தி)வி தே(தே)வபோ(தோ)
கா(ம்)ன் || 20 ||

(ப. உ.) த்ரைவித்(ஈ)யா:, மாம், ஸோமபா:, பூதபாபா:, யஜ்ஞை:, இஷ்ட்வா, ஸ்வர்க(ம்)திம், ப்ரார்த்த(ர்)யந்தே | தே, புண்யம், ஆஸாத்(ஈ)ய, ஸுரேந்த்ரலோகம், அச்னந்தி, தி(தி)வ்யான், தி(தி)வி, தே(தே)வபோ(தோ)கா(ம்)ன் ||

(யே) = வேதத்ரயங் களில் அமுக்ய மாகச் சொல்ல ப்படும்கர்ம பரமான எந்த

த்ரைவித் (ஈ)யா: = ருக்யஜுஸ் ஸாமமென்னும் மூவ்வகை யான வித்தை யகளையுடைய ஜனங்கள்

யஜ்ஞை: = யாகங்களால்

மாம் = என்னை

இஷ்ட்வா = பூஜித்து

ஸோமபா: = ஹரதேவஷ மான ஸோம பானத்தை யுடையவராய் (அதிஸல்)

பூதபாபா: (ஸந்த:) = நஷ்டமான பாபங்களை யுடையவராய் (பாபங்களை போக்கடித்துக் கொண்ட வராய்)

ஸ்வர் க(ம்)திம் = ஸ்வர்க்க ரூப மானஅடையத் தக்கதை

ப்ரார்த்த (ர்)யந்தே = வேண்டிக் கொள்கின்ற னரோ

தே = அந்தஜனங் கள்

புண்யம் = புண்யத்தி னலையடைய கூடிய

ஸுரேந்த்-லோகம் = ஸ்வர்க்க லோகத்தை

ஆஸாத்(ஈ)ய = அடைந்து

தி(தி)வி = அந்தஸ்வர்க் கத்தில்

தி(தி)வ்யான் = திவ்யமான (த்யுலோகத்தி லுள்ள)

தே(தே)வ போ (தோ) கா(ம்)ன் = தேவ போகங் களை

அச்னந்தி = அனுபவிக் கிறார்கள்.

ते तं भुक्त्वा स्वर्गलोकं विशालं क्षीणे पुण्ये मर्त्यलोकं विशन्ति ।
एवं त्रयीधर्ममनुप्रपन्नाः गतागतं कामकामा लभन्ते ॥ २१ ॥

(மூ)—தே தம் பு(ஹு)க்த்வா ஸ்வர்க(ஃ)லோகம் விஶாலம்
க்ஷீணே புண்யே மர்த்ய-லோகம் விஶந்தி ||
ஏவம் த்ரயீத(ய)ர்மமனுப்ரபன்ன
க(ஃ)தாக(ஃ)தம் காமகாமா: லப(ஹ்)ந்தே || 21 ||

(ப. உ.) தே, தம், பு(ஹு)க்த்வா, ஸ்வர்க(ஃ)லோகம், விஶாலம், க்ஷீணே, புண்யே, மர்த்யலோகம், விஶந்தி | ஏவம், த்ரயீத(ய)ர்மம், அனுப்ரபன்ன:, க(ஃ)தாக(ஃ)தம், காமகாமா:, லப(ஹ்)ந்தே ||

தே	= அந்த ஜனங்கள்
தம்	= அந்த
விஶாலம்	= விஶாலமான
ஸ்வர்க(ஃ) லோகம்	= ஸ்வர்க்க லோகத்தை
பு(ஹு)க்த்வா	= அனுபவித்து
புண்யே	= புண்யமானது
க்ஷீணே(ஸதி)	= நாஶமடையவே
மர்த்ய-லோகம்	= மானிட லோகத்தை
விஶந்தி	= அடைகின்றனர்.
ஏவம் த்ரயீ-த(ய)ர்மம்	= இவ்விதமாக வேதங்களில் முக்யமாகச் சொல்லப்பட்ட தர்மத்தை
அனுப்ர பன்ன:	= அனுஷ்டித்துக் கொண்டே
காம- காமா:	= விஷயங்களை வேண்டுபவர்கள்
க(ஃ)தாக (ஃ)தம்	= போக்குவரவுகளை (புண்யம் செய்து ஸ்வர்க்கத்திற்குபோவது, புண்யம் முடியவே மானிடலோகம் அடைவது இவைகளை)
லப(ஹ்)ந்தே	= அடைகின்றனர்.

अनन्याश्चिन्तयन्तो मां ये जनाः पर्युपासते ।
तेषां नित्याभियुक्तानां योगक्षेमं वहाम्यहम् ॥ २२ ॥

(மூ)—அனன்யாஶ்சிந்தயந்தோ மாம் யே ஜன: பர்யுபாஸதே ||
தேஷாம் நித்யாபி(ஜி)யுக்தானம் யோக(ஃ)க்ஷேமம் வஹாம்-
யஹம் || 22 ||

(ப. உ.) அனன்யா:, சிந்தயந்த:, மாம், யே, ஜன:, பர்யுபாஸதே | தேஷாம், நித்யாபி(ஜி)யுக்தானம், யோக(ஃ)க்ஷேமம், வஹாமி, அஹம் ||

யே, ஜன:	= எந்தமனிதர்கள்
அனன்யா:	= பிறரை உபாஸிக்காமல்
மாம்	= என்னை
சிந்தயந்த:	= த்யானித்துக் கொண்டு

பர்யுபாஸதே	= பக்தியுடன் உபாஸனை செய்கின்றனரோ	யோக(ம) க்ஷேமம்	= யோக க்ஷேமத்தை
தஷாம்	= அத்தகைய	அஹம்	= நான்
நித்யாபி(ஹி)யுக் தாணம்	= எப்பொழுதும் மனோவாக்காயங்களால் என்னையே ஸேவிப்பவர்களின்	வஹாமி	= வஹிக்கிறேன். (மருபடியும் பிறப்பற்ற மோக்ஷத்தை தருகிறேன்.)

येऽप्यन्यदेवताभक्ता यजन्ते श्रद्धयाऽन्विताः ।
तेऽपि मामेव कौन्तेय यजन्त्यविधिपूर्वकम् ॥ २३ ॥

(மூ)—யேப்யன்ய-தே(தே)வதா-ப(ஹ)க்தா யஜந்தே ஸ்ரத்த(ய்)யான்விதா: ॥

தேபி மாமேவ கௌந்தேய யஜந்த்யவிதி(யி)பூர்வகம் ॥ 23 ॥

(ப. உ.) யே, அபி, அன்ய-தே(தே)வதா-ப(ஹ)க்தா:, யஜந்தே, ஸ்ரத்த(ய்)யா, அன்விதா: | தே, அபி, மாம், ஏவ, கௌந்தேய, யஜந்தி, அவிதி(யி)பூர்வகம் ॥

கௌந்தேய	= ஓ அர்ஜுன!	யஜந்தே	= அன்னிய தேவதைகளை பூஜிக்கின்றனரோ
அன்ய-	= அன்னியரான		
தேவதா-	= தேவதை	தே, அபி	= அவர்களும்
	களின்	அவிதி(யி) பூர்வகம்	= விதி பூர்வகமல்லாமல்
ப(ஹ)க்தா:	= பக்தரான	மாம், ஏவ	= என்னையே
யே, அபி	= எவரேயாகிலும்	யஜந்தி	= பூஜிக்கின்றனர்.
ஸ்ரத்த(ய்)யா	= ஸ்ரத்தையுடன்		
அன்விதா:	= கூடிக்கொண்டு		

अहं हि सर्वयज्ञानां भोक्ता च प्रभुरेव च ।
न तु मामभिजानन्ति तत्त्वेनातश्च्यवन्ति ते ॥ २४ ॥

(மூ)—அஹம் ஹி ஸர்வ-யஜ்ஞானம் போ(ஹோ)க்தா ச ப்ரபு(ஹு)ரேவ ச ॥

ந து மாமபி(ஹி)ஜானந்தி தத்வேனதஸ்ச்யவந்தி தே ॥ 24 ॥

(ப. உ.) அஹம், ஹி, ஸர்வ-யஜ்ஞானம், போ(ஹோ)க்தா, ச, ப்ரபு: (ஹு:), ஏவ, ச, | ந, து, மாம், அபி(ஹி)ஜானந்தி, தத்வேன, அத:, ச்யவந்தி, தே ॥

அஹம், ஏவ = நானே
ஸர்வ- = ஸகலமான
(மூ)—ஏவமுக்த்வா ததோ ராஜன் மஹாயோகே(ஈ)ஶ்வரோ ஹரி: ||

த(ஔ)ர்ஶயாமாஸ பார்தா(யா)ய பரமம் ரூபமைஶ்வரம் || 9 ||

(ப. உ.) ஏவம், உக்த்வா, தத:, ராஜன், மஹாயோகே(ஈ)ஶ்வர:, ஹரி: | த(ஔ)ர்ஶயாமாஸ, பார்தா(யா)ய, பரமம், ரூபம், ஐஶ்வரம் ||

ஸஞ்ஜய:	= ஸஞ்ஜயன்
உவாச	= சொல்லுகிறான்
ராஜன்	= த்ருதராஷ்ட்ர மஹாராஜனே!
மஹாயோகே(ஈ)ஶ்வர:	= மேலான உபாயங்களுக்கு ஸ்வாமியான
ஹரி:	= ஸ்ரீ கிருஷ்ணன்
ஏவம்	= இவ்வாறு
உக்த்வா	= சொல்லி
தத:	= பிறகு
பார்தா(யா)ய	= அர்ஜுனனுக்காக
பரமம்	= உத்தமமான
ஐஶ்வரம்	= ஈஶ்வர ஸம்பந்தியான
ரூபம்	= ரூபத்தை
த(ஔ)ர்ஶயாமாஸ	= காண்பித்தான்.

(மூ)—அனேக வக்த்ரநயன மனேகாத்(தீ)பு(பூ)த த(ஔ)ர்ஶனம் ||

அனேக திவ்யாப(ஹ)ரணம் திவ்யானேகோத்(தீ)யதா யுத(ய)ம் || 10 ||

(ப. உ.) அனேக-வக்த்ர-நயனம், அனேகா-த்(ஜ்)பு(ஹ்ர)த-த(உ)ர்ஶனம் | அனேக - தி(ஹி)வ்யா-ப(ஹ)ரணம்; தி(ஹி)வ்யானேகோத்(ஜ்)யதாயுத(ய)ம் ||

அனேக-	= அனேகமான
வக்த்ர-	= முகங்களையும்
நயனம்	= கண்களையுமுடையது.
அனேக-	= (தனக்குள் காணப்படும்) அனேகமான
அத்புத-	= ஆஶ்சர்யமான
தர்ஶனம்	= பதார்த்தங்களையுடையது.
அனேக-	= அனேகமான
திவ்ய-	= அப்ராக்ருதங்களான
ஆப(ஹ)ரணம்	= ஆபரணங்களையுடையது.
திவ்ய-	= அப்ராக்ருதங்களான
அனேக-	= அனேகங்களான
உத்(ஜ்)யத-	= மேலுக்குத் தூக்கிப் பிடித்துக் கொள்ளப்பட்ட
ஆயுதம்	= ஆயுதங்களையுடையது.

(மூ)—தி(ஹி)வ்யமால்யாம்ப(ஸ)ரத(ய)ரம் தி(ஹி)வ்யக(ஶ்)ந்தா(யா)னுலேபனம் ||

ஸர்வாஶ்சர்யமயம் தே(தே)வமனந்தம் விஶ்வதோமுக(வ)ம் || 11 ||

(ப. உ.) தி(ஹி)வ்ய-மால்யா-ம்ப(ஸ)ர-த(ய)ரம், தி(ஹி)வ்ய-க(ஶ்)ந்தா(யா)னுலேபனம் | ஸர்வாஶ்சர்யமயம், தே(தே)வம், அனந்தம், விஶ்வதோமுக(வ)ம் ||

தி(ஹி)வ்ய-	= அப்ராக்ருதங்களான
மால்ய-	= பூமாலைகளையும்
அம்பர-	= வஸ்த்ரங்களையும்
த(ய)ரம்	= தரித்திருப்பது
தி(ஹி)வ்ய-	= திவ்யமான
கந்த(ய)-	= சந்தனத்தை
அனுலேபனம்	= தரித்திருப்பது
ஸர்வ-	= அனேகமான
ஆஶ்சர்யமயம்	= ஆச்சர்யமானரூபமுடையது.
அனந்தம்	= குணபரிபூர்ணமானது.
விஶ்வதோமுகம்	= எல்லாதிசைகளிலும் முகங்களையுடையது.
தே(தே)வம்	= க்ரீடாதி குணவிஶிஷ்டமானது.

(மூ)—தி(ஹி)வி ஸூர்யஸஹஸ்ரஸ்ய ப(ஸ)வேத்(ஜ்)யுக(ஶ்)பது(உ)த்தி(யி)தா ||

யதி(ஹி) பா:(ஹா:) ஸத்(ஜ்)ருஶீ ஸா ஸ்யாத் பா(ஹா)ஸஸ்தஸ்ய மஹாத்மன: || 12 ||

(ப. உ.) தி(ஹி)வி, ஸைர்ய-ஸஹஸ்ரஸ்ய, ப(ஹ)வேத், யுக(ஶ)பத், உத்தி(யி)தா | யதி(ஹி), பா:(ஹா:), ஸத்ருஶீ, ஸா, ஸ்யாத், பா(ஹா)ஸ:, தஸ்ய, மஹாத்மன: ||

தி(ஹி)வி = ஆகாயத்தில்
யுக(ஶ)பத் = ஒரே காலத்தில்
உத்தி(யி) தஸ்ய = உதித்த
ஸைர்ய-ஸஹஸ்ரஸ்ய = அநேக ஸைர்யர்களின்
பா:(ஹா:) = ஒளியானது
யுக(ஶ)பத் = ஒரே காலத்தில்
உத்தி(யி)தா, ப(ஹ)வேத், யதி(ஹி) = உதித்ததே தாயின்
ஸா = அந்த ஒளியானது
தஸ்ய = அந்த
மஹாத்மன: = மஹா மஹிமையுடைய விஶ்வரூபத்தின்
பா(ஹா)ஸ: = ஒளிக்கு
ஸத்ருஶீ = ஸமானமாக
ஸ்யாத் = ஆகும்.

(க. உ.) பரமாத்மாவின் ஒளியானது ஒரே காலத்தில் உதித்த அனேக ஸைர்யர்களின் ஒளிக்கு ஒப்பாகும்.

(ஶூ)—தத்ரைகஸ்த(ஶ்)ம் ஜகத் க்ருத்ஸ்னம் ப்ரவிப(ஹ)க்தமனே கதா(யா) ||
அபஶ்யத் தே(தே)வதே(தே)வஸ்ய ஶரீரே பாண்டவஸ் ததா(தா) || 13 ||

(ப. உ.) தத்ர, ஏகஸ்த(ஶ்)ம், ஜகத், க்ருத்ஸ்னம், ப்ரவிப(ஹ)க்தம், அனேகதா(யா) | அபஶ்யத், தே(தே)வதே(தே)வஸ்ய, ஶரீரே, பாண்டவ:, ததா(தா) ||

ததா(தா) = அப்பொழுது
அனேகதா(யா) = பலவிதங்களாய்
ப்ரவிப(ஹ)க்தம் = பிரிக்கப்பட்டிருக்கும்
க்ருத்ஸ்னம் = ஸகலமான
ஜகத் = ஜகத்தை
தத்ர- = ஶ்ரீ கிருஷ்ணன் காண்பித்த
தே(தே)வஸ்ய = தேவர்களுக்கு ஸ்ரேஷ்டனான ஶ்ரீ கிருஷ்ணனின்
ஶரீரே = விஶ்வரூபத்தின்கண்.
ஏகஸ்த(ஶ்)ம் = ஓரிடத்திலிருப்பதாய்
பாண்டவ: = அர்ஜுனன்
அபஶ்யத் = பார்த்தான்.

(மூ)—ததः ஸ விஸ்மயாவிஷ்டோ ஹ்ருஷ்டரோமா த(ய)னஞ்ஜயः ||
ப்ரணம்ய ஶிரஸா தே(தே)வம் க்ருதாஞ்ஜலிரபா(ஹா)ஷத||14||

(ப. உ.) ததः, ஸः, விஸ்மயாவிஷ்டः, ஹ்ருஷ்டரோமா, த(ய)னஞ்ஜயः| ப்ரணம்ய, ஶிரஸா, தே(தே)வம், க்ருதாஞ்ஜலிः, அபா(ஹா)ஷத ||

ததः	= பிறகு
விஸ்மய-	= ஆ ஶ்சர்யத் தோடு
ஆவிஷ்டः	= கூடினவனும்
ஹ்ருஷ்ட- ரோமா	= மயிர்க் கூச்சிட் டிருப்பவனு மான
ஸः	= அந்த
த(ய)னஞ்ஜயः	= அர்ஜுனன்
தே(தே)வம்	= க்ரீடாதி குண விசிஷ்டனை பரமாத்மாவை
ஶிரஸா	= தலையினால்
ப்ரணம்ய	= ஶ்ரத்தா பக்தி யுடன் நமஸ் கரித்து
க்ருதாஞ் ஜலிः(ஸன்)	= கைகுவித்துக் கொண்டவனாய்
அபா(ஹா) ஷத	= சொன்னான்.

அர்ஜுன உவாச—

(மூ)—பஶ்யாமி தே(தே)வாம் ஸ்தவ தே(தே)வ தே(தே)ஹே
ஸர்வாம் ஸ்ததா(யா) பூ(ஹூ)த விஶேஷ ஸங்கா(வா)ன் ||
ப்ரஹ்மாணமீஶம் கமலாஸனஸ்த(ய)-
ம்ருஷீம்ஶ்ச ஸர்வானுரகா(ஹா)ம்ஶ்ச தி(தி)வ்யான் ||15||

(ப. உ.) பஶ்யாமி, தே(தே)வான், தவ, தே(தே)வ, தேஹே, ஸர்வான், ததா(யா), பூ(ஹூ)த-விஶேஷஸங்கா(வா)ன் | ப்ரஹ்மாணம், ஈஶம், கமலாஸனஸ்த(ய)ம், ரு(ஸி)ஷீன், ச, ஸர்வான் உரகா(ஹா)ன், ச, தி(தி)வ்யான் ||

அர்ஜுனः	= அர்ஜுனன்
உவாச	= சொல்லுகிறான்
தே(தே)வ	= ஶ்ரீ கிருஷ்ண !
தவ	= உன்னுடைய
தே(தே)ஹே	= ஶரீரத்தில்
ஸர்வான்	= ஸமஸ்தரான
தே(தே)வான்	= தேவர்களையும்
ததா(யா)	= அவ்வாறே
பூ(ஹூ)த-	= ப்ராணிகளின்
விஶேஷ-	= விசேஷமான
ஸங்கா (வா)ன்	= கூட்டத்தை தயும்
ப்ரஹ்மாணம்	= நான்முகப்ரஹ் மாவையும்
கமலாஸன ஸ்த(ய)ம்	= கமலத்தையே ஆஸனமா யுள்ள நான் முகனின் தலை டியின் மீதி ருக்கும்
ஈஶம்	= ருத்ரனையும்
ச	= மற்றும்
ஸர்வான்	= ஸமஸ்தரான
ரு(ஸி)ஷீன்	= ருஷிகளையும்
தி(தி)வ்யான்	= அற்புதங்க

உரகர (�ூ)ன், ச	= வாஸுகி முதலிய ஸர்ப்பங்களான	பஶ்யாமி	= காண்கிறேன்.

(மூ)—அனேக பா(வா)ஹுசித(ஊ)ர-வக்த்ர-நேத்ரம்
பஶ்யாமி த்வாம் ஸர்வதோனந்த ரூபம் ||
நாந்தம் ந மத்(யீ)யம் ந புனஸ்தவாதி(ஈ)ம்
பஶ்யாமி விஶ்வேஶ்வர விஶ்வரூப || 16 ||

(ப. உ.) அனேக-பா(வா)ஹு-த(ஊ)ர-வக்த்ர-நேத்ரம், பஶ்யாமி, த்வாம், ஸர்வத:, அனந்தரூபம் | ந, அந்தம், ந, மத்(யீ)யம், ந, புன:, தவ, ஆதி(ஈ)ம், பஶ்யாமி, விஶ்வேஶ்வர, விஶ்வரூப ||

விஶ்வேஶ்வர	= ஸ்ரீ கிருஷ்ண!	த்வாம்	= உன்னை
அனேக-	= அனேகங்களான	பஶ்யாமி	= பார்க்கிறேன்.
பா(வா)ஹு-	= கைகளையும்	விஶ்வரூப	= பூர்ணமான ரூபமுடைய கிருஷ்ண!
உத(ஊ)ர-	= வயிறுகளையும்	தவ	= உன்னுடைய
வக்த்ர-	= வாய்களையும்	ஆதி(ஈ)ம்	= ஆதியை
நேத்ரம்	= கண்களையுமுடைய	ந, பஶ்யாமி	= காண்பதில்லை.
ஸர்வத:	= ஸகல இடங்களிலும்	மத்(யீ)யம்	= நடுவையும்
அனந்த ரூபம்	= அபரிச்சின்னமான (அளவற்ற) ரூபமுடைய	ந, (பஶ்யாமி)	= காண்பதில்லை
		புன:	= மற்றும்
		அந்தம்	= முடிவையும்
		ந, (பஶ்யாமி)	= காண்பதில்லை.

(மூ)—கிரீடினம் க(கு)தி(தி)னம் சக்ரிணம் ச
தேஜோராஶிம் ஸர்வதோ தீ(ஈ)ப்திமந்தம் ||
பஶ்யாமி த்வாம் து(தூ)ர்னிரீக்ஷ்யம் ஸமந்தாத்
தீ(ஈ)ப்தானலார்க-த்(தீ)யுதி-மப்ரமேயம் || 17 ||

(ப. உ.) கிரீடினம், க(கு)தி(தி)னம், சக்ரிணம், ச, தேஜோராஶிம், ஸர்வத:, தீ(ஈ)ப்திமந்தம் | பஶ்யாமி, த்வாம், து(தூ)ர்னிரீக்ஷ்யம், ஸமந்தாத், தீ(ஈ)ப்தா-னலா-ர்க-த்(தீ)யுதிம், அப்ரமேயம் ||

கிரீடினம்	= கிரீடத்தையும்	ச	= மற்றும்
க(கு)தி(தி)னம்	= கதாயுதத்தையும்	சக்ரிணம்	= சக்ரத்தையும் தரித்திருக்கும்

தேஜோ ராஸிம் } = தேஜஸ் புஞ்ஜையும்
ஸர்வத: = எல்லா திசைகளிலும்
தீ(ஈ)ப்தி மந்தம் } = ப்ரகாஸ மூடையவனைகவும்
ஸமந்தாத் = சுற்றிலும்
தீ(ஈ)ப்த- = எரிந்து கொண்டிருக்கும்
அனல- = அக்னி
அர்க- = ஸூரியன் இவர்களிட

த்(ஈ)யுதிம் = காந்தியைப் போன்ற காந்தியுடையவனையும்
அப்ரமேயம் = அபரிமிதனையும் (அளவுக்கடங்காதவனையும்)
து(ஊ)ர் நிரீக்ஷ்யம் } = ஸாதாரண கண்களால் காண முடியாத தவனையும் இருக்கும்
த்வாம் = உன்னை
பஸ்யாமி = பார்க்கிறேன்.

(மூ)—த்வமக்ஷரம் பரமம் வேதி(தி)தவ்யம்
த்வமஸ்ய விஸ்வஸ்ய பரம் நிதா(யா)னம் ||
த்வமவ்யய: ஸாஸ்வத த(ய)ர்ம கோ(ஓ)ப்தா
ஸனாதனஸ்த்வம் புருஷோ மதோ மே || 18 ||

(ப. உ.) த்வம், அக்ஷரம், பரமம், வேதி(தி)தவ்யம், த்வம், அஸ்ய, விஸ்வஸ்ய, பரம், நிதா(யா)னம் | த்வம், அவ்யய:, ஸாஸ்வத-த(ய)ர்ம-கோ(ஓ)ப்தா, ஸனாதன:, த்வம், புருஷ:, மத:, மே ||

த்வம் = நீ
வேதி(தி) தவ்யம் } = மோக்ஷத்தை விரும்பு மவர்களால் அறிவதற்குத் தகுந்தவன்.
பரமம் = உத்தமன்.
அக்ஷரம் = நாஸமற்றவன்.
த்வம் = நீ
அஸ்ய = இந்த
விஸ்வஸ்ய = ஜகத்திற்கு
பரம் = உத்தமமான
நிதா(யா) னம் } = ஆஸ்ரயன்.

த்வம் = நீ
ஸாஸ்வத- = அனாதி பரம்பரையாய் வந்த
த(ய)ர்ம- = தர்மங்களை
கோ(ஓ)ப்தா } = இரக்ஷிப்பவன்.
த்வம் = நீ
அவ்யய: = குறுக்க மற்றவன்
ஸனாதன: = அனாதி நித்யனை
புருஷ: = புருஷனை
மே = எனக்கு
மத: = ஸம்மதன்.

(மூ)—அனாதீ(தி) மத்(யே)யாந்த மனந்த வீர்ய-
மனந்த பா(ஹா)ஹூம் ஸஸிஸூர்ய நேத்ரம் ||
பஸ்யாமி த்வாம் தீ(ஈ)ப்த ஹூதாஸ வக்த்ரம்
ஸ்வதேஜஸா விஸ்வமித(ஏ)ம் தபந்தம் || 19 ||

(ப. உ.) அநந்தி(ஹி)-மத்(யீ)யா-ந்தம், அனந்த-வீர்யம், அனந்த-பா(வா)ஹ்ரும், ஸஸி-ஸூர்ய-நேத்ரம் | பஸ்யாமி, த்வாம், தீ(ஈ)ப்த-ஹுதாஸ-வக்த்ரம், ஸ்வ-தேஜஸா, விஸ்வம், இத(உ)ம், தபந்தம் ||

அநந்தி(ஹி)-மத்(யீ)யா-ந்தம்	= (குணங்களின்) முதலிடைகடையற்றவனுகவும்
அனந்த-வீர்யம்	= அளவற்ற பராக்ரமமுடையவனுகவும்
அனந்த-பா(வா)ஹ்ரும்	= கணக்கற்ற கைகளையுடையவனுகவும்
ஸஸிஸூர்யநேத்ரம்	= சந்திரஸூர்யர்களை கண்களாயுடையவனுகவும்
தீ(ஈ)ப்த-ஹுதாஸ-வக்த்ரம்	= எரிந்துகொண்டிருக்கும் அக்னிக்கு ஆஸ்ரயமான வக்த்ரம் = முகமுடையவனும்
ஸ்வ-தேஜஸா	= உன்னிடமுள்ள ஒளியினால்
விஸ்வம்	= ஸமஸ்தஜகத்தையும்
தபந்தம்	= தபிக்கச் செய்கிறவனை யும்
த்வாம்	= உன்னை
பஸ்யாமி	= காண்கிறேன்.

(மூ)—த்(ஈ)யாவா ப்ருதி(யி)வ்யோ ரித(உ) மந்தரம் ஹி
வ்யாப்தம் த்வயைகேன தி(ஹி)ஸ்ஸ ச ஸர்வா: ||
த்(ஈ)ருஷ்டவாத்பு(ஹு)தம் ரூபமுக்(ரீ)ரம் தவேத(உ)ம்
லோகத்ரயம் ப்ரவ்யதி(யி)தம் மஹாத்மன் || 20 ||

(ப. உ.) த்(ஈ)யாவா-ப்ருதி(யி)வ்யோ:, இத(உ)ம், அந்தரம், ஹி, வ்யாப்தம், த்வயா, ஏகேன, தி(ஹி)ஸ:, ச, ஸர்வா: | த்(ஈ)ருஷ்டவா, அத்(ஈ)பு(ஹு)தம், ரூபம், உக்(ரீ)ரம், தவ, இத(உ)ம், லோகத்ரயம், ப்ரவ்யதி(யி)தம், மஹாத்மன் ||

மஹாத்மன்	= ஓ மஹாத்மாவே!
இத(உ)ம்	= இந்த
த்(ஈ)யாவா-	= ஆகாயம்
ப்ருதி(யி)வ்யோ:	= பூமி இவைகளுடைய
அந்தரம்	= நடுபாகமானது
த்வயா	= உன்னால்
ஏகேன	= ஒருருபத்தினால்
வ்யாப்தம்	= பரவப்பட்டிருக்கின்றது.
ஸர்வா:	= ஸகலமான
தி(ஹி)ஸ:, ச	= திசைகளும்
(வ்யாப்தா:)	= பரவப்பட்டிருக்கின்றன.
தவ	= உன்னுடைய
இத(உ)ம்	= இந்த
அத்(ஈ)புதம்	= ஆஸ்சர்யகரமாயும்
உக்(ரீ)ரம்	= பயங்கரமாயு

மிருக்கும்
ரூபம் = ரூபத்தை
த்(ஶ்)ருஷ்ட்வா = பார்த்து
லோகத்ரயம் = மூன்று லோகங்களும்
ப்ரவ்யதி(யி)தம் = மிகவும் பயமடைந்திருப்பவைகளாக
(பஶ்யாமி) = காண்கின்றேன்
ஹி = நிச்சயம்.

(மூ)—அமீ ஹி த்வாம் ஸுரஸம்கா(வா) விஶந்தி
கேசித்(ஶ்)பீ(ஹீ)தா: ப்ராஞ்ஜலயோ க்(ஶ்)ருணந்தி ||
ஸ்வஸ்தீத்யுக்த்வா மஹர்ஷி ஸித்த(ய்) ஸங்கா:(வா:)
ஸ்துவந்தி த்வாம் ஸ்துதிபி:(ஹி:) புஷ்கலாபி:(ஹி:) || 21 ||

(ப. உ.) அமீ, ஹி, த்வாம், ஸுரஸங்கா:(வா:), விஶந்தி, கேசித், பீ(ஹீ)தா:, ப்ராஞ்ஜலய:, க்(ஶ்)ருணந்தி | ஸ்வஸ்தி, இதி, உக்த்வா, மஹர்ஷி-ஸித்த(ய்)-ஸங்கா:(வா:), ஸ்துவந்தி, த்வாம், ஸ்துதிபி:(ஹி:), புஷ்கலாபி:(ஹி:) ||

அமீ = இந்த
ஸுரஸங்கா:(வா): = தேவர்களின் ஸமூகங்கள்
த்வாம் = உன்னை
விஶந்தி = ப்ரவேஶிக்கின்றன
ஹி = நிச்சயம்.
கேசித் = சிலர்
பீ(ஹீ)தா: = பயமுடையவர்களாய்
ப்ராஞ்ஜலய: (ஸந்த:) = கைமுகிழ்ந்தவராய்
க்(ஶ்)ருணந்தி = துதிக்கிறார்கள்
மஹர்ஷி- = மஹர்ஷிகள்
ஸித்த(ய்) = ஸித்த(ய்)ர்கள் இவர்களிட
ஸங்கா:(வா:) = ஸமூகங்கள்
ஸ்வஸ்தி = உலகத்திற்கு க்ஷேமமுண்டாகக் கடவது
இதி = என்று
உக்த்வா = சொல்லி
புஷ்கலாபி:(ஹி:) = ஸம்பூர்ணமான அர்த்தமுடைய
ஸ்துதிபி: (ஹி:) = ஸ்தோத்திரங்களினால்
த்வாம் = உன்னை
ஸ்துவந்தி = துதிக்கிறார்கள்.

(மூ)—ருத்(ஶ்)ராதி(தி)த்யா வஸவோ யே ச ஸாத்(த்)யா
விஶ்வேஶ்விநௌ மருதஶ்சோஷ்மபாஶ்ச ||
க(ம)ந்த(ர்)ர்வ-யக்ஷா-ஸுர-ஸித்த(ய்) ஸங்கா(வா)
வீக்ஷந்தே த்வாம் விஸ்மிதாஶ்சைவ ஸர்வே || 22 ||

(ப. உ.) ருத்(ஶ்)ராதி(தி)த்யா:, வஸவ:. யே, ச, ஸாத்(த்)யா:, விஶ்வே, அஶ்விநௌ, மருத:, ச, ஊஷ்மபா:, ச | க(ம)ந்த(ர்)ர்வ-யக்ஷா ஸுர-ஸித்த(ய்)ஸங்கா:(வா:), வீக்ஷந்தே, த்வாம், விஸ்மிதா:, ச, ஏவ, ஸர்வே ||

யே = எந்த
ருத்(த்)ர- = ருத்ரர்கள்
ஆதித்யா: = ஆதித்யர்கள்
ச = மற்றும்
வஸவ: = வஸுக்கள்
ஸாத்(த்)யா: = ஸாத்யர்கள்
விச்வே = விச்வே தே வ தைகள்
அச்வி னௌ = அச்வினி தேவ தைகள்
ச = மற்றும்
மருத: = மருத்கணங்கள்
ச = மற்றும்
ஊஷ்மபா: = பித்ருக்கள்
ச = மற்றும்
க(ந)ந்த } = கந்தர்வர்கள்
(ய)ர்வ- }
யக்ஷ- = யக்ஷர்கள்
அஸுர- = அஸுரர்கள்
ஸித்த(ய்) = ஸித்தர்கள் இவர்களிட
ஸங்கா:(வா:) = கூட்டங்கள்
(தே)ஸர்வே = ஆகிய அவர்களெல்லோரும்
விஸ்மிதா: } = ஆச்சர்யமுடை
(ஸந்த:) } யவர்களாய்
த்வாமேவ, ச = உன்னையே
வீக்ஷந்தே = பார்க்கின்றார்கள்.

(மூ)—ரூபம் மஹத் தே ப(ஹ)ஹுவக்த்ர-நேத்ரம்
மஹாபா(ஹா)ஹோ ப(ஹ)ஹுபா(ஹா)ஹுருபாத(த)ம் ||
ப(ஹ)ஹுதர(த)ரம் ப(ஹ)ஹுத(த)ம்ஷ்ட்ரா கராலம்
த்(த்)ருஷ்ட்வா லோகா: ப்ரவ்யதி(தி)தாஸ்ததா(தா)ஹம்
|| 23 ||

(ப. உ.) ரூபம், மஹத், தே, ப(ஹ)ஹு-வக்த்ர-நேத்ரம், மஹாபா(ஹா)ஹோ, ப(ஹ)ஹு-பா(ஹா)ஹு-பாத(த)ம் | பஹுதரம், ப(ஹ)ஹு-த(த)ம்ஷ்ட்ரா-கராலம், த்(த்)ருஷ்ட்வா, லோகா:, ப்ரவ்யதி(தி)தா:, ததா(தா), அஹம் ||

மஹாபா } = அதிக பராக்ரம
(ஹா)ஹோ } மாலியான ஸ்ரீ கிருஷ்ண!
தே = உன்னுடைய
ப(ஹ)ஹு- = அனேக
ளான
வக்த்ர- = முகங்கள்
நேத்ரம் = கண்கள் இவை களையுடைய
ப(ஹ)ஹு- = அனேக
ளான
பா(ஹா)ஹு- = கைகள்
ஊரு- = துடைகள்
பாத(த)ம் = பாதங்கள் இவைகளை யுடைய
ப(ஹ)ஹு- = அனேக
ளான
உத(த)ரம் = வயிறுகளை யுடைய
ப(ஹ)ஹு- = அனேக
ளான
த(த)ம்ஷ் } = கோரைப் பற்க
ட்ரா } ளால் பயத்தை
கராலம் } யுண்டாக்கும்
மஹத் = பெரியதான

ரூபம் = ரூபத்தை
த்(தீ)ருஷ்டவா = கண்டு
லோகா: = ஜனங்கள்
ப்ரவ்யதி(யி)தா: = பயத்திறல் கலங்கியமனதுடையவர்களாய் இருக்கிறார்கள்.
அஹம், அபி = நானும்
ததா(யா) = அவ்வாறே
பயத்திறல் மனக்கலக்கமுள்ளவனாய்
அஸ்மி = இருக்கிறேன்.

(மூ)—நப:(ஹ:)ஸ்ப்ருஶம் தீ(தீ)ப்தமனேகவர்ணம்
வ்யாத்தானனம் தீ(தீ)ப்த விஶால நேத்ரம் ||
த்(தீ)ருஷ்ட்வா ஹி த்வாம் ப்ரவ்யதி(யி)தாந்தராத்மா
த்(தீ)ருதிம் ந விந்தா(தா)மி ஶமம் ச விஷ்ணோ || 24 ||

(ப. உ.) நப:(ஹ:)-ஸ்ப்ருஶம், தீ(தீ)ப்தம், அனேக-வர்ணம், வ்யாத்தானனம், தீ(தீ)ப்த-விஶால-நேத்ரம் | த்(தீ)ருஷ்ட்வா, ஹி, த்வாம், ப்ரவ்யதி(யி)தா-ந்தராத்மா, த்(தீ)ருதிம், ந, விந்தா(தா)மி, ஶமம், ச, விஷ்ணோ ||

விஷ்ணோ = வ்யாப்தனனே ஸ்ரீ கிருஷ்ண!
நப:(ஹ:)- = ஆகாயத்தை
ஸ்ப்ருஶம் = தொடும்
தீ(தீ)ப்தம் = ப்ரகாஶித்துக்கொண்டிருக்கும்
அனேக- = பலவகைகளான
வர்ணம் = வர்ணங்களுடன் கூடியிருக்கும்
வ்யாத்த- = பெரியதாய் திறக்கப்பட்டிருக்கும்
ஆனனம் = வாயுடைய
தீ(தீ)ப்த- = ப்ரகாஶிக்கும்
விஶால- = விஶாலமான
நேத்ரம் = கண்களையுடைய
த்வாம் = உன்னை
த்(தீ)ருஷ்ட்வா = பார்த்து
ப்ரவ்யதி(யி)தா- = கலக்கமடைந்த
அந்தராத்மா = மனதுடைய
(அஹம்) = நான்
த்(தீ)ருதிம் = தைர்யத்தையும்
ச = மற்றும்
ஶமம் = ஶாந்தியையும் (மனத்தணிவையும்)
ந, விந்தா(தா)மி = அடைவதில்லை
ஹி = நிச்சயம்.

(மூ)—த(தா)ம்ஷ்ட்ராகராலானி ச தே முகா(வா)னி
த்(தீ)ருஷ்ட்வைவ காலானலஸன்னிபா(தா)னி ||

தி(ஶி)ஶோ ந ஜானே ந லபே(ஹே) ச ஶர்ம
ப்ரஸீத(ஷ) தே(ஷே)வேஶ ஜகன்னிவாஸ || 25 ||

(ப. உ.) த(ஷ)ம்ஷ்ட்ராகராலானி, ச, தே, முகா(வா)னி, த்(ஜ்)ருஷ்ட்வா, ஏவ, காலானல-ஸன்னிபா(ஹா)னி | தி(ஶி)ஶ:, ந, ஜானே, ந, லபே(ஹே), ச, ஶர்ம, ப்ரஸீத(ஷ), தே(ஷே)வேஶ, ஜகன்னிவாஸ ||

ஜகன்னிவாஸ	= ஜகத்திற்கு ஆஶ்ரயனான
தே(ஷே) வேஶ	= தேவர்களுக்கு ஸ்வாமியான ஶ்ரீ கிருஷ்ண !
தே	= உன்னுடைய
தம்ஷ்ட்ரா காராலானி	= கோரைப் பற்களால் பயங்கரமான
ச	= மற்றும்
காலானல-	= ப்ரளயாக்னிக்கு
ஸன்னிபா (ஹா)னி	= ஸமானமான
முகா(வா)னி	= முகங்களை
த்(ஜ்)ருஷ்ட்வா, ஏவ	= கண்டமாத்திரத்திலேயே
தி(ஶி)ஶ:	= திஶைகளை
ந, ஜானே	= அறியவில்லை.
ஶர்ம, ச	= ஸுகத்தையும்
ந, லபே(ஹே)	= அடையவில்லை
(அத:)	= அதனால்
(த்வம்)	= நீ
ப்ரஸீத(ஷ)	= ப்ரஸன்னனாகவேண்டும்.

(மூ)—அமீ ச த்வாம் த்(ய்)ருதராஷ்ட்ரஸ்ய புத்ரா:
ஸர்வே ஸஹைவாவனிபால ஸங்கை:(ஙவை:) ||
பீ(ஹீ)ஷ்மோ த்(ஜ்)ரோண: ஸூதபுத்ர ஸ்ததா(யா)ஸௌ
ஸஹாஸ்மதீ(ஜ்)யைரபி யோத(ய)முக்(வீ)யை: || 26 ||

(ப. உ.) அமீ, ச, த்வாம், த்(ய்)ருதராஷ்ட்ரஸ்ய, புத்ரா:, ஸர்வே, ஸஹ, ஏவ, அவனிபாலஸங்கை:(ஙவை:) | பீ(ஹீ)ஷ்ம:, த்(ஜ்)ரோண:, ஸூதபுத்ர:, ததா(யா), அஸௌ, ஸஹ, அஸ்மதீ(ஜ்)யை:, அபி, யோத(ய)முக்(வீ)யை: ||

அமீ	= இந்த
ஸர்வே	= ஸமஸ்தரான
த்(ய்)ருதராஷ்ட்ரஸ்ய	= த்ருதராஷ்ட்ரனின்
புத்ரா:	= குமாரர்கள்
அவனிபால-ஸங்கை: (ஙவை:)	= அரசர்களின் கூட்டங்களாக
ஸஹ, ஏவ	= கூடிக் கொண்டே
த்வாம்	= உன்னை
(விஶந்தி)	= ப்ரவேஶிக்கின்றார்கள்.
ச	= மற்றும்
பீ(ஹீ)ஷ்ம:	= பீஷ்மாசார்யர்
த்(ஜ்)ரோண:	= த்ரோணாசார்யர்

ததா(யா)	= அவ்வாறே
அஸௌ	= இந்த
ஸ-ஹிதபுத்ர:	= ஸ-ஹிதபுத்ரனை கர்ணன்
யோத(ய)-	= போர்செய்பவர் களில்
முக்யை:	= முக்யர்களான
அஸ்ம தீ(ஈ)யை: அதி	= நம்மவர்க ளோடும்
ஸஹ	= கூடிக்கொண்டு
த்வாம்	= உன்னை
(விஸ்ருஜந்தி)	= ப்ரவேசிக் கின்றார்கள்.

(மூ)—வக்த்ராணி தே த்வரமாண விஸ்ருஜந்தி
த(ஊ)ம்ஷ்ட்ராகராலானி ப(ஊ)யானகானி ||
கேசித்(ஈ)விலக்(ஜீ)ன தி(ஊ)ஷணந்தரேஷு
ஸம்த்(ஈ)ருஸ்யந்தே சூர்ணிதைருத்தமாங்கை:(ஙே:) ||27||

(ப. உ.) வக்த்ராணி, தே, த்வரமாண:, விஸ்ருஜந்தி, த(ஊ)ம்ஷ்ட்ரா-கராலானி, ப(ஊ)யானகானி | கேசித், விலக்(ஜீ)ன:, த(ஊ)ஷணந்தரேஷு, ஸம்த்(ஈ)ருஸ்யந்தே, சூர்ணிதை:, உத்தமாங்கை:(ஙெ:) ||

தே	= அந்த துர்யோ தனாதிகள்
த(ஊ)ம்ஷ் ட்ரா- கராலானி	= கோரைப்பற் களினால் = விகாரங்களான
ச	= மற்றும்
ப(ஊ)யான கானி	= பயத்தையுண்டு பண்ணும்
தே	= உன்னுடைய
வக்த்ராணி	= முகங்களை
த்வரமாண:	= வேகத்தோடு கூடியவர்களாய்
விஸ்ருஜந்தி	= ப்ரவேசிக் கின்றார்கள்.
கேசித்	= சிலர்
த(ஊ)ஷ ணந்த- ரேஷு	= பற்சந்துகளில்
விலக் (ஜீ)ன: (ஸந்த:)	= அகப்பட்ட வர்களாய்
சூர்ணிதை:	= பொடியாய்ப் போன
உத்த மாங்கை:	= தலைகளுடன்
யுக்தா: (ஸந்த:)	= கூடிய வர்க ளாய்
ஸம்த்(ஈ) ருஸ்ய- ந்தே	= காணப்படு கின்றார்கள்.

(மூ)—யதா(யா) நதீ(ஈ)னம் ப(ஊ)ஹவோம்பு(ஊ)வேகா:(ஙா:)
ஸமுத்(ஈ)ரமேவாபி(ஹி)முகா(வா) த்(ஈ)ரவந்தி ||
ததா(யா) தவாமீ நரலோகவீரா
விஸ்ருந்தி வக்த்ராண்யபி(ஹி)விஜ்வலந்தி || 28 ||

(ப. உ.) யதா(யா), நதீ(ஈ)னம், ப(ஊ)ஹவ:, அம்பு(ஊ)வேகா(ஙா:), ஸமுத்(ஈ)ரம், ஏவ, அபி(ஹி)முகா:(வா:), த்(ஈ)ரவந்தி | ததா(யா), தவ, அமீ, நரலோகவீரா:, விஸ்ருந்தி, வக்த்ராணி, அபி(ஹி)விஜ்வலந்தி ||

யதா(யா) = எவ்வாறு
ந்தீ(ஈ)ணம் = நதிகளின்
ப(வ)ஹவ: = அனேகமான
அம்பு (வ)வே கா(மா:) = ஜலப்ரவாஹங்கள்
ஸமுத்(தீ)ரம், ஏவ = ஸமுத்ரத்தையே
அபிமுகா: (ஸந்த:) = எதிர்முகமாய்
த்(தீ)ரவந்தி = ப்ரவேஷிக்கின்றனவோ
ததா(யா) = அவ்வாறே
அபீ = இந்த
நரலோக- = மானிட உலகிலுள்ள
வீரா: = வீரர்களான பீஷ்மாதிகள்
தவ = உன்னுடைய
அபி(ஹி) விஜ்வலந்தி = க்ரூரமாய் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும்
வக்த்ராணி = முகங்களை
விஶந்தி = ப்ரவேஷிக்கின்றனர்.

(மூ)—யதா(யா) ப்ரீதீ(ஈ)ப்தம் ஜ்வலனம் பதங்கா(மா) விஶந்தி நாஶாய ஸம்ருத்த(ய்)வேகா:(மா:) ||
ததை(வே)வ நாஶாய விஶந்தி லோகா ஸ்தவாபி வக்த்ராணி ஸம்ருத்த(ய்)வேகா:(மா:) || 29 ||

(ப. உ.) யதா(யா), ப்ரதீ(ஈ)ப்தம், ஜ்வலனம், பதங்கா:(மா:), விஶந்தி, நாஶாய, ஸம்ருத்த(ய்)வேகா:(மா:) | ததா(யா), ஏவ, நாஶாய, விஶந்தி, லோகா:, தவ, அபி, வக்த்ராணி, ஸம்ருத்த(ய்)வேகா:(மா:) ||

யதா(யா) = எவ்வாறு
ஸம்ருத் த(ய்)- = அதிகமான
வேகா:(மா:) = வேகத்தோடு கூடிய
பதங் கா:(மா:) = ஶலபங்கள் (விட்டில் பூச்சிகள்)
நாஶாய = அழிவுக்காக
ப்ரீதீ(ஈ) ப்தம் = நன்ருய் எரிந்து கொண்டிருக்கும்
ஜ்வலனம் = நெருப்பை
விஶந்தி = ப்ரவேஷிக்கின்றனவோ
ததா(யா)ஏவ = அவ்வாறே
ஸம்ருத்த (ய்)வேகா: = அதிகவேகத்தோடு கூடிய
லோகா:, அபி = துர்யாதனாதிஜனங்களும்
நாஶாய = மரணத்திற்காக
தவ = உன்னுடைய
வக்த்ராணி = வாய்களை
விஶந்தி = ப்ரவேஷிக்கின்றனர்கள்.

(மூ)—லேலிஹ்யஸே க்(ஸீ)ரஸமான: ஸமந்தால்-
லோகான் ஸமக்(ஸீ)ரான் வத(ஊ)னர்ஜ்வலத்பி:(ஜ்வ:) ||
தேஜோபி(ஆ)ராபூர்ய ஜக(அ)த் ஸமக்(ஸீ)ரம்
டா(ஆ)ஸஸ்தவோக்(ஸீ)ரா: ப்ரதபந்தி விஷ்ணோ || 30 ||

(ப. உ.) லேலிஹ்யஸே, க்(ஸ்ரீ)ரஸமான:, ஸமந்தாத், லோகான், ஸமக்(ஸ்ரீ)ரான், வத(உ)னை:, ஜ்வலத்பி:(ஹி:)। தேஜோபி:(ஹி:), ஆபூர்ய, ஜகத், ஸமக்(ஸ்ரீ)ரம், பா(ஹா)ஸ:, தவ, உக்(ஸ்ரீ)ரா:, ப்ரதபந்தி, விஷ்ணோ ॥

(த்வம்)	= நீ	யிலல் ருசிபார்ப்	
ஸமக்(ஸ்ரீ)ரான்	= ஸமஸ்தான	பவனைப்போல்	
		அடிக்கடி)	
லோகான்	= துர்யோதனாதி ஜனங்களை	நக்கிக்கொள்ளுகிறாய்	
ஜ்வலத்பி:(ஹி:)	= எரிந்துகொண்டிருக்கும்	விஷ்ணோ	= ஸ்ரீ கிருஷ்ண!
		தவ	= உன்னுடைய
வத(உ)னை:	= முகங்களினால்	உக்(ஸ்ரீ)ரா:	= குரூரங்களான
ஸமந்தாத்	= நான்கு திசைகளினின்றும்	பா(ஹா)ஸ:	= ஓளிகள்
		தேஜோபி: (ஹி:)	= பிரகாசங்களினால்
க்(ஸ்ரீ)ரஸமான:	= விழுங்குபவனைப்	ஸமக்(ஸ்ரீ)ரம்	= ஸகலமான
லேலிஹ்யஸே	= (ரக்தத்துடன் கூடியிருக்கும் உதடுகளை நாக்கின் நுனி	ஜகத்	= ஜகத்தை
		ஆபூர்ய	= பரவிக்கொண்டு
		ப்ரதபந்தி	= மிகவும் தபிக்கச் செய்கின்றன.

(மூ)—ஆக்(வி)யாஹி மே கோ ப(ஹ)வானுக்(ஸ்ரீ)ர ரூபோ
நமோஸ்து தே தே(உ)வவ ப்ரஸீத(உ) ॥
விஜ்ஞாதுமிச்சா(ஹா)மி ப(ஹ)வந்தமாத்(ஸ்ரீ)யம்
ந ஹி ப்ரஜாநாமி தவ ப்ரவ்ருத்திம் ॥ 31 ॥

(ப. உ.) ஆக்(வீ)யாஹி, மே, க:, ப(ஹ)வான், உக்(ஸ்ரீ)ரரூப:, நம:, அஸ்து, தே, தே(உ)வவ, ப்ரஸீத(உ)। விஜ்ஞாதும், இச்சா(ஹா)மி, ப(ஹ)வந்தம், ஆத்(ஸ்ரீ)யம், ந, ஹி, ப்ரஜாநாமி, தவ, ப்ரவ்ருத்திம் ॥

உக்(ஸ்ரீ)ர-	= உக்ரமான	தேவவர	= தேவஸ்ரேஷ்டனே!
ரூப:	= ரூபமுடைய	தே	= உனக்கு
ப(ஹ)வான்	= நீ	நம:	= நமஸ்காரம்
க:	= யார்? (எதற்காக இந்த ரூபத்தைத் தரித்திருக்கிறாய்)	அஸ்து	= இருக்கட்டும்.
		ப்ரஸீத(உ)	= ப்ரஸன்னனாகுக.
மே	= எனக்கு [டும்.	ஆத்(ஸ்ரீ)யம்	= ஆதிபுருஷனை
ஆக்(வி)யாஹி	= சொல்லவேண்	ப(ஹ)வந்தம்	= உன்னை

விஜ்ஞாதும் = நன்று க (ஸரியாக) தெரிந்து கொள்வதற்கு
இச்சா(ஹா)மி = விரும்புகிறேன்.
ஹி = மற்றும்
தவ = உன்னுடைய
ப்ரவ்ருத்திம் = கார்யங் களை
(என் இந்த காரருபத்தைத் தரித்தாயே) அதை
ந, ப்ரஜானமி } = அறியவில்லை.

ஸ்ரீ பகவானுவாச—

(மூ)—காலோஸ்மி லோகக்ஷயக்ருத் ப்ரவ்ருத்தோ(ஜ்ஞோ)
லோகான் ஸமாஹர்துமிஹ ப்ரவ்ருத்தः ||
ருதேபி த்வாம் ந ப(ஹ)விஷ்யந்தி ஸர்வே
யேவஸ்தி(யி)தாः ப்ரத்யநீகேஷு யோதாः(யாः) || 32 ||

(ப. உ.) காலः, அஸ்மி, லோக-க்ஷயக்ருத், ப்ரவ்ருத்தः (ஜ்ஞः), லோகான், ஸமாஹர்தும், இஹ, ப்ரவ்ருத்தः | ருதே, அபி, த்வாம், ந, ப(ஹ)விஷ்யந்தி, ஸர்வே, யே, அவஸ்தி(யி)தாः, ப்ரத்யநீகேஷு, யோதாः(யாः) ||

ஸ்ரீ பகவான் = ஸ்ரீ கிருஷ்ணன்
உவாச = (காரருபத்தைத் தரித்ததற்குக் காரணத்தை) சொல்லுகிறான்.
(அஹம்) = நான்
காலः = ப்ரபஞ்சத்திற்கு பந்தனம் ஸம்ஹாரம் முதலிய கர்மங்களைச் செய்து கொண்டிருப்பதிலே காலஸ்வரூபத்தை வாச்யனுய்
லோக- = ப்ரபஞ்சத்தை
க்ஷயக்ருத் = நசிக்கச் செய்பவனுய்
ப்ரவ்ருத்தः(ஜ்ஞः) } = ஸகலதேசங்களிலும் காலங்களிலும் நிரை

அஸ்மி = இருக்கிறேன்.
இஹ = இப்பேரற்களத்திற்கு வந்திருக்கும்
லோகான் = ஜனங்களை
ஸமாஹர்தும் } = ஸம்ஹரிப்பதற்காக
ப்ரவ்ருத்தः = ப்ரவ்ருத்தனுய்
அஸ்மி = இருக்கிறேன்.
யே = யார்
ப்ரத்யநீகேஷு } = இருபடைகளிலும் பரஸ்பரத்தோடு கூடி
அவஸ்தி(யி)தாः } = நின்றிருக்கும்
யோதாः(யாः) = பார் வீரர்களோ (அவர்களில்)
த்வாம் = உன்னையும்
அபி = மற்றும், தர்ம

ராஜர், பீமன், நகுலன், ஸகதேவன், அஸ்வத்தாமா, க்ருபாசார்யர் க்ருதவர்மா இவர்களையும்	ருதே = தவிர தே, ஸர்வே = (மற்ற) அவர்களெல்லோரும் ந, ப(ஹ) விஷ்யந்தி = இருப்பதில்லை. (என்னுல்மாணமடைகிறார்கள்)

அவதரணிகை :—அர்ஜுனன் 'ஜயமுண்டாகுமோ பராஜயமுண்டாகுமோ' என்று ஸந்தேஹமடைந்ததற்கு 'ஜயித்தால் ராஜ்யத்தை யனுபவிப்பாய், போரில் மரணமடைந்தால் ஸ்வர்க்கத்தை அனுபவிப்பாய்; ஆகையால் ஜய விஷயத்தில் ஸந்தேஹமிருந்தாலும் எழுந்து போர் செய்' என்று ஸ்ரீ கிருஷ்ணன் முன் சொல்லியிருந்தான். இப்பொழுது 'உனக்கு (அர்ஜுனனுக்கு) நிச்சயமாய் ஜய முண்டாகிறபடியால் எழுந்து போர் செய்' என்று சொல்லுகிறான் :—

(மூ)—தஸ்மாத் த்வமுத்திஷ்ட யஸோ லப(ஹ)ஸ்வ
ஜித்வா ஶத்ரூன் பு(ஹு)ங்க்ஷ்வ ராஜ்யம் ஸம்ருத்த(ய்)ம் ||
மயைவைதே நிஹதா: பூர்வ மேவ
நிமித்தமாத்ரம் ப(ஹ)வ ஸவ்யஸாசின் || 33 ||

(ப. உ.) தஸ்மாத், த்வம், உத்திஷ்ட, யஶ:, லப(ஹ)ஸ்வ, ஜித்வா, ஶத்ரூன், பு(ஹு)ங்க்ஷ்வ, ராஜ்யம், ஸம்ருத்த(ய்)ம் | மயா, ஏவ, ஏதே, நிஹதா:, பூர்வம், ஏவ, நிமித்தமாத்ரம், ப(ஹ)வ, ஸவ்யஸாசின் ||

தஸ்மாத்	= நானே ஸகல லோகங்களையும் நாஶம் செய்யவேண்டுமென்று ப்ரவர்த்தணை யிருப்பதால்
த்வம்	= நீ
உத்திஷ்ட	= யுத்தம் செய்வதற்கு எழுந்திரு.
ஶத்ரூன்	= ஶத்ருக்களை
ஜித்வா	= ஜயித்து
யஶ:	= கீர்த்தியை
லப(ஹ)ஸ்வ	= அடைவாயாக.
ஸம்ருத்த(ய்)ம்	= படை, பொக்கிஷம் (செல்வம்) துரக்கம் (ஓடுக்குவழி) இவைகளால் பூர்ணமான
ராஜ்யம்	= ராஜ்யத்தை
பு(ஹு)ங்க்ஷ்வ	= அனுபவிப்பாயாக.
பூர்வம், ஏவ	= முன்னமே
ஏதே	= இப்போர் வீர்

கள்
மயா, ஏவ = என்னாலேயே
நிஹதா: = கொல்லப் பட்டவர்களைப் போலவே (அவர்களின் ஆயுளை நான் அபஹரித்திருப்பதால் நெருங்கியமரணமுள்ளவர்களாய்) இருக்கிறார்கள்.
ஸவ்யஸாசின் = இருகைகளாலும் பாணங்களை விடும் வல்லமையுள்ள அர்ஜுனை!
த்வம் = நீ
நிமித்த மாத்ரம் } = காரணன் மாத்திரம் (அர்ஜுனன் ஸம்ஹரித்தான் என்னும் பெயர் மாத்திரத்தை நீ அடைவதற்குக் காரணனாய்)
ப(வ)வ = ஆகுக.

அவதாரணிகை :—பரசுராமரால் மேலான அஸ்திரங்களை ஸம்பாதி(தி)த்த ஆசார்யராகிய த்ரோணாசார்யர், தான் விரும்பிய போது மரணமடையும் திறமையுள்ள பீஷ்மாசார்யர், தன் தலையை நிலத்தில் விழச்செய்பவனின் தலை ஆயிரத்துணுக்குகளாகும் படிக்கு ருத்ரதேவனின் வரம்பெற்ற ஜயத்ரதன், இந்திரனால் ஸக்த்யாயுதத்தை அடைந்திருக்கும் கர்ணன், மற்றும் ஸூரர்களாகிய அனேக மஹாராஜர்கள் இவர்களெல்லோரும் போர்க்களத்தில் நின்றிருக்க தனக்கு எப்படி ஜயம் உண்டாகும் என்னும் அர்ஜுனனின் ஸங்கைக்கு பதிலளிக்கிறான் :—

(மூ)—த்(தீ)ரோணம் ச பீ(ஹீ)ஷ்மம் ச ஜயத்(தீ)ரத(ர)ம் ச
கர்ணம் ததா(ர்யா)ன்யானபி யோத(ர)வீரான் ||
மயா ஹதாம் ஸ்த்வம் ஜஹி மா வ்யதி(ர்)ஷ்டா:
யுத்யஸ்வ ஜேதாஸி ரணே ஸபத்னான் || 34 ||

(ப. உ.) த்(தீ)ரோணம், ச, பீ(ஹீ)ஷ்மம், ச, ஜயத்(தீ)ரத(ர)ம், ச, கர்ணம், ததா(ர்யா), அன்யான், அபி, யோத(ர)வீரான் | மயா, ஹதான், த்வம், ஜஹி, மா, வ்யதி(ர்)ஷ்டா:, யுத்யஸ்வ, ஜேதா, அஸி, ரணே, ஸபத்னான் ||

மயா = என்னால்
ஹதான் = மரண மடைந்தவர்களைப் போல இருக்கிறார்
த்(தீ)ரோணம், ச } = த்ரோண சார்யரையும்
பீ(ஹீ)ஷ்மம்ச = பீஷ்ம சார்யரையும்

ஜயத்(த்)ரத(ம்), ச = ஜயத்ரத(ம்) னையும்
கர்ணம் = கர்ணனையும்
ததா(ம) = அவ்வாறே
அன்யான், அபி = இவர்களை விட வோரான
யோத(ம) வீரான் = யுத்த வீரர்களை யும்

த்வம் = நீ
ஜஹி = கொல்லு.
மா, வ்யதி(தி)ஷ்டா: = துன்பப்பட வேண்டாம்.
யுத்யஸ்வ = யுத்தம் செய்.
ரணே = போரில்
ஸபத்னான் = ஸத்ருக்களை
ஜேதா = வெல்லுபவனாக
அஸி = இருக்கிறாய்.

ஸஞ்ஜய உவாச—

(மூ)—ஏதத் ஸ்ருத்வா வசனம் கேஸவஸ்ய
க்ருதாஞ்ஜலிர்வேபமான: கிரீடீ ||
நமஸ்க்ருத்வா பூ(பூ)ய ஏவாஹ க்ருஷ்ணம்
ஸக(ம)த்(த்)க(ம)த(ஏ)ம் பீ(பீ)தபீ(பீ)த: ப்ரணம்ய || 35 ||

(ப. உ.) ஏதத், ஸ்ருத்வா, வசனம், கேஸவஸ்ய, க்ருதாஞ்ஜலி:, வேபமான:, கிரீடீ | நமஸ்க்ருத்வா, பூ(பூ)ய:, ஏவ, ஆஹ, க்ருஷ்ணம், ஸக(ம)த்(த்)க(ம)த(ஏ)ம், பீ(பீ)தபீ(பீ)த:, ப்ரணம்ய ||

ஸஞ்ஜய: = ஸஞ்ஜயன்
உவாச = பிறகு என்ன நேர்ந்தி தன்னும் த்ருதாஷ்ட்ரனின் மஹாத்மாவான கைக்கு ஸமானத்தைத் சொல்லுகிறான்
கிரீடீ = இந்திரனால் கொடுக்கப் பட்ட கிரீடத்தை யுடைய அர்ஜுனன்
ஏதத் = இதுவரையில் சொல்லிய
கேஸவஸ்ய = ஸ்ரீ கிருஷ்ணனின்
வசனம் = வார்த்தைகளை
ஸ்ருத்வா = கேட்டு
வேபமான: = நடுக்கமெடுத்த வனாய்

க்ருதாஞ்ஜலி: = பத்தாஞ்ஜலியா
நமஸ்க்ருத்வா = நமஸ்கரித்து[ப்
பூ(பூ)ய: ஏவ = மறுபடியும்
க்ருஷ்ணம் = ஸ்ரீ கிருஷ்ணனைக் குறித்து
பீ(பீ)தபீ(பீ)த: = மிகவும் பயத்தை யடைந்தவனாய்
ப்ரணம்ய = வணக்கமுடையவனாய்
ஸக(ம)த்(த்)க(ம)த(ஏ)ம்[ப ததா(தா)]] = நடுக்கமுள்ள ஸ்வரத்துடன்
ஆஹ = சொல்லுகிறான்.

அர்ஜுன உவாச—

(மூ)—ஸ்தா(யா)னே ஹ்ருஷீகேச தவ ப்ரகீர்த்யா
ஜக(அ)த் ப்ரஹ்ருஷ்யத்யனு ரஜ்யதே ச ||
ரக்ஷாம்ஸி பீ(ஈ)தானி தி(தி)ஶோ த்(த்)ரவந்தி
ஸர்வே நமஸ்யந்தி ச ஸித்த(ய்) ஸங்கா:(வா:) || 36 ||

(ப. உ.) ஸ்தா(யா)னே ஹ்ருஷீகேச, தவ, ப்ரகீர்த்யா, ஜக(அ)த், ப்ரஹ்ருஷ்யதி, அனுரஜ்யதே, ச | ரக்ஷாம்ஸி, பீ(ஈ)தானி, தி(தி)ஶ:, த்(த்)ரவந்தி, ஸர்வே, நமஸ்யந்தி, ச, ஸித்த(ய்)ஸங்கா:(வா:) ||

அர்ஜுன: = அர்ஜுனன்
உவாச = சொல்லுகிறான்
ஹ்ருஷீகேச = ஸகல இந்திரியங்களுக்கும் ப்ரேரகனே ஸ்ரீ கிருஷ்ண!
தவ = உன்னுடைய
ப்ரகீர்த்யா = மகிமையின் கீர்த்தனையினால்
ஜக(அ)த் = ப்ரபஞ்சம்
ப்ரஹ்ருஷ்யதி = மிகவும் ஸந்தோஷமடைகிறது.
அனுரஜ்யதே, ச = அனுராகமுடையதாகவுமாகிறது.
ரக்ஷாம்ஸி = ராக்ஷஸர்கள்
பீ(ஈ)தானி = பயமுடையவர்களாய்
தி(தி)ஶ: = திசைகளைக் குறித்து
த்(த்)ரவந்தி = ஓடுகின்றார்கள்,
ச = மற்றும்
ஸர்வே = ஸகலமான
ஸித்த(ய்)- = ஸித்தரின்
ஸங்கா:(வா:) = கூட்டங்கள்
நமஸ்யந்தி = நமஸ்கரிக்கின்றன.
[இத(ஏ)ம்] = இதுகள்
ஸ்தா(யா)னே = உமக்கு தக்கவைகளே.

(மூ)—கஸ்மாச்ச தே ந நமேரன் மஹாத்மன்
க(அ)ரீயஸே ப்ரஹ்மணோப்யாதி(தி)கர்த்ரே ||
அனந்த தே(ஏ)வேஶ ஜக(அ)ன்னிவாஸ
த்வமக்ஷரம் ஸத(ஏ)ஸத் தத்பரம் யத் || 37 ||

(ப. உ.) கஸ்மாத், ச, தே, ந, நமேரன், மஹாத்மன், க(அ)ரீயஸே, ப்ரஹ்மண:, அபி, ஆதி(தி)கர்த்ரே | அனந்த, தே(ஏ)வேஶ, ஜக(அ)ன்னிவாஸ, த்வம், அக்ஷரம், ஸத், அஸத், தத்பரம், யத் ||

மஹாத்மன் = மஹாத்மாவான ஸ்ரீ கிருஷ்ண!
க(அ)ரீயஸே = ஶ்ரேஷ்டனனே
ப்ரஹ்ம ணோ, அபி = சதுர்முக ப்ரஹ்மாவுக்கும்
ஆதி(தி)கர்த்ரே = ஸ்ருஷ்டிகர்த்தாவாயிருக்கும்
தே = உனக்காக
கஸ்மாத் = ஏன்
ந, நமேரன் = நமஸ்கரிக்க

மாட்டார்கள்?
(நமஸ்கரித்தே
தீருவார்கள்)
= மற்றும்
அனந்த = முடிவற்ற
தே(தே)வேஶ = தேவர்களுக்கு ஸ்வாமியான
ஜக(கு)ன்னிவாஸ = உலகத்திற்கு ஆஸ்ரயனான
க்ருஷ்ண!
அக்ஷரம் = அக்ஷரனென்னும் பெயருடை

த்வம் = நீ
யத் = எந்த
ஸத(து)ஸத் = பாவாபாவ ரூபமான (இருக்கிறதுமில்லாததுமான) பரபஞ்சமுண்டோ
தத்- = அந்த ப்ரபஞ்சத்தைவிட
பரம் = மேலானவன்.

(மூ)—த்வமாதி(தி)தே(தே)வ: புருஷ: புராண
ஸ்த்வமஸ்ய விஶ்வஸ்ய பரம் நிதா(தா)னம் ||
வேத்தாஸி வேத்(தீ)யம் ச பரம் ச தா(தா)ம
த்வயா ததம் விஶ்வமனந்தரூப || 38 ||

(ப. உ.) த்வம், ஆதி(தி)தே(தே)வ:, புருஷ:, புராண:, த்வம், அஸ்ய, விஶ்வஸ்ய, பரம், நிதா(தா)னம் | வேத்தா, அஸி, வேத்(தீ)யம், ச, பரம், ச, தா(தா)ம, த்வயா, ததம், விஶ்வம், அனந்தரூப ||

த்வம் = நீ
அஸ்ய = இந்த
விஶ்வஸ்ய = ப்ரபஞ்சத்திற்கு
பரம் = ஶ்ரேஷ்டமான
நிதா(தா)னம் = ஆஸ்ரயன்.
வேத்தா = ஜகத்தை அறிந்தவன்.
ச = மற்றும்
வேத்(தீ)யம் = ஜனங்களால் அவசியமாய் தெரிந்து கொள்ளப்படுபவன்.
ஆதி(தி) தே(தே)வ: = தேவர்களுக்கு ஆதிகாரணன்.

த்வம் = நீ
புராண: = ஸனாதனனான
புருஷ: = புருஷன்.
ச = மற்றும்
பரம் = உத்தமமான
தா(தா)ம = தேஜஸ்வரூபன்.
அனந்தரூப = அளவற்ற ரூபமுடைய பரமாத்மாவே!
த்வயா = உன்னால்
விஶ்வம் = ப்ரபஞ்சம்
ததம் = வ்யாபிக்கப்பட்டிருக்கிறது.

(மூ)—வாயுர்யமோக்(தீ)னிர்வருண: ஶஶாங்க:
ப்ரஜாபதிஸ்த்வம் ப்ரபிதாமஹஶ்ச ||
நமோ நமஸ்தேஸ்து ஸஹஸ்ரக்ருத்வ:
புனஶ்ச பூ(பூ)யோபி நமோ நமஸ்தே || 39 ||

(ப. உ.) வாயுः, யமः, அக்(ஹி)னिः, வருணः, ஶஶாங்கः, ப்ரஜாபதिः, த்வம், ப்ராபிதாமஹः, ச | நமः, நமः, தே, அஸ்து, ஸஹஸ்ரக்ருத்வः, புனः, ச, பூ(ஊ)யः, அபி, நமः, நமः, தே ||

த்வம்	= நீ	ச	= மற்றும்
வாயுः	= பலம், ஞானம் இவைகளே ஸ்வரூபமாயுடையவன்.	ப்ராபிதாமஹः	= ப்ரஜைகளைப் படைக்கும் ப்ரஹ்மாவுக்கும் தந்தையானவன்.
யமः	= நியமிப்பவன்.	தே	= உனக்காக
அக்(ஹி)னिः	= ஜகத்திற்கு சேஷ்டகனானவன்.	ஸஹஸ்ரக்ருத்வः	= ஆயிரக்கணக்கான
வருணः	= பக்தர்களிடத்தில் அனுக்ரஹம் செய்பவன்.	நமः நமः	= நமஸ்காரங்கள்
		அஸ்து	= இருக்கட்டும்.
ஶஶாங்கः	= மிகவும் ஸுகமுடையவன்.	தே	= உனக்காக
ப்ரஜாபதिः	= ஜனங்களை ரக்ஷிப்பவன்.	பூ(ஊ)யः, அபி	= அனேகமாய்
		புனः, ச	= அடிக்கடி
		நமः, நமः	= நமஸ்காரம் நமஸ்காரம்.

மூ)—நமः புரஸ்தாத(ஏ)த(ய) ப்ருஷ்டதஸ்தே
நமோஸ்து தே ஸர்வத ஏவ ஸர்வ ||
அனந்தவீர்யாமித விக்ரமஸ்த்வம்
ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வः || 40 ||

(ப. உ.) நமः, புரஸ்தாத், அத(ய), ப்ருஷ்டதः, தே, நமः, அஸ்து, தே, ஸர்வதः, ஏவ, ஸர்வ | அனந்தவீர்யாமிதவிக்ரமः, த்வம், ஸர்வம், ஸமாப்நோஷி, ததः, அஸி, ஸர்வः ||

ஸர்வ	= பரிபூர்ணனானஶ்ரீ கிருஷ்ண !		முதலிய எல்லாதிசைகளிலும்
தே	= உனக்காக	நமः	= நமஸ்காரம்
புரஸ்தாத்	= முன்புறத்தில்	(அஸ்து)	= இருக்கட்டும்.
நமः	= நமஸ்காரம்	த்வம்	= நீ
அஸ்து	= இருக்கட்டும்.	அனந்த-	= அளவற்ற
அத(ய)	= பிறகு	வீர்ய-	= வீர்யமும்
ப்ருஷ்டதः	= பின்புறத்தில்	அமித-	= அளவற்ற
நமः	= நமஸ்காரம்	விக்ரமः	= பராக்ரமமுமுடையவன்.
(அஸ்து)	= இருக்கட்டும்.		
ஸர்வதः ஏவ	= வலம், இடம்	(யதः)	= எக் காரணத்தி

ஸர்வம் = ஸகலமான ப்ரபஞ்சத்தையும்
ஸமாப்னோஷி = வ்யாபித்துக் கொண்டிருக்கிறீயோ
ததः = அக்காரணத்தால்

ஸர்வः = ('ஸர்வம் க(வ)ல் விதம் ப்ரஹ்ம' 'புருஷ ஏவேதம் ஸர்வம்' முதலிய ச்ருதிகளிலிருக்கும்) ஸர்வ ஶப்த வாச்யனாய்
அஸி = இருக்கின்றாய்.

(மூ)—ஸகே(வே)தி மத்வா ப்ரஸப(ஹ)ம் யது(உ)க்தம்
ஹே க்ருஷ்ண ஹே யாதவ ஹே ஸகே(வே)தி ||
அஜானதா மஹிமானம் தவேத(உ)ம்
மயா ப்ரமாதா(ஆ)த் ப்ரணயேன வாபி || 41 ||
யச்சாபஹாஸார்த்த(�அ)மஸத்க்ருதோஸி
விஹாரஶய்யாஸன போ(ஹோ)ஜனேஷு ||
ஏகோத(அ)வாப்யச்யுத தத் ஸமக்ஷம்
தத் க்ஷாமயே த்வாமஹமப்ரமேயம் || 42 ||

(ப. உ.) ஸகா(வா), இதி, மத்வா, ப்ரஸப(ஹ)ம், யத், உக்தம், ஹே, க்ருஷ்ண, ஹே, யாத(உ)வ, ஹே, ஸகே(வே), இதி, | அஜானதா, மஹிமானம், தவ, இத(உ)ம், மயா, ப்ரமாதா(ஆ)த், ப்ரணயேன, வா, அபி || யத், ச, அபஹாஸார்த்த(அ)ம், அஸத்க்ருதः, அஸி, விஹார-ஶய்யா-ஸன-போ(ஹோ)ஜனேஷு, | ஏகः, அத(அ), வா, அபி, அச்யுத, தத், ஸமக்ஷம், தத், க்ஷாமயே, த்வாம், அஹம், அப்ரமேயம் ||

இத(உ)ம் = முன் சொல்லப்பட்ட
தவ = உன்னுடைய
மஹிமானம் = ஜகத்ஸ்ருஷ்டி கர்த்ருத்வம் முதலியமகிமைகளை
அஜானதா = அறியாத
மயா = என்னால்
ப்ரமாதா(ஆ)த் = அறியாமையிலாவது
ப்ரணயேன, வா = நேசத்தினாலாவது

ஸகா(வா) = ஸமான வயதுள்ளவன்
இதி = என்று
மத்வா = நினைத்துகொண்டு
ஹே, க்ருஷ்ண = ஓ கிருஷ்ண!
ஹே, யாத(உ)வ = ஓ யாதவனே!
ஹே, ஸகே(வே) = ஓ நேசனே!
இதி = என்று
ப்ரஸப(ஹ)ம் = அபமான

கரமாய்
யத் = யாது
உக்தம் = சொல்லப் பட்டதோ
அது(ம), வா = மற்றும்
அச்யுத = ஓ கிருஷ்ணா!
அபஹரா ஸார்த் த(ம்)ம் } = பரிஹாரத் திற்காக
ஏக: = ஏகாக்ர யற்றவொருவனே யாயிருக்கும்
(த்வம்) = நீ
விஹார- = விளையாட்டு
ஶய்யா- = படுக்கை
ஆஸன- = உட்காருவது
போ(ஹோ) } = சாப்பாடு
ஜனேஷு } = லியலைகளில்
யத், ச = எந்த

அஸத்க்ருத:, அஸி } = அபமானம் செய்யப் பட்டிருக்கின்றாயோ
தத் = அந்த அபமானங்களைக் குறித்து
அப்ரமேயம் = அப்ரமேயனனே (அளவற்ற)
த்வாம் = உன்னை
தத்ஸம க்ஷம், அபி } = அந்தஸ்னேஹினி தனனை உன்னெதிரிலேயே
அஹம் = நான்
க்ஷாமயே = மன்னிக்க வேணுமாய் வேண்டிக் கொள்ளுகிறேன்.

(மூ)—பிதாஸி லோகஸ்ய சராசரஸ்ய
த்வமஸ்ய பூஜ்யஶ்ச கு(ரு)ர்க(கு)ரீயான் ||
ந த்வத் ஸமோஸ்த்யப்(ஹீ)யதி(யி)க: குதோன்யோ
லோகத்ரயேப்யப்ரதிமப்ரபா(ஹா)வ || 43 ||

(ப. உ.) பிதா, அஸி, லோகஸ்ய, சராசரஸ்ய, த்வம், அஸ்ய, பூஜ்ய:, ச, கு(ரு)ரு:, க(கு)ரீயான் | ந, த்வத்-ஸம:, அஸ்தி, அப்(ஹீ)யதி(யி)க:, குத:, லோகத்ரயே, அபி, அப்ரதிமப்ரபா(ஹா)வ ||

அஸ்ய = இந்த
சராசரஸ்ய = ஸ்தாவர ஜங்க மாத்மகமான
லோகஸ்ய = உலகத்திற்கு
த்வம் = நீ
பிதா = தந்தையாகவும்
பூஜ்ய:, ச = பூஜ்யனாகவும்
க(கு)ரீயான் = உத்தமனான
கு(ரு)ரு: = ஆசார்யனாகவும்
அஸி = இருக்கிறாய்.
லோகத்ரயே, அபி, } = மூன்று லோகங்களிலும்
அப்ரதிம- = ஒப்பற்ற
ப்ரபா(ஹா)வ = ஐஸ்வர்யமுடைய ஸ்ரீகிருஷ்ண!
த்வத்- = உனக்கு
ஸம: = ஸமானனான
அன்ய: = மற்றொருவன்
ந, அஸ்தி = இல்லை.

அப்(ஹீ)யத்தி(யி)கः } = உன்னை மீறி உன்னை விட உத்தமனை வன்

குதः = எங்கிருக்கிறான் (இல்லவே இல்லை).

(மூ)—தஸ்மாத் ப்ரணம்ய ப்ரணிதா(யா)ய காயம்
ப்ரஸாத(ஏ)யே த்வாமஹமீஶமீட்யம் ||
பிதேவ புத்ரஸ்ய ஸகே(வே)வ ஸக்(வி)யுः
ப்ரியः ப்ரியாயார்ஹஸி தே(தே)வ ஸோடு(ஹ்)ம் || 44 ||

(ப. உ.) தஸ்மாத், ப்ரணம்ய, ப்ரணிதா(யா)ய, காயம், ப்ரஸாத(ஏ)யே, த்வாம், அஹம், ஈஶம், ஈட்(ட்)யம் | பிதா, இவ, புத்ரஸ்ய, ஸகா(வா), இவ, ஸக்(வி)யுः, ப்ரியः, ப்ரியாயாः, அர்ஹஸி, தேவ, ஸோடு(ஹ்)ம் ||

தஸ்மாத் = இவ்விதமான மஹாமகிமை யுடையவ னதலால்
காயம் = ஶரீரத்தை
ப்ரணி தா(யா)ய } = நன்றாகத் தாழ்த்திக்கொண்டு
ப்ரணம்ய = ஸாஷ்டாங்க மாய் நமஸ்கரித்து
ஈஶம் = ஸகல நியாமகனை
ஈட்யம் = துதிக்கப்படத் தகுந்தவனை
த்வாம் = உன்னை
அஹம் = நான்
ப்ரஸா தே(ஏ)யே } = ப்ரஸன்னனாக வேண்டு மென்று கோறுகிறேன்.
தே(ஏ)வ = விளையாட்டு முதலிய குணங்களுடன் கூடிய பரமாத்மாவே
பிதா = தந்தை
புத்ரஸ்ய = மகனின்
அபராத(ஶ்)ம், இவ } = குற்றத்தைப் போலவும்
ஸகா(வா) = ஸ்நேஹிதன்
ஸக்(வி)யுः = ஸ்நேஹமுடைய
அபராத(ஶ்)ம், இவ } = குற்றத்தைப் போலவும்
ப்ரியः = கணவன்
ப்ரியாயாः = மனைவியின்
அபரா(ஶ்)தம், இவ } = குற்றத்தைப் போலவும்
மம = என்னிட
அபரா த(ஶ்)ம் } = குற்றத்தை
ஸோடு (ஹ்)ம் } = பொறுத்துக் கொள்வதற்கு
அர்ஹஸி = தகுந்தவனாயிருக்கிறாய்.

(மூ)—அத்(தி)ருஷ்டபூர்வம் ஹ்ருஷிதோஸ்மி த்(தி)ருஷ்ட்வா
ப(ஹ)யேன ச ப்ரவ்யதி(யி)தம் மனோ மே ||
ததே(தே)வ மே தர்ஶய தே(தே)வ ரூபம்
ப்ரஸீத(தே) தே(தே)வேஶ ஜக(ஹ)ன்னிவாஸ || 45 ||

(ப. உ.) அத்(ஈ)ருஷ்டபூர்வம், ஹ்ருஷிதः, அஸ்மி, த்ருஷ்ட்வா, ப(ஹ)யேன, ச, ப்ரவ்யதி(யி)தம், மனः, மே | தத், ஏவ, மே, த(ஃ)ர்ஶய, தே(ஃ)வ, ரூபம், ப்ரஸீத(ஃ), தே(ஃ)வேஶ, ஜக(ஂ)ன்னிவாஸ ||

தே(ஃ)வ	= ஓ ஸ்ரீ கிருஷ்ண!
அத்ருஷ்ட பூர்வம்	= முன்னெப்பொழுதும் கண்டிராத
(தவ)	= உன்னுடைய
ரூபம்	= விஸ்வ ரூபத்தை
த்(ஈ)ருஷ்ட்வா	= கண்டு
ஹ்ருஷிதः	= ஸந்துஷ்டனைய்
அஸ்மி	= இருக்கிறேன்.
ச	= மற்றும்
மே	= என்னுடைய
மனः	= மனது
ப(ஹ)யேன	= பயத்தால்
ப்ரவ்யதி(யி)தம்	= வ்யாகுலத்தை யடைந்திருக்கிறது.
(அத:)	= ஆகையால்
தே(ஃ)வேஶ	= தேவதேவருக்கு ஸ்ரேஷ்டனை
தே(ஃ)வ	= க்ரீடாதிகுணயுக்தனை
ஜக(ஂ)ன்னிவாஸ	= ஜகத்துக்கு ஆஸ்ரயனை கிருஷ்ண!
தத்	= அந்த
ரூபம், ஏவ	= முன்னிருந்த ரூபத்தையே
மே	= எனக்கு
த(ஃ)ர்ஶய	= காட்டுக.
ப்ரஸீத(ஃ)	= ப்ரஸன்னமாகுக.

(மூ)—கிரீடினம் க(ஂ)தி(ஃ)னம் சக்ரஹஸ்த-
மிச்சா(ஆ)மி த்வாம் த்(ஈ)ரஷ்டுமஹம் ததை(யே)வ ||
தேனைவ ரூபேண சதுர்பு(ஊ)ஜேன ||
ஸஹஸ்ர பா(வா)ஹோ ப(ஹ)வ விஸ்வமூர்தே ||46||

(ப. உ.) கிரீடினம், க(ஂ)தி(ஃ)னம், சக்ரஹஸ்தம், இச்சா(ஆ)மி, த்வாம், த்(ஈ)ரஷ்டும், அஹம், ததா(யா), ஏவ | தேன, ஏவ, ரூபேண, சதுர்பு(ஊ)ஜேன, ஸஹஸ்ரபா(வா)ஹோ, ப(ஹ)வ, விஸ்வமூர்தே ||

அஹம்	= நான்
ததா(யா), ஏவ	= உன்னுடைய விஸ்வரூபத்தை எவ்வாறு கண்டேனோ அவ்வாறே
கிரீடினம்	= கிரீடத்தை தரித்ததாயும்
க(ஂ)தி(ஃ)னம்	= கதா யுதத்தை தரித்ததாயும்
சக்ரஹஸ்தம்	= சக்ராயுதத்தை தாங்கு கூடிய கைகளையுடையதாயுமிருக்கும்
த்வாம்	= உன்னை
த்(ஈ)ரஷ்டும்	= காண்பதற்கு
இச்சா(ஆ)மி	= ஆசைப்படுகிறேன்.
விஸ்வமூர்தே	= ஜகத்வ்யாப்தனை

ஸஹஸ்ர-	= ஆயிரக்கணக்கான
பா(ஹா)ஹோ	= பாஹுக்களையுடைய கிருஷ்ணா!
சதுர்பு(ஹு)ஜேன	= நான்கு புஜங்களையுடைய
தேன ரூபேண ஏவ	= அந்த முன்னிருந்த ரூபத்திலேயே
(யுக்த:) ப(ஹு)வ	= கூடியவனாகுக.

ஸ்ரீ பகவானுவாச—

(மூ)—மயா ப்ரஸன்னேன தவார்ஜுனேத(உ)ம்
ரூபம் பரம் த(உ)ர்ஸிதமாத்மயோகா(ஆ)த் ||
தேஜோமயம் விஸ்வமனந்த-மாத்(தீ)யம்
யன் மே த்வத(உ)ன்யேன ந த்(தீ)ருஷ்டபூர்வம் || 47 ||

(ப. உ.) மயா, ப்ரஸன்னேன, தவ, அர்ஜுன, இத(உ)ம், ரூபம், பரம், த(உ)ர்ஸிதம், ஆத்மயோகா(ஆ)த்| தேஜோமயம், விஸ்வம், அனந்தம், ஆத்(தீ)யம், யத், மே, த்வத(உ)ன்யேன, ந, த்(தீ)ருஷ்டபூர்வம் ||

ஸ்ரீ பகவான்	= ஸ்ரீ கிருஷ்ணன்
உவாச	= சொல்லுகிறான்
அர்ஜுன	= அர்ஜுன!
ப்ரஸன்னேன	= ப்ரஸன்னனான
மயா	= என்னால்
ஆத்ம-யோகாத்	= ஸ்வரூப ஸாமர்த்யத்தினால்
தேஜோமயம்	= அதிகதேஜஸ் ஸ்வரூபமான
விஸ்வம்	= பூர்ணமான
அனந்தம்	= தேஸ காலங்களில் அபரிச்சின்னமான
ஆத்(தீ)யம்	= எல்லா வஸ்துக்களுக்கும் முதலாவதான
மே	= என்னுடைய
யத்	= எந்த
பரம்	= உத்தமமான
ரூபம்	= ரூபமானது
தவ	= உனக்கு
த(உ)ர்ஸிதம்	= காண்பிக்கப் பட்டதோ
இத(உ)ம்	= இத்தகைய ரூபம்
த்வத(உ)ன்யேன	= உன்னைவிட கீழானவேறெந்த புருஷனாலும்
த்(தீ)ருஷ்டபூர்வம்	= இதற்கு முன்னல் காணப்பட்டது
ந	= அல்ல.

(மூ)—ந வேத(உ) யஜ்ஞாத்(தீ)யயனைர் ந தா(ஆ)னை:
ந ச க்ரியாபி(ஹி)ர்ந தபோபி(ஹி)ருக்(தீ)ரை: ||
ஏவம் ரூப: ஸக்ய அஹம் ந்ருலோகே
த்(தீ)ரஷ்டும் த்வத(உ)ன்யேன குரு-ப்ரவீர || 48 ||

(ப. உ.) ந, வே'த(ஆ)யஜ்ஞாத்(யீ)யயனை:, ந, தா(ஆ)னை:, ந, ச, க்ரியாபி:(ஹி:), ந, தபோபி:(ஹி:), உக்(ரீ)ரை:। ஏவம்ரூப:, மய்ய:, அஹம், ந்ருலோகே, த்(ஈ)ரஷ்டும், த்வத(உ)ன்யேன, குருப்ரவீர ॥

குருப்ரவீர	= கௌரவர்களில் வீரனே அர்ஜுனனே !
ஏவம் ரூப:	= பூர்வத்தில் காண்பிக்கப் பட்ட விஸ்வ ரூபமுடைய
அஹம்	= நான்
ந்ருலோகே	= மனுஷ்ய லோகத்தில்
த்வத (உ)ன் யேன	= உன்னை விட வேறான புருஷனால்
வேத(உ)-	= வேத(உ)மும்
யஜ்ஞ-	= யஜ்ஞமும்
அத்(யீ)ய யனை:	= ஸாஸ்த்ராத்யயனம் இவைகளாலும்
த்(ஈ)ரஷ்டும்	= காண்பதற்கு
ந, மய்ய:	= ஸாத்யனல்ல.
தா(ஆ)னை:	= தானங்களினாலும்
ந	= காண்பதற்கு ஸாத்யனல்ல.
க்ரியாபி:(ஹி:)	= அக்னிஹோத்ரம் முதலிய கிரியைகளினாலும்
ந	= காண்பதற்கு ஸாத்யனல்ல.
உக்(ரீ)ரை:	= க்ரூரமான
தபோபி: (ஹி:), ச	= க்ருச்ராசாந்த்ராயணம் முதலிய தபஸ்ஸுகளாலும்
ந	= காண்பதற்கு ஸாத்யனல்ல.

(மூ)—மா தே வ்யதா(ஆ) மா ச விமூட(ஐ)பா(ஹா)வோ
த்(ஈ)ருஷ்ட்வா ரூபம்கோ(வோ)ரமீத்(ஈ)ருங் மமேத(உ)ம் ॥
வ்யபேதபீ:(ஹீ:) ப்ரீதமன: புனஸ்த்வம்
ததே(ஏ)வ மே ரூபமித(உ)ம் ப்ரபஸ்ய ॥ 49 ॥

(ப. உ.) மா, தே, வ்யதா(ஆ), மா, ச, விமூட(ஐ)பா(ஹா)வ:, த்(ஈ)ருஷ்ட்வா, ரூபம், கோ(வோ)ரம், ஈத்(ஈ)ருக், மம, இத(உ)ம் । வ்யபேதபீ:, ப்ரீதமன:, புன:, த்வம், தத், ஏவ, மே, ரூபம், இத(உ)ம், ப்ரபஸ்ய ॥

மம	= என்னுடைய
கோ (வோ)ரம்	= ஸம்ஹாரகமான
ஈத்(ஈ)ருக்	= அனந்தபாஹுக்கள் முதலியனவைகளையுடைய
ரூபம்	= ரூபத்தை
த்(ஈ)ருஷ்ட்வா	= கண்டு
தே	= உனக்கு
வ்யதா(ஆ)	= துக்கம்
மா (அஸ்து)	= உண்டாவேண்டாம்.
ச	= மற்றும்

விஷாட(ஜ) } = சித்த ப்ரமை
பா(ஜா)வ: } யும்
மா (அஸ்து) = உண்டாக வேண்டாம்.
வ்யபே } = பயமொழிந்த
தபீ:(ஹீ:) } வனுய்
ப்ரீதமன: } = ஸந்துஷ்ட
(ஸன்) } மனதுடைய வனுய்

புன: = மறுபடியும்
த்வம் = நீ
மே = என்னுடைய
தத், இத (ஏ)ம், ரூபம், ஏவ } = முன்கண்ட இந்த ரூபத்தையே
ப்ரபஸ்ய = நன்குபார்.

ஸஞ்ஜய உவாச :—

(மூ)—இத்யர்ஜுனம் வாஸுதே(தே)வ ஸ்ததோ(யோ)க்த்வா
ஸ்வகம் ரூபம் த(தி)ர்ஶயாமாஸ பூ(பூ)ய: ||
ஆஶ்வாஸயாமாஸ ச பீ(பீ)தமேனம்
பூ(பூ)த்வா புன: ஸௌம்யவபுர் மஹாத்மா || 50 ||

(ப. உ.) இதி, அர்ஜுனம், வாஸுதே(தே)வ:, ததா(யா), உக்த்வா, ஸ்வகம், ரூபம், த(தி)ர்ஶயாமாஸ, பூ(பூ)ய:, | ஆஶ்வாஸயாமாஸ, ச, பீ(பீ)தம், ஏனம், பூ(பூ)த்வா, புன:, ஸௌம்யவபு:, மஹாத்மா ||

ஸஞ்ஜய: = ஸஞ்ஜயன்
உவாச = சொல்லுகிறான்
இதி = முன் சொல்லிய வாறு
வாஸுதே } = ஸ்ரீ கிருஷ்ணன்
(தே)வ: }
அர்ஜுனம் = அர்ஜுனனைக் குறித்து
உக்த்வா = சொல்லி
பூ(பூ)ய: = மறுபடியும்
ஸ்வகம், ரூபம் = தன்னுடைய க்ருஷ்ண ரூபத்தை
த(தி)ர்ஶ யாமாஸ } = காண்பித்தான்.
ததா(யா) = மற்றும்
மஹாத்மா = மகாத்மாவாகிய ஸ்ரீ கிருஷ்ணன்
புன: = மறுபடியும்
ஸௌம்ய வபு:, பூ(பூ)த்வா } = ஸாந்தமான ரூபமுடையவனுய்
பீ(பீ)தம் = பயமடைந்திருக்கும்
ஏனம் = இந்த அர்ஜுனனை
ஆஶ்வாஸ யாமாஸ } = ஸமாதானப் படுத்தினான்.

அர்ஜுன உவாச :—

(மூ)—த்(தீ)ருஷ்ட்வேத(தி)ம் மானுஷம் ரூபம் தவ ஸௌம்யம் ஜனார்தன ||
இதா(தா)னீமஸ்மி ஸம்வ்ருத்த: ஸசேதா: ப்ரக்ருதிம் க(கா)த: || 51 ||

(ப. உ.) த்(ஜீ)ருஷ்ட்வா, இதம், மாநுஷம், ரூபம், தவ, ஸௌம்யம், ஜனர்த(ஹ)ன | இதா(ஹா)னீம், அஸ்மி, ஸம்வ்ருத்த:, ஸசேதா:, ப்ரக்ருதிம், க(ம)த: ||

அர்ஜுன:	= அர்ஜுனன்
உவாச	= சொல்லுகிறான்
ஜனர்த(ஹ)ன	= ஸ்ரீ கிருஷ்ண !
இத(ஹ)ம்	= இந்த
மாநுஷம்	= மானிட ஜன ப் போலிருக்கும்
ஸௌம்யம்	= ஸௌம்ய மான (பார்க்கக் கூடிய)
தவ	= உன்னுடைய
ரூபம்	= ரூபத்தை
த்(ஜீ)ருஷ்ட்வா	= பார்த்து
இதா(ஹா)னீம்	= இப்பொழுது
ஸசேதா:	= ப்ரஸன்ன மான மனது டையவனாய்
ஸம்வ்ருத்த:, அஸ்மி	= ஆகியிருக்கிறேன்.
ப்ரக்ருதிம்	= பூர்வஸ்வ பாவத்தை
க(ம)த:	= அடைந்தேன்.

ஸ்ரீ பகவானுவாச :—

(மூ)—ஸுது(ஹு)ர்த(ஹ)ர்ஶமித(ஹ)ம் ரூபம் த்(ஜீ)ருஷ்டவானஸி யன் மம ||

தே(ஹே)வா அப்யஸ்ய ரூபஸ்ய நித்யம் த(ஹ)ர்ஶன-காங்க்ஷிண: ||52||

(ப. உ.) ஸுது(ஹு)ர்த(ஹ)ர்ஶம், இத(ஹ)ம், ரூபம், த்(ஜீ)ருஷ்டவான், அஸி, யத், மம | தே(ஹே)வா:, அபி, அஸ்ய, ரூபஸ்ய, நித்யம், த(ஹ)ர்ஶன-காங்க்ஷிண: ||

ஸ்ரீ பகவான்	= ஸ்ரீ கிருஷ்ணன்
உவாச	= சொல்லுகிறான்
மம	= என்னுடைய
யத்	= எந்த
ரூபம்	= ரூபத்தை
த்(ஜீ)ருஷ்டவான், அஸி	= கண்டாயோ
அஸ்ய	= இந்த
ரூபஸ்ய	= ரூபத்தின்
நித்யம்	= எப்பொழுதும்
த(ஹ)ர்ஶன-	= தர்ஶனத்தை
காங்க்ஷிண:	= அபேக்ஷிக்கும்
யே	= எந்த
தே(ஹே)வா:	= தேவர்களோ
தே, அபி	= அந்த தேவர்களும்
(யத்)	= எந்த ரூபத்தை
த்(ஜீ)ருஷ்டவந்த:)	= கண்டிருக்கிறார்களோ
(தத்) இத(ஹ)ம்	= அவ்விந்த
ரூபம்	= ரூபமானது
ஸுது(ஹு)ர்த(ஹ)ர்ஶம்	= காண்பதற்கு மிகவும் அரிய மானது.

அவதரணிகை :—மிகவும் துர்லபமான தர்ஶனத்தை உனக்கு நான் கொடுத்தேனென்று சொல்லுகிறான் :—

(மூ)—நாஹம் வேதை(ஏஷை)ர்ந தபஸா ந தா(தா)னேன ந சேஜ்யயா ||
ஶக்ய ஏவம் விதோ(தோ) த்(த்)ரஷ்டும் த்(த்)ருஷ்டவானஸி
மாம் யதா(தா) || 53 ||

(ப. உ.) ந, அஹம், வேதை:(ஏஷை:), ந, தபஸா, ந, தா(தா)னேன, ந, ச, இஜ்யயா | ஶக்ய:, ஏவம்வித:(த:), த்(த்)ரஷ்டும், த்(த்)ருஷ்டவான், அஸி, மாம், யதா(தா) ||

யதா(தா)	= எவ்விதமாக	தபஸா	= தவத்திறலும்
மாம்	= என்னை	[த்(த்)ரஷ்டும்]	= காண்பதற்கு
த்(த்)ருஷ்டவான் அஸி	= கண்டிருக்கிறாயோ	ந, (ஶக்ய:)	= ஸாத்யனல்ல.
ஏவம் வித:(த:)	= இப்படிப்பட்ட விஶ்வரூபமுடைய	தா(தா)னேன	= தானத்திறலும்
		ந, (ஶக்ய:)	= ஸாத்யனல்ல.
அஹம்	= நான்	ச	= மற்றும்
வேதை: (ஏஷை:)	= வேதாத்யயனங்களினால்	இஜ்யயா	= பூஜையினாலும்
த்(த்)ரஷ்டும்	= காண்பதற்கு	[த்(த்)ரஷ்டும்]	= காணுவதற்கு
ந, ஶக்ய:	= ஸாத்யனல்ல.	ந, (ஶக்ய:)	= ஸாத்யனல்ல.

அவதரணிகை:—எந்த உபாயத்தினால் உன்னைப்பார்க்க முடியுமென்பதில் அளிக்கிறான் :—

(மூ)—ப(ஜ)க்த்யா த்வனன்யயா ஶக்ய அஹமேவம் விதோ(தோ)ர்ஜுன ||
ஜ்ஞாதும் த்(த்)ரஷ்டும் ச தத்வேன ப்ரவேஷ்டும் ச பரம்தப
|| 54 ||

(ப. உ.) ப(ஜ)க்த்யா, து, அனன்யயா, ஶக்ய:, அஹம், ஏவம்வித:(த:), அர்ஜுன | ஜ்ஞாதும், த்(த்)ரஷ்டும், ச, தத்வேன, ப்ரவேஷ்டும், ச, பரம்தப ||

பரம்தப	= ஶத்ருதாபகனே	ஏவம் வித:(த:)	= இப்படிப்பட்ட
அர்ஜுன	= அர்ஜுன !	அஹம்	= நான்

தத்வேன	= நிஜமாக (எப்படி இருப்பேனே அப்படியே)		தற்கும் (ஸாயுஜ்ய மோக்ஷத்தையடைவதற்கும்)
ஜ்ஞாதும்	= தெரிந்துகொள்வதற்கும்	அனன்யயா	= ஸாதாரணமாய் எல்லாருக்கும் கிடைக்காத
த்(ஜ்)ரஷ்டும், ச	= காண்பதற்கும்	து	= விசேஷமான
ப்ரவேஷ்டும், ச	= என்னிடத்தில் ப்ரவேசிப்ப	ப(ஹ)க்த்யா	= பக்தியினால்
		ஶக்ய:	= ஸாத்தியன்.

(மூ)—மத்கர்மக்ருன்மத்பரமோ மத்(ஜ்)ப(ஹ)க்த: ஸங்க(ஶ)வர்ஜித: ||
நிர்வைர: ஸர்வபூ(ஹ்ம)தேஷு ய: ஸமாமேதி பாண்டவ
|| 55 ||

(ப. உ.) மத்கர்மக்ருத், மத்பரம:, மத்(ஜ்)ப(ஹ)க்த:, ஸங்க(ஶ)-வர்ஜித:| நிர்வைர:, ஸர்வபூ(ஹ்ம)தேஷு, ய:, ஸ:, மாம், ஏதி, பாண்டவ ||

பாண்டவ	= அர்ஜுன!		வேண
ய:	= எவன்	ஸங்க(ஶ)-வர்ஜித:	= தான் செய்யும் கர்மங்களுக்கு பலாபேக்ஷையத்துறந்த வேண
மத்-	= என்னிடப்ரீதிக்காக	ஸர்வ-	= ஸகல
கர்ம-	= விஹிதகர்மங்களை	பூ(ஹ்ம)தேஷு	= ப்ராணிகளிடத்திலும்
க்ருத்	= செய்பவனே	நிர்வைர:	= ஶத்ருத்வமில்லாதவனே
மத்பரம:	= நானே ஸர்வோத்தமனென்று தெரிந்து கொண்டவனே	ஸ:	= அவன்
மத்(ஜ்)ப(ஹ)க்த:	= என்னிடத்தில் பக்தியுடைய	மாம்	= என்னை
		ஏதி	= அடைகிறான்.

ஓம் தத் ஸத்

ஶ்ரீமத் பகவத் கீதையில் ஶ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாதத்தில்
விஶ்வரூபதர்ஶன யோகமென்னும்

பதினென்றுவது அத்தியாயம் முற்றிற்று.

பன்னிரண்டாவது அத்தியாயம்.

அர்ஜுன உவாச—

(மூ)—ஏவம் ஸதத யுக்தா யே ப(ஹ)க்தாஸ்த்வாம் பர்யுபாஸதே ||
யே சாப்யக்ஷரமவ்யக்தம் தேஷாம் கே யோக(�அ)வித்தமா: || 1 ||

(ப. உ.) ஏவம், ஸததயுக்தா:, யே, பக்தா:, த்வாம், பர்யுபாஸதே |
யே, ச, அபி, அக்ஷரம், அவ்யக்தம், தேஷாம், கே, யோக(அ)வித்தமா: ||

அர்ஜுன: = அர்ஜுனன்
உவாச = வினவுகிறான்.
யே = எந்த
ப(ஹ)க்தா: = பக்தர்கள்
ஸதத- = எல்லா காலத்திலும்
யுக்தா: (ஸந்த:) = த்யானமென்னும் கர்மயோகத்துடன் கூடியவராய்
ஏவம் = மூன்று நிலைகண்ட மற்றும் கேட்ட
த்வாம் = உன்னை (ஸ்ரீ கிருஷ்ணனை)
ஏவம் = மூன்று சொல்லிய வாறு பக்த்யாதி களுடன்
பர்யுபாஸதே = உபாஸிக்கிறார் களோ
ச = மற்றும்
யே, அபி = யார்
அக்ஷரம் = அக்ஷர ஸப்த வாச்யளான
அவ்யக்தம் = ப்ரக்ருதித்வாபிமானியான ஸ்ரீ மஹாலக்ஷ்மியை
பர்யுபாஸதே = உபாஸிக்கிறார் களோ
தேஷாம் (மத்யே) = அவ்விரு வகை மனிதர்களில்
கே = யார்
யோக(அ) வித்தமா: = மேலே கூறாபாயத்தை அறிந்தவர்களில் சிறந்தவர்கள் ?

ஸ்ரீ பகவானுவாச—

(மூ)—மய்யாவேஸ்ய மனோ யே மாம் நித்யயுக்தா உபாஸதே ||
ஸ்ரத்தயா பரயோபேதாஸ்தே மே யுக்ததமா மதா: || 2 ||

(ப. உ.) மயி, ஆவேஸ்ய, மன:, யே, மாம், நித்யயுக்தா:, உபாஸதே |
ஸ்ரத்தயா, பரயா, உபேதா:, தே, மே, யுக்ததமா:, மதா: ||

ஸ்ரீ பகவான் = ஸ்ரீ கிருஷ்ணன்
உவாச = சொல்லுகிறான்.
யே = யார்
மயி = என்னிடத்தில் (ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில்)

மன: = மனதை
ஆவேஶ்ய = வைத்து
நித்ய யுக்தா: (ஸந்த:) = எப்பொழுதும் தியான ரூபமான யோகத்துடன் கூடின வராய்
மாம் = என்னை
பரயா = மேலான
ஶ்ரத்தயா = ஆஸ்திக்யபுத்தியுடன்
உபேதா: (ஸந்த:) = கூடினவராய்
உபாஸதே = உபாஸிக்கிறார்கள்
தே = அவர்கள்
யுக்ததமா: இதி = மேன்மேலும் யோகத்தை அறிந்தவர்களில் மேலானவர்களென்று
மே = எனக்கு
மதா: = ஸம்மதரானவர்கள்.

(மூ)—யே த்வக்ஷரமனிர்தேஶ்யமவ்யக்தம் பர்யுபாஸதே |
ஸர்வத்ரக(அ)மசிந்த்யம் ச கூடஸ்த(ய)மசலம் த்(ரீ)ருவம் ॥ 3 ॥
ஸம்நியம்யேந்த்ரியக்(ராம)ராமம் ஸர்வத்ர ஸமபுத்தய: |
தே ப்ராப்னுவந்தி மாமேவ ஸர்வபூ(ஹி)தஹிதே ரதா: ॥ 4 ॥

(ப. உ.) யே, து, அக்ஷரம், அனிர்தேஶ்யம், அவ்யக்தம், பர்யுபாஸதே | ஸர்வத்ரக(அ)ம், அசிந்த்யம், ச, கூடஸ்த(ய)ம், அசலம், த்(ரீ)ருவம் || ஸம்நியம்ய, இந்த்ரியக்(ராம)ராமம், ஸர்வத்ர, ஸமபுத்தய: | தே, ப்ராப்னுவந்தி, மாம், ஏவ, ஸர்வ-பூ(ஹி)த-ஹிதே, ரதா: ||

யே, து = யாராயினும்
அக்ஷரம் = அக்ஷர ஶப்தவாச்யளான, அவிநாஶியான
அனிர்தேஶ்யம் = ஸ்தூலத்வமுடையவளாதலால் குறிக்கத்தகாதவளான
ச = மற்றும்
அசிந்த்யம் = வெகு குணங்களுடையவளாதலால் சிந்திக்கத்தகாதவளான
கூடஸ்த(ய)ம் = ஆகாயத்தில் நியாமகளாயிருக்கும்
அசலம் = தன்னிடத்தை விட்டு எப்பொழுதும் அசையாமலிருக்கும்
ஸர்வத்ரக(அ)ம் = எங்கும் நிறைந்தவளான
த்(ரீ)ருவம் = விகாரமற்றவளான
அவ்யக்தம் = அவ்யக்ததத்வத்திற்கு (ஜடப்ரக்ருதிக்கு) அபிமானியான மஹாலக்ஷ்மியை
இந்த்ரிய- = சக்ஷுராதி இந்த்ரியங்களின்

க்(ஸ்ரீ)ராமம் } = கூட்டத்தை

ஸம்நியம்ய = நன்றாய் அடக்கிக்கொண்டு

ஸர்வத்ர = 'வித்யா வினய ஸம்பன்னே ப்ராஹ்மணே கவி.....' என்கிற ஸ்லோகத்தில் சொல்லியவராறு ப்ராஹ்மணரிடத்தில்

ஸமபுத்தயः (ஸந்தः) } = நிர்தோஷமான ப்ரஹ்மமிருக்கிறதென்கிற

புத்தி புள்ளவராய்

ஸர்வ- = ஸகலமான

பூ(ஹ)த- = பிராணிகளுக்கு

ஹிதே = ஹிதத்தைச் செய்வதில்

ரதாः(ஸந்தः) = விருப்பமுள்ளவர்களாய்

பர்யுபாஸதே = அதிகமாய் உபாஸிக்கிறார்களோ

தே = அவர்கள்

மாம், ஏவ = என்னையே

ப்ராப்னுவந்தி } = (கடைதியில்) அடைகிறார்கள்.

(மூ)—க்லேஶோ(அ)திதரஸ்தேஷாம வ்யக்தாஸக்த சேதஸாம் ||
அவ்யக்தா ஹி க(அ)திர் துःக்கம் தே(தே)ஹவத்பி(ஹி)ரவாப்யதே || 5 ||

(ப. உ.) க்லேஶः, அதி(யி)கதரः, தேஷாம், அவ்யக்தா-ஸக்தசேதஸாம் | அவ்யக்தா, ஹி, க(அ)திः, துःக்கம், தே(தே)ஹவத்பிः, அவாப்யதே ||

அவ்யக்த- = ஸ்ரீ மஹாலக்ஷ்மியிடத்தில்

ஆஸக்த- = ஆஸக்தமான

சேதஸாம் = மனதுள்ள (லக்ஷ்மீ உபாஸகர்களான)

தேஷாம் = அவர்களுக்கு

அதி(யி)கதரः } = மிகவும் அதிகமான

க்லேஶः = கஷ்டம்

[ப(அ)வதி] = உண்டாகிறது.

அவ்யக்தா = அவ்யக்தோபாஸனையிலுண்டாகும்

க(அ)திः = என்ன அடையும்வழியான து

தே(தே)ஹவத்பிः } = ப்ராணிகளால்

துःக்கம் (யதா[யா] ப[அ]வதி ததா[யா]) } = துःக்கமெப்படி ஆகவேண்டுமோ அப்படி (கஷ்டத்தினால்)

அவாப்யதே = அடையப்படுகிறது.

ஹி = ப்ரமாணஸித்தமானது.

(மூ)—யே து ஸர்வாணி கர்மாணி மயி ஸம்ன்யஸ்ய மத்பராः ||
அனன்யேனைவ யோகே(தே)ன மாம் த்(யி)யாயந்த உபாஸதே || 6 ||

தேஷாமஹம் ஸமுத்த(ய்)ர்தா ம்ருத்யுஸம்ஸார ஸாக(ஂ)ராத் ||
ப(ஹ)வாமி ந சிராத் பார்த்த மய்யாவேஶித சேதஸாம் || 7 ||

(ப. உ.) யே, து, ஸர்வாணி, கர்மாணி, மயி, ஸம்ன்யஸ்ய, மத்பராः |
அனன்யேன, ஏவ, யோகே(ஂ)ன, மாம், த்யாயந்தः, உபாஸதே ||
தேஷாம், அஹம், ஸமுத்த(ய்)ர்தா, ம்ருத்யுஸம்ஸாரஸாக(ஂ)ராத் | ப(ஹ)
வாமி, ந, சிராத், பார்த்த, மயி, ஆவேஶித-சேதஸாம் ||

பார்த்த = அர்ஜுனா!
யே, து = எவரோ யாகிலும்
ஸர்வாணி = ஸகலமான
கர்மாணி = கர்மங்களை
மயி = என்னிடத்தில்
ஸம்ன்யஸ்ய = அற்பித்து (நான் செய்யுப் எல்லா கர்மங்களும் பரமாத்மாவின் பூஜாரூபமென்று அறிந்து கொண்டு
மத்பராः (ஸந்தः) = நானே (ஸ்ரீக்ருஷ்ணனே) ஸர்வோத்தமமென்று அறிந்துகொண்டவராய்
அனன்யேன = அவ்யபசார விஷயகமாகாமல் என் விஷயகமாத்ரமான
யோகே (ஂ)ன, ஏவ = த்யானயோகத்திலேயே (லக்ஷ்மீ உபாஸனையிலல்)
மாம் = என்னை
த்யாயந்தः (ஸந்தः) = த்யானம் செய்பவர்களாய்
உபாஸதே = உபாஸனை செய்கிறார்களோ
மயி = என்னிடத்தில்
ஆவேஶித- = வைக்கப்பட்ட
சேதஸாம் = மனதுள்ள
தேஷாம் = அந்த ஜனங்களின்
ம்ருத்யு- = ம்ருத்யுரூபமான
ஸம்ஸார- = ஸம்ஸாரமென்னும்
ஸாக(ஂ)ராத் = கடலினின்றும்
ந, சிராத் = (அவர்களை) சீக்கிரத்தில்
ஸமுத்தர்தா = தாண்டுவிப்பவனாய் (மோக்ஷத்தைக் கொடுப்பவனாய்)
அஹம் = நான்
ப(ஹ)வாமி = ஆகிறேன்.

(க. உ.) 'ஸ்ரீயம் வஸாஸு அம்ருதத்வமாயன்' இதுமுதலிய ச்ருதி ஸ்ம்ருதிகளில் மஹாலக்ஷ்மி உபாஸனையினால் மோக்ஷமுண்டாகிறதென்று சொல்லுகிறது. நீயோ என்னிட(ஸ்ரீகிருஷ்ணனின்) உபாஸனையினால் மோக்ஷமுண்டாகிறதென்று சொல்லு

கிறாய். மோக்ஷத்திற்காக உன்னிட உபாஸனை செய்பவர்கள் மோக்ஷ மார்க்கத்தை யறிந்தவர்களில் மேலானவர்களா? அல்லது மஹாலக்ஷ்மியை உபாஸிப்பவர்கள் மேலானவர்களா? என்கிற அர்ஜுனனின் கேள்விக்கு ஸ்ரீ கிருஷ்ணன் பதிலளிக்கிறான். "அர்ஜுன! நானே மோக்ஷத்தைத் தருபவன், என்னைவிட்டு வேறு யாருக்கும் மோக்ஷத்தைத் தரும் ஸாமர்த்யமில்லை என்று ப்ரமாணங்களினால் ப்ரஸித்தமாயிருக்கிறது. மஹாலக்ஷ்மியை உபாஸித்து, அம்மஹா லக்ஷ்மியின் அன்பை ஸம்பாதித்துக் கொண்டு அவளிட உதவியையடைந்து, பிறகு சிலகாலம் என்னிட உபாஸனை செய்து, அபரோக்ஷ ஞானத்தைச் சம்பாதித்துக்கொண்டு என்னிட ப்ரீதியினாலேயே மோக்ஷத்தையடைய வேண்டியது. இவ்வாறு நம்மிருவரிட உபாஸனை செய்தே ஆக வேண்டும். என்னிருவரிட உபாஸனையினாலேயே மோக்ஷமுண்டாகிறது. ஆகையினால் மஹாலக்ஷ்மியின் உபாஸனை மூலமாய் மோக்ஷத்தையடையும் மார்க்கம் மிகவும் கஷ்டமானது.

மற்றும், என்னைக் கொஞ்சமாக உபாஸித்தபோதிலும் நான் ப்ரீதனாகிறேன். மஹாலக்ஷ்மியையோ 'பர்யுபாஸதே' என்று மூன்றுவது ஸ்லோகத்தில் சொல்லியுள்ளவாறு அதிகமாகவும் ஸரியாகவும் உபாஸனை செய்தால்தான் அவள் ப்ரீதியடைகிறாள். அவ்வழியில் இது ஓர் துன்பமுமுண்டு. தவிர, நான் சீக்ரத்தில் ப்ரஸன்னனாய் மோக்ஷத்தைத் தருகிறேன். லக்ஷ்மீ உபாஸகர்கள் சிலகாலம் லக்ஷ்மீ உபாஸனை செய்து பிறகு என்னை உபாஸிப்பதினால் மோக்ஷமடைவதற்கு காலதாமதமாகிறது மற்றொரு துன்பம். தவிர, மஹாலக்ஷ்மியை உபாஸிப்பவர்கள் அதிகமாய் இந்திரிய நிக்ரஹமுடையவராக வேண்டும். என்னையுபாஸிப்பவர்களுக்கு அதிக இந்த்ரிய நிக்ரஹம் வேண்டியதில்லை. இவ்வாறு லக்ஷ்மி உபாஸனையில் அதிக கஷ்டங்களிருப்பதினாலும், என்னை உபாஸிப்பதில் வெகுஸௌகர்யங்களிருப்பதினாலும் மோக்ஷத்திற்காக என்னை நேராக உபாஸிப்பவர்களே உபாயங்களை யறிந்தவர்களில் மேலானவர்களென்று என் கருத்து."

விசாரம் :—

(1) ஸகல வேதங்களும், ஸ்மிருதிகளும், கீதையும் ஸர்வஜ்ஞத்வம் முதலிய அனந்த கல்யாண குணங்களுடன் கூடியதான பரப்ரஹ்மத்தையே சொல்லுகின்றனவேயொழிய ஸகல தர்ம ரஹிதமான (நிர்குண) ப்ரஹ்மத்தைச் சொல்லுவதில்லை.

(2) அத்வைத மதத்தின்படிக்கு ஸர்வஜ்ஞத்வாதி ஸகல தர்மாஹிதமான ப்ரஹ்மம் இதர ப்ரமாணங்களினால் அறியப்படுவ தல்ல (ஸ்வப்ரகாசம்) என்று அவனால் ஒப்புக்கொள்ளப்பட் டிருப்பதினால் அந்த நிர்குண ப்ரஹ்மம் முயற்கொம்பைப்போல் அப்ரமாணிகமானது. ஆகையால் அத்தகைய தர்மங்களையற்ற ப்ரஹ்மமே இல்லை. அந்த நிற்குண ப்ரஹ்மத்தின் ஞானமுண்டாவ தற்கே வழியில்லாதிருக்க அதின் உபாஸனை செய்வது மிகவும் பொருத்தமற்றதாகையால் சங்கராசார்யர் இவ்வேழு ஸ்லோகங்க ளுக்கு "ஸகுணனை உன்னிட (ஸ்ரீ க்ருஷ்ணனிட) உபாஸனை செய்பவர்கள் யோகத்தை யறிந்தவர்களில் மேலானவர்களோ, நிற்குண ப்ரஹ்மத்தை உபாஸிப்பவர்கள் மேலானவர்களோ" என்று அர்ஜுனனிட கேள்வி என்றுவைத்துக்கொண்டு "ஸகுண ப்ரஹ்மோபாஸனை செய்பவர்கள் மேலானவர்கள். நிற்குண ப்ரஹ்ம மோபாஸனை செய்பவர்கள் என்னை (ஸ்ரீ கிருஷ்ணனை) அடை கிறார்கள்" என்று பதிலளித்திருப்பதாய் அர்த்தம் செய்திருப்பது மிகவும் அயுக்தமானது.

அவதாரணிகை :—என்னிட (ஸ்ரீ க்ருஷ்ணனிட) உபாஸனையே மேலானதாகையால் அதையே செய்க. அதற்குத் திறமை இல்லை யாயின் என்னிடத்தில் மனதை நிருத்து. மனதை நிருத்தத்திறமை யில்லையாயின் அதற்காக பயிற்சி செய்க. இது முதலிய உபா யங்களைச் செய்யின் க்ரமமாக மோக்ஷமடைவாயென்று சொல்லு கிறான் :—

(மூ)—மய்யேவ மன ஆத(ய)த்ஸ்வ மயி பு(பு)த்திம் நிவேஶய ||
நிவஸிஷ்யஸி மய்யேவ அத ஊர்த்வம் ந ஸம்ஶய: || 8 ||

(ப. உ.) மயி, ஏவ, மன:, ஆத(ய)த்ஸ்வ, மயி, பு(பு)த்திம், நிவேஶய' நிவஸிஷ்யஸி, மயி, ஏவ, அத:, ஊர்த்வம், ந, ஸம்ஶய: ||

மயி, ஏவ = என்னிடத்திலே
மன: = மனதை
ஆத(ய)ஸ்வ = வை (என்னை உபாஸிப்பாயாக)
[ததோ(அ)லாபே(லே)] = அப்படி உபாஸிக்க முடியாவிடின்
மயி = என்னிடத்தில்
பு(பூ)த்திம் = புத்தியை
நிவேஸய = வை. (என்விஷயகமானஞானத்தை ஸம்பாதித்துக்கொள்.)
அத, ஊர்த்வம் = ஞானத்தை யடைந்தபிறகு
மயி, ஏவ = என்னிடத்திலே
நிவஸிஷ்யஸி = வாஸம் செய்வாயாக (மோக்ஷமடைவாய்)
அத்ர = இவ்விஷயத்தில்
ந, ஸம்ஸய: = ஸந்தேகமில்லை.

(மூ)—அத(ய) சித்தம் ஸமாதா(யா)தும் ந ஶக்நோஷி மயி ஸ்தி(யி)ரம் ||
அப்(ஹீ)யாஸயோகே(கே)ன ததோ மாமிச்சா(ஆ)ப்தும் த(ய)னஞ்ஜய || 9 ||

(ப. உ.) அத(ய), சித்தம், ஸமாதா(யா)தும், ந, ஶக்நோஷி, மயி, ஸ்தி(யி)ரம் | அப்(ஹீ)யாஸயோகேன, தத:, மாம், இச்ச(ஆ), ஆப்தும், தனஞ்ஜய ||

தனஞ்ஜய = ஓ அர்ஜுன!
சித்தம் = மனதை
மயி = என்னிடத்தில்
ஸ்தி(யி)ரம் [யதா(யா)ஸ்யாத் ததா(யா)] = எப்படி உறுதியாகுமோ அப்படி
ஸமாதாதும் = நிறுத்துவதற்கு
அத(ய), ந, ஶக்நோஷி = திறமையற்றவனாயின்
தத: = என்னிடத்தில் மனதை நிறுத்துவதற்குத் திறமையற்றவனால்
அப்(ஹீ)யாஸயோகே(கே)ன = பழக்கமென்னும் உபாயத்தினால்
மாம் = என்னை
ஆப்தும் = தெரிந்து கொள்ளுவதற்கு
இச்ச(ஆ) = விரும்பு.

(மூ)—அப்(ஹீ)யாஸேப்யஸமர்த்தோஸி மத்கர்மபரமோ ப(ஆ)வ ||
மதர்த்தமபி கர்மாணி குர்வன் ஸித்திமவாப்ஸ்யஸி || 10 ||

(ப. உ.) அப்(ஹீ)யாஸே, அபி, அஸமர்த்த:, அஸி, மத்கர்மபரம:, ப(ஆ)வ | மத(ஈ)ர்த்தம், அபி, கர்மாணி, குர்வன், ஸித்திம், அவாப்ஸ்யஸி ||

அப்(ஜீ)யாஸை, அபி } = பழக்கம் செய்வதிலும்
அஸமர்த்த: = திறமையற்றவனுய்
அஸி, சேத் = இருப்பாயாகில்
மத்-கர்மபரம: } = என்னுத்தேச ஸ்யகமான கர்மமே உத்தமமென்கிற அறிவுடையவனுய், என்னுத்தேசஸ்யகமாகவே (மூ)—அதை(யை)தத(ஊ)ப்யஸக்தோஸி கர்தும் மத்(ஜீ)யோக(ஹ) மாஸ்ரித: ||

முக்யமாய் கர்மங்களைச் செய்பவனுய்
ப(ஹ)வ = ஆகுக.
மத(ஊ)ர்த்தம், அபி } = என்னுத்தேசஸ்யகமாயாயினும்
கர்மாணி = கர்மங்களை
குர்வன் (ஸன்) } = செய்பவனுய்
ஸித்திம் = ஞானத்தை
அவாப்ஸ்யஸி } = அடைவாய்.

ஸர்வ-கர்ம-ப(ஹ)ல-த்யாக(ஹ)ம் தத: குரு யதாத்மவான் || 11 ||

(ப. உ.) அத(ய), ஏதத், அபி, அஸக்த:, அஸி, கர்தும், மத்(ஜீ)யோக(ஹ)ம், ஆஸ்ரித: | ஸர்வ-கர்ம-ப(ஹ)ல-த்யாக(ஹ)ம், தத:, குரு, யதாத்மவான் ||

அத(ய) = அல்லது
ஏதத் = என்னிடம் (பரமாத்மாவின்) உத்தேசஸ்யகமாய் ஸகல ஜபஹோமயஜ்ஞாதி கர்மங்களை
கர்தும், அபி } = செய்வதற்கும்
அஸக்த: = திறமையற்றவனுய்
அஸி, சேத் = இருப்பாயாயின்
மத்யோகம் = ஸகல கர்மங்களையும் என்னிடத்தில் நன்முய் ஒப்புவிப்பதென்னும்
பூஜாரூபமான உபாயத்தை
ஆஸ்ரித: = ஆஸ்ரயித்தவனுய்
ப(ஹ)வ = ஆகுக.
தத: = ஸகல கர்மங்களையும் பரமாத்மாவிடத்தில் ஸமர்ப்பிக்கிறதென்னும் உபாயத்தினல்
யதாத்மவான் (ஸன்) } = அடக்கிக் கொள்ளப்பட்டமனதுள்ளவனுய்
ஸர்வ- = ஸகலமான
கர்ம- = கர்மங்களாலுண்டாகும்
ப(ஹ)ல- = மோக்ஷத்தை

விடதே வரூன க்ஷேத்ர (அற்ப) பயன்களின் விருப்பத்தின்

(மூ)—ஸ்ரேயோ ஹி ஜ்ஞான மப்(ஹீ)யாஸாத் ஜ்ஞாநாத் த்யானம் விஸிஷ்யதே ||

த்யாநாத் கர்மப(ஹ)லத்யாக(ஂ)ஸ்த்யாகாத் ஸாந்திரனந்தரம் || 12 ||

(ப. உ.) ஸ்ரேய:, ஹி, ஜ்ஞானம், அப்(ஹீ)யாஸாத், ஜ்ஞாநாத், த்யானம், விஸிஷ்யதே | த்யாநாத், கர்ம-ப(ஹ)ல-த்யாக:(ஂ:), த்யாகா(ஂ)த், ஸாந்தி:, அநந்தரம் ||

த்யாகம்	= விடுபதை
குரு	= செய் (அற்ப பயன்களை விரும்பாதே.)
அப்(ஹீ)யாஸாத்	= அஜ்ஞான பூர்வகமான த்யானத்தை ஸம்பாதிப்பதற்குக் காரணமான பழக்கத்தை விட
ஜ்ஞானம்	= ஞானமானது
ஸ்ரேய:	= ஸ்ரேயஸ்கரமானது.
ஹி	= ப்ரஸித்தம்.
ஜ்ஞாநாத்	= த்யானமற்ற ஞானத்தை விட
த்யானம்	= ஞான பூர்வக மான த்யானம்
விஸிஷ்யதே	= மேலானது.
த்யாநாத்	= ஞான பூர்வக மான ஸகாம த்யானத்தை விட
